

# திருக்கோணேஸ்வரம்

சி.பத்மநாதன்



குமரன் புத்தக இல்லம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்வாழ்த்துக்கள்

15-11-2022

# திருக்கோணேஸ்வரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணேஸ்வரம்

**சி.பத்மநாதன்**

*மேனாள் வரலாற்றுத்துறைப் பேராசிரியர்*

*பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை*

வெளியீடு

**திருக்கோணேஸ்வர ஆலய பரிபாலன சபை**

**குமரன் புத்தக இல்லம் : கொழும்பு - சென்னை**

2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல் வெளியீட்டுக்கு பெரிதும் உதவிய
கலாநிதி க.இரகுபரன் அவர்களுக்கும்,
பேராசிரியர் ஸ்ரீ. பிரசாந்தன் அவர்களுக்கும் எமது நன்றிகள்.

- குமரன் புத்தக இல்லம்

திருக்கோணேஸ்வரம்
எழுதியது சி.பத்மநாதன் ©
முதற் பதிப்பு : 2022

வெளியீடு
திருக்கோணேஸ்வர ஆலய பரிபாலன சபை
மற்றும்
குமரன் புத்தக இல்லம்
39, 36வது ஒழுங்கை, கொழும்பு-6, தொ.பே. 0112 364550, மி. அஞ்சல்: books@kumarangroup.net
3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, வடபழனி சென்னை - 600 026

குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
39, 36வது ஒழுங்கை, கொழும்பு-6

Tirukoneswaram
by S.Pathmanathan ©
First Edition : 2022

Published by
Thirukkoneswara Aalaya Paripaalana Sabai
&
Kumaran Book House
39, 36th Lane, Colombo -6, Tel. - 0112 364550, E.mail : books@kumarangroup.net
3 Meigai Vinayagar Street, Kumaran Colony, Vadapalani, Chennai - 600 026

Printed by Kumaran Press (Pvt) Ltd.
39, 36th Lane, Colombo -6

வெளியீட்டு எண்: #946

ISBN 978-955-659-758-5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

மரியாதைக்குரிய பேராசிரியர் உயர்திரு. சிவசுப்பிரமணியம் பத்மநாதன் அவர்களுடைய தகைமைகளை - சாதனைகளை பட்டியலிடுவதானால் பக்கம் பக்கமாக வரிகள் நீண்டு கொண்டே போகும். அவைகளைத் தனித்தனியாக குறிப்பிட்டுச் சொல்வதைத் தவிர்க்க முயன்றபோதும் அதுவே நீண்டு விடப்பார்க்கிறது.

உயரிய கல்வியாளர், தான் பெற்ற பட்டங்களால் அப்பட்டங்க ளுக்குப் பெருமை சேர்த்தவர், உயரிய பதவிகளை வகித்தவர், எல்லா வற்றிற்கும் மேலாக தான் பிறந்த மண்ணை, மக்களை, மொழியை, ஆன்மீகத்தை, ஆலயங்களை, கலையை, கலாசாரத்தை அளவு கடந்து நேசித்தவர்.

எம்மக்களுக்கும் அவர்கள் சார்ந்த விழுமியங்களுக்கும் எதிர் காலத்தில் ஏற்படக்கூடிய இடர்களை எதிர்கொள்வதற்குப் பயன்படக் கூடிய பெறுமதிமிக்க தரவுகளைக் கொடுக்க வேண்டுமென்பதில் உறுதியாக இருந்ததால் தன் வாழ்காலத்தின் பெரும் பகுதியை இடையறாது சிந்திப்பதற்கும், ஆராய்ச்சி செய்வதற்கும் செலவிட்டு அதன் வழியாக பல நூல்களைப் படைத்தவர்.

வணக்கத்திற்குரிய திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் தான் பாடிய திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் உள்ளிட்ட எண்ணற்ற ஆலயங்களுக்கான பதிகங்களில் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் இறைவன் எழுந்தருளியிருக்கும் குறித்த ஆலயத்தின் பெயரைப் பதிவு செய்யத் தவறவில்லை. அதற்கு ஒரு காரணம் இருக்கிறது என எண்ணு கிறேன். அவர் வாழ்ந்த காலத்தில் எமது ஆலயங்களுக்கும் சமயத் திற்கும் வேற்றுச் சமயத்தவரால் நேர்ந்த இடையூறுகளை அவர் எதிர் கொள்ள வேண்டியிருந்தது. எமது கோயில்கள் மற்றவர்களால் அழிக்கப்படும் நிலை ஏற்பட்டால் கூட அவை அந்தந்த மண்ணில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட காலமாக நிறுவப்பட்டிருந்ததை தன் பாடல்கள் பிரதிபலிக்கும் என்ற நம்பிக்கை அவரிடம் இருந்தது.

திருகோணமலை மண்ணில் வாழ்ந்த சைவப் பெரியார் உயர்திரு. சைவப் புலவர் பண்டிதர் இ. வடிவேல் அவர்கள் எழுதிய பெரும் பான்மையான நூல்கள் திருக்கோணேஸ்வரத்தைப் பற்றியதாகத்தான் இருந்தன. தொன்மையும் வரலாற்றுப் பெருமையும் கொண்ட திருக்கோணேஸ்வரத்திற்கு நேர்ந்து கொண்டிருந்த தடைகளும் இடையூறுகளும் ஏற்படுத்திய கலக்கமே அத்தகைய நூல்களைப் படைப்பதற்கான ஊற்றுக்கண்ணாக அமைந்தது.

நாம் திருக்கோணேஸ்வர ஆலய பரிபாலன சபையின் நிருவாகப் பொறுப்பினை 2010இல் ஏற்றபோது, எண்ணற்ற இலக்கியங்கள் உள்ளிட்ட ஆலயத்தின் தொன்மையான வரலாற்று நூலொன்றினை தொகுத்து வெளியிடுவது காலத்தின் கட்டாயம் என உணர்ந்தோம். வரலாற்றுத் திரிபுகளும் அரச நிறுவனங்களின் தொடர்ந்த இடையூகளும் அவற்றிற்குக் காரணமாய் அமைந்தன.

எண்பத்தியொரு வயதினை எட்டிவிட்ட போதும், இன்றும் ஆராய்ச்சியையும் அது சார்ந்த நூல்களை ஆக்குவதையும் பேராசிரியர் பத்மநாதன் நிறுத்தவில்லை. அதற்கான ஆத்மார்த்தமான காரணத்தை அடியேன் குறிப்பிட்ட மேற்கூறிய விடயங்கள் புரியவைக்கும் என நம்புகிறேன்.

அவர் திருக்கோணேஸ்வரத்தைப் பற்றி அவ்வப்போது எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரைகளை இணைத்து இப்போது அளித்திருக்கிறார். இப்போதுள்ள சூழ்நிலையில் இந்நூலின் முக்கியத்துவம் பற்றி அடியேன் சொல்ல வேண்டிய அவசியமில்லை. தொன்மை வாய்ந்த எமது ஆலயத்தின் சிறப்பினை கேள்விக்குள்ளாக்கக் கூடிய விதங்களில் வேற்று சமயத்தைச் சேர்ந்த குருமார்களே இப்போது செயற்படுகிறார்கள்.

இத்தகைய சூழ்நிலையில் அவரின் திருக்கோணேஸ்வரம் நூல் ஆலயத்தின் தொன்மையையும் சிறப்புகளையும் காலங்கடந்தும் நிறுவிக் கொண்டேயிருக்கும் வல்லமை கொண்டது என்பதை கூற விரும்புகிறேன்.

பேராசிரியர் அவர்கள் இந்நூலிற் பல ஆணித்தரமான தரவுகளைத் தந்திருக்கிறார். அவற்றில் ஒன்றினை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22.1.2013ஆம் திகதியன்று கோணேஸ்வர ஆலயத்துள் இடம் பெற்ற திருப்பணியில் பணியாளர்கள் ஈடுபட்டிருந்த போது பிள்ளையார் பெருமான் எழுந்தருளியிருக்கும் சந்நிதிக்குப் பக்கமாக நிலத்தில் 7 அடி ஆழத்தில் நந்திதேவர் சிலையொன்று கண்டெடுக்கப்பெற்றது.

தொல்பொருள் துறையினரின் இடையூறுகளுக்கு மத்தியிலும் இச்சிலையினை ஆலயத்தின் வெளிவீதியிலே பிரதிஷ்டை செய்தோம். ஆராய்ச்சித் துறையில் என் அறியாமை காரணமாக இச்சிலை சோழர் காலத்தைச் சேர்ந்தது என்று பெயர்ப்பலகையில் குறிப்பிட்டிருந்தேன்.

ஆனால் அந்நந்தி சிலையை ஆராய்ந்த பின்னர் பேராசிரியர் எழுதிய குறிப்பு பின்வருமாறு அமைகிறது:

> ''இலங்கையில் இதுவரை கண்டெடுக்கப்பட்ட நந்தியின் படிமங்களில் இதுவே மிகப் பெரியது. தொன்மையானது. மிகுந்த கலை வனப்புடையது. அது செதுக்கு வேலைப்பாட்டில் ஏற்பட்ட உன்னத வளர்ச்சிக்கு முன்னுதாரணமானது. தமிழ்ப் பிராமி வடிவங்களில் எழுதிய பெயரின் அடையாளங்கள் அதிலே தெரிகின்றன. அதனால் ஆதியில் நாகர் அமைத்த ஆலயத்தின் அங்கமாக அது அமைந்திருந்தது எனக் கருதலாம்.''

அடியேன் எழுந்தமானத்தில் சோழர் காலத்து நந்திச்சிலை என்று குறிப்பிட்டது எவ்வளவு பெரிய தவறு என்பதை அவர்களின் குறிப்பு உணர்த்துகின்றது. நாகர் காலம் சோழர் காலத்திற்கு மிகவும் முந்தியது. அவரது ஆராய்ச்சியின் கூறுகளை விளக்குவதற்கு இது ஒன்றே போதும்.

திருகோணமலையில் அகழ்ந்து எடுக்கப்பட்ட திருக்கோணேஸ்வரம் சார்ந்த தொல்லியல் சாதனங்கள் ஆலயத்தின் தொன்மையை நிறுவுவதற்கு சான்றாகத் திகழ்கின்றன. அவைகள் அனைத்தையும் தன் ஆராய்ச்சிக்குட்படுத்திய அவரது எழுத்துக்கள் இன்று நூலாக உருவாகியிருக்கிறது.

இலகு தமிழில் அழகிய நடையில் தன் ஆய்வுகளை முன்வைப்பது இவரது தனித்திறமை. முக்கியமான விடயங்களை நுட்பமான மேற்கோள்கள் மூலம் நிறுவுகிறது இவரது தரவுகள். அவரது இந்நூலை இயற்கை காலத்தால் அழியாமல் பாதுகாத்து இடர் ஏற்படும் போதெல்லாம் எதிர்வினை ஆற்ற வைக்கும் என்பது நிச்சயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்காக சைவப் பெருமக்கள், குறிப்பாக திருகோணமலை மண்ணின் மக்கள் மிகப் பெரிய நன்றிக்கடன் பட்டிருக்கிறோம்.

பேராசிரியர் அவர்கள் நல்லாரோக்கியத்துடனும் நீடித்த மகிழ்ச்சியுடனும் நீடூழி வாழ்ந்து நம் மக்களின் உய்விற்காக தன் படைப்புகளைத் தர வேண்டும் என்று எல்லாம் வல்ல கோணேசப் பெருமானை இறைஞ்சுகிறேன்.

அன்பே சிவம்.

**கணபதிப்பிள்ளை அருள்சுப்பிரமணியம்**
தலைவர்
கோணேஸ்வர ஆலய பரிபாலன சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணேஸ்வரம் பற்றிய மேன்மையுரை

திருக்கோணேஸ்வரம் பற்றி ஆங்கிலத்திலும் தமிழிலும் பல நூல்கள் வெளிவந்துள்ளன. பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பல நாடுகளில் கோணேஸ்வரம் பற்றிய தகவல்கள் ஆவணப்படுத்தப் பட்டுள்ளன. போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர், பிரான்ஸியர் என்ற அன்னியரின் ஆதிக்கத்துக்குள் திருகோணமலை கொண்டுவரப் பட்டமை அதற்குரிய காரணங்களாக இருக்கலாம். இதனால் தான் என்னவோ 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவரான போர்த்துக்கீச பாதிரியார் குவைறோஸ் தன் குறிப்பொன்றில் கீழைத்தேசத்தில் கிறிஸ்தவர்கள் அல்லாத மக்களின் ரோமாபுரி திருக்கோணேஸ்வரம் என வர்ணித்துள்ளார்.

திருக்கோணேஸ்வரம் பற்றித் தொன்மைபாடும் புராணங்களில் தக்ஷிணகைலாசபுராணமும் திருக்கோணாசலபுராணமும் காலத்தால் முந்தியவை. அதன்பின்னும் பல புராணங்களும் நூல்களும் வெளி வந்துள்ளன. கோணேசர் கல்வெட்டு, கோணமலை அந்தாதி போன்ற பல நூல்கள் எழுதப்பட்ட அதேவேளை, புதிய உரைநடையில் திருக்கோணேஸ்வரம் (புலவர். வை. சோமாஸ்கந்தர் 1963), திருக்கோணேஸ்வரம் (செ. குணசிங்கம் 1973), குளக்கோட்டன் தரிசனம் (செல்வி தங்கேஸ்வரி), திருக்கோணேஸ்வரம் (பண்டிதர் இ.வடிவேலு), காலனித்துவ திருகோணமலை (கலாநிதி க. சரவண பவன்), இராவணதேசம் (திருமலைநவம்) எனப் பலரும் எழுதியுள்ளனர்.

மிகப் பெறுமதி மிக்க ஒரு நூலை எழுதியுள்ளார் பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்கள். தமிழர்களின் தொன்மைகளையும் பழமை களையும் வரலாற்று மூலாதாரங்களையும் வெளிக்கொண்டுவருவதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றிய ஆற்றிவரும்பணி பெறுமதி மிக்கது. காலத்துக்கு முந்திய தொன்மையான ஆதாரங்களை நிரூபிப்பதிலும் ஆவணப்படுத்து வதிலும் பேராசிரியர் பத்மநாதன் போன்ற ஆளுமைகளைப்போல் புதிய தலைமுறையினரை நாம் காண முடியாது.

பேராதனைப் பல்கலைக்கழகம், யாழ் பல்கலைக்கழகம், கிழக்கு பல்கலைக்கழம் ஆகியவற்றில் அவர் ஆற்றிய பணி வரவாற்றுப் பீடங்களுக்கும் தொல்பொருள் பிரிவுகளுக்கும் பெருமை சேர்ப்பவை. வரலாறு பற்றிய அறிவும், ஆர்வமும், அக்கறையும் அருகிவரும் இக்காலத்தில் பேராசிரியர் அவர்கள் கோணேஸ்வரம் பற்றி ஆய்வுப்படுத்தி எழுதியிருக்கும் இந்நூல் பல நூற்றாண்டுகளுக்கு கிழக்குப் பிராந்திய வரலாற்றை நிலைநிறுத்தப்போகிறது என்பதில் நம்பிக்கை கொண்ட ஒரு மாணவன் நான்.

கோணேஸ்வரம் கிழக்கு பிராந்தியத்தின் அடையாளம். இந்த ஆலயத்தின் அடியொற்றியே தமிழர்களின் பாரம்பரியமும் பண்பாடும் இலக்கியமும் வாழ்வு முறைகளும் பின்னிப் பிணைந்துள்ளன. அந்த தொன்மைச் சான்றுகளை பேராசிரியர் மிக ஆணித்தரமாகவும் ஆதாரங்களுடனும் இந்நூலில் சொல்லிக்காட்டியுள்ளார். இவரது அறிவையும் ஆளுமையையும் இன்னும் பயன்படுத்தவேண்டிய தேவை தமிழர்களாகிய எங்களது காலத்தின் தேவை என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம். இந்நூலைப் படித்து பயன்பெறுவது மாத்திரமன்றி அடுத்த தலைமுறை யினருக்கும் கொண்டுசெல்வோம்.

**திருமலை நவம்**
விகாரை வீதி
திருகோணமலை
077 3674875

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இலங்கையிலுள்ள சிவாலங்களிலே திருக்கோணேஸ்வரத்திற்குப் பல சிறப்புகள் உள்ளன. அது தேவாரப் பாடல் பெற்ற தலம். திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் பாடிய திருக்கோணேஸ்வரத் திருப்பதிகம் சைவத் திருமுறையில் அடங்கியுள்ளது. அவ்வாலயத்தை அப்பரும் சுந்தரரும் குறிப்பிட்டுள்ளனர். பன்னிரண்டாம் திருமுறையான பெரியபுராணத்திலும் அதன் ஆசிரியரான சேக்கிழார் பெருமான் திருகோணமாமலைத் தலச்சிறப்பினை விளக்குகின்றார்.

திருக்கோணேஸ்வரம் புனித தலம் என்ற வகையில் ஈழநாட்டுச் சைவர்களுக்கு மட்டுமன்றிப் பரத கண்டத்துச் சைவர்களுக்கும் உரித்தானது. கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் வடஇந்தியாவில் நன்கு அறிமுகமாயிருந்த வாயுபுராணத்திலே கோகர்ணத்திலுள்ள மகத்தான சிவாலயம் பற்றிய குறிப்புண்டு. அது மலையதீவின் கிழக்குக் கரையில் உள்ளதென்றும் அங்கே அகஸ்திய பவனமும் லங்காபட்டினமும் அமைந்துள்ளமை பற்றியுஞ் சொல்லப்படுகின்றது. லங்காபட்டினம் என்பது இலங்கைத் துறையினைக் குறிப்பது; அகஸ்திய ஸ்தாபனம் என வழங்கும் மிகவும் புராதனமான திருத்தலமே வாயுபுராணங் கூறும் அகஸ்திய பவனம். நடுவண் பெருமலைகளையுடைய இலங்கை யினையே வாயுபுராணத்தில் மலய தீவு என்று குறிப்பிட்டுள்ளனர் போலத் தெரிகின்றது.

கோகர்ணசுவாமி என்னும் சிவபெருமானது பெயரால் நாவலந்தீவின் நான்கு திசைகளிலும் பாசுபதர்கள் ஆதிகாலத்திலே கோயில்களை அமைத்தனர் என்பது மரபுவழிக் கதை. அவற்றிலொன்று மகேந்திர மலைத் தொடரிலுள்ளது. அங்குள்ள கோகர்ணசுவாமி கலிங்க தேசத்துக் கங்க வம்சத்தவரின் குலதெய்வம். கோகர்ண சுவாமி கொடுத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரப்பிரசாதமாக அவர்கள் ஆட்சியதிகாரம் பெற்றனர் என்ற குறிப்பு கங்கவம்ச அரசரின் பட்டயங்கள் சிலவற்றிலே காணப்படும்.

வேறொரு கோகர்ணசுவாமி கோயில் வடதிசையில் உள்ளது. அது நேபாளத்திலே கிராதர் என்போர் வாழும் பசுபதி என்னும் தலத்தில் உள்ளது. வங்காள தேசத்துப் பெரு வேந்தனாகிய தர்மபாலனது படைகள் வடஇந்தியாவிலே திக்விஜயம் சென்ற பொழுது திருக்கேதாரம், திருக்கோகர்ணம் என்னும் தலங்களில் வழிபாடு ஆற்றின என்று சொல்லப்படுகின்றது.

கோகர்ணம் என்னும் பெயருடன் விளங்கிய மற்றொரு சிவாலயம் துளுவதேசத்தில் உள்ளது. அப்பரும் திருஞானசம்பந்தரும் அதனைப் பற்றிப் பதிகம் பாடியுள்ளனர்.

இலங்கையிலுள்ள சிவத்தலங்களில் முதன்மையானது திருக்கோணேஸ்வரம். அது மச்சகேஸ்வரம் என்னும் பெயராலும் பத்தாம் நூற்றாண்டு முதலாக வழங்கியது. மட்டக்களப்பு தேசத் தவர்கள் தாம் சென்று வழிபடும் ஆலயங்களில் ஏழு கோயில்களைத் தேசத்துக் கோயில்கள் என்று சிறப்பித்துள்ளனர். அவை தேசத்தவர் எல்லோருக்கும் உரியவை. அவற்றுள் முதன்மையானது மச்சகேஸ்வரம். முற்காலங்களிலே இலங்கையின் பல பாகங்களிற் செறிந்து வாழ்ந்த சைவர்கள் திருக்கோணேஸ்வரத்திற்கு யாத்திரை போவது வழக்கம்.

வருடாந்த விழாக் காலங்களிலும் வேறு சிறப்புகள் நடைபெறும் நாட்களிலும் பெருந்தொகையானோர் அங்கு யாத்திரை சென்றனர். அங்குள்ள உன்னதக் கோலமான கட்டுமானங்களும் அவற்றின் வனப்பும் ஆலயத்தின் அதிகமான வளமும் அங்குள்ள வழமைகளும் அவர்களைப் பெரிதும் கவர்ந்தன. அவற்றால் அபிமான உணர்வுகள் ஏற்பட்டன. திருகோணமலை நகரம் பாண்டித்தியம் பெற்ற கற்றவர் கூடும் பதியாக விளங்கியது. ஆலய தரிசனம் பெற்றவர்கள் குளக்கோட் டன் திருப்பணிகள் பற்றி அறிந்துகொள்ள முடிந்தது. அனுபவாயிலாக அறிந்த அதிசய உணர்வுகளோடும் குளக்கோட்டனைப் பற்றிய நினைவுகளோடும் திரும்பிச் சென்றனர். அவர்கள் வழியாகவே குளக்கோட்டன் திருப்பணி பற்றிய கதைகள் நாடெங்கும் பரவின. முன்னேஸ்வரம், கொக்கட்டிச்சோலை முதலான முதன்மையான தலங்களின் பழம்பெருமைகளையும் உற்பத்தி பற்றிய கதைகளையும் உருவாக்குவதற்கு அவை முன்னுதாரணமாகிவிட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணேஸ்வரம் அமைந்துள்ள தலம் அளப்பரும் சிறப்புடையதாகக் காலாகாலமாகக் கொள்ளப்பட்டு வருகின்றது. அது கோகர்ணம், மாக்கோணம், கோணம், கோணபர்வதம், திருக்கோணமலை, கைலாயம், தக்ஷிணகைலாசம், தக்ஷிணாபதி எனப் பலவாறு குறிப்பிடப்படும். அது மேருமலையின் சிகரங்களில் ஒன்று என்பது ஐதிகம். மேருமலையினைக் காவல் புரியும் ஆதிசேடனோடு பொருது, வாயுதேவன் அம்மலையின் சிகரங்களில் ஒன்றைப் பறித்து வைத்தமையாலே கோணபர்வதம் உருவாகியது என்பது புராணக்கதை. அது தலம் பற்றிய புராணங்களிற் சொல்லப்படுவது. பதினைந்தாம் நூற்றாண்டில் முள்ளியவளையில் எழுதப்பெற்ற *கதிரமலைப் பள்ளு* என்னும் நூலில் அக்கதை மேல்வருமாறு சொல்லப்படும் :

*காசில் பொற்சிலம் பின்சிக ரத்தைக்*
*கால்ப றித்தே யெறிந்திட வந்த*
*மாசில் தென்கோண மாமலையைச் சூளும்*
*மாவலி கங்கை நாடெங்கள் நாடே*

கோணேசர் கோயில் பற்றிய புராணக் கதைகள், ஐதிகங்கள், வரலாறுகள், கோயிலுக்குரிய சொத்துடைமைகள், மானியங்கள், ஆலய வழமைகள் முதலானவற்றைத் தொகுத்துக் கூறும் நான்கு நூல்கள் கிடைத்துள்ளன. அவற்றில் இரண்டு தலபுராணங்கள் : *ஸ்ரீதக்ஷிண கைலாசபுராணம், திரிகோணாசல புராணம்* என்பவை. பதினேழாம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற தொகுப்பு நூலான *கோணேசர் கல்வெட்டு* கோயில் மானியங்கள், குடியிருப்புகள், ஆலய வழமைகள், வன்னிபங்கள் என்பன தொடர்பான அரிய நூலாகும். கவிராச வரோதயன் அதன் செய்யுள்நடைப் பகுதியைப் பாடியவர்.

கட்டடங்கள் யாவும் போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட பின் கோயிலமைந்த தலம் சுவாமிமலை என்ற பெயரால் வழங்கியது. அடியார்களும் சைவசமய அபிமானிகளும் அங்கு வழிபாடாற்றினார்கள். மாலைப்பொழுதிலே கிரியாபூர்வமாக அந்தணர் சென்று வழிபாடு நடத்தியமை பற்றி 19 ஆம் நூற்றாண்டில் இலங்கை பற்றிய நூல்கள் சிலவற்றை எழுதிய பிரித்தானியர் பதிவு செய்துள்ளனர்.

சுவாமிமலை பற்றிய தலச்சிறப்புகளைக் கூறும் நூல் *கோணமலை அந்தாதி.* அதில் இனிய சந்தங்களிலும் இலகுவான, தெளிவான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடையிலும் எழுதிய 100 செய்யுள்கள் அடங்கும். ஆக்கியோன் சுப்பிரமணியர் ஆறுமுகப் புலவர் என்று எழுதப்பட்டிருக்கிறது. அதனால் நூலாசிரியரைப் பற்றி *ஈழத்துக் கவிதைக் களஞ்சியம்* என்னும் நூலில் ''ஆசிரியர் பெயர் சு.ஆறுமுகம் (1806). இவரது ஊர் திருகோணமலை. தந்தையார் பெயர் சுப்பிரமணியர். திருக்கோணாசல சைவ ஆதீனத்தைச் சேர்ந்தவர். இவர் இயற்றிய நூல் *கோணமலை அந்தாதி* என எழுதப்பட்டிருக்கலாம்'' என்று கலாநிதி ஆ.சதாசிவம் குறிப்பிடுகின்றார். அவரது சிந்தனையில் ஒரு ஐயுறவு உண்டென்பது அவரது கருத்தினாற் புலப்படுகின்றது. கோணமாமலையிலே பள்ளி கொண்ட உடையாரைப் பற்றியும் பல பாடல்கள் குறிப்பிடுவதனாலே கோயில் சிறப்புடன் விளங்கிய காலத்திற்கு அந்நூல் உரியதென்று சிலர் கொள்வர். அதிலே திருக்கோணேஸ்வரம் அமைந்துள்ள தலம் *பொற்கோண வெற்பு, கோணமலை, கோணாசலம், கயிலாயம், தென்கயிலாயம்* முதலிய பெயர்களாற் குறிப்பிடப்படுகின்றது.

*ஸ்ரீ தக்ஷிண கைலாசபுராணம்* இந்நான்கு நூல்களிற் காலத்தால் முற்பட்டது. அதன் ஆசிரியர் சிங்கை நகர் அரசனாகிய செகராச சேகரன். அது மேல்வரும் பாயிரச் செய்யுட் பகுதியிற் காணப்படுவது :

*பாரிலங்கு கைலாச புராணத்திற் கேழ் சருக்கம் பயில்வித்தோங்கு*
*மாரமுதல் விருத்தகவி யறுநூற்று முப்பத்தீ ரளவேயாக்கிச்*
*சீரெழுத்துச் சொற்பொருள்யாப் பலங்கார முதலியநூ றெறிக்கும் சீர்த்திப்*
*பேரிலங்கு சிங்கை யந்தார்ச் செகராச சேகரனாம் மாதோ*

ஏழு சருக்கங்களையும் 632 செய்யுள்களையும் கொண்ட இந்நூல் மச்சகேஸ்வரம் பற்றிய சமஸ்கிருத நூலின் தழுவலாக எழுதப் பெற்றது. ஆயினும் ஏழாவது சருக்கத்திலே குளக்கோட்டன், கயவாகுராசன் என்போரின் திருப்பணிகள் பற்றிய நாட்டு வழமையான வரலாற்றுச் செய்திகள் நூலாசிரியரால் இணைக்கப்பட்டுள்ளன. மூல நூலை ஆசிரியர் *மாதுரிய மச்சேந்திய புராணம்* என்று குறிப்பிடுகின்றார். ஸ்ரீ தக்ஷிண கைலாசபுராணத்தின் பதிப்பு நூல்களுக்கு சிறப்புப் பாயிரம் பாடிய வித்தகர் அந்நூலுக்கு ஆதாரமான புராணத்தைப் *புராணநூற் கதை, தென்கயிலாய மான்மியம்,* மச்சகேச்சுரப் புராணம் எனப் பலவாறு வேறுபடக் கூறியுள்ளனர். *தக்ஷிண கைலாச புராணம்* என்னும் பெயரால் வழங்கும் சமஸ்கிருத நூலொன்றுண்டு. அதனைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிப் பிரம்மஸ்ரீ மோகன் சர்மா அவர்கள் எழுதிய கட்டுரை இந்த நூலில் வெளிவருகின்றது. அதன் மூலமாகச் சில புதிய சிந்தனைகள் ஏற்படுவதற்கு வாய்ப்புண்டு.

திருக்கோணேஸ்வரம் தொடர்பாக ஏறக்குறைய மூன்று நூற்றாண்டுக் காலம் நடைபெற்ற திருப்பணிகள் பற்றிய விபரங்கள் குளக்கோட்டன் கதையிலே கலந்துவிட்டன போலத் தெரிகின்றது. அவற்றிலே காலத்தால் முற்பட்டவை சோழராட்சிக் காலத்திற்குரியவை, பிற்பட்டவை பாண்டியரின் மேலாட்சி ஏற்பட்டிருந்த காலத்திற்குரியவை. இவற்றிலே முற்பட்டனவற்றை *ஸ்ரீ தக்ஷிண கைலாசபுராணம்* விரிவாக விளக்குகின்றது. பிற்பட்ட காலத்துக்கு உரியனவற்றைக் *கோணேசர் கல்வெட்டில்* விபரமாகப் பதிவு செய்துள்ளனர்.

*ஸ்ரீ தக்ஷிண கைலாசபுராணம்* எழுதப்பெற்ற காலத்திலே திருப்பணிகள் பற்றிய விபரங்களும் அவற்றைச் செய்த அரசர் இருவரைப் பற்றிய நினைவுகளும் ஒன்றாகக் கலந்துவிட்டன. அதனாலே குளக்கோட்டனைச் சோளகங்கனென்று நூலாசிரியரான கெகராசசேகரன் அடையாளங்காணும் நிலை ஏற்பட்டது. குளக்கோட்டனைச் செம்பியன் என்றும் மனுநீதி கண்ட சோழனின் வம்சாவழியில் வந்தவன் என்றும் *ஸ்ரீ தக்ஷிண கைலாசபுராணம்* குறிப்பிடுகின்றமை கவனித்தற்குரியது. இவ்வாறான மரபு வழியான குறிப்புகள் கோணாசலத்தில் நடைபெற்ற பிரதானமான திருப்பணிகள் சில சோழரோடு தொடர்புடையவை என்று கொள்வதற்கு ஏதுவாகின்றன.

சோடகங்க தேவன் என்னும் ஒருவன் 13ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே கோகர்ணத்திலே வழிபாடு நிகழ்த்தியமை பற்றிக் கோட்டையிலிருந்து கிடைத்த சமஸ்கிருதக் கல்வெட்டின் மூலம் அறிய முடிகின்றது. இவனை *மகாவம்சம்* குறிப்பிடும் பாண்டியர் படைத்தலைவனாகிய சோழகங்க தேவன் என்று அடையாளங் காணலாம். முதலாம் புவநேகவாகுவின் ஆட்சியிலே (கி.பி.1272-1283) காலிங்கராயன், சோழகங்கதேவன் என்னும் இரு பாண்டியப் பிரதானிகள் இலங்கை மீது படையெடுத்தனர். பாண்டி நாட்டிலே குறுநில அரசனாக அதிகாரம் பெற்றிருந்த சோழகங்கன் என்ற பெயருடைய ஒருவனை *வன்ய ஸாமந்த* (வன்னியனார்) என்று *உபாஸக ஜனாலங்கார* என்னும் நூல் குறிப்பிடுகின்றது. அது சோழகங்கனின் தலைநகரிலிருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணாகரப் பெரும்பள்ளி என்னும் விகாரத்திலே புகலிடம் பெற்றிருந்த இலங்கை நாட்டுப் பௌத்த தேரர் ஒருவரால் எழுதப்பட்டது. இந்த விபரங்களின் அடிப்படையில் திருகோணமலையில் வன்னிபங்களின் நியமனங்கள் பற்றிய மரபு வழியான கதைகளை நோக்க வேண்டிய அவசியமுண்டு.

ஸ்ரீ தக்ஷிண கைலாசபுராணத்தில் இடம்பெறாத பல பிரதானமான விடயங்கள் பற்றிய விபரங்கள் கோணேசர் கல்வெட்டிலே விபரமாகக் கூறப்படுகின்றன. அது ஒரு தொகுப்பு நூலாகும். கோணேசர் கல்வெட்டில் மூன்று பகுதிகள் உள்ளன. அவற்றில் இரண்டு செய்யுள் நடைப்பகுதிகள். கவிராச வரோதியன் பாடிய கல்வெட்டு என்னும் பகுதி பிரதானமானது. அதிலே கோயிலுக்குக் கிடைத்த மானியங்கள், முதலிருப்பாக வைத்த சொத்துகள், கோயிற் பணி செய்யும் தானத்தார், வரிப்பத்தார், தேவரடியார், திருமுறை ஓது வார், கட்டுமான வேலைகளைச் செய்யும் *ஸ்தபதிகள்* முதலானோர் பற்றிய விபரங்கள் சொல்லப்படுகின்றன. இவர்களின் பணிகளை அடிப்படையாகக் கொண்ட ஆலய வழமைகள் விளக்கப்படுகின்றன. அதற்கு மேலாகத் திருகோணமலை நகரம், கட்டுக்குளம் பற்று என்பவற்றின் வன்னிபங்களின் நியமனங்கள் பற்றிய மரபு வழிக் கதைகளை நோக்க வேண்டும்.

ஸ்ரீ தக்ஷிண கைலாசபுரணத்தில் இல்லாத சில பிரதானமான விடயங்களைப் பற்றிக் *கோணேசர் கல்வெட்டு* விரித்துரைக்கின்றது. புராணத்திலே சொல்லப்படும் கோணேசர் கோயில் வரலாற்றின் தொடர்ச்சியினைக் கல்வெட்டிலே பார்க்க முடிகின்றது. *கோணேசர் கல்வெட்டு* என வழங்கும் நூல் ஒரு தொகுப்பு நூல். அதிலே செய்யுள் நடையிலுள்ள இரு பகுதிகளும் வசன நடைப்பகுதி ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளன. அவற்றில் முதலாவது பகுதி கவிராச வரோதயன் என்பவர் இயற்றியது. மறைந்து போன *குளக்கோட்டன் கம்பசாத்தரம், பெரிய வளமைப்பத்தி* என்பன அதற்கு மூலமானவை என்று கொள்ளப்படும்.

அளவிற் சுருக்கமான இரண்டாவது செய்யுள் நடைப்பகுதி *கயவாகுராசன்* திருப்பணிகள் பற்றியது. அவன் பொலன்னறுவையில் (கி.பி.1132-1153) அரசு புரிந்தவன். சைவ சமயம் சார்ந்தவன். இறுதிக் காலத்திலே கந்தளாய் நகரினை (கங்க தடாகம்) இராதானியாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு கஜபாகு மன்னன் வாழ்ந்தான் என்று *மகாவம்சம்* கூறும். அரசிறை வருமானங்களைக் கோயிலுக்கு மானியமாக வழங்கி, ஆலய தரிசனம் பண்ணித் *தசதானம்* செய்தான். தடைப்பட்டிருந்த வருடாந்த விழாவினைக் கிரணாகம முறைப்படி பங்குனி உத்தர நாள் முதலாக நடைபெறுவதற்குச் செய்த ஏற்பாட்டினாலே பெரும் பாராட்டினைப் பெற்றான். அவனைப் பற்றிய பாடற்பகுதி சிறிதளவு விகாரமடைந்த செப்பேட்டு வாசகம் போலானது.

வசனநடையில் எழுதப்பட்டுள்ள பகுதியிலே செய்யுள் நடைப் பகுதிகளிற் சொல்லப்பட்ட விபரங்களும் ஜனரஞ்சகமான பிற பல கதைகளும் புராணக் கதைகளும் கற்பனைக் கதைகளும் கலப்புற்றுள்ளன. பிரதானமான வேறு வரலாற்றுச் செய்திகளையும் அதிற் காணலாம்.

பதினெட்டாம் நூற்றாண்டளவில் எழுதப்பட்ட *திரிகோணசல புராணமானது மச்சபுராணம், கைலாசபுராணம்* என்னும் நூல்களையும் பொதுவழக்கான கதைகளையும் ஆதாரமாகக் கொண்டது. இது அந்நூலிலுள்ள மேல்வருஞ் செய்யுளினாற் புலனாகின்றது:

*மச்ச புராணக் கதையும் கயிலாய புராணத்தின் வாய்மை தானும்*
*முச்சமம் போற்றிடும் அறிஞர் முன்னுரைத்த மரபுகளின் முறையுந்தூக்கி*
*மெச்சிய சீர்தென் கயிலைப் பெரியோர்கள் கூற முன்விதியின் ஆராய்ந்து*
*இச்சகத்திற் கோணவரைப் புராணமெனத் தமிழ்ப் பாவின் இயம்பலுற்றேன்.*

திரிகோணாசல புராணத்திலே குளக்கோட்டன், கயவாகு ஆகியோரின் திருப்பணிகள், பல படலங்களில் மிக விரிவாக விளக்கப்படுகின்றன. கோணேசர் கல்வெட்டிற் சொல்லப்படும் விபரங்களையும் ஆசிரியர் பயன்படுத்தியுள்ளார் என்பது அவற்றால் உணரப்படும். திருக்கோணேஸ்வரம் பற்றிய வரலாற்று மரபுகளையும் அவற்றோடு தம்பலகாமத்துக் கோணேசர் கோயிலின் நிர்மாணம் பற்றிய வரலாற்றம் சங்களையும் இணைத்துக் கூறும் சிறப்புடையது *திரிகோணாசல புராணம்.* திருக்கோணேஸ்வரத்திற்குப் பதிலான கோயிலாக 17ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே, கண்டி இராசதானியில் இரண்டாம் ராஜசிங்கன் ஆட்சி புரிந்த காலத்திலே, தம்பலகாமம் கோயில் நிர்மாணஞ் செய்யப்பட்டது. கண்டி அரசனின் ஆதரவுடன் கட்டு மான வேலைப்பாடுகளும் திருப்பணிகளும் நிறைவெய்தியவாற்றைத் திருகோணாசல புராணத்தின் மேல்வரும் பாடல்கள் தெளிவுபடுத்தும்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மாநிலம் புகழும் வீரவரராசசிங்கன் என்னும்*
*மேன்மை கொள் வேந்தன் தன்பால் விழிதுயில் கனவின் மேவி*
*வானவர் முனிவர் கான மலரிடைப் புனிதனாம் எம்*
*கோன் அருள் நீர்மை தன்னால் இனையன கூறலுற்றான்*

*கன்னல் வேலி வரம்பு உடுத்த கழனி சூழும் தம்பை நகர்*
*என்னும் நாட்டில் அன்பினோடும் இலங்குமணிப் பொன்னின் ஆலயமும்*
*சொன்ன முறையில் தான் அமைத்துத் தூய பூசை தேர்த் திருநாள்*
*மன்னவன் செய்கென அருளி மறைந்தான் கோணமாமலை நாதன்*

*மறையோன் ஆகிக் கனவின்கண் ஈசன் வந்தவாறு எல்லாம்*
*இறையோன் எண்ணி உடன் எழுந்து ஆங்கு என்னா இதென் கோமான் அருள் என்னா*
*முறையால் அன்பின் தொழுது ஏத்தி உன்னியதற்கு வேண்டுவன*
*குறையா வளம் சேர் தம்பை நகர்க் கொடுபோய் கோயில் இயற்றுவித்தான்*

*விண்ணோர் வியக்கும்படி கோயில் விதியில் செய்து முடித்ததற்பின்*
*ஏண்ணாற்புரம் மூன்று எறிந்தருளும் ஈசன் தனைத் தேவியோடும்*
*தண்ணார் நீப மலர் மாலைத் தனயனோடும் தரு முறையே*
*பண்ணார் மறையோர் தமைக்கொடு தாபித்துப் பரிவால் போற்றினானே*

*கண்ணும் மனமும் களிக்க மணிக் கண்டன் கரிய கடவுளுக்கு*
*நண்ணும் தினங்கள் தோறும் பூசை நைமித்திகங்கள் தேர்த்திருநாள்*
*பண்ணுமுறையில் புரிவித்துப் பசும் பொன் நிதி மற்றும் ஏனையவும்*
*எண்ணும்படிக்குக் குறைவின்றி, எல்லா வளனுமியற்றி வைத்தான்*

*தம்பை நகரம் தன்னின் மறையோர் தானம் வரிப்பற்றான வர்க்குச்*
*செம்பொன்மனை மற்று ஏனையவும் சிறப்பின் ஈந்து தேன் இறைக்கும்*
*நிம்பமலர்த் தார்ப் பூபாலன் நிகரில் பெருமாள் புலவனெனப்*
*பம்பும் இவர்க்கு முறைவரிசை பலவும் அளித்தான் பார்த்திபன்*

இப்பாடல்கள் தம்பலகாமம் கோணேசர் கோயிலின் நிர்மாணத்திலே கண்டிமாநகர் அரசன் செய்த திருப்பணிகள் பற்றியவை. அரசனை அபிமான உணர்வோடு ஆசிரியர் புகழ்ந்துரைக்கின்றார். ராஜசிங்கனின் திருப்பணி வேலைகள் குளக்கோட்டன், கயவாகுராசன் என்போரின் சாதனைகளுக்கு நிகரானவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோணேஸ்வரத்துத் தொல்பொருட் சின்னங்கள்

திருக்கோணேஸ்வரம் தொடர்பான தொல்பொருட் சின்னங்கள் கடந்த 80 வருட காலத்தில் இடையிடையே வெளிவந்துள்ளன. அவை வழிபாட்டுச் சின்னங்கள், கல்வெட்டுகள் என இருவகையானவை. திருக்கோணேஸ்வரம் தொடர்பான இலக்கிய வரலாற்றில் அடங்கும் வரலாற்றம்சங்கள் சிலவற்றை இவை உறுதிப்படுத்துகின்றன. அவற்றிலே சில இப்பொழுது ஆலய வளாகத்தில் வைக்கப்பட்டுள்ளன. இரண்டாம் உலகப் போர்க்காலத்திலே பதுங்குகுழி அமைப்பதற்கு கோட்டையின் ஒரு பகுதியை வெட்டிய பொழுது திருமால், மகாலக்ஷ்மி ஆகியோரின் படிமங்கள் கிடைத்தன. அவை வடிவமைப்பில் மிகவும் புராதனமானவை போலத் தெரிகின்றன. அவை ஏழாம், எட்டாம் நூற்றாண்டுகளிற் செதுக்கப்பட்டிருக்கலாம்.

ஆர்தர் சி. கிளார்க் (Arthur C. Clarke), மைக் வில்சன் (Mike Wilson) ஆகியோர் சுவாமி மலையின் அண்மையிலுள்ள கடற்பரப்பிலே சுழியோடிப் பார்க்குமிடத்துப் புராதன கோயிலின் உதிரிப் பாகங்களைக் கடலின் அடிமட்டத்திலே கண்டனர். தூண்கள், தூண்துண்டங்கள் போன்ற உருப்படிகள் குவிந்திருப்பதை அவர்களாற் பார்க்க முடிந்தது. அவற்றின் நடுப்பகுதி சதுரமானதென்றும் ஏனைய பகுதிகள் அறுகோணமானவை என்றும் ஆர்தர் கிளார்க் குறிப்பிட்டுள்ளார். இரு தூண் துண்டங்களை அவர்கள் எடுத்து வந்துள்ளனர். அவை இப்பொழுது கோயில் வளாகத்தில் வைக்கப்பட்டுள்ளன. இவற்றைப் புலமையாளர் எவரும் இன்னும் ஆராயவில்லை.

கடலின் அடிமட்டத்திலிருந்து சிவலிங்க உருவங்கள் இரண்டினை மைக் வில்ஸன் எடுத்துவர முடிந்தது. அவற்றையும் கோயிலாரிடம் ஒப்படைத்துள்ளனர். அவற்றிலொன்று உயர்ந்த தோற்றமும் உருளையான வடிவமும் கொண்டது. அதன் காலம் சரியாக நிச்சயிக்கப்படவில்லை. அதனைத் தாபனஞ் செய்து வழிபடுகின்றனர். இரண்டாவது சிவலிங்கம் பெரும்பாறைக் கல்லிற் செதுக்கப்பட்டுள்ளது. அதன் அடித்தளம் அளவிற் பெரியது, வடிவமைப்பிற் புதுமையானது. வழமைக்கு மாறாகச் சிவலிங்கம் அடித்தள விளிம்பின் ஓரமாக அமைந்துள்ளது. அதனைச் சுயம்புலிங்கம் என மைக் வில்சன் அடையாளப்படுத்தியுள்ளார். அது மிகவும் தொன்மையானது என்றும் அவர் கூறியுள்ளார். அது ஆதியில் அமைக்கப்பட்ட கோயிலுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரியதாகலாம். அதன் புகைப்படத்தில் ஆதியான எழுத்துகளின் இலேசான அடையாளங்கள் தெரிகின்றன. உருப்படியினை நேரிலே பார்க்கும் வரை அதைப் பற்றி உறுதியாக எதனையும் சொல்ல முடியாது.

சில வருடங்களுக்கு முன்பு சில இளைஞர்கள் இவ்விடத்திலே சுழியோடிப் பார்த்த பொழுது, அளவிற் பெரிய கடவுட் படிமத்தைக் கண்டனர். அதன் புகைப்படம், படிமத்திற் காலாகாலமாக கடற்பாசி படிந்துள்ளமையால், நீல நிறமான உருவத்தினுடையது போலத் தெரிகின்றது. அதன் பிரதிமாலக்ஷணங்கள் வழமையானவற்றிலிருந்து வேறுபடுகின்றன. படிமம் மிகவும் பழமையானது, இதைப் போன்ற சிவபெருமானுடைய வடிவமொன்று திருப்பரங்குன்றத்துக் கோயிலிற் காணப்பட்டது.

திருக்கோணேஸ்வரம் தொடர்பான கவர்ச்சி மிக்க தொல்பொருட் சின்னங்களில் அங்கு வைக்கப்பட்டுள்ள நந்தி வடிவம் வரலாற்றுச் சிறப்புடையது. அது கோயிலின் தொன்மைக்கும் அதன் மரபு வழியான வரலாற்றுக்கும் உறுதியான ஆதாரம். அது கோயில் வளாகத்தில் நிலத்தை வெட்டிய பொழுது வெளிக்கொணரப்பட்டது. சுமார் ஒன்பது வருடங்களுக்கு முன் மலைமேல் அமைந்துள்ள விநாயகர் கோட் டத்திற்குப் பின்புறமாகக் குழியொன்றை வெட்டிய பொழுது ஆறடி ஆழத்தில் இந்த நந்தியைக் கண்டனர்.

இலங்கையில் இதுவரை கண்டெடுக்கப்பெற்ற நந்தியின் படிமங்களில் அதுவே மிகப் பெரியது, தொன்மையானது, மிகுந்த கலைவனப்புடையது. அது செதுக்கு வேலைபாட்டில் ஏற்பட்ட உன்னத வளர்ச்சிக்கு முன்னுதாரணமானது. மடக்கிய பின்னங்காலில் ஊரும் கோலமான சிறிய பாம்பின் வடிவம் தெரிகின்றமை எமது விளக்கத் திற்கு ஆதாரமாகின்றது. தக்ஷிணாபதியிலுள்ள ஆலயம் நாகரின் திருப்பணி என்று கொள்வதற்குரிய குறிப்பொன்று *மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்* என்னும் நூலிற் காணப்படுகின்றது.

தம்பலகாமம் கோணேசர் கோயில் வளாகத்தில் ஆதி *கோணைநாதர் கோயில்* என்ற பெயரில் ஒரு கோட்டத்தினை அமைத்துள்ளனர். திருக்கோணேஸ்வரத்தில் இருந்த இரு வெண்கலப் படிமங்களை அங்கு தாபனஞ் செய்து வழிபடுகின்றனர். அவற்றிலொன்று பல வளைவுகள் கொண்ட கூத்தப் பெருமானின் திருவுருவம். மற்றது அன்னமென்னடை அம்மனின் படிமம். திருகோணமலையிலே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18ஆம் நூற்றாண்டின் முடிவில் ஒல்லாந்தர் நிர்வாகத்தின் அதிபராகக் கடமை புரிந்த வான் ஸென்டென் (Van Senden) 1786 இல் எழுதிய தனது பதிவேட்டில் அவற்றைப் பற்றிய விபரங்களைக் குறிப்பிட்டுள்ளார். திருகோணமலையிலுள்ள ஆயிரங்கால் மண்டபம் பொருந்திய ஆலயத்திலிருந்து அவை பாதுகாப்பாக எடுத்துச் செல்லப்பட்டன என்றும், பின்பு தம்பலகாமம் கோயிலிற் பிரதிட்டை செய்யப்பட்டன என்றும் அவற்றைத் தான் நேரிலே பார்த்ததாகவும் அவர் தனது பதிவேட்டில் எழுதியுள்ளார்.

## கல்வெட்டுகள்

திருக்கோணேஸ்வரம் தொடர்பான ஏழு கல்வெட்டுகள் உள்ளன. அவற்றின் வாசகங்கள் வெவ்வேறான நூல்களிலும் காலங்களிலும் வெளிவந்துள்ளன. அவற்றிலொன்று கோட்டையில் நிலத்தை வெட்டிய பொழுது கண்டெடுக்கப்பெற்ற துண்டமான சமஸ்கிருத மொழிக் கல்வெட்டு. அது பதின்மூன்றாம் நூற்றாண்டுக்குரிய கிரந்த வடிவங்களில் அமைந்துள்ளது. சோடகங்கனைப் பற்றிக் குறிப்பிடும் அக்கல்வெட்டினைப் பற்றிய கட்டுரையொன்று இந்நூலில் அடங்கியுள்ளது. மற்றொன்று கங்குவேலிக் கல்வெட்டு: பதினான்காம் நூற்றாண்டுக்குரியது. அதிலே மலையில் *வன்னியனார், தானம், வரிப்பற்று* என்னும் பெயர்கள் காணப்படுகின்றன. இக்கல்வெட்டின் குறிப்புகள் மூலம் கோணேசர் கல்வெட்டிற் காணப்படும் வரலாற்றுக் குறிப்புகள் சில உறுதியாகின்றன. மற்றொரு கல்வெட்டு கோட்டை வாசலில் முன்பு காணப்பட்டது. அதனை பற்றிய விளக்கங்களை ஆய்வாளரான H.W.Codrington சென்ற நூற்றாண்டின் முற்பதியில் வெளியிட்டுள்ளார்.

மிக முக்கியமான மூன்று கல்வெட்டுகள் சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் முன்பு சாம்பல்தீவு கிராமசபைத் தலைவராகவிருந்த நா. தம்பிராசா அவர்களாற் கண்டுபிடிக்கப்பட்டவை. அவற்றில் முதலாவது கல்வெட்டு இலங்கையிற் சோழப் பேரரசரின் பிரதிநிதியாக ஆட்சி புரிந்த *கோ ஸ்ரீ உடையார் சங்கவர்மரான சோழ இலங்கேஸ்வர தேவரின் கந்தளாய்க் கல்வெட்டு.* அது கந்தளாய்ச் சிவன் கோயில் வளாகத்தில் வைக்கப்பட்டுள்ளது. மற்றது மானாங்கேணியிற் கிடைத்த துண்டமான கல்வெட்டு. அது சோழ-இலங்கேஸ்வரனின் எட்டாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டில் எழுதப்பட்டது. *மச்சகேஸ்வரம் என்னும் ஆலயத்தில் நடைபெற்ற கட்டுமானத் திருப்பணி பற்றி அதிற் குறிப்புண்டு.* தம்பிராசா அடையாளங் கண்டனவற்றில் மூன்றாவது கல்வெட்டு நிலாவெளிக் கல்வெட்டு, அது 11 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுதப்பட்டுள்ளது. அதிலே *ஸ்ரீ கோணபர்வதம் திருக்கோணமலை மத்ஸ்யகேஸ்வரமுடைய மகாதேவர்க்கு நிச்சலழிவுக்கு* என்ற தொடர் வருகின்றது. இது இலங்கையிலுள்ள சைவர் எல்லோரும் வாய்ப்பாடமாகச் சொல்ல வேண்டியது. தம்பிராசா கண்டுபிடித்த மூன்று கல்வெட்டுகளையும் படித்து, அவற்றின் வாசகங்களைப் பேராசிரியர் கா.இந்திரபாலாவும் பின்பு செ.குணசிங்கமும் வெளியிட்டுள்ளனர்.

மிக அண்மைக் காலத்தில் திருகோணமலை மாவட்டத்து மொரதன்கடவல என்னும் ஊரிலுள்ள காடொன்றில் ஒரு தமிழ்க் கல்வெட்டு அடையாளங் காணப்பட்டது. திருகோணமலை மாவட்டத்து உதவி அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ் அந்தக் கல்வெட்டைக் கண்டுபிடித்தார். அது கற்பாறை ஒன்றின் முகப்பில் அமைந்துள்ளது. அதில் பல வரிகளில் (22) எழுத்துகள் காணப்பட்டன. அதனால் அதனை அவர் படமெடுத்தார்.

உதவி அரசாங்க அதிபர் காட்டிலே தான் கண்டதைப் பற்றி டாக்டர் ஜீவராஜிடம் சொன்னார். ஜீவராஜ் உடனடியாக அதனைப் பற்றி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்து வரலாற்றுத் துறையின் தொல்லியல் பிரிவினருக்குச் செய்தி அனுப்பினார். அவர்கள் குறிப்பிட்ட தலத்துக்குச் சென்று கல்வெட்டை அவதானித்தனர். அதன் மைப்படியை அவர்களால் எடுக்க முடியவில்லை. எனவே வெள்ளை மாவினைப் பரவிக் கல்வெட்டின் புகைப்படங்களை எடுத்தார்கள். அவற்றின் பிரதிகள் சிலவற்றைப் பேராசிரியர் புஷ்பரட்ணம் எமக்கும் கல்வெட்டுத் துறை நிபுணரான பேராசிரியர் எ.சுப்பராயலுவுக்கும் வேறு சிலருக்கும் அனுப்பி வைத்தார். தனக்குக் கிடைத்த புகைப்படங்களை ஆய்வு செய்த நண்பர் சுப்பராயலு சாசனத்தின் வாசகத்தை உருவாக்கிக் கொடுத்துள்ளார். இக்கல்வெட்டின் வாசகத்தை முழுமையாக மீட்டுக்கொள்வது இலங்கை அறிஞர்களுக்கு இயலாக்காரியமாகும். இங்கு, அவர் உருவாக்கிய வாசகமே இக்கல்வெட்டைப் பற்றிய விசாரங்களுக்கு அடிப்படையான ஆதாரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வெட்டினைப் பரிசோதனை செய்வதற்கு யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற குழுவினரோடு டாக்டர்களான த.ஜீவராஜ், அ.சதீஸ் ஆகியோரும் திருகோணமலையில் இணைந்து கொண்டனர். ஜீவராஜ் மா பரவிய நிலையிலே தெரிந்த கல்வெட்டின் புகைப்படங்களை உருவாக்கினார். அவற்றின் பிரதிகள் சில எமக்கும் கிடைத்தன. அவற்றிலே சில இடங்களில் மிகத் தெளிவாகவும் வேறு சில இடங்களில் மங்கலாகவும் எழுத்துகள் தெரிகின்றன.

புதிதாக அடையாளங்காணப்பெற்ற கல்வெட்டு காலிங்கராயனுடைய கல்வெட்டு. அவனைப் பற்றி அதிலே விபரங்கள் தன்மை நிலையிற் குறிப்பிடப்படுவதால் அவன் மொழிந்த வாசகமே கல்வெட்டாக அமைக்கப்பட்டுள்ளது என்பது தெளிவாகும். இச்சாசனம் சக்திபீடம் பற்றியது. அதன் தொடக்கமான சமஸ்கிருத சுலோகத்திலுள்ள *சக்திபீடாம் கரோத்* என்னும் தொடரினால் இதனை உணர்ந்துகொள்ள முடிகின்றது. அது அமைக்கப்பட்ட தலம் திருக்கோணமாமலை என்பது கல்வெட்டின் மூலம் தெரிகின்றது.

திருக்கோணேஸ்வர நாதரைக் *கோணமாமலை அமர்ந்தாரே* என்று தேவாரப்பதிகத்திலே திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் சிறப்பிக்கின்றார். பதினோராம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுதிய நிலாவெளிக் கல்வெட்டிலும் கோணாமாமலை என்று தலப்பெயரை எழுதியுள்ளனர். பதின்மூன்றாம் நூற்றாண்டிலும் முற்கால வழமைப்படி தலப்பெயரைக் கோணமாமலை என்று குறிப்பிட்டார்கள் என்பதற்கு எமது கல்வெட்டு ஆதாரமாகும். திருகோணேஸ்வர வரலாற்றின் மறைந்து போன சில அம்சங்களை இக்கல்வெட்டிலுள்ள சில விபரங்கள் மூலமாக மீட்டுக்கொள்ள முடிகின்றது. திருகோணமலையில் அமைந்திருந்த அம்மன் கோயிலைப் பற்றிய ஸ்ரீ தக்ஷிணகைலாசபுராணக் குறிப்பு, சில அம்சங்களில், இக்கல்வெட்டிலே பதிவாகியுள்ள விபரங்களினால் உறுதிபெறுகின்றது.

திருகோணமலைத் தமிழரின் சமூக, பண்பாட்டு வரலாறு பற்றிய சில பிரதானமான விபரங்கள் இக்கல்வெட்டிற் காணப்படுகின்றன. சோழப் பிரதானியான குலோத்துங்சோழ காலிங்கராயன் திருகோணமலையில் ஆட்சிபுரிந்தமை பற்றிய விபரம் இக்கல்வெட்டின் மூலமாக வெளிவருகின்றது. அதிலே கலிங்கராயப்பற்று, மானாமத்து நாடு, லக்ஷிகாமபுரம் என்னும் நிலப்பிரிவுகளின் பெயர்கள் காணப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்காலங்களில் வழங்கிய *படிநிலை மாற்று, மண்டபக் கொற்று* (கொத்து) என்னும் கோயில் வழமைகள் தொடர்பான சொற்களும் அதிற் பதிவாகியுள்ளன. திருக்காமக்கோட்டத்துக்குக் காலிங்கராயன் வழங்கிய நிவந்தம் பற்றிய விபரங்கள் கோயில் தொடர்பான வரலாற்று அம்சங்களாகும்.

பொலன்னறுவைக் காலத்து அரசியல் வரலாறு தொடர்பான அதிசயமான குறிப்பொன்று இக்கல்வெட்டில் காணப்படுகின்றது. அது காலிங்க மாகனின் வரலாறு பற்றி வேறெங்கும் கிடைக்காதவொன்று. அவன் கங்ககுலத்தவன் என்பதையும் சோழப்படைகளின் ஆதரவோடு அரச பதவி பெற்றவன் என்பதையும் இக்கல்வெட்டின் மூலமாக அறியமுடிகின்றது.

திருக்கோணேஸ்வரத்தின் சிறப்புமிக்க வரலாற்றின் பிரதான அம்சங்களை இலக்கிய மரபொன்றின் மூலமாகவும் தொல்பொருட் சின்னங்கள் மூலமாகவும் கிடைக்கின்ற சான்றுகளை ஆதாரமாகக் கொண்டு இந்நூலில் விளக்கியுள்ளோம்.

இந்நூலின் உருவாக்கத்துக்குப் பலர் உதவி புரிந்தனர். அவர்களிற் சிலர் இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள சில முக்கியமான விபரங்களையும் தொல்பொருட் சின்னங்களின் படங்களையும் வழங்கினார்கள். அவர்களிற் பேராசிரியர் ப.புஷ்பரட்ணம், டாக்டர் த.ஜீவராஜ் ஆகியோர் பிரதானமானவர்கள். கல்வெட்டுகளிற் காணப்படும் சில சொற்களும் தொடர்களும் வழக்கற்றுப் போய்விட்டன. அவற்றின் உற்பத்தி, அவை குறிக்கும் பொருள் என்பனவற்றைத் தெளிவுபடுத்துவதற்குப் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணன், பிரம்மஸ்ரீ மோகன் சர்மா (தலைவர், சமஸ்கிருத மொழித்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), கலாநிதி க.இரகுபரன், பேராசிரியர் ஸ்ரீ.பிரசாந்தன் ஆகியோரின் ஆலோசனைகள் கிடைத்தன.

இந்நூல் உருவாக்கம் பெறுவதற்கு வைத்தீஸ்வரக் குருக்கள் காரணமானவர். கி.பி.2020 வருடம் மாசி மாதத்திலே திருக்கோணேஸ் வரம் பற்றி ஒரு ஆதாரபூர்வமான வரலாற்று நூல் அவசியமாக வெளி யிடப்பட வேண்டும் என்று எம்மிடம் வற்புறுத்திக் கூறினார்.

இந்நூலை வெளியிடுவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளைச் செய்துள்ள திருமலை நவம் இந்நூலைப் பற்றிய ஒரு கவர்ச்சியான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேன்மையுரையினை எழுதியுள்ளார். பிரபல எழுத்தாளரும் திருக்கோணேஸ்வரம் அறங்காவலருமான ஸ்ரீமான் அருள் சுப்பிரமணியம் நூலின் பிரதியை ஆர்வமாகப் படித்து ஒரு அருமையான முன்னுரையினை வழங்கியுள்ளார். இந்நூல் எழுதப்பட்ட காரணத்தை அவராலே தெளிவாகப் புரிந்துகொள்ள முடிந்தமை இங்கு சிறப்பாகக் கூறப்பட வேண்டியது. திருக்கோணேஸ்வரம் என்னும் இந்நூல் கருத்தமைதியிலும் தோற்றத்திலும் சிறப்படைவதற்கு உதவிபுரிந்த எல்லோரும் எமது பாராட்டுகளுக்கும் நன்றிக்கும் உரியவர்கள்.

மிகவும் கஷ்டமான இந்நாட்களில் இந்நூல் தொடர்பான பணிகளை ஆர்வத்தோடும் திறமையோடும் நிறைவேற்றிய கணேசலிங்கம் குமரனுக்கும் குமரன் நிறவனத்திற் பணிபுரிவோருக்கும் பாராட்டு கள் உரித்தானவை. இந்நூலில் இடம்பெறும் கட்டுரைகள் இரண்டு எமது ஆங்கில நூலொன்றிலிருந்து நண்பர் திருவேணி சங்கமம் மொழிபெயர்த்தவை. எமக்குக் கால அவகாசம் இன்மையால் அந்தப் பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. மனமுவந்து அந்தப் பணியைச் செவ்வனே நிறைவேற்றியமைக்காக அவரைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

நிறைவாகத் திருவரங்கத்தில் நாள்தோறும் ஆண்டாள் திருப்பாவையினை இடையறாது ஒலிபரப்புவதைப் போலத் திருக்கோணேஸ்வரத்திலும் தம்பலகாமம் கோணை நாதர் கோயிலிலும் தினமும் தக்ஷிணகைலாசபுராணத்து ஏழாம் சருக்கத்திலுள்ள, குளக்கோட்டன், கயவாகுராசன் என்போர் பற்றிய பாடல்களை ஒலிபரப்புவதற்கான ஏற்பாடுகளை அவற்றின் அறங்காவலர்கள் செய்ய வேண்டும் என்ற வேண்டுகோளை இங்கு முன்வைக்கின்றோம்.

**சி.பத்மநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

*அணிந்துரை* v
*மேன்மையுரை* ix
*முன்னுரை* xi

1. புராணங்களில் இடங்கொண்ட புராதன தலம் 1
2. திருகோணமலையிற் சோழரின் திருப்பணிகள் 12
3. குளக்கோட்டனும் ஆலய தருமங்களும் 28
4. கஜபாகு மன்னனின் திருப்பணிகள் 55
5. காலிங்கராயன் அமைத்த திருக்காமக்கோட்டம் 75
6. கோகர்ணத்திற் சோடகங்கன் 87
7. மானியங்களும் கோயில் நிர்வாகமும் 106
8. திருகோணமலையின் பகே$_3$ாடா 113
9. சுவாமி மலையில் வழிபாடு 122
10. சுவாமிமலையில் ஆலய புனருத்தாரணம் 126
11. திருகோணமலையிற் கிடைத்த வெண்கலப் படிமங்கள் 129

**பின்னிணைப்பு**

i. வன்னிபங்களும் கோயில் நிர்வாகமும் 134
ii. கோட்டை வாசல் தமிழ்க் கல்வெட்டு 140
iii. திருக்கோணேஸ்வரத்தைக் குறிக்கும் பக்திப் பாடல்கள் 153
iv. தக்ஷிணகைலாச மஹாத்மியத்தில் திருக்கோணேஸ்வரம் 165
v. பேராசிரியர் சுப்பராயலு படித்து வடிவமைத்த சாசன வாசகம் 173

*ஆதாரமான நூல்களும் கட்டுரைகளும்* 175
*படங்கள்* 183
*சொல்லடைவு* 204

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1

## புராணங்களில் இடங்கொண்ட புராதன தலம்

தேவார முதலிகள் மூவராலும் பாடப்பெற்ற தலங்கள் 274 உள்ளன. அவற்றுள் 196 கோயில்கள் சோழநாட்டில் அமைந்துள்ளன. ஏனைய வற்றுள் 32 கோயில்கள் தொண்டை நாட்டிலும், 22 கோயில்கள் நடுநாட்டிலும் உள்ளன. பாண்டி நாட்டில் 14 கோயில்களும், கொங்கு நாட்டில் 7 கோயில்களும் உள்ளன. மலைநாட்டில் ஒரு கோயிலும் இலங்கையில் 2 கோயில்களும் உள்ளன. நாயன்மார்களின் காலத்திலே திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் ஆகியவிரண்டும் மிகுந்த சிறப்பினைப் பெற்றிருந்தன. இந்தியாவின் சில பகுதிகளில் வாழ்ந்த வர்களும் அவற்றைப் புனித தலங்களாகப் போற்றினார்கள். அவை இரண்டினைப் பற்றியும் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் ஒவ்வொரு பதிகம் பாடியுள்ளார். திருக்கேதீஸ்வரத்தைப் பற்றி சுந்தரமூர்த்தி நாயனாரும் ஒரு பதிகம் பாடியுள்ளார். அப்பர் தேவாரத்தில் அவற்றைப் பற்றிய குறிப்பு உள்ளது.

இலங்கை, சைவநூல்கள் சிலவற்றிலே சிவபூமி என்று சொல்லப்படும். மிகப்பழங்காலம் முதலாகச் சைவசமயம் நிலை பெற்றதன் காரணமாக இந்த எண்ணம் ஏற்பட்டது போலும். அரக்கர் கோன் இராவணன் சிறந்த சிவபக்தன் என்பது புராணக்கதை. அந்தக்கதை, நாயன்மார்களின் காலத்துக்கும் முற்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது. சிவபூமி என்று கொள்ளத் தக்கதான இலங்கையில் நிலைபெற்ற இரண்டு தலங்களைப் பற்றிச் சில காரணங்களினாலே தமிழகத்துச் சைவர் நன்கு அறிந்திருந்தனர். அவற்றைச் சிறப்புமிக்க வழிபாட்டுத் தலங்களாகப் போற்றினார்கள். பல்லவர் காலம் முதலாகத் தமிழகத்திலே வளர்ச்சிபெற்ற வேதாகம மரபுகளோடு கலப்புற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவநெறியும் கட்டட சிற்ப முறைகளும் இலங்கையின் பல பகுதி களுக்கும் அவற்றின் மூலமாகப் பரவலாயின.

**திருக்கோணேஸ்வரம்**

இலங்கையின் கிழக்குக் கரையில் அமைந்துள்ள கோணபர்வதம் என்னுந் திருகோணமலைக்குக் கோகர்ணம், திரிகூடம், தென்கைலாசம்/ தக்ஷிணகைலாசம் என்னும் பெயர்களுமுண்டு. ஐரோப்பியரின் ஆட்சிக் காலங்களில் அதனைச் சுவாமிமலை என்றும், கோணேசர் மலை என்றுங் குறிப்பிடலாயினர், அங்கு அமைந்து காணப்பெற்ற சிவாலயத்தைத் திருக்கோணேஸ்வரம் என்று குறிப்பிடுவது புராதன காலம் முதலாக நிலவிவரும் வழமையாகும். அது மச்சகேஸ்வரம் என்றுஞ் சொல்லப்படும். அதன் கட்டட, சிற்ப வேலைப்பாடுகளின் சிறப்பினாலும், செல்வ வளத்தினாலும், புனித க்ஷேத்திரம் என்ற வகையிலும் இலங்கையிலுள்ள சிவாலயங்கள் எல்லாவற்றிலும் முதன்மைத்தானமாகத் திருக்கோணேஸ்வரம் விளங்கியது.

**நூல்கள்**

கோகர்ணத்துச் சிவாலயம் பற்றி ஒரு இலக்கியப் பாரம்பரியம் உருவாகிவிட்டது. *தக்ஷிண கைலாசபுராணம், கோணேசர் கல்வெட்டு, திரிகோணாசல புராணம், திருகோணமலை அந்தாதி* என்பன அவற்றுட் பிரதானமான நூல்களாகும். இப்போது கிடைக்கின்ற கோணேஸ்வரம் பற்றிய நூல்களிலே ஸ்ரீதக்ஷிண கைலாச புராணம் என்பதே காலத்தால் மிக முற்பட்டதாகும். அது கோணேசர் கோயிலைப் பற்றிய தலபுராண மாகும். இராசகுருவான சைவராச பண்டிதரின் வேண்டுகோளுக்கமைய மகா வித்துவானாகிய சிங்கைச் செகராசசேகரன் அதனைப் பாடினான். இது நூலிற் காணப்படும் மேல்வரும் பாயிரச் செய்யுள்களினால் உணரப்படுகின்றது:

*வைப்பான வடகயிலை தென்கயிலை*
*என்று இரண்டு வகைக்கு, முன்நாள்*
*செப்பாதி வடமொழியின் புராணநடை*
*தென்மொழியால் செப்புகென்றான்,*
*இப்பாரில் அவன் நான்கு முகமும்*
*ஒரு முகமாகி இசைந்ததென்ன,*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்யான குரு சைவராச பண்டிதன்
என்னும் நால்வேத நூலோன்.

வேதம் முதல் உபநிடமும் சிவாகமமும்
புராண முதல் விரிநூல் யாவும்
சோதிடமும் மந்திரமும் உணர்ந்து,
உணராதவர் தெளியச் சொல்லவல்லோன்,
ஆதலினால் அக்குருவின் மொழிகேட்ப
வேண்டும் எனும் அன்பினாலே,
ஓதினன் இவ்வடமொழியின் புராண நடை
தென் மொழியின் உலகமீதே.

பாரிலங்கு கயிலாச புராணத்திற்கு
ஏழ் சருக்கம் பயில்வித்து, ஓங்கும்
ஆரமுத விருத்தகவி அறுநூற்று
முப்பத்து ஈரளவேயாக்கி,
சீர்எழுத்துச் சொற்பொருள் யாப்பு
அலங்காரம் முதலிய நூல்தெரிக்கும் சீர்த்திப்
பேர் இலங்கு சிங்கையந்தார்ச் செகராச
சேகரனாம் பெருமான் மாதோ.

வடமொழியிலுள்ள நூலொன்றை ஆதாரமாகக் கொண்டு கைலாச புராணம் இயற்றப்பட்டது; அதனைச் சிங்கைச் செகராசசேகரன் என்னும் அரசன் பாடினான்; அவன் அதனைத் தனது குருவாகிய சைவராச பண்டிதர் என்னும் வித்தகரின் வேண்டுகோளினாலே பாடினான்; *கைலாசபுராணம்* என்னும் *ஸ்ரீ தக்ஷிண கைலாச புராணம்* வித்துவ மரபொன்றின் வழியாக உருவாகியது என்னும் கருத்துகள் இப் பாடல்களில் அடங்கியுள்ளன. அந்நூல் ஏழு சருக்கங்களையும் 632 செய்யுள்களையுங் கொண்டமைந்துள்ளது.

கைலாசபுராணத்திற்குச் சிறப்புப்பாயிரம் பாடிய அரசகேசரி அதன் பொருளடக்கத்தை மேல்வருமாறு வர்ணிக்கின்றார்:

மணிநிறக் கண்டன் மாண்புறு கயிலையின்
அணிநிறக் கொடுமுடி ஆயிரத்தோர் முடி
படவரவு ஒதுங்கப் பறித்தரும் இலங்கை
வடகடல் நடுவண் மாதிரம் பதிப்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வருமுக்கோண மலை தென்கயிலை*
*பரன் அருள் உருத்திரர் பதினொரு பேரும்,*
*ஒருபது முகுந்தரும், ஒன்பது விரிஞ்சரும்,*
*வருகடற் கடகம் வழங்கிய மீனமும்,*

*திருமலை தழுவிய தெசமுக நிருதனும்,*
*பெருமத மலைகரிப் புரவலர் பலரும்,*
*பூசையோடு இறைஞ்சிய புராணநூற் கதையை*
*ஆசறு தமிழில் அறைகுதி என்றனன்*

'திருநீலகண்டனாகிய சிவபெருமான் தங்கியிருக்கும் மேருமலையிலே 1001 சிகரங்கள் உள்ளன. அவற்றை ஆதிசேடன் காவல் புரிகின்றான். அவன் ஒதுங்கும்படியாக அவனோடு போர் புரிந்த வாயுதேவன் அச்சிகரங்களுள் ஒன்றைப் பறித்துக் கடலின் நடுவிலே வைத்தான். அது தென்கயிலை என்னும் திரிகோணமலையாகப் பொலிந்தது. 'அத்தகைய திருமலையிலே பதினொரு உருத்திரர்களும் திருமாலின் வடிவினராகிய முகுந்தர் பதின்மரும், ஆழ்கடலிற் தேவர்களின் காப்பு வளையல்களைத் திருமாலின் அவதாரமாகிப் பெற்று வந்த பெருமீனும், இலங்கேஸ்வரனாகிய தசக்கிரீவனும், பூலோகத்து மன்னர்கள் வேறு பலரும் அத்தலத்திலே வழிபாடு செய்தனர். இவற்றைப் பற்றிய திவ்வியமான சரிதங்கள் அடங்கிய புராணக்கதையை இனிய தமிழ்ப்பாவினால் அமைத்திடுக என்றனன்.'

தென் கயிலாயத்தின் தலச்சிறப்பினை விளக்கும் புராணக்கதை யொன்று வடமொழியில் எழுதப்பட்டிருந்தது எனச் சிறப்புப்பாயிரம் குறிக்கின்றது. அது ஒரு மகாத்மியம் போலானது என்று கொள்ளலாம். அதனை மச்சேந்தியம் என்பர் செகராசசேகரன். பாயிரச் செய்யுளொன்றில் மேல்வரும் அடிகள் உள்ளன:

*'ஆதரவின் இறைஞ்சுகதை கைலாச புராணமென அறையலுற்றேன்*
*மாதுரிய மச்சேந்திய வடபுராணத்தியல்பு மருவத்தானே'*

கைலாசபுராணத்தின் ஏழாவது சருக்கமான திருநகரச்சருக்கத்திலே கோயிலைப்பற்றிய பொதுவழக்கான சரிதம் ஒன்றின் அம்சங்கள் சேர்ந்துவிடுகின்றன. அந்தச் சரிதம் குளக்கோட்டன், கயவாகு என்னும் அரசர்கள் கோணேசர் கோயில் தொடர்பாகப் புரிந்த திருப்பணிகள் பற்றியது. அவர்களிருவருட் செம்பியனான குளக்கோட்டன், கோணேச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராலயத்தைக் கற்றளியாகப் புனரமைத்து, ஆலய சேவைகள் ஒழுங்காக நடைபெறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தான். காலத்தால் அவனுக்கு ஒரு நூற்றாண்டுக்குப் பிற்பட்டவனாகிய கயவாகு, 12ஆம் நூற்றாண்டிலே பொலன்னறுவையில் அரசனாக இருந்தவன். அவன் கோணேசர் ஆலயத்துச் சேவைகளைப் புனருத்தாரணம் பண்ணியவன்; சைவ சமயச் சார்புடையவன். அம்மன்னர்களைப் பற்றிய ஆதார பூர்வமான பல தகவல்கள் கைலாசபுராணத்தில் அமைந்துள்ளமை குறிப்பிடற்குரியது.

பதினேழாம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற *கோணேசர் கல்வெட்டு* வேறொரு வகையான நூலாகும். அது மான்மியமன்று; புராணமுமன்று. அது செய்யுள் நடைப்பகுதி, வசன நடைப்பகுதி என்னும் இருபகுதி களைக் கொண்ட தொகுப்பு நூலாகும். இரு பகுதிகளும் வெவ்வேறு மூலங்களை அடிப்படையாகக் கொண்டவை. அவை வெவ்வேறு காலப்பகுதிகளைச் சேர்ந்தவை. கோணேசர் கல்வெட்டு என்னும் பெயர் செய்யுள் நடைப் பகுதிக்குரியதாகும். அதனைக் கவிராச வரோதயன் என்பவர் பாடியுள்ளார். அது ஆலய சேவைகள் தொடர்பான வழமைகளைப் பற்றிய நூலாகும். உரை நடைப் பகுதியிற் கோணேசர் கோயில், வன்னிமைகள், சமூகப் பிரிவுகள் என்பன தொடர்பான - வரலாற்றம்சங்கள் பொருந்திய மரபுவழிக் கதைகள் உள்ளன.

## திரிகோணாசல புராணம்

பதினெட்டாம் நூற்றாண்டளவில் இயற்றப்பட்ட திரிகோணாசல புராணம் இருபது படலங்களைக் கொண்டுள்ளது. *மச்சபுராணம், கைலாசபுராணம்* ஆகிய நூல்களையும், பொதுவழக்கான கதைகளையும் ஆதாரமாகக் கொண்டு அந்நூல் அமைக்கப்பெற்றுள்ளது என்பது அதிலுள்ள மேல்வருஞ் செய்யுளினாற் புலனாகின்றது:

*மச்ச புராணக் கதையும் கயிலாய புராணத்தின்*
*வாய்மை தானும்*
*முச்சமம் போற்றிடும் அறிஞர் முன்னுரைத்த*
*மரபுகளின் முறையுந்தூக்கி*
*மெச்சிய சீர்தென் கயிலைப் பெரியோர்கள்*
*கூற முன்விதியின் ஆராய்ந்து*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இச்சகத்திற் கோணவரைப் புராணமெனத்*
*தமிழ்ப் பாவின் இயம்பலுற்றேன்.*

திருக்கோணேஸ்வரம் தொடர்பான மரபுவழிக் கதைகளின் மிக வளர்ச்சி பொருந்திய நிலையினைத் திரிகோணாசல புராணத்திலே கண்டு கொள்ளலாம். கைலாச புராணத்திலும் கோணேசர் கல்வெட்டிலு முள்ள எல்லா அம்சங்களும் அதில் அடங்கி விடுகின்றன. கோணேசர் கோயில் பற்றிய மூலமான கதைகளும் மரபுகளும், அதிலே திருகோண மலையின் தேசத்து வரலாறாக விரிவாக்கம் பெற்றுவிடுகின்றன.

## தலப்பெயர்கள்

தக்ஷிண கைலாசம், திரிகோணம், கோணம், மாக்கோணம் கோண பர்வதம், திரிகூடம், கோகரணம் முதலியன திருகோணமலையின் தலப்பெயர் களாகும். அத்தகைய திருத்தலத்தில் அமைந்துள்ள சி வாலயம் திருக்கோணேஸ்வரம், மச்ச கேஸ்வரம் என்னும் பெயர்களால் வழங்கியது. அப்பெயர்களை விளக்கும் புராணக்கதைகள் உள்ளன. ''ஆதிசேடனும் வாயுபகவானும் தம்முள் மாறுபட்டு இகலிய நாளில் இருவரும் தத்தம் வலிமையைக் காட்ட முயன்று மகாமேருவின் கொடுமுடிகளை ஆதிசேடன் தன் பணாமுடிகளால் மூடிக்கொள்ள, வாயுபகவான் தன்வலி மேம்பாடுற மேருவின் சிகரங்களில் மூன்றைப் பிடுங்கிக் கடலில் வீசிவிட, அவைகளில் ஒன்று இலங்கையில் வீழ்ந்து திருகோணமலையாக அமைந்தது'' என்பது ஒரு புராணக்கதை. திரிகோணம் இமையத்தின் சிகரங்களுள் ஒன்று என்று சொல்லப் படுவதால் அது தென்கைலாசம் என்னும் பெயரைப் பெற்றது. திருக்கோணத்தில் அமைந்துள்ள சிவாலயம் தலப்பெயரின் காரணமாக திருக்கோணேஸ்வரம் என்னும் நாமத்துடன் விளங்கியது.

பதினோராம் நூற்றாண்டைச் சேர்ந்த சாசனங்களில் அது மச்சகேஸ்வரம் என்று குறிப்பிடப்படுகின்றது.[4] கோணேசர் கோயிலை மச்சகேஸ்வரம் என்று சொல்வது மட்டக்களப்பு தேசத்தவர் வழமையாகும். திருமால் மச்சாவதாரத்திலே தென் கயிலாயத்தை அடைந்து அங்கு மீன் வடிவிலிருந்து நீங்கித் தனது சுயரூபத்தில் மகேசுரனை வணங்கியதனாலே தக்ஷிண கைலாசமானது மச்சகேஸ்வரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் - பெயரைப் பெற்றதென்பது புராணக் கதை. அது தக்ஷிண கைலாச புராணத்தில் மேல்வருமாறு சொல்லப்படுகின்றது:

*"ஆய தென்கைலாயத்தின் தென்புற மணுகி*
*மாயமச்சமாம் உடலையக் கடல்வழி வைத்துத்*
*தூயதன்னுருக் கொண்டரன் சந்நிதி துன்னிச்*
*சேய கங்கணம் முன்வைத்து வணங்கினன் திருமால்'*
*மல்கு மச்சமாம் கேசவன் பெயரினை மலையும் புல்கு*
*மச்சகேஸ்வரமெனத் திருப்பெயர் புகன்றார்."* [5]

கோகர்ணம் என்பது திருகோணமலையின் புராதனமான பெயர்களில் ஒன்றாகும். அது தக்ஷிண கைலாசபுராணத்திற் பலவிடங்களிலே வருகின்றது. அது சோடகங்க தேவனுடைய கல்வெட்டிலுங் காணப்படு கின்றது. கோகண்ண என்பது கோகர்ண்ண என்ற சமஸ்கிருதச் சொல்லின் பாளிமொழி வடிவமாகும். கோகர்ண்ண என்பது தமிழில் கோகர்ணம் என்று சொல்லப்படும். அது மருவிக் கோணம் என்றும் வரும். கோணேசர் கோயில் உடையாரை கோகர்ணேஸ்வரர் என்றும், அம்மனைக் கோகர்ணநாயகி என்றுஞ் சொல்வர். உடையாரைக் கோணேசர் என்றும் கோணைநாதர் என்று சொல்வதும் வழமை. இத்திருநாமங்களிடையே காணப்படும் வேற்றுமைகள் கோகர்ணம் என்னும் பெயர் பொதுவழக்கிலே மருவி கோணம் என்றும் வரும் என்பதைத் தெளிவுபடுத்துகின்றன.

கோகர்ணம் என்பது புராதனகாலச் சைவசமய மரபிலே சிறப்புப் பெற்றிருந்த தலப்பெயராகும். அப்பெயர் கொண்ட நான்கு தலங்கள் நாவலந்தீவின் நாற்றிசைகளிலும் இருந்தன. அவை மலைப்பகுதிகளில் அமைந்திருந்தன. கலிங்க தேசத்தில் மகேந்திர மலைத் தொடரிலே கோகர்ணம் என்றவொரு சிவத்தலம் இருந்தது. அங்கு எழுந்தருளிய, சிவனின் மூர்த்தத்தைக் கோகர்ணசுவாமி என்று குறிப்பிட்டனர். கலிங்காதிபதிகளான கங்க வம்சத்து வேந்தர்கள் கோகர்ணசுவாமியைத் தங்கள் குலதெய்வமாகக் கொண்டு போற்றி வழிபட்டனர்.

நேபாள தேசத்திற் கிராதர் எனப்படுவோர் வாழும் பசுபதி என்னும் பகுதியிற் கோகர்ண்ண என்னும் சிவத்தலம் ஒன்றுண்டு. வங்காளத்துப் பாலவமிசத்தைச் சேர்ந்த தர்மபாலனுடைய படைகள் வடஇந்தியாவிலே திக்குவிசயம் மேற்கொண்ட பொழுது, அவை கேதார(ம்), கோகர்ண(ம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற புனித தலங்களையுந் தரிசித்துச் சென்றதாகச் சாசனங்கள் குறிப்பிடுகின்றன. கோகர்ணம் என்று சொல்லப்படும் சிவாலயமொன்று இந்தியாவின் மேற்குக் கரைப்பகுதியிலே துளுவதேசத்தில் உள்ளது. அதனைப் பற்றித் திருஞானசம்பந்தரும், அப்பரும் ஒவ்வொரு பதிகம் பாடியுள்ளனர். அங்குள்ள சிவனின் பெயர் மஹாபலிநாதர்; அம்மையின் பெயர் கோகர்ணநாயகி.

இலங்கையின் கிழக்குக் கரையிலுள்ள கோகர்ணத்துச் சிவனைக் கோணைநாதர், கோணேஸ்வரர் (கோகர்ணேஸ்வரர்), கோகர்ணநாதர், கோணேசர் எனப் பலவாறு குறிப்பிடுவது வழக்கம். இந்தியாவிலே கோகர்ணம் என்ற பெயரால் வழங்கும் மூன்று கோயில்கள் உள்ள போதும் கலிங்கத்து மகேந்திர மலையிலுள்ள சிவனாரின் மூர்த்தமே கோகர்ணஈஸ்வரர் என்ற பெயரினைக் கொண்டிருந்தமை குறிப்பிடத் தக்கது. திருகோணமலையிலும், மகேந்திர மலையிலும் வீற்றிருக்கும் சிவனின் தோற்றம் ஒரே பெயரினைக் கொண்டிருந்தமை தற்செயலாக ஏற்பட்ட வொன்றாகாது. இரு தலங்களும் அமைந்துள்ள பகுதிகளுக் கிடையிலே நெருங்கிய வாணிப, கலாசாரத் தொடர்புகள் ஏற்பட்டிருந்தன என்றும், அவற்றின் விளைவாக ஒரே பெயரைக் கொண்ட சிவபெரு மானுடைய உருவத்தை ஆலயத்திலே தாபனஞ்செய்து வணங்கும் முறையினைச் சைவர்கள் ஏற்படுத்தினார்களென்றும் கருதலாம்.

இந்தியாவின் கிழக்குக் கரையிலுள்ள பகுதிகளோடு ஏற்பட்டிருந்த வாணிபத் தொடர்பின் காரணமாகத் திருகோணமலையில் இந்து சமுதாயமும் இந்துக்கோயில்களும் புராதன காலத்தில் வளர்ச்சி பெற்றனவென்று கருதலாம். மகாசேனனின் ஆட்சிக் காலத்துக்கு முன்பு கோகர்ணத்துச் சிவாலயம் இலங்கையின் கிழக்குக் கரையிலே மிகப் பிரசித்தி பெற்ற தலமாகிவிட்டது.

**மகாவம்சக் குறிப்பு**

மகாயான பௌத்தர்களின் பிரசாரங்களினாற் கவரப்பெற்ற மகா சேனன், மகாவிகாரையைச் சேர்ந்த சங்கத்தாரோடு பகைமை கொண்டு அவர்களின் பீடங்களைச் சீர்குலையுமாறு செய்தான். சைவசமயத்தின் மீதும் பகைமை கொண்டு சிவாலயங்களை இடித்தான். அதனைப் பற்றி *மகாவம்சம்* மேல்வருமாறு கூறும்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அரசன் மணிஹீரம் என்னும் விகாரத்தைக் கட்டினான். தேவாலயங் களை அழித்துவிட்டு மூன்று விஹாரங்களை அமைப்பித்தான். கோகர்ணத்தில் கோகர்ண விகாரையினையும், ஏரகாவில்ல என்னு மிடத்தில் மிககாம விகாரையையும் கலந்த என்னும் பிராமணனுடைய ஊரிலே கங்காசேன பர்வதம் என்னும் விகாரத்தையும் அமைப்பித்தான்.''

கிழக்குக் கரையிலுள்ள மூன்று சிவாலயங்களைப் பற்றி *மகாவம்சம்* குறிப்பிடுகின்றமை கவனித்தற்குரியது. அவற்றிலொன்று கோகர்ணமான திரிகோணமலைக் கோயிலாகும். இன்னொரு சிவாலயம் எரகாவில்ல என்னும் இடத்தில் இருந்ததென்று சொல்லப்படுகின்றது. எரகாவில்ல எருவில் என்ற பெயரின் பாளி வடிவம் போலத் தெரிகின்றது. அவ்வாறாயின் அது மட்டக்களப்பிலுள்ள எருவில் - போரதீவு என்னும் பகுதியைச் சேர்ந்த தலமென்று கொள்ளலாம். அங்குள்ள கிராமமொன்று பிராமணர் ஒருவரின் உடைமையாக இருந்தமையும், அக்கிராமத்திலே சிவாலயம் ஒன்று அமைந்திருந்தமையும் குறிப்பிடற்குரியனவாகும்.

மகாவம்சத்தின் உரைநூலான *வம்சத்தப்பகாசினி* கோகண்ண விகாரம் கிழக்குக் கடற்கரையிலே, கோகண்ணகாமத்திற்கு அண்மையிலே கட்டப் பெற்றதென்று குறிப்பிடுகின்றது. மேலும், முன்பு சொல்லப்பட்ட மூன்று தலங்களிலுந் தேவாலயங்கள் இருந்தனவென்றும், அவை பௌத்த சாசனத்திற்குத் தடையாகவிருந்தன என்றும் அந்நூல் கூறும். அத்துடன், சிவலிங்கம் போன்ற வழிபாட்டுச் சின்னங்களை அழித்த மகாசேனன் இலங்கை முழுவதிலும் பௌத்த சமயத்தை மேன்மைபெறச் செய்தானென்றுஞ் சொல்லப்படுகின்றது.

கிழக்குக் கரையோரப் பகுதியில் வாழ்ந்த குடிகளிற் கணிசமான தொகையினர் சைவராயிருந்தனர் போலத் தெரிகின்றது. அநுராதபுர காலத்துக்குரிய தொல்பொருட் சின்னங்கள் இலங்கையின் வரட்சி வலயத்திற் சைவ வழிபாட்டு முறைகளைப் பின்பற்றியவர்கள் பெரு மளவில் வாழ்ந்தமைக்குச் சான்றாகின்றன.

**வாயுபுராணக் குறிப்பு**

இந்தியாவிலே குப்தப்பேரரசர் காலத்தில் எழுதப்பட்ட புராணங்களில் ஒன்றான *வாயுபுராணம்*, மலயதீவு என்னும் நாட்டின் கிழக்குக் கரையி லுள்ள கோகர்ண்ண என்ற சிவனுடைய பெயரைக்கொண்ட சிவால யத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றது.[7] வாயு புராணத்தில் வர்ணிக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுள்ள மலய தீவு பலவகையான மணிகளும், இரத்தினங்களும், பொன்னும், கடல்படு திரவியங்களும் கிடைக்கின்ற நாடு; அது மிலேச்சர், ராக்ஷஸர்கள் முதலியோரை மிகுதியாகக் கொண்டுள்ளது; அங்கே அகஸ்திய பவனமும் திரிகூட நிலையமும் அமைந்திருக்கின்றன. இவ்விவரங்கள் எல்லாம் இலக்கியங்களிலுள்ள, இலங்கையைப் பற்றிய மரபு வழியான வர்ணனைகளைப் பெரிதும் ஒத்துள்ளதால் வாயு புராணத்திலே குறிப்பிடப்பட்டுள்ள 'பெருஞ்சிவாலயம்' (ஸிவாலயம் மஹத்) இலங்கையிலுள்ள கோணேஸ்வரம் என்று கொள்வது பொருந்தும். *வாயு புராணம்* எழுதப்பட்ட காலத்தில் வட இந்தியச் சைவர்களினாற் பாராட்டப்படத் தக்க வகையிலே கோணேஸ்வரத்தின் புகழ் பரவியிருந்தது.

### தேவார காலம்

வாயு புராணத்திற் குறிப்பிடப்படுமளவிற்குப் புகழ் பெற்றிருந்த கோணேஸ்வரத்தின் மீது, ஏழாம் நூற்றாண்டிலே திருஞானசம்பந்தர் பதிகம் பாடியுள்ளமை வியப்பிற்குரியதன்று. ஞானசம்பந்தரின் காலத்திற் கோணேஸ்வரம் கடலோரமாகவுள்ள கோணவரையில் அமைந்திருந்தது. ''கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை யமர்ந்தாரே'' என்ற தேவார வாக்கியத்தினாலே அது உறுதியாகின்றது. திருஞானசம்பந்தர் கோணேஸ்வரத்தைப் பற்றிய பாடல்களில் அக்கோயிலின் பெயரைக் குறிப்பிடாது, அது அமைந்திருந்த தலத்தினையே ஒவ்வொரு பாடலிலுஞ் சிறப்பித்துப் போற்றுகின்றார். திருகோணமலை 'குடிதனை நெருக்கிப் பெருக்கமாய்த் தோன்றும்' பதியெனத் தேவாரத்திலே வர்ணிக்கப்பட்டுள்ளது. அருகில் அமைந்த கடல், சுற்றாடலிற் காணப் பட்ட பொழில்கள் என்பவற்றின் காரணமாக மலைமேல் அமைந்த கோயில் பொலிந்த வனப்புடன் விளங்கியது. சந்தனமும், அகிலும், மணியும், முத்தும் அங்கு காணப் பட்டனவென்று தேவாரப்பாடலிற் கூறப்படுகின்றது. வாணிபத்தின் காரணமாக இப்பொருள்கள் அங்கு கிடைத்திருத்தல் வேண்டும்.

தேவார காலத்திலே திருக்கோணேஸ்வரம் காவும் பொழிலுஞ் சூழ்ந்த பதியாக விளங்கியது. அங்கு கனிமரச் சோலைகளன்றி நிழல்தரு மரச்சோலைகளும் பூம்பொழில்களுமே காணப்பட்டன. மௌவல், மாதவி, புன்னை, வேங்கை, வண்செருந்தி, செண்பகம், குருந்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லை முதலியன செழிப்புடன் வளர்ந்திருந்தனவென்று சொல்லப் படுகின்றது.

## அடிக்குறிப்புகளும் விளக்கவுரைகளும்

1. *தக்ஷிணகைலாச புராணம் பகுதி 1* , ஆக்கியோன் யாழ்ப்பாணத்து நல்லூர் மகாவித்துவான் சிங்கைச் செகராசசேகரன், பொருளாக்கம் கா.செ.நடராசா, பதிப்பாசிரியர் சி.பத்மநாதன், வெளியீடு, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, 1995, பாயிரம் : 9, 10, 14, ப. 16-17, 19.
2. மேலது, ப. 3-4
3. *திரிகோணாசல புராணம்*, வண்ணை நகர் ஆ.சண்முக ஐயர், 1909; (இரண்டாம் பதிப்பு) இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, 1997, பாயிரம்
4. S.Gunasingham, *Two Inscriptions of Cōḷa Ilankesvara Deva from Trincomalee, Trincomalee Inscriptions Series.* No. 2 Edided and Published by S. Gunasingham, Peradeniya, 1974, pp. 13-14. Karthigesu Indrapala, "A Tamil Inscription from Nilaveli, Trincomalee District", *James Thevathasan. Rutnam Felicitation Volume,* Jaffna, 1975, pp. 54-69.
5. *ஸ்ரீ தக்ஷிண கைலாசபுராணம்* பாயிரம் : 11, ப.17
6. *Mahâvamsa,* Ed. Wilhelm Geiger, London, Pali Text Society, 1934, 37: 40, 41.
7. *'தஸ்ய த்வீபஸ்ய வை பூர்வே தீரே*
   *நதன மஹீபதே கோகர்ண நாமதேயஸ்ய*
   *சங்கரஸ்ய ஆலயம் மஹத்.'*
   செ.குணசிங்கம், *கோணேஸ்வரம்,* பேராதனை, 1973, ப.55

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2

# திருகோணமலையிற் சோழரின் திருப்பணிகள்

இலங்கையின் வடகிழக்குப் பகுதியிலே, திருகோணமலை, கந்தளாய், பதவியா என்பவற்றை உள்ளடக்கிய முக்கோணத்திலே, சோழராட்சிக் காலத்திற்குரிய தொல்பொருட் சின்னங்கள் பல கண்டெடுக்கப் பெற்றுள்ளன. இலங்கையில் இதுவரை கிடைத்துள்ள சோழர் காலத்துச் சாசனங்களிற் பெரும்பாலானவை இப்பகுதியிற் கிடைத்துள்ளன. ஈழமான மும்முடிச்சோழ மண்டலத்திலுள்ள ஆறு வளநாடுகளைப் பற்றி மட்டுமே சாசனங்கள் மூலம் அறியமுடிகின்றது. அவற்றுள் நான்கு பிரிவுகள் இப்பிராந்தியத்தைச் சேர்ந்தனவாகும். கணக்கன் கொட்டியாரமான விக்கிரம சோழ வளநாடு, மாப்பிசும்பு கொட்டியாரமான இராஜராஜ வளநாடு என்னும் பிரிவுகள் கொட்டியாரம் பற்றில் இருந்தன.[1] கந்தளாய்ப் பிரமதேயமான இராஜராஜ சதுர்வேதிமங்கலம் இராஜேந்திர சோழ வளநாட்டில் அடங்கியிருந்தது. இராஜவிச்சாதிர வளநாடு, வீரபரகேசரி வளநாடு, அ$_4$பயாஸ்ரய் வளநாடு என்பது அதன் மறுபெயராகும்.[2] இராஜராஜப் பெரும் பள்ளி யான வெல்காமத்து விகாரம் அமைந்திருந்த மானாவத்துளா நாடு, அபயாஸ்ரய வளநாடு என்பதன் பிரிவாயிருந்தது. அது பிற்காலத்திற் கட்டுக்குளம் பற்று என வழங்கிய பிரிவின் பகுதி களை உள்ளடக்கி யிருந்தது.

பதவியா, திருகோணமலை, கந்தளாய் ஆகிய மூன்றும் நகரங்களாய் விளங்கின. இந்து கலாசார நிலையங்கள் அவற்றிலே குறிப்பிடத்தக்க அளவில் வளர்ச்சி பெற்றிருந்தன. அங்கு சோழர் அமைத்த படை நிலைகளும், நானாதேசி வணிகர் உருவாக்கிய வணிக நிலையங்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவியா பதினோராம் நூற்றாண்டிலே நகரமாக வளர்ச்சி பெறுவதற்கு வழிவகுத்தன. அது மத்திய காலத்தில் அரண்கள் பொருந்திய நகரமாய் விளங்கியதென்பதைத் தொல்பொருட் சின்னங்கள் மூலம் அறிய முடிகின்றது. இலங்கைத் தொல்பொருட்டிணைக்களத்தினர் பதவியாவில் ஐந்து சிவாலயங்களின் அழிபாடுகளை அடையாளங் கண்டுள்ளனர். அவற்றுள் முதலாஞ் சிவாலயத்தின் அழிபாடுகளிடையே சோழராட்சிக் காலத்திற்குரிய 5 கல்வெட்டுகள் காணப்பெற்றன. அக் கோயிலின் பெயர் இரவிகுலமாணிக்க-ஈஸ்வரம் என்று அவற்று ளொன்றிற் கூறப்பட்டுள்ளது. அதன் அத்திபாரக் கற்களில் மேல்வருஞ் சாசனங்கள் உள்ளன:[3]

1. நாராயணன் திருச்சிற்றம்பலமுடையான் இட்டகல்லு.
2. ஸ்வஸ்தி ஸ்ரீ இக்கல்லு வருதன் திருமால் இட்டது. இக்கல்லு அழகன் உத்தமராலையன் இட்டது.
3. ஸ்வஸ்தி ஸ்ரீ இக்கல்லு அழகன் உத்தமனான தேசியாயத் துணைச் செட்டி இட்டது.
4. ஸ்வஸ்தி ஸ்ரீ இக்கல்லு (பதியில்) வணிகன் தனி அப்பன் இட்டது.[3]

கோயிலுக்கு அத்திபாரக் கற்களை இட்டவர்களின் பெயர்களை இச்சாசனங்கள் குறிப்பிடுகின்றன என்பது அவற்றின் வாசகங்களினாலே தெளிவாகின்றது. இரவிகுலமாணிக்க ஈஸ்வரத்தை அமைத்தவர்களில் நாராயணன் வருதன் திருமால், அழகன் உத்தமராலையன், அழகன் உத்தமன், தனி அப்பன் ஆகிய ஐவரும் பிரதானமானவர்கள். அவர்களில் இருவர் வணிகர், அவ்விருவருள்ளும் அழகன் உத்தமன் என்பான் நானாதேசி வணிகன். நாராயணன் சிற்றம்பலமுடையான் நிர்வாக அதிகாரிகளில் ஒருவனாதல் கூடும். இரவிகுலமாணிக்க ஈஸ்வரமானது ராஜராஜனது காலத்திலே பதவியாவிலிருந்த நானாதேசி வணிகராலும் நிர்வாக அதிகாரிகளினாலும் அமைக்கப் பெற்றது என்பது அதன் அழிபாடுகளிற் காணப்படும் சாசனங்களினால் உணரப்படுகின்றது.

அவனுடைய காலத்தில் நிர்வாக அதிகாரிகளும், படையினரும், நானாதேசி வணிகரும் கோயிலுக்குப் பல நன்கொடைகளை வழங்கி யிருந்தனர். தானங் கொடுத்தோருள் உடையான் என்னும் பதவிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயரைக் கொண்ட பலரிருந்தனர். பாலைப்பாக்கமுடையான் பட்டமொன்றும் பொற்காசுங் கொடுத்தான். மருங்கூருடையான் கோயிலுக்குத் தானமாகப் பொன் கொடுத்தான். நானாதேசியான வெண்ணாயில் வெண்காடன் வெண்கல எறிமணி ஒன்றினையும் வெண்கல மணியொன்றினையும் தானம் பண்ணினான். சமகாலத் தென்னிந்தியச் சாசனங்களில் வழமையாக வரும் நக்கன், தேவன், சாத்தன் என்னும் பெயர்கள் பதவியாவிலுள்ள ராஜராஜனின் 26 ஆம் ஆண்டுச் சாசனத்தில் உள்ளமை குறிப்பிடத் தகுந்தது.

கந்தளாயிலுந் திருகோணமலையிலும், சமய நிறுவனங்களையும் கோயில்களையும் அமைப்பதிலும் பராமரிப்பதிலுஞ் சோழர் ஈடுபட்டி ருந்தனர். இற்றைக்கு 45 வருடங்களுக்கு முன் திருகோணமலை மாவட்டத்தில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கல்வெட்டுகள் சில நா.தம்பிராசா, செ.குணசிங்கம் என்போராற் கண்டுபிடிக்கப் பெற்றன. அவற்றுள் இரண்டு சாசனங்கள் சோழ இலங்கேஸ்வரன் என்னும் அரசனின் காலத்தவை.[4] பதினோராம் நூற்றாண்டின் முற்பகுதியிலே சோழவம்சத்து இளவரசனொருவன் இலங்கையில் அரசனாக முடி சூடியிருந்தான் என்பது அவற்றினால் அறியப்படுகின்றது. மானாங் கேணி, கந்தளாய் என்னும் ஊர்களிலுள்ள கல்வெட்டுகள் சோழ இலங்கேஸ்வரனைக் *கோ* என்றும், *உடையார்* என்றும், *சங்கவர்மர்* என்றும் வர்ணிக்கின்றன. அத்துடன், அவனுடைய ஆட்சியாண்டு களையும் அவை குறிப்பிடுகின்றன. எனவே அரசருக்குரிய விருது களையும் பட்டப்பெயர்களையும் கொண்டிருந்த சோழ இலங்கேஸ்வரன், பாண்டி நாட்டிலிருந்த சோழ பாண்டியர்களைப் போல, ஈழநாட்டில் முதலாம் இராஜேந்திர சோழனின் காலத்திற் சோழச் சக்கரவர்த்தியின் பிரதிநிதியாகவிருந்து அதிகாரஞ் செலுத்தினான் என்பது தெளி வாகின்றது.

சோழ இலங்கேஸ்வரனின் ஆட்சியாண்டுகளில் எழுதப்பெற்ற கல்வெட்டுகள் இரண்டும் சிதைவுற்ற நிலையிலுள்ளன. மானாங்கேணிக் கல்வெட்டின் ஒரு சிறிய பகுதி மட்டுமே கிடைத்துள்ளது. அத்துடன் சாசனம் பொறிக்கப்பட்ட தூணின் இரு ஓரங்களும் வெட்டப்பட்டுள்ளன. அதனால் ஒவ்வொரு வரியிலுஞ் சராசரியாக 6 எழுத்துகள் மறைந்து விட்டன. இக்கல்வெட்டை வாசித்து வெளியிட்டவரான செ.குணசி ங்கம் அதன் வாசகத்தை மேல்வருமாறு எழுதியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1.... ஸ்ரீ சோழ இல....

2..... தேவற்கு யாண்டெ .....

3..... டி சோழ மண்ட .....

4.... ஐந்த்ர சோழ வள......

5..... டி சோழ வளநா.....

6.... மலை ஸ்ரீ மச்சு.....

7.... மூலஸ்தானமு.....

8.... வர முடையார்......

9.... ள மண்ட லத்தி.....[5]

இது தமிழுங் கிரந்தமுங் கலந்த எழுத்துக்களில் அமைந்துள்ளது. ஆறாவது வரியிலுள்ள கிரந்த எழுத்துக்களை மச்சு எனக் குணசிங்கம் கொண்டமை பொருத்தமானதாகத் தோன்றவில்லை. சமஸ்கிருத மொழியில் மச்சு என்ற சொல் பொருள் குறிப்பதாக அமையாது. கிரந்த எழுத்துகளிலுள்ள அச்சொல்லினை மத்ஸ்ய என்ற சமஸ்கிருதச் சொல்லாகக் கொள்வதே பொருத்தமானது. அச்சொல்லினைத் தொடர்ந்து ஏகாரத்தைக் குறிக்கின்றதான குறி காணப்படுவதால் மத்ஸ்யகேஸ்வரம் என்ற கோயிலின் பெயரையே சாசனங் குறிப்பிடு கின்றது என்று கொள்ளவேண்டும். மத்ஸ்ய என்ற சொல்லுக்கு முன்பாக மலை என்னுஞ் சொல் காணப்படுகின்றமை இதனை உறுதி செய்கின்றது. மலை என்பதற்கு முன்பாக அமைந்திருந்து அழிந்து போன எழுத்துகள் திருக்கோண என்றிருத்தல் வேண்டும். ஆகவே மானாங்கேணிக் கல்வெட்டுத் திருகோணமலை மத்ஸ்யகேஸ்வரம் பற்றிக் குறிப்பிடு வதாய் அமைந்ததென்று கொள்வது சாலப் பொருந்தும். இத்தகைய விளக்கமானது நிலாவெளிக் கல்வெட்டில் வரும் *ஸ்ரீ கோணபர்வதம் திருக்கோணமாமலை மத்ஸ்யகேஸ்வரமுடைய மஹாதேவர்'* என்னுந் தொடரினால் ஆதாரம் பெறுகின்றது.[6]

இச்சாசனத்தின் 5 ஆவது வரியில் வளநாடு ஒன்றின் பெயர் குறிக்கப் பெற்றுள்ளது. அதன் பெயரின் முதலாவது பகுதியில் இறுதி யிலுள்ள டி என்பதைத் தவிர்ந்த எழுத்துக்கள் எல்லாம் அழிந்துவிட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு நாம் கவனிக்க வேண்டியது டி என்பதை இறுதி எழுத்தாகக் கொண்டிருக்கக் கூடிய அடைமொழி யாது என்பதாகும். அதனைப் பற்றிச் சிந்திக்குமிடத்துக் கருத்திற் கொள்ள வேண்டியது, பொதுவாக. வளநாடுகள் எல்லாஞ் சோழப்பெருமன்னர் காலத்தில் அவர்களின் பட்டப் பெயர்களாலும் விருதுப் பெயர்களாலும் வழங்கி வந்தன என்பதாகும்.

இராஜராஜத் தென்னாடான பாண்டி நாட்டில் உத்தமசோழ வளநாடு, மதுராந்தக சோழ வளநாடு, முடிகொண்ட சோழ வளநாடு, இராஜேந்திர சோழ வளநாடு என்னும் பிரிவுகள் இருந்தன. சோழ மண்டலம் முதலாம் இராஜராஜனின் காலத்தில் இராஜேந்திரசிங்க வளநாடு, கேரளாந்தக வளநாடு, பாண்டிய குலாசனி வளநாடு, நித்தவிநோத வளநாடு, இராஜாஸ்ரய வளநாடு, க்ஷத்திரிய சிகாமணி வளநாடு, ராஜராஜ வளநாடு என்னும் ஒன்பது பிரிவுகளைக் கொண்டிருந்தது.[6] தமிழகத்திலுள்ள வளநாடுகள் மூன்றின் பெயர்கள் இலங்கையிலுள்ள வளநாடுகளுக்கும் உரியனவாய் இருந்தன. சோழரின் சாசன வழக்காறுகள் பற்றிய அனுபவத்தின் அடிப்படையில் டி என்ற எழுத்தில் முடிவதாக இச்சாசனத்தில் அமைந்திருக்கக் கூடிய சொல் மும்முடி என்பதாகும். எனவே இச்சாசனத்தின் 5 ஆவது வரியிற் குறிப்பிடப்படும் வளநாட்டின் பெயர் மும்முடி சோழ வளநாடு என்றிருத்தல் வேண்டும். அது இராஜேந்திர சோழ வளநாடு எனவும் இச்சாசனத்திற் குறிப்பிடப்பட்டுள்ளது.

சோழமண்டலத்து இராஜேந்திர சிங்க வளநாடு என்பதும் அதன் பிரிவுகளில் ஒன்றான நாடொன்றிலுள்ள ஓரூரைச் சேர்ந்த பிரதானி ஒருவனின் பெயரும் இச்சாசனத்தில் இடம்பெற்றுள்ளன. ஆயினும் கல்வெட்டின் இரு பக்கங்களின் ஓரங்கள் வெட்டப்பட்டுள்ளதாலும் உள்ள சாசனப் பகுதியில் எழுத்துகள் சிதைவுற்றுள்ளதாலும் பெயர்களை அனுமானித்தேனும் அறிந்துகொள்ள முடியவில்லை.

அதனைப் பற்றி இதுவரை கவனித்தவற்றை அடிப்படையாகக் கொண்டு மானாங்கேணிச் சாசனத்தின் முதற் பாகம் மேல் வருமாறு அமைந்திருந்ததென்று கொள்ளலாம்.

1. ரான உடையார் ஸ்ரீ சோழ இல(ங்கேஸ்)

2. (வரதே)தவற்கு யாண்டெட்டாவது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. (மும்மு) டி சோழ மண்ட(லத்து)

4. (இராபே) ஜந்த்ர சோழ வளநாட்(டு)

5. (மும்மு)டி சோழ வளநாட்டு கோண)

6. (மா)மலை ஸ்ரீ மத்ஸ்யஎ (கஸ்வ)

7. (ரமுடையார்) மூலஸ்தானமு(ம்.....)

8. ஸ்வரமுடையார் கே (ாயிலும்)

9. (சே) ாழ மண்டலத்து (இராஜே)

10. (ந்த்ரசி) ங்க வளநாட்டு இ....

11. ..... நாட்டு.....

12. (வேளான் கணபதி.....[7]

சோழ இலங்கேஸ்வரனின் பத்தாவது ஆண்டுக்கு முற்பட்ட மூன்று ஆண்டுகளில் ஏதோவொன்றிலே, ஈழமான மும்முடிச் சோழ மண்டலத்து இராஜேந்திர சோழ வளநாட்டுத் திருகோணமாமலை மச்சகேஸ்வரத்து மூலஸ்தானமும், அதே வளநாட்டிலுள்ள வேறொரு சிவாலயமுந் தொடர்பாகச் சோழ மண்டலத்து இராஜேந்திரசிங்க வளநாட்டுப் பிரதானிகள் மேற்கொண்ட நடவடிக்கைகளைப் பதிவு செய்வதாக மானாங்கேணிச் சாசனம் அமைந்ததென்பது தெளிவாயுள்ளது. இச்சாச னம் கிடைக்கப்பெற்ற தவத்திற் புராதனமான கட்டிட அழிபாடுகள் காணப்படுவதால் அது குறிப்பிடும் இரண்டாவது சிவாலயம் அங்கு அமைந்திருந்தது என்றுங் கருதலாம்.[8]

திருக்கோணேஸ்வரம் பற்றிய வரலாற்று மூலங்களில் நிலாவெளிக் கல்வெட்டு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். அது பத்தாம் நூற்றாண்டுக்குரிய வரிவடிவங்களிலும் தமிழும் கிரந்தமுங் கலந்த எழுத்துகளிலும் அமைந்துள்ளது. அதன் முதற்பகுதி வெட்டப்பட்டு அழிந்துவிட்டதால் அரசனின் பெயர் கிடைக்கவில்லை. இலங்கையிற் சோழராட்சி ஏற்பட்டதன் விளைவாகச் சாசன வழக்கில் இடம்பெற்ற வேலி என்னுஞ் சொல் அதிற் காணப்படுவதாலும், வரிவடிவ அமைப்பின் காரணத்தினாலும் நிலாவெளிக் கல்வெட்டு சோழராட்சி க் காலத்தின் முற்பகுதிக்குரியதென்று கருதலாம். திருகோணமலையிலுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மச்சகேஸ்வரம் என்னுங் கோயிலுக்கு நாள்வழிபாட்டுத் தேவைக்கு நிவந்தமாக நிலங் கொடுக்கப்பட்டமை பற்றிய சாசனமாக அது அமைந்துள்ளது.[9] அதன் வாசகம் மேல்வருமாறுள்ளது:

> "ஸ்ரீ கோணபர்வதம் திருக்கோணமலை மத்ஸ்யகேஸ்வரமுடைய நீலகண்ட மஹாதேவர்க்கு நிச்சலழிவுக்கு நிவந்தமாக சந்திராதித்தவற் செய்த உராகிரிகாம, கிரிகண்ட கிரிகாம(த்து) ஊர்ரிருக்கையும் நீர்நிலமும் புன்செய்யும்..... தேவாலயமும் மேனோக்கின மரமும் கீழ்நோக்கின கிணறும் உட்பட இந்நிலத்துக்கெல்லை கிழக்குக் கழி எல்லை. தெற்கெல்லை கல்லு குடக்கு எத்தகம்பே எல்லை. வடக்கெல்லை சூலக்கல்லாகும். இவ்விசைத்த பெருநான் கெல்லையில் அகப்பட்ட நிலம் இருநூற்று ஐம்பதிற்று வேலி. இது பன்மயேசு ரரக்ஷை"[10]

இச்சாசனத்திலே தலம் பற்றியும், அங்கு நிகழ்ந்த நாள்வழிபாடு பற்றியும், கோயிலுக்கு வழங்கப்பெற்ற தேவதானம் பற்றியுஞ் சொல்லப்படுகின்றது. கோயிலின் பெயர் மச்சகேஸ்வரம் என்பதாகும். கோகர்ணத்துச் சிவாலயமான திருக்கோணேஸ்வரம் மச்சகேஸ்வரம் என்னும் பெயராலும் வழங்கியது என்று *கைலாசபுராணம்* முதலிய நூல்கள் கூறும். அது நாட்டார் வழக்கினாலும் உணரப்படுகின்றமை குறிப்பிடற்குரியது. மச்சகேஸ்வரமானது திருகோணமாமலையில் உள்ளதென்றுஞ் சாசனங் கூறுகின்றது. திருகோணமலையினை ஸ்ரீ கோணபர்வதமென்ற சமஸ்கிருத மொழிப் பெயராலுஞ் சாசனத்தில் குறிப்பிட்டுள்ளனர். திருக்கோணேஸ்வரத்து மகாதேவரைக் 'கோண மாமலை அமர்ந்தாரே' என்று திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் குறிப்பிடுகின்றார். எனவே தேவாரத் திருப்பதிகமும் நிலாவெளிக் கல்வெட்டும் ஒரே தலத்தினையே குறிப்பிடுகின்றன என்பது தெளி வாகின்றது. கோகர்ணத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட சைவத்திருத்தலங்கள் இருந்தமை பற்றி ஐதிகமோ ஆதாரமோ இல்லை.

நிலாவெளிச் சாசனம் மச்சகேஸ்வரத்துக்கு வழங்கப்பெற்ற தேவதானம் பற்றியதாகும். அத்தேவதான நிலம் 250 வேலி அளவினைக் கொண்டது. ஒருவேலி நிலம் பெரும்பான்மையும் 2,000 குழி எனக் கொள்ளப்படுவதால் இச்சாசனங் குறிப்பிடுந் தேவதானம் 1,700 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டது. உராகிரிகாமம், கிரிகண்ட கிரிகாமம் என்னுமிடங்கள் அதில் அடங்கியிருந்தன. கிழக்கிற் கடலும் தெற்கில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லும் மேற்கில் எத்தகம்பே என்னும் தானமும் வடக்கிற் சூலக்கல்லும் தேவதானத்தின் எல்லைகளாயிருந்தன. கிழக்கிற் கடல் எல்லை எனப்படுவதால் இந்நிலம் கடலோரமாய் இருந்தது என்பதை உணர முடிகின்றது. உராகிரிகாமம், கிரிகண்ட கிரிகாமம் என்னும் இடப் பெயர்கள் வழக்கில் இல்லை. ஆயினும் கிரிகண்ட என்பதனைப் பற்றிப் புராதனமான பௌத்த நூல்களிலுந் திரியாய்க் கல்வெட்டிலும் குறிப்புகள் காணப்படுகின்றன.

கிரிகண்ட பர்வதம், கிரிகண்ட எனும் பிரதேசம் ஆகியன பற்றி *மகாவம்சம்* குறிப்பிடுகின்றது.[11] பாண்டுகாபயனின் மாமன்மாருள் ஒருவனாகிய கிரிகண்ட சிவ என்பவன் கிரிகண்ட என்னும் பகுதியை ஆட்சி புரிந்தான் என்று சொல்லப்படுகின்றது. கிரிகண்ட மகாவிகாரம் என்பதனைப் பற்றிப் புத்தகோஷர் எழுதிய *விசுத்திமக்க* என்னும் நூலிலும் சூளவம்சத்திலுஞ் கூறப்பட்டுள்ளது.' கிரிகண்ட என்னும் மலையிலுள்ள விகாரத்தைக் கிரிகண்ட மகாவிகாரம் என்றனர். சமஸ்கிருத மொழியிலும் கிரந்த வரிவடிவங்களிலும் எட்டாம் நூற்றாண் டளவிலே எழுதப்பெற்றதான திரியாய்க் கல்வெட்டு கிரிகண்டிக சைத்தியம் என்பதைப் புகழ்மொழிகளால் வர்ணிக்கின்றது.[12]

- திரியாய்க் கல்வெட்டு திரியாய் என்னும் ஊரின் மேற்கிலே கந்தசாமி மலையிற் காணப்படுகின்றது. அதற்கு 200 அடி தூரத்திற் பௌத்தப் பெரும்பள்ளி ஒன்றின் அழிபாடுகள் உள்ளன. கிரிகண்ட பர்வதம் என்னுந் தானமே கந்தசாமி மலை என வழங்குகின்றது. எனவே கிரிகண்ட கிரிகாமம் என்பது திரியாயிலுள்ள கந்தசாமி மலையினை உள்ளடக்கியிருந்த ஒரு நிலப்பிரிவு என்று கொள்ள முடிகின்றது.

நிலாவெளிக் கல்வெட்டுப் பதிவு செய்துள்ளதும் மச்சகேஸ்வரத்திற்கு வழங்கப்பெற்றதுமான தேவதானம் மாதோட்டமான இராஜராஜபுரத்தில் அமைக்கப்பெற்ற இராஜராஜ-ஈஸ்வரத்திற்குக் கொடுக்கப்பெற்ற தானங்களை ஒத்திருக்கின்றது. இராஜராஜ-ஈஸ்வரத்தில் நெய்வேத்தியம் செய்வதற்கும், ஆராதனை பண்ணுவதற்கும் பிராமணருக்கு வேதனங் கொடுப்பதற்கும், வருடந்தோறும் வைகாசி மாதத்தில் விழா எடுப்பதற்கும், மாதோட்டத்திலிருந்து அரசாங்கத்துக்குக் கிடைக்க வேண்டிய வருமானங்களை அரசனது கட்டளைப்படி தாழிகுமரன் கோயிலுக்கு நிவந்தமாக விட்டான். மச்சகேஸ்வரத்துத் திருநீலகண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாதேவர் சந்நிதியில் நித்திய நிவேதனத்துக்கு உராகிரிகாமம், கிரிகண்ட கிரிகாமம் என்னும் இடங்களிலுள்ள 250 வேலி நிலம் வழங்கப்பட்டது. அத்தேவதானத்தை வழங்கியோரின் பெயரினைக் குறிப்பிடும் சாசனப்பகுதி அழிந்து விட்டது. ஆயினும் நிலம் அளவில் மிகப் பெரிது என்பதால் அது குடியானவர்களினால் அன்றி அரசன் ஒருவனால் அல்லது இராசப் பிரதிநிதி ஒருவனால் வழங்கப் பெற்றிருத்தல் வேண்டும்.

நிலாவெளிக் கல்வெட்டிலுள்ள வேறொரு பிரதான அம்சம் மச்சகேஸ்வரத்துப் *பன்மாகேஸ்வரர்* பற்றிய குறிப்பாகும். சாசனத்தின் வாசகம் *பன்மாகேஸ்வரர் ரக்ஷை* என்ற தொடருடன் முடிகின்றது. பொதுவாகத் தமிழ்ச் சாசன வழக்கிற் சிவாலயங்களுக்கு வழங்கப்பெற்ற தானங்கள் தொடர்பாக இம்மொழித் தொடர் பயன்படுத்தப்படுகின்றது. பன்மாகேஸ்வரர் என்பது மகேஸ்வரனான சிவபெருமானின் அடியார் களைக் குறிக்கும். ஆலயங்களுக்கு வழங்கப்பெற்ற நிவந்தங்களின் அறங்காவலராக அவர்கள் விளங்கினர். பன்மாகேஸ்வரர் என்னும் சொல்வழக்கு இலங்கையிற் சோழராட்சிக் காலம் முதலாகவே ஆவணங்களில் இடம்பெற்றது. அக்காலத்திலே பொலன்னறுவையிலுள்ள வானவன்மாதேவீஸ்வரத்திலும் கோகர்ணத்து மச்சகேஸ்வரத்திலும் ஆலய விவகாரங்களைக் கவனிக்கும் பன்மாகேஸ்வரர் இருந்தமை குறிப்பிடற்குரியது.

திருக்கோணேஸ்வரத்தின் இடிபாடுகளிடையே காணப்பெற்ற சோழமன்னர் காலத்துச் சாசனப் பகுதிகளிற் சில சோழர் அக்கோயிலுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தனர் என்பதை உணர்த்து கின்றன. முதலாம் இராஜராஜனின் மெய்க்கீர்த்தி அடங்கிய சிலாசாச னத்தின் பகுதியொன்று திருகோணமலையிற் கடலடியிலிருந்து மீட்கப்பெற்றது.[13]

இப்போது அது திருக்கோணேஸ்வரத்து மண்டபத்தில் உள்ளது. இச்சிலாசாசனத்தின் முதற் பகுதியும் இறுதிப் பகுதியும் உடைந்து அழிந்துவிட்டன. இராஜராஜனது மெய்க்கீர்த்தியில் வழமையாக வரும் 'இரட்டபாடியேழரை யிலக்கமும் முந்நீர்ப்பழந்தீவு பன்னீராயிரமும்' என்ற தொடர்கள் இச்சிலாசாசனத்து மெய்க்கீர்த்திப் பகுதியிற் காணப்பட வில்லை. எனவே, செ.குணசிங்கம் வற்புறுத்திக் கூறியவாறு இக்கல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்டு இராஜராஜ சோழனது ஆட்சியின் ஆரம்ப காலத்திற்குரியது என்று கொள்வது பொருத்தமானதாகும். அரசனின் ஆண்டுகள் மிகுந்து செல்லச் செல்ல அவ்வாண்டுகளில் நிகழுஞ் சாதனைகள் பற்றிய விவரங்கள் மெய்க்கீர்த்தியிற் சேர்த்துக் கொள்ளப்படுவதால் அது நாளடைவில் வடிவத்தில் விருத்தி பெற்றது. இளவரசனாகிய மதுராந்தகன் இரட்டபாடி மீது படையெடுத்துச் செல்வதற்கும், பழந்தீவு முதலான மேற்கிலுள்ள தீவுகளைச் சோழர் கைப்பற்றுவதற்கும் முற்பட்ட காலத்து மெய்க்கீர்த்தியின் வடிவமே இராஜராஜனது கோணேஸ்வரம் கல்வெட்டில் இடம்பெற்றுள்ளது. திருக்ணேஸ்வரத் திருப்பணிகளையோ அக்கோயிலுக்கு வழங்கிய தானங்களையோ அச்சாசனம் பதிவு செய்திருந்தது என்று அனுமானித்துக் கொள்ளலாம்.

திருகோணமலை நகரப்பகுதியிலுள்ள சமய நிலையங்களோடு சோழர் கொண்டிருந்த தொடர்புகளுக்கு, அங்கு காணப்படும் இராஜேந்திர சோழனது காலத்துச் சாசனங்களுஞ் சான்றுகளாய் உள்ளன. அவனுடைய மெய்க்கீர்த்தியின் வாசகம் அடங்கிய சாசனங்கள் ஒஸ்றென்பேர்க் கோட்டையிலும் பத்திரகாளியம்மன் கோயிலிலுங் காணப்படுகின்றன. இவற்றுட் கோட்டையில் உள்ள கல்வெட்டுக் காலத்தால் முற்பட்டதாகும். அது துண்டமாயுள்ளது. அதன் முதற் பகுதியும் கடைசிப் பகுதியும் உடைந்து விட்டன. எஞ்சியுள்ள பகுதியில் அவனுடைய மெய்க்கீர்த்தியின் மேல்வரும் பகுதி காணப்படுகின்றது:

*(கொள்ளிப்) பாக்கையும்*
*நண்ணற் கருமுரண் மண்ணைக் கடக்கமும்*
*பொருகடல் ஈழத்தரைசர் தம்முடியும்*
*ஆங்கவர் தேவியர் ஓங்கெழின் முடியும்*
*முன்னவர் பக்கல் தென்னவர் வைத்த*
*சுந்தர முடியும் இந்திரனாரமும்*
*தெண்டிரை யீழ மண்டல முழுவதும்*
*எறிபடைக் கேரளன் முறைமையிற் சூடும்*
*குலதனமாகிய பலர்புகழ் முடியும்*
*செங்கதிர் மாலையும் சங்கதிர் வேலைத்*
*தொல்பெருங் காவற் பலபழந்தீவும்*
*மாப்பொரு தண்டாற் கொண்ட கோப்பரகேசரிவன்மரான*
*உடையார் ஸ்ரீ இராஜேந்திர சோழ தேவர்க்கு யாண்டு..''*[14]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் மெய்க்கீர்த்திப் பகுதியிற் கங்கைப் படையெடுப்பு, கடாரப் படையெடுப்பு ஆகியன பற்றிய குறிப்புகள் இல்லை. எனவே அப்படையெடுப்புகள் நடைபெறுவதற்கு முன், இராஜேந்திரனுடைய ஆட்சியின் 7ஆவது ஆண்டளவில் இச்சாசனம் திருகோணமலை நகரப் பகுதியிலுள்ள கோயிலொன்றிலே அமைக்கப்பெற்றதென்று கருதலாம். திருக்கோணேஸ்வரம் கோயிலை இடித்த பின்பு அக்கோயிலின் அழிபாடுகளைக் கொண்டு போர்த்துக்கேயர் கோட்டையைக் கட்டினார்கள் என்று ஐரோப்பியரின் நூல்களிற் கூறப்படுவதால் இச்சாசனமானது கோணேஸ்வரத்தில் இருந்ததென்று கருதலாம்.

இராஜேந்திர சோழனின் காலத்துச் சாசனமொன்று திருகோணமலைப் பத்திரகாளி அம்மன் கோயிலிற் காணப்படும் தூணொன்றில் எழுதப்பட்டுள்ளது. அத்தூணின் பக்கங்களுள் ஒன்று கட்டிடத்தோடு சேர்த்து வைக்கப்பட்டுச் சாந்தினாற் பூசப்பட்டுள்ளது. ஏனைய மூன்று பக்கங்களிலும் அரசனின் மெய்க்கீர்த்தியின் வாசகம் எழுதப்பட்டுள்ளது.[14] தூணைக் கட்டிடத்திலிருந்து பிரித்துப் பூச்சுகளை நீக்கிச் சாசனத்தைப் படியெடுத்து ஆராயின் சில முக்கியத்துவம் வாய்ந்த செய்திகள் கிடைக்கக்கூடும். திருகோணமலையிற் போர்த்துக்கேயரால் இடிக்கப்பட்ட கோயிலொன்றின் மண்டபமொன்றிலே இச்சிலாசாசனம் ஒரு காலத்திலே அமைக்கப்பட்டிருந்ததென்று கொள்வது பொருத்தமானதாகும்.

## இராஜராஜ சதுர்வேதிமங்கலம்

கந்தளாயிற் காணப்படும் சோழ இலங்கேஸ்வரன் காலத்துச் சாசனம் அங்கு பதினோராம் நூற்றாண்டில் அமைந்திருந்த சில சமய - சமூக நிறுவனங்களைப் பற்றிய அரிய செய்திகளைக் குறிப்பிடுகின்றது. அதன் முதற் பகுதி வாசித்தறியக் கூடிய அளவிலே தெளிவாயுள்ளது. இரண்டாம் பகுதியிற் பல எழுத்துகளுஞ் சொற்றொடர்களுஞ் சிதைந்துவிட்டன. அதன் முதற் பகுதியின் வாசகம் மேல் வருமாறு அமைந்துள்ளது:

> 'ஸ்வஸ்தி ஸ்ரீ. கோ ஸ்ரீ சங்கவர்மரான உடையார் ஸ்ரீ சோழ இலங்கேஸ்வர தேவற்கு யாண்டு பத்தாவது இராஜேந்திர சோழ வளநாட்டு ராஜவிச்சாதிர வளநாட்டு பிரஹ்மதேசம் ஸ்ரீ ராஜராஜச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதுர்வேதிமங்கலத்துப் பெருங்குறி பெருமக்களோம் இய்யாட்டைக் கும்மநாயற்று பூர்வபக்ஷத்து த்வாதஸியும் செய்வாய்க்கிழமையும் பெற்ற ஆயிலியத்து நாளன்றிரவு நம்மூர் தண்டுகின்ற முத்தங்கைக் கோயில் மானி ............. [15]

சாசனத்தின் சிதைவடைந்த பிற்பகுதியில் நீர்நிலம், வாசுதேவ வாய்க்கால், விக்கிரமசோழ வாய்க்கால் இரண்டாங் கண்ணாற்று மூன்றாஞ் சதிரம், மா, மூன்றாங் கண்ணாறு என்னும் மொழிகள் உள்ளன. குளத்திலிருந்து நீர் பாயும் விக்கிரம சோழ வாய்க்காலின் இரண்டாங் கண்ணாற்று மூன்றாஞ் சதுரத்திலுள்ள விளைநிலம் 3 மா தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஒரு நடவடிக்கை பற்றிச் சாசனம் வர்ணிக்கின்றது.

அதனை இராஜராஜ சதுர்வேதிமங்கலத்துப் பெருங்குறிப் பெருமக்கள் மேற்கொண்டனர். பிரம்மதேயங்களிலுள்ள சபையாரைப் பெருங்குறி மகாசபை என்றும் பெருங்குறிப் பெருமக்கள் என்றும் வர்ணிப்பது வழக்கம். அத்தகைய மகாசபையின் நடவடிக்கையினை இச்சாசனம் பதிவு செய்கின்றது. பிரம்மதேயமானது இராஜராஜ சதுர்வேதி மங்கலம் என்னும் பெயரைப் பெற்றிருந்தமையுங் குறிப்பிடற்குரியது. அது இராஜேந்திர சோழ வளநாட்டின் பிரிவாய் அமைந்திருந்தது. கந்தளாய்ச் சாசனம் கோயிலொன்றின் அழிபாடு களிடையிற் காணப்படுவதாற் கந்தளாயிற் சோழர் காலத்தில் அமைக்கப் பெற்ற ஆலயமொன்றிலே அது நிறுவப்பட்டிருத்தல் வேண்டும்.

கந்தளாயிலுள்ள சதுர்வேதிமங்கலத்துப் பெருங்குறிப் பெருமக்கள் சோழ இலங்கேஸ்வரதேவனின் 10 ஆவது ஆண்டிலே, மாசி மாதத்துப் பூர்வபக்ஷத்துத் துவாதசியான செவ்வாய்க்கிழமையும் ஆயிலிய நக்ஷத்திரமுங் கூடிய தினத்து இரவிலே கூடியிருந்து ஊர்த் தண்டு வானாகிய கோயில்மானி தொடர்பாகவும், விக்கிரமசோழ வாய்க்காலின் இரண்டாங் கண்ணாற்று மூன்றாஞ் சதிரத்திலுள்ள நீர்நிலம் 3 மா குறித்தும் ஏதோ முடிபுகளை மேற்கொண்டனர். கந்தளாயிலிருந்த சிவன் கோயில் மண்டபத்திலே அவர்கள் கூட்டமாகக் கூடினார்கள் என்றும் கூட்டத்தில் மேற்கொண்ட தீர்மானத்தைக் கோயிலிலிருந்த மண்டபமொன்றின் தூணிலே சிலாசாசனஞ் செய்தனரென்றும் அனுமானித்துக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சாசனத்தில் வரும் நம்மூர் தண்டுகின்ற மூத்தவகைக் கோயில் மானி என்னுந் தொடரானது, மூத்தவகை, கோயில்மானி என்னும் சொற்களின் சேர்க்கையால் ஆனது. இவற்றுள் முதலாவது அரசாங்க அதிகாரிகளில் ஒரு வகையினரைக் குறிக்கும். கோயில் மானி என்பதை ஒருவருடைய இயற் பெயராகக் கொள்ளலாம். கந்தளாய்ச் சாசனத்தின் சிதைவுற்றுள்ள பகுதியில் வாசுதேவ வாய்க்கால், விக்கிரமசோழ வாய்க்கால், இரண்டாங் கண்ணாறு, நீர்நிலம் முதலிய தொடர்கள் காணப்படுகின்றன:

குளத்தூம்பினின்றும் நீர் பாயும் வழிகளை வாய்க்காலென்றும், அவற்றின் கிளைகளைக் கண்ணாறு என்றும், கண்ணாறுகளின் அணைக்கட்டுகளை வதி என்றுங் குறிப்பிடுவது புராதன காலத்து வழமையாகும். நீர்நிலப் பகுதிகள் தொடர்பாகவே சதிரம் என்னுஞ் சொல் சாசனங்களில் வருகின்றது. இக்காலத்திற் போலவே வயல் நிலங்கள் சதுர வடிவிலும் நீள் சதுர வடிவிலும் அமைக்கப்பட்டிருந்தன. அதனாற் போலும் அவற்றைச் சதிரம் என்றனர். அவற்றை அடையாளங் காண்பதற்கும், இறைகடமைகளைக் காணியாளரிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கும், அந்நிலங்களைப் பற்றிய விவரங்களைப் புரவு, வரிப்பொத்தகம் என்பன போன்ற ஆவணத் தொகுதிகளிற் பதிவு செய்து வைத்திருப்பது வழமை. மணிமங்கலத்துச் சாசனத்தில், ''இவ்வூர் தென்பிடாகை ஆத்தனஞ்சேரி கருணாகர வாய்க்கால்... கண்ணாற்றுக் கன்னரவதிக்குக் கிழக்கு மூன்றாஞ் சதிரத்து ஸாஹணை ஆதிச்சகுமார கிரமவித்தர் பக்கல் இத் தேவர் விலைகொண்டுடைய பூமியில் நூறு குழியும்....'' என வரும் தொடர் இவ்வழமைக்கோர் உதாரணமாகும்.

சோழ இலங்கேஸ்வரன் காலத்துக் கந்தளாய்க் கல்வெட்டில் வரும் வாய்க்கால், கண்ணாறு, சதிரம் என்னுஞ் சொற்களின் உபயோகத்தை மணிமங்கலச் சாசனத் தொடர்களின் மூலமாகப் புரிந்துகொள்ள முடிகின்றது. இராஜராஜ சதுர்வேதி மங்கலத்தில் நீர்ப்பாசன வசதியுள்ள வயல்நிலங்கள் இருந்தன. குளத்திலிருந்து நீர் பாயும் இரு வாய்க்கால்கள் இருந்தன. அவை விக்கிரமசோழ வாய்க்கால், வாசுதேவ வாய்க்கால் என்பனவாகும். கந்தளாயிலிருந்த குளவாய்க்கால்களிற் கண்ணாறு என்னும் கிளை வாய்க்கால்கள் அமைந்திருந்தன. பிரம்மதேயம் கந்தளாய்ப் பிரம்மதேயம் என்பதால் அதிலிருந்த வாய்க்கால்கள் இரண்டும் கந்தளாய்க் குளத்து வாய்க்கால்களாதல் வேண்டும். எனவே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினோராம் நூற்றாண்டிலே, சோழ இலங்கேஸ்வரன் இலங்கையில் அரசனாக விளங்கிய காலத்திற் கந்தளாய்க் குளமும் அதனை ஆதாரமாகக் கொண்ட நீர்ப்பாசன முறையும் சீரான நிலையில் இருந்தன என்பதற்குக் கந்தளாய்க் கல்வெட்டு சான்றாயுள்ளது. குளவாய்க்கால்கள் வாசுதேவ வாய்க்கால் என்றும் விக்கிரமசோழ வாய்க்கால் என்றும் பெயரிடப்பட்டுள்ளமையுங் குறிப்பிடத் தகுந்தது. சோழ இலங்கேஸ்வரன் காலத்திலே குளமும் அதன் வாய்க்கால்களுந் திருத்தி அமைக்கப்பட்டிருத்தலுங் கூடும்.

இங்கே இதுவரை ஆராய்ந்த விடயங்கள் பற்றிய முடிபுகளை மேல்வருமாறு சுருக்கமாகத் தொகுத்துக் கூறலாம்.

சோழப் பெருமன்னர் காலத்திலே தென்னிந்தியாவில் ஏற்பட்ட சமய - கலாசார அபிவிருத்திகளின் செல்வாக்கு ஈழமான மும்முடிச் சோழ மண்டலத்திற் குறிப்பிடத்தக்க அளவிலே காணப்பட்டது. தமிழகத்திற் போல இலங்கையிலும் பல புதிய ஆலயங்கள் சோழப் பிரதானிகளாலும் வணிக கணத்தவராலும் பிறராலும் உருவாக்கப்பட்டன. பொலன்னறுவை, பதவியா, கந்தளாய் போன்ற கேந்திர நிலையங்களில் அவை அமைக்கப்பட்டன. தமிழகத்திற் போல இலங்கையிலும் பாடல் பெற்ற தலங்களைப் புனர்நிர்மாணஞ் செய்வதிற் கவனஞ் செலுத்தப் பட்டது. திருக்கேதீஸ்வரத்திலே தாழிகுமரன் என்னும் அதிகாரியினாற் புதிய கோயில் அமைக்கப்பெற்றது. அக்கோயிலின் தேவைகளுக்கென மாதோட்டமான இராஜராஜபுரத்தில் நிலமும் அரசாங்கத்துக்குரிய வருமானங்களும் மானியமாக அரனால் வழங்கப் பெற்றன. இத்தகைய நடவடிக்கைகளைச் சோழப் பிரதானிகள் திருக்கோணேஸ்வரத்திலும் மேற்கொண்டனர் என்று கருத முடிகின்றது.

கோகர்ணத்துச் சிவாலயமானது 10 ஆம், 11 ஆம் நூற்றாண்டுகளில் மச்சகேஸ்வரம் என்னும் பெயரால் வழங்கியது என்பது சாசனத் தொடர்களினால் உணரப்படுகின்றது. அங்குள்ள மூலஸ்தானம் தொடர்பான திருப்பணிகளைச் சோழப் பிரதானிகள் சிலர் செய்தனர் என்பதைச் சோழ இலங்கேஸ்வரனின் காலத்து மானாங்கேணிச் சாச னம் உணர்த்துகின்றது. அக்கோயிலுக்குப் பெருமளவிலான நிலங்கள் தேவதானமாக விடப்பட்டமைக்கு நிலாவெளிச் சாசனம் சான்றாக அமைகின்றது. வானவன் மாதேவி-ஈஸ்வரத்திற் போல அங்கும் பன்மாகேசுரர் அறக்கட்டளைகளை மேற்பார்வை செய்வதற்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பேற்றிருந்தனர். சோழ மன்னர் மூவரின் காலத்துக் கல்வெட்டுகள் திருகோணமலை மாவட்டத்தில் உள்ளன. முதலாம் இராஜராஜனதும் முதலாம் இராஜேந்திரனதும் காலத்துச் சாசனங்கள் திருக்கோணேஸ் வரத்தில் இருந்தன என்று கொள்வதற்கான காரணங்கள் உள்ளமையுங் கவனித்தற்குரியது.

சோழராட்சியில் இலங்கையிலுள்ள கோயில்களிற் கிரமமாக ஆராதனைகளும் உற்சவங்களும் நடைபெறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. தென்னிந்தியக் கோயில்களில் உள்ளதைப் போன்ற ஆலய நிர்வாக முறையும் வழிபாட்டு முறைகளும் இலங்கை யிலுள்ள கோயில்களில் ஏற்படுத்தப்பட்டன. ஆலய சேவைகள் புரிவதற்கென்று அந்தணர், கம்மாளர், வாத்தியக்காரர் போன்றோரைக் கோயில் வளாகத்திற்கு அண்மையிலுள்ள இடங்களிற் குடியிருத்தி னார்கள். கந்தளாய்ப் பிரம்மதேயம் போன்ற புதிய அக்கிரகாரங்கள் சில அமைக்கப்பெற்றன.

இராஜேந்திர சோழனின் மகனாகிய சோழ இலங்கேஸ்வரன் இலங்கையிற் சில காலமிருந்து ஆட்சி புரிந்தான். இதுவரை கிடைத்துள்ள அவனது காலத்துச் சாசனங்கள் இரண்டும் திருகோணமலை மாவட்டத் திலுள்ள ஊர்களிலிருந்து கிடைத்துள்ளன. அவனுடைய காலத்திற் கந்தளாய்க் குளத்திலிருந்து வாய்க்கால்கள் வழியாக வயல்களுக்கு நீர்ப்பாசனஞ் செய்தனர். கந்தளாய்ப் பிரம்மதேயத்தின் எல்லைகளுக்குள் ஈஸ்வரம் ஒன்றும் அம்மன் கோயிலொன்றும் அமைந்திருந்தன என்றும் கொள்ள முடிகின்றது.

### குறிப்புகளும் விளக்கவுரையும்

1. S.Pathmanathan, *Tamil Inscriptions in Sri Lanka* Volume I, Department of Hindu Religious and Cultural Affairs, Colombo, 2019, Pp.24, 159, 209, 213, 236.
2. Ibid, Pp.213-236.
3. Ibid, p.200.
4. S.Gunasingham, "Two Inscriptions of Cola Ilankesvara Deva", *Trincomalee Inscriptions Series* No. 1 Peradeniya, 1974, PP. 3-6.
5. Ibid.
6. S.Gunasingham,"A Tamil Slab Inscription at Nilaveli", T*he Sri Lanka Journal of the Humanities,* Vol. I, No.1,pp.60-71.
7. S.Pathmanathan, *Tamil Inscriptions in Sri Lanka* Volume I, 2019.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. சி.பத்மநாதன், *இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள்,* இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, 2006.பக்.86-94.
9. *South Indian Inscriptions,* Vol III: No: 92 : Vol : IV: No : 1411; A.Velupillai, *Ceylon Tamil Inscriptions,* Pt I, Peradeniya, 1970; *Ceylon Tamil Inscriptions,* Pt II, *Peradeniya, 1971; Epigraphia Tamilica,* Ed. K. Indrapala, Pt I, Jaffna Archaeological Society 1971; S. Gunasingam, *"Two Inscriptions of Cola Ilankesvara Deva",* Trincomalee Inscriptions Series No 1 Peradeniya, 1974.
10. S.Gunasingham,"A Tamil Slab Inscription at Nilaveli", T*he Sri Lanka Journal of the Humanities,* Vol. I, No.1,pp.60-71.
11. Ibid. pp. 60-71.
12. *சூளவம்சம்* 60: 60-61; S.Paranavitana, "Tiriyay Rock Inscription", *Epigraphia Zeylanica,* Vol.4, pp. 151-160.
13. S.Gunasingham, "A Fragmentary Slab Inscriptions of the time of Rajaraja I (A.D.985-1014)," *Trincomalee Inscriptions Series* No 2, Peradeniya 1979, pp. 1-5.
14. W.E.Baker and H.M.Durand, "Facsimiles of Ancient Inscriptions lithographed by Jas.Prinsep: Inscriptions of Trincomalee", *The Journal of the Asiatic Society of Bengal,* Calcutta, Vol.5, pp. 45-55; S.Gunasingham, "A Slab - Inscription of the time of Rajendra I from Fort - Ostenburgh, Trincomalee",*Trincomalee Inscriptions Series,* No. 2, pp. 13-23.
15. S.Gunasingham, "Two Inscriptions of Cola Ilankesvara Deva", *Trincomalee Inscriptions Series* - No.1, Peradeniya, 1974, p.11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3

# குளக்கோட்டனும் ஆலய தருமங்களும்

*பார்தாங்கு கோயிலும் பொன்மண்டபமுங்*
*கோபுரமும் பரற்குநாட்டி*
*பேர்தாங்கு மாயனுக்கு மலங்கார*
*வாலய மொன்றியற்றிமுந்துங்*
*கார்தாங்கு திருக்குளமும் பாவநாசச்*
*சுனையுங் கண்டகண்டன்*
*சீர்தாங்கு குளக்கோட்டனென்னும் சோழ*
*கங்கனை நம்சிந்தையில் வைப்பாம்.*

*ஸ்ரீ தக்ஷிண கைலாசபுராணம்*
பாயிரச் செய்யுள்.

**குளக்கோட்டன்**

விமானம், எழில்மிகு மண்டபம், கோபுரம் ஆகியன பொருந்திய மகத்தான ஈஸ்வரத்தையும், அழகிய பெருமாள் கோட்டத்தையும், மழைநீரைத் தேக்கும் திருக்குளத்தையும், பாவநாசம் என்னுஞ் சுனையினையும் குளக்கோட்டன் என்று வழங்கும் சோழகங்கன் அமைத்தான். இது தக்ஷிண கைலாசபுராணத்து ஆசிரியர் குளக்கோட்டனைப் பற்றிச் சொல்லும் வர்ணனை.[1] இது திருநகரச் சருக்கத்திலே கவிநயத்துடன் விரித்துரைக்கப்படுகின்றது. நூலாசிரியர் அரசரான சிங்கைச் செகராசசேகரன். நூற்பாயிரத்திலே குளக்கோட்டனைப் பற்றிய பாடல் சமய குரவரைப் பற்றிய பாடலைத் தொடர்ந்து வருகின்றது. சமயாபிமானியாகிய நூலாசிரியர் குளக்கோட்டனை நால்வரின் நிலையில் வைத்துவிட்டார். குளக்கோட்டனைப் பற்றிய அவரின் நோக்கு உணர்ச்சிபூர்வமானது. குளக்கோட்டன் திருப்பணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைப் பற்றிக் கூறும் நூல்களிலே ஸ்ரீ தக்ஷிண கைலாசபுராணமே மிகவும் பழைமையானது. அது கோணேஸ்வரத்தின் புனருத்தாரணம், திருக்குளங்கட்டியமை ஆகிய விடயங்களை வர்ணிக்கின்றது. எனவே, குளக்கோட்டனைப் பற்றிய மரபு வழியான கதையில் இது ஓர் அம்சம் மட்டுமே. அவனைப் பற்றிய ஐதிகங்கள் காலப்போக்கில் வளர்ச்சி பெற்றன. மரபிலே புதிய அம்சங்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டன.

## கோணேசர் கல்வெட்டு

குளக்கோட்டனைப் பற்றிய மரபின் விரிந்த நிலையினைக் *கோணேசர் கல்வெட்டு* என வழங்கும் நூலிற் காணலாம். அது புதிய விடயங்களைக் குறித்துச் சொல்வதால் பழைய புராணக் கதையினைச் சுருக்கிச் சொல்கின்றது. ஆலய தருமங்கள், சொத்துடைமைகள், ஆலய சேவைகள், ஆலய பரிபாலனம், மக்களின் குடியேற்றம், வன்னியராட்சி முதலான விடயங்களையே அது சிறப்பித்துக் கூறுகின்றது. *ஸ்ரீ தக்ஷிண கைலாசபுராணம், கோணேசர் கல்வெட்டு* என்பவற்றுக்கிடையிலான கால இடைவெளியும் மிகப் பரந்தவொன்றாகும்.

புராண நூலானது கோணேஸ்வரம் சிறப்புடன் விளங்கிய காலத்தில் எழுதப்பெற்றது. *கோணேசர் கல்வெட்டு* எழுதப் பெற்ற காலத்தில் ஆலயம் பறங்கியர் கோட்டையாகிவிட்டது. அது திருகோணமலையில் ஒல்லாந்தரின் ஆட்சி நிலவிய காலம். அதனாசிரியரான கவிராச வரோதயன் தனது அனுபவங்களின் அடிப்படையிலும், சமூக வழமைகள், ஆலய வழமைகள் என்பவற்றின் அடிப்படையிலும் விடயங்களை விளக்குகின்றார் என்று கொள்ள முடிகின்றது. ஆலயந் தொடர்பான இலக்கிய மரபொன்றையும் அவர் பயன்படுத்தினார் என்பதை மறுப்பதற்கில்லை. *பெரிய வளமைப் பத்ததி* என்பது பற்றிக் கோணேசர் கல்வெட்டுக் குறிப்பிடுகின்றமையும் கவனித்தற்குரியது.[2]

நாட்டார் வழக்கிலுள்ள கதாம்சங்களுங் கோணேசர் கல்வெட்டிலே சேர்ந்துவிட்டன. எனவே அதிலே வரலாற்று அம்சங்கள் கூடிய ஐதிகங்கள், சமகால வழமைகளின் அடிப்படையிலான அனுமானங்கள், ஜனரஞ்சகமான புனைகதைகள் ஆகிய எல்லாம் கலந்து விட்டன. இவற்றின் தாரதம்மியங்கள் பொறுமையாகவும், வித்துவத் திறமை யோடும் வித்தகரால் ஆராயப்படல் வேண்டும். காலப்போக்கிலே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ச்சியான ஆராய்ச்சிகளின் பயனாக மட்டுமே இப்போது தெளிவற்றுக் காணப்படும் விடயங்கள் தெளிவு பெறும்.

ஏட்டுப் பிரதிகளை ஆதாரமாகக் கொண்டு வெளியிடப்பெற்ற கோணேசர் கல்வெட்டிலே செய்யுள் நடையிலும் உரைநடையிலும் அமைந்துள்ள இருவேறு பகுதிகள் உள்ளன. உரைநடைப் பகுதியில் மாணிக்கங்கள் வரவு, வரிப்பத்தார், குடிமை வரவு, வன்னிபங்கள் வரவு, கயவாகுராசன் உபயம் முதலிய 29 தலைப்புகளின் கீழ் விபரங்கள் கூறப்படுகின்றன. திருமலையோடு தொடர்புடைய ஐதிகங்கள் யாவும் அதில் அடங்கி விடுகின்றன.'

**திரிகோணாசல புராணம்**

கோணேசர் கல்வெட்டில் இடம்பெறும் கதைகளை விரிவுபடுத்திச் செய்யுள் நடையில் அமைத்துக் கூறும் இலக்கியமே திரிகோணாசல புராணமாகும். அதன் ஆசிரியரின் பெயரும், அது எழுதப்பட்ட காலமும் நிர்ணயிக்கப்படவில்லை. மாசிலாமணி முக்துக்குமாரு என்பவரின் கையெழுத்திலுள்ள திரிகோணாசல புராணத்து ஏட்டுப்பிரதி ஒன்றைக் கண்டவர்களும், அதனைப் பற்றிக் கேட்டவர்களும் முத்துக்குமாரு என்பவரே நூலின் ஆசிரியர் என்ற கருத்துத் தோன்றி நிலைபெறுவதற்குக் காரணராயிருந்தனர். ஆயினும், இந்நூலைப் பதிப்பித்து வெளியிட்டவரான வண்ணை மாநகரம் பரத்துவாசி ஆ.சண்முகரத்தினையர் நூலாசிரியரின் பெயர் தெரியவில்லை என்று கூறியுள்ளமை கவனித்தற்குரியது.[4]

*மச்சபுராணம், கயிலாச புராணம்,* முற்காலத்தவர்கள் எழுதி வைத்த மரபுகள் முதலியவை இப்புராணத்துக்கு ஆதாரமாயிருந்தன என்பதை மேல்வரும் அதன் பாயிரச் செய்யுள் தெளிவுபடுத்துகின்றது:

*மச்சபுராணக் கதையுங் கைலாய*
*புராணத்தின் வாய்மை தானும்*
*முச்சமம் போற்றிடுமறிஞர் முன்னுரைத்த*
*மரபுகளின் முறையுந் தூக்கி*
*சொக்கிய சீர்தென்கயிலைப் பெரியோர்கள்*
*கூறெ(ன)ன முன் விதியினாராய்ந்து*
*இச்சகத்திற் கோணவரைப் புராணமெனத்*
*தமிழ்ப்பாவி னியம்பலுற்றேன்*[5]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென் கயிலாயமாகிய கோணேஸ்வரம், தம்பலகாமத்துக் கோணை நாதர் கோயில் ஆகிய இரண்டு கோயில்களின் வரலாற்றம்சங்கள் பற்றிய செய்திகளையும் கதைகளையுந் தொகுத்து, இலக்கிய நயம் பொருந்திய வகையிலே கூறும் சால்புடைய நூலாகவே *திரிகோணாசல* புராணம் காணப்படுகின்றது. அதிலே ஆதாரபூர்வமான வரலாற்றுச் செய்திகள் மருவித் தெளிவற்றும், நாட்டார் பாங்கிலுள்ள கதைகள் மேலோங்கியும் அமைந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது. அதன் செய்யுள்நடை இரசனை மிக்கது; கவர்ச்சியானது.

**கோகர்ணத்திற் சோடகங்கன்**

கோட்டையிற் கிடைத்த சாசனங் குறிப்பிடும் சோடகங்க(ன்) 13 ஆம் நூற்றாண்டிலே, மாகனது காலத்தில் இலங்கையை அடைந்த ஒரு இராசகுமாரன் என்று முன்னர் நாம் கருதினோம்.' பரணவிதான சாச னத்தின் வாசகம் பற்றிக் கூறிய விளக்கங்களை ஏற்றுக் கொண்டமை யினால் அவ்வாறு கருதினோம். ஆனால், அச்சாசனத்தைத் துருவி ஆராந்தமையின் பயனாகப் பரணவிதானவின் வாசகமும் விளக்கங் களும் சில அம்சங்களிலே பொருத்தமற்றவை என்பது தெளிவாகி யுள்ளது. மாகனுடைய காலத்திலே சோடகங்கன் திருகோணமலைக்கு வந்தான் என்று கொள்வதற்கு எதுவித ஆதாரமுமில்லை. எனவே கோட்டைச் சாசனங் குறிப்பிடும் சோடகங்கன் சூளவம்சம் குறிப்பிடும் மூவருள் ஒருவனாதல் வேண்டும்.

அம்மூவருள்ளும் கஜபாகுவின் அரண்மனையில் வாழ்ந்த சோழகங்க குமாரன் எதுவிதமான வெற்றிகளையும் பெற்றதற்குச் சான்றில்லை. விக்கிரபாகுவைக் கொன்று அரசனாகிய சோடகங்கன் அரச பதவி பெற்றவனாயினும் அவனது ஆட்சி 9 மாதங்கள் மட்டுமே நிலைபெற்றது. அவனது ஆட்சிக்காலம் மிகச் சுருங்கியது; பொலன்னறுவையிலே குழப்பங்கள் மிகுந்தது. அவன் ஆலய தரிசனம் பண்ணிக் கோயிலுக்குத் தானங்களைக் கொடுத்திருக்க முடியுமாயினும் பரந்த அளவிலே கட்டட வேலைகளை ஒப்பேற்றியிருக்க முடியும் என்பது ஐயத்திற்குரிய ஒன்றாகும்.

சோடகங்கனைப் பற்றிய சாசனக் குறிப்பு எல்லா வகையிலும் பாண்டியப் பிரதானியாகிய சோழகங்க தேவனுக்குப் பொருத்தமான தாகும்.[8] பெயர் ஒற்றுமையுங் கவனித்தற்குரியது. தேவ ஸ்ரீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோடகங்கஹ் என்ற பெயரே சாசனத்தில் உள்ளது. சூளவம்சத்திலே சோழகங்கதேவ என்ற நாமமே சொல்லப்படுகின்றது. இதுவொரு புதிய சிந்தனை ஆயினும் பொருத்தமான சிந்தனை. சோழகங்க (தேவ)னைப் பற்றி இதுவரை கவனித்தவற்றின் அடிப்படையிலே ஸ்ரீ தக்ஷிண கைலாசபுராணத்துக் குறிப்பினை ஆராய்தல் வேண்டும்.

குளக்கோட்டன் என்னும் சோழகங்கன் என்ற குறிப்பிலே ஒரு பிரச்சினை எழுகின்றது. உண்மையில் அதிலொரு முரண்பாடுள்ளது. குளக்கோட்டனைப் பொறுத்தவரையில் அவனைச் செம்பியனென்றும், சோழனென்றும் எல்லா நூல்களும் வேறுபாடின்றிச் சொல்லும். ஆனாற் சோழகங்கன் சோழனல்லன் போலவே தோன்றும். சூளவம்சங் குறிப்பிடும் சோழகங்கரில் இருவர் கலிங்கர்: ஒருவன் பாண்டிநாட்டு பிரதானியானவன். எனவே புராண நூலின் பாயிரச் செய்யுளில் ஒரு பிரச்சினை உண்டு. அது ஒரு பெரிய பிரச்சினை. அது மூடிமறைக்க முடியாதவொன்று.

வரலாற்று நோக்கில் இதற்கு இருவிதமான விளங்கங்களை முன் வைக்கலாம். அவற்றுளொன்று புராணநூல் குறிப்பிடுஞ் சோழகங்கன் சாசனங் கூறும் சோடகங்கனிலிருந்தும் வேறானவன்; அவன் சூளவம்சம் கூறும் மூவரிலும் எவனொருவனும் அல்லன். அவ்வாறாகில் அவன் சோழவம்சத்து இராசகுமாரனாதல் வேண்டும். அவன் ஈழமான மும்முடிச்சோழ மண்டலத்தில் அதிகாரம் பெற்றவனாதல் வேண்டும். இத்தகைய சிந்தனை சோழ இலங்கேஸ்வரனை நினைவுபடுத்துகின்றது.

குளக்கோட்டன், சோழகங்கன் என்னும் பெயர்களுக்கு உரியவர்களான இருவரை ஒருவராக நூலாசிரியர் கொண்டுள்ளார் என்பதே இரண்டாவது விளக்கமாகும். அதுவே பொருத்தமானது போலவுந் தெரிகிறது. இதன் அடிப்படையிலே நோக்குமிடத்துக் குளக் கோட்டனைப் பற்றிய மரபு வழியான கதைகள் ஒரு நெடுங்காலத்திற்குரிய - சோழராட்சிக் காலம் முதல் ஆரியச் சக்கரவர்த்திகள் காலம் வரையான - வரலாற்றம்சங்களைப் பிரதிபலிக்கின்றன என்று கருத இடமுண்டு.

குளக்கோட்டன் திருப்பணிகள் பற்றிய மரபுவழிக் கதைகள் சோழராட்சிக் காலத்து நிகழ்ச்சிகளைப் பற்றியனவென்று கொள்வதற்கு ஏதுவான காரணங்கள் உண்டு. திருமலையில் நடைபெற்ற ஆலயப் புனருத்தாரணம் வரராமதேவன், குளக்கோட்டன் என்னுமிருவரின் காலங்களிலே நடைபெற்றதாகச் சொல்லப்படுகின்றது. இவர்களிருவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையும் மகனுமானவர்கள். அவர்கள் ஒருவர் பின்னொருவராய் அரசோச்சியவர்கள். அவர்கள் சோழநாட்டு மன்னர்கள்; குலத்தாற் செம்பியர்; மனுநீதிகண்ட சோழன் மரபில் வந்தவர்கள்; சிவநெறிக் காவலர். இவ்வாறான கருத்துகள் எல்லாம் திருகோணமலைத் திருத்தலம் பற்றிய ஒரு தொடர்ச்சியான இலக்கிய மரபைப் பிரதிபலிக்கும் நூல்கள் எல்லாவற்றிலும் எதுவித வேறுபாடுமின்றி அழுத்தமாகச் சொல்லப்படுகின்றன.

*ஸ்ரீ தக்ஷிண கைலாசபுராணம்* வரராமதேவனைப் பற்றி மேல்வருமாறு கூறும்:

நாவலவன் பெருந் தீவில் கங்கைநதிக்
கரையிருந்து ஞாலங்காக்கும்
காவலவன் பரிதிகுலத் தொருதலைவன்
மனுநீதிகண்ட சோழன்

சோணாடு முதலிய தென்மதுரை
வடமதுரை எனச் சொல்லும் நாட்டில்
சாண்நாடும் பிறர்க்கு அமையான்,
நிலமடந்தை வரைந்த தகுதியாலும்

மாண் ஆகும் திறந்தாலும் அபயன்
என்னும் பெயராலும் ஐயன் என்றும்
கோணாத கருணையினால் அண்ணலென்றும்
பல்லுயிர்க்குங் கூறலாமே.

கூறு நவகண்டத்துச் சிவதானம்
அநேகம் பொற்கோயிலாக்கிப்
பேறுதர முடிதரித்த வரராமதேவன்
எனும் பெரும் பேர் வேந்தன் [9]

(வர) ராம தேவன் மனுநீதிகண்ட சோழனின் மகன் என்பார் கவிராச வரோதயன்:

''திருமருவு மனுநீதி கண்ட சோழன் செகமகிழவரு ராமதேவன்''. என்பது அவருடைய வாக்கு. வரராமதேவன் சோழன் என்பதை திரிகோணாசல புராணம் மேல்வருமாறு அழுத்திக் கூறுகின்றது:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உவமை ஒன்று இன்றி வியப்புறு சிறப்பின்
உயர்ந்தது சோழநன்நாடு''
அன்ன நன்நாட்டைக் களைகணாய் ஓம்பி
அடையவர் தான் முறை வீழ்ந்து
சென்னியால் வணங்கி ஏவினை கேட்பத்
திகழ் அரியாசனத்து இருந்து
மன்னனாய் நீதி மனுமுறை வழாது
மரபினில் செய்ய கோல் ஓச்சிப்
பன்னரும் திறல் சேர் சுராதிபர் வணங்கப்
பணைத்து எழும் புயத்தினில் பரிப்போன்

அகம்தனில் அறிவு பொறை நிறை நீதி
அற நெறி அன்பின் மிகுந்தோன்
திகந்தம் எட்டு ஓங்கு புகழ் வரராம
தேவன் என்று உளன் ஒரு வேந்தன்

தாவுகன்று இழந்த பசுவினுக் காகத்
தன்தவப் பேறதாம் மகவைக்
கோவதைக்கு இதுவே தகுமெனக் கொண்டு
கோநகர் வீதியில் தேர்க்கால்
மேவுற அரைத்து நீதியை நிறுத்தி
வீந்திடு மகவுடன் கன்றும்
ஆவி, உற்று எழுமாறு அரன் அருள் பெற்ற
அரசனும் இக்குலத்தவனே

பாம்பொடு புலியும் பரவிய பாத
பங்கயம் பரம ஆனந்தன்
காம்புறு தோளி காணவே நடனம்
காட்டிய கனக மன்று அதனுக்கு
ஆம் பரிவுடனே கொங்கினிற் பொன்னை
அணிசெய்த புகழ் அநபாயன்
மேம்படும் இந்தக் குலத்தவன் என்னில்
வேறு நாம் விளம்புவ தெவனோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரணிகள் முழுதும் தொழுதிடும் மூலத்தானமாம்
தில்லை அம்பலத்தில்
கருணை கொள் வடிவாய் நடமிடும் முத்திக்கு
அருத்தனாம் நிருத்தனைப் போற்றி
உருவினில் தொழுநோய் ஒழித்து அரும்
பவனி ஓலக்கம் சேவிக்கும் அந்த
இரணியவருமன் எனப் பெயர் கொண்ட
இறைவனும் இக்குலத்தவனே[10]

வரராமதேவன் செம்பியனானவன்; சிறப்புகள் பல பொருந்திய சோழநாட்டு வேந்தர் குலத்தவன். தேரோடும் வீதியிலே கன்றினைக் கொன்ற தனது மகனைத் தடிந்து பசுவின் துயரைப் போக்கிய சென்னியும் இக்குலத்தவன். அவனது அருஞ் செயல்கண்டு ஈசன் மைந்தனுக்கும் ஆவின் கன்றினுக்கும் உயிரினை ஈந்து அற்புதம் நிகழ்த்தினான். முன்னொரு காலத்திலே கொங்கு நாட்டிலே கொண்ட பொன்னைக் கொண்டு தில்லையம்பலத்தைப் பொன்னம்பலமாக்கிய அனபாய சோழனின் மரபில் வந்தவன் வரராமதேவன். அவனுடைய முன்னோர்களில் ஒருவனாகிய இரணியவர்மன் உத்தமதானமாகிய பேரம்பலத்திலே திருவோலக்கஞ் செய்து தொழுநோயைப் போக்கி னான்.

திரிகோணாசல புராணத்தின் ஆசிரியர் வரராமதேவன், குளக்கோட்டன் என்போர் சோழர் குலத்தவர் என்ற மரபுவழியான கருத்துக்கு அழுத்தங் கொடுக்குமிடத்து, அக்குலம் பற்றிப் பெரிய புராணங் கூறுஞ் செய்திகளையும் மரபிலே சேர்த்து விடுகின்றார். இரணியவர்மன் (ஹிரண்யவர்மா) என்னும் பூர்வீக காலத்துச் சோழனைப் பற்றித் திருவாலங்காட்டுச் செப்பேடுகளிற் குறிப்புண்டு. திரிகோணாசல புராணத்துக்கு ஆதாரமான மரபுகளிற் சோழரின் செப்பேட்டு வழமை கூறும் பத்ததிகள் ஏதும் இருந்தனவா என்ற வினாவிற்கு இடமுண்டு என்பதையும் இங்கு குறிப்பிடுதல் வேண்டும்.

குளக்கோட்டன் சோழவம்சத்தவன் என்ற ஐதிகம் இலக்கிய மரபு, நாட்டார் வழக்கு ஆகிய இரண்டுக்கும் பொதுவான ஒன்றாகும். நாட்டார் வழக்கினைக் கேட்டறிந்த, ஐரோப்பிய அதிகாரிகள் குளக்கோட்டன் சோழவம்சத்தவன் என்ற கருத்தைக் கூறியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரராமதேவன், குளக்கோட்டன் ஆகியோர் சோழவம்சத்தவர் என்ற கருத்து மரபுவழியானது. அந்த மரபும் ஒரு நீண்டகால வரலாற்றைக் கொண்டது. அது இலக்கிய மரபு, நாட்டார் வழக்கு ஆகிய இரண்டினுக்கும் பொதுவானது. பௌராணிக அம்சங்கள் அதிலே கலந்துள்ளன என்ற காரணத்தினால் அது முற்றிலும் ஆதாரமற்ற தென்று அதனை ஒதுக்கிவிட முடியாது. குளக்கோட்டன் சோழவம் சத்தவன் அல்லன் என்றவொரு கருத்திற்குத் தகுந்த ஆதாரங்கள் இருந்தால் மட்டுமே அதனைப் புறக்கணிக்க முடியும். இதுவரை மாற்றுக் கருத்தொன்றினை முன்வைப்பதற்கான உறுதியான ஆதாரம் எதுவுமே கிடைக்கவில்லை. அதற்கான மரபுவழிச் செய்தி ஏதேனும் இருப்பதாகவுந் தெரியவில்லை.

எனவே, குளக்கோட்டன் செம்பியர் குலத்தவன் என்ற கருத்து ஒப்புக்கொள்ளக் கூடியதொன்றாகவே காணப்படுகின்றது. இலங்கையில் நிலவிய சோழராட்சியின் பின்னணியில் இந்த விடயத்தை நோக்குவது அவசியமாகின்றது. கந்தளாய், மானாங்கேணி, நிலாவெளி ஆகிய ஊர்களில் ஏறக்குறைய அரை நூற்றாண்டுக்கு முன்பு படி எடுக்கப் பெற்ற சோழர்காலச் சாசனங்கள் குளக்கோட்டனைப் பற்றிய ஆய்விலே ஒரு புதிய பரிணாமத்தை ஏற்படுத்தியுள்ளன. மரபு வழியான ஐதிகங் களை விமர்சிப்பதற்கும் அவற்றைப் பற்றிய விளக்கங்கள் தொடர்பாக ஒரு யதார்த்தபூர்வமான ஆய்வுநெறி முறையை வகுத்துக் கொள் வதற்கும் அச்சாசனங்களைப் பற்றிய தெளிவான சிந்தனை பயன்படும்.

## மனுநீதி கண்ட சோழன்

குளக்கோட்டனைப் பற்றிய ஐதிகங்களிலே மனுநீதி கண்ட சோழனைப் பற்றிய குறிப்பு உள்ளமை கவனித்தற்குரியது. மனுநீதிகண்டசோழன் என்பதை ஒரு இயற்பெயராகக் கொள்வதும், அதனாற் குளக்கோட் டனைப் பற்றிய கதைகள் முற்றிலும் புனைகதைகள் என்று கொள்வதும் ஏற்புடையதன்று. அது ஒரு சிறப்புப் பெயர். மனுநீதியை விளக்கிய சோழன் அல்லது அதனை நிலைநாட்டிய சோழன் என்ற கருத்தினையே அது குறிக்கின்றது. இந்த விளக்கத்திற்கு ஆதாரமாகச் சாசனக் குறிப்புகள் உள்ளன. மனுநீதி பற்றிய குறிப்புகள் சோழச் சக்கரவர்த்திகளின் சாசனங்களில் உள்ளன. மேல்வருவன அதற்கான உதாரணங்களாகும்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''விசுவலோகத்தும் விளங்க மனுநெறி நின்று
அசுவமேதஞ் செய்து அரைசு வீற்றிருந்த
சயங்கொண்ட சோழன் உயர்ந்த பெரும்புகழ்க்
கோவிராச கேசரி வர்மரான
உடையார் ஸ்ரீ ராசாதிராசதேவர்'' [11]
'திருமகள் விளங்க இருநில மடந்தையை
ஒருகுடை நிழற்கீழ் இனிதுறப் புணர்ந்து
தருமநெறி நிற்ப மனுநெறி நடாத்திய
உடையார் ஸ்ரீ ராசமகேந்திர தேவர்......''.[12]

''வேத நீதியை விளக்கி மீதுயர்
வீரத் தனிக்கொடி தியாகக் கொடியொடும்
ஏற்பவர் வருகென்று நிற்பக் கோத்தொழில்
உரிமையின் எய்தி அரைசு வீற்றிருந்து
மேவரும் மனுநெறி விளக்கிய கோவிராசகேசரி
உடையார் ஸ்ரீவீர ராசேந்திர தேவர்......''.[13]

' வீரமுந் தியாகமும் ஆரமெனப் புனைந்து
மாப்புகழ் மனுவுடன் வளர்த்த கோப்பரகேசரி
வர்மரான உடையார் ஸ்ரீ அதிராசேந்திர தேவர்.....''
' இந்திரன் முதற் திசாபாலர் எண்மரும் ஒருவடிவாகி
வந்தபடி தரநின்று மனுவாணை தனிநடாத்தி.....
செம்பொன் வீரசிம்மாசனத்துப் புவனமுழுதுடையாளொடும்
வீற்றிருந்தருளிய கோப்பரகேரி பன்பரான
திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ ராஜராஜ தேவர்....(II)'' [15]

'' சமைய மாறுந் தலையெடுப்பத்
தருமமும் அருமறையும் ஓங்கி அமைவில்லா
மனுவொழுக்க மாதியாம்படி நிலைநிற்க...
செம்பொன் வீரசிங்காதனத்து.....
வீற்றிருந்தருளிய கோவிராஜகேசரி பத்மரான
..... ஸ்ரீ ராஜாதிராஜ தேவர்... (III)'' [16]

''புயல்வாய்த்து மண்வளரப் புலியாணையும் சக்கரமும்
செயல்வாய்த்த மனுநூலும் செங்கோலுந் திசைநடப்ப...
செம்பொன் வீரசிங்காதனத்து வீற்றிருந்தருளிய
கோப்பரகேசரி பன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள்
ஸ்ரீ மதுரையும் ஈழமுங் கருவூரும்... கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வீராபிஷேகமும் விசயாபிஷேகமும் பண்ணி*
*யருளிய திரிபுவனவீரசோழ தேவர்....".*[17]

மனுநெறியின் காவலரென்று சோழ மன்னரை அவர்களின் மெய்க் கீர்த்திகள் இராஜாதிராஜன் காலம் (1044-1054) முதலாக வர்ணிக் கின்றன. *மனுநெறிநின்று, மனுநெறி நடாத்திய, மனுநெறி விளக்கிய, மனுவாணை தனி நடாத்தி* முதலான தொடர்கள் சோழமன்னரைப் பற்றியனவாக வருகின்றன. மனுநீதிகண்ட சோழன் என்பதிலுள்ள மனுநீதிகண்ட என்னுந் தொடரானது அவற்றை ஒத்ததாகும். அது சோழனுக்கு அடைமொழியானது. எனவே, மனுநீதி கண்ட சோழன் என்பது சிறப்புப் பெயரென்பது உறுதியாகிவிடுகின்றது. மனுவேந்தன் என்பது இதற்கான மாற்றுத் தொடராகத் திருமலை பற்றிய தலபுராணங்கள் இரண்டிலும் வருகின்றமையுங் குறிப்பிடற்குரியது. குளக்கோட்டன் மனுநீதி கண்ட சோழனின் வழிவந்தவன் என்று மரபு வழியாக முரண்பாடின்றிச் சொல்லப்படுவதால் அவன் சோழர் குலத்தவன் என்று கொள்வதே பொருத்தமானது.

## திருகோணமலையில் வரராமதேவன்

ஸ்ரீ தக்ஷிண கைலாசபுராணத்து இறுதிச் சருக்கமான திருநகரச் சருக்கம் திருக்கோணஸ்வரத் திருப்பதியின் புனருத்தாரணம் பற்றிய காதை போல அமைந்துள்ளது. அந்நூலின் முன்னைய ஆறு சருக்கங்களும் ஆலயம் பற்றிச் சமஸ்கிருத மொழியிலிருந்த புராணக்கதையின் சாராம்சமானவை. தென்கைலாசம் பற்றிய அந்த மான்மியத்தை மச்சேந்தியம் என்பர் கைலாசபுராண ஆசிரியர்.[18] மூலத்தில் இல்லாத கதை ஆறாம் சருக்கத்தின் பிற்பகுதியிலே கையாளப்படுகின்றது. அதற்கு மூலமானவை கோயில் பற்றிய மரபுகளாகும்.

கைலாசபுராணம் வர்ணிக்கும் ஆலயத் திருப்பணிகள் மன்னரிருவரின் காலங்களுக்குரியவை. தந்தையான வரராமதேவன் தொடக்கி வைத்த திருப்பணியை மகனாகிய குளக்கோட்டன் முடித்து வைத்தான். வரராமதேவனைப் பற்றியுள்ள புராணக் கதையை மேல்வருமாறு சுருக்கிக் கூறலாம். திருத்தலங்களின் மான்மியங்களைப் புரோகிதரிடமிருந்து கேட்டறியும் வழக்கமுடையவன் வரராமதேவன். ஒரு சமயத்திலே, சுகவீனமாயிருந்த புரோகிதன் தனது புதல்வனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசனுக்குப் புராணோபதேசம் செய்வதற்கு அனுப்பியிருந்தான். அவ்வாறு சென்ற புரோகிதன் மைந்தன், அரசன் முன்பு கேட்டறிந்திராத மான்மியம் ஒன்றினைப் பற்றி உபதேசஞ் செய்தான். தென்கைலாச மான்மியத்தைக் கேட்டதும் கோகர்ணமாகிய திரிகோணம் மீது அரச னுக்கு அளவிலாத அபிமானம் உண்டாகியது. அதனைத் தரிசிக்க வேண்டும் என்ற ஆர்வம் மேலோங்கியது.[19] அரசையும், நாட்டையும், படைகளையும் மைந்தரின் பொறுப்பாக விட்டுப் பின் செம்பியர்கோன் கடல்வழியே, மந்திரியோடும் பரிசனங்களோடும் இலங்கைக்கு யாத்திரை போனான். திருமலையைத் தரிசனம் பண்ணிவிட்டு அங்கே திருப்பணி வேலைகளைத் தொடக்கினான். இதனைப் பற்றிய செய்யுள் மேல்வருமாறுள்ளது:

*தேனேயும் நின்மலர்த்தாள் தெரிசித்தேன், எனது வினை*
*தானே விட்டகன்றது எனத்தபதிமுகம் அது நோக்கி,*
*வானேயும் திருமலை மேல், மணிக்கோயில் இயற்றுகென்று,*
*கானேயும் தாதகித்தார்க் காவலன் அருள் புரிந்தான்.''*[20]

''அப்பனே! தேனினும் அருமையான அருள் சுரக்கும் நின் திருப்பாதங்களை வணங்கியதும், கொடிய வினைகள் எல்லாம் என்னை விட்டகன்றன'' என்று விளம்பியவனாகிய, தேனொடு மகரந்தப் பொடிகளைச் சுரக்கும் மலர்கள் பொருந்திய மாலையணிந்த மன்னவன், வானளாவிய திருமலையிலே, அழகுபொருந்திய கோயிலொன்றை அமைக்குமாறு தபதிக்கு ஆணையிட்டான்.

உபானாதி தூபிகளைச் சிற்பிகள் அமைத்தனர். ஆலயத்தில் வழிபாடுகள் நடைபெறுவதற்கு அரசன் ஏற்பாடுகள் செய்தான். மேலும், மச்சேந்திய புராணக் கதையை ஆலயச் சுவர்களிலே எழுதுவித்து, தானமாகப் பெருமளவிலே பொன் கொடுத்து, கோயிற் பணிகள் தொடர்பாகச் செப்பேடும் வரைந்து கொடுத்தான்.[21] இம்மட்டும் தக்ஷிண கைலாசபுராணப் பாடல்களிலிருந்து வடித்தெடுத்த சாராம்சம். சோழ மன்னன் ஒருவனுடைய காலத்திலே, தென்கைலாசத்திலே ஆலயப் புனருத்தாரணம் ஆரம்பாகியது என்பதும், மூலஸ்தானம் அமையப் பெற்றுப் பூசைகள் தொடங்கின என்பதும், அவற்றுக்கு வேண்டிய நிவந்தங்களும், அந்நிவந்தங்கள் பற்றிய வரையறைகளும் மற்றவனால் ஏற்படுத்தப்பட்டன என்பதும் ஆலய சரிதத்தின் வரலாற்றமிசங்களாகக் கொள்ளத் தகுந்தவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குளக்கோட்டன் திருப்பணிகள்

மனுவேந்தனாகிய வரராமதேவன் காலஞ் சென்ற பின்பு அவன் மகனாகிய குளக்கோட்டன் அரசாட்சியை மேற்கொண்டான். அந்தணனொருவன் மூலமாகத் தென்கயிலை பற்றிய விவரங்களை அறிந்துகொண்டதன் பயனாக ஆலய தரிசனஞ் செய்வதற்கென அங்கு சென்றான். கோகர்ணத்திலே வழிபாடு செய்த குளக்கோட்டன் வரராம தேவன் செய்த திருப்பணிகளைப் பற்றிக் கண்டறிந்து கொள்ள முடிந்தது. வரராமதேவனால் வழங்கப்பட்ட செப்பேட்டையும் தானங்களையும் அவனாற் பார்க்க நேரிட்டது. ஆலயத் திருப்பணிக்குத் தந்தை வழங்கி யதைக் காட்டிலும் இரு மடங்கு பொன்னை நன்கொடையாக வழங்கி னான்.[22] குளக்கோட்டன் செய்த திருப்பணிகளைக் கைலாசபுராணம் மேல்வருமாறு வர்ணிக்கின்றது:

*தெரிசித்தான் கலியுக நாள் சென்ற மறை வாணர் என்று*
*ஒருசித்தம் பாசுபத மறையோரை உரவோனும்*
*பரசித்தான் வணங்கிப் பகர் கிரணாகமத்தின் வழி,*
*புரசித்தம் பூண்டவரைப் பூசனை செய்து உய்மின் என்றான்.*

*என்று மகா மண்டபமும் எழில் முதன்மை மண்டபமும்*
*குன்றனைய கோபுரமும் கோயில் பல சாலைகளும்,*
*நன்றிபெற அமைத்தருளி நாயகிக்கும் பொற்கோயில்*
*வென்றிபெறச் சமைக்க வேண்டும் என உரை செய்தான்.*

*உரை செய்தபடி தவறாது உயர்ந்தபடி குலத்தவர் பொன்*
*வரை செய்த தெனக் கோயில் மண்டபமும் சூழ்மதில் செய்தார்*
*பிரை செய்த அமுதமொழிப் பிடியன்ன மென்னடையைத்*
*தரை செய்த புண்ணியம் போல் தாபித்தான் மனுவேந்தன்.*

*தன் ஆண்மைக்கு உவமை இலாத தனி வேந்தன், வடகயிலை*
*மின் ஓங்கு குவடென்னத்தென் கயிலைக்கு வேண்டுமெனப்*
*பொன்னாரும் சிகரமும் பொற் கோபுரமும் பொருத்தி, அதிற்*
*பன்னாகம் கவித்தது என மவுலிகளும் பல செய்தான்.*

*செய்தபடிக்கு ஆயிரம் பொன் தென்கயிலை மீதிருக்கும்*
*ஐயர்தமக்கு அளித்தருளி அலங்கார நிலம் கொண்டு,*
*வையகம் எண்எயில் சூழ, மணிக் கோயில் இயற்றி, அதில்*
*உய்ய திருமாயனையும் தாபித்தான் தொடை மார்பன்.*[23]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஆலய தரிசனம் பண்ணிய குளக்கோட்டன் கலியின் இருளைப் போக்க வல்லவரான பாசுபதர்களான அந்தணர்களுக்குத் தானங்கள் கொடுத்து, அருட் கடலாகிய சிவபெருமானைக் கிரணாகமத்தின் நெறிப்படி அவர்கள் பூசனை செய்வதற்கு ஏற்பாடுகள் செய்தான்.''

மகாமண்டபம், முதன்மை மண்டபம், கோபுரம், சாலைகள் என்பன அவனால் அமைப்பிக்கப்பட்டன. தென்கயிலாயமானது வடகயிலைக்கு ஒப்பானது என்னும் படியாகப் பெரிய கோபுரமொன்றையும் வனப்பு மிக்கதாக அமைத்தான். ஈஸ்வரன் பள்ளி கொண்டுள்ள கோயிலுக்கு வேண்டும் நிவந்தங்களுக்கென ஆயிரம் பொன் நன்கொடையாக வழங்கினான். மதில்களாற் சூழப்பெற்ற அழகிய திருமால் கோட்டம் ஒன்றினை அமைத்து அதிலே பெருமாளின் படிமத்தைத் தாபனஞ் செய்தான்.[24] இவ்வாறாக வரராம தேவனின் காலத்திலே ஆரம்பமாகிய ஆலய புனருத்தாரணத் திருப்பணிகள் மனுவேந்தன் என்னுங் குளக்கோட்டன் காலத்திலே நிறைவு பெற்றன.

''நாயகிக்கும் பொற்கோயில் வெற்றி பெறச் சமைக்க வேண்டும் என உரை செய்தான்'' எனக் குளக்கோட்டன் திருப்பணிகள் தொடர்பான குறிப்பு வரலாற்று நோக்கிலே தவறானது. திருக்கோணேஸ்வரத்திலே திருக்காமக்கோட்டத்தைக் குலோத்துங்கசோழ காலிங்கராயன் அமைப்பித்தான் என்ற குறிப்பு மிக அண்மைக் காலத்திலே கண்டெடுக்கப்பெற்ற கல்வெட்டிலே காணப்படுகின்றது. அவன் காலிங்க மாகனுடைய ஆட்சிக் காலத்தவன். எனவே, மரபுவழியான கதைகளிலே, வெவ்வேறு காலகட்டங்களில் நடைபெற்ற கட்டட வேலைப்பாடுகளைக் குளக்கோட்டன் திருப்பணிகளாகக் கொள்வது மரபாகிவிட்டது என்பது இப்பொழுது தெளிவாகின்றது.

எவ்வாறாயினும், மச்சகேஸ்வரமாகிய திருக்கோணேஸ்வரத்தின் புனராவர்த்தனம் பற்றிக் கூறும் கதையானது அடிப்படையில் வரலாற்றம்சங்கள் பொருந்திய ஒன்றாகவே தெரிகின்றது. திருப்பணி பற்றிய விபரங்கள் யதார்த்த பூர்வமானவை. அவற்றைத் தொடக்கி முடிப்பதற்கு நெடுங்காலஞ் சென்றது. தந்தையின் காலத்திலே தொடக்கப் பெற்றவை மகனுடைய காலத்திலே முடிக்கப்பெற்றன. சைவசமய வரலாற்றில் ஆலயப் புனருத்தாரண காலமாக விளங்குவது சோழப் பெருமன்னர் காலம் என்பது இங்கு கவனித்தற்குரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலத்திலே பாடல் பெற்ற தலங்களிலே கோயில்களைப் புனரமைத்தார்கள். செங்கல்லினால் அமைந்த பழைய கட்டடங்களை இடித்துப் புதிய கற்றளிகளை நிர்மாணித்தார்கள். வனப்புமிக்க விமானங்களையும் மண்டபங்களையும் சிற்ப சாத்திர முறைகளுக்கு ஏற்ப உருவாக்கினார்கள். எனவே ஸ்ரீ தக்ஷிண கைலாச புராணத்திலே வர்ணிக்கப்படும் ஆலயத் திருப்பணிகள் சில அந்தக் காலத்துக்குரியவை என்று கொள்வது பொருத்தமானதாகும்.

கோணேஸ்வரத்தின் இடிபாடுகளிடையே முதலாம் இராஜராஜன் (985-1016), முதலாம் இராஜேந்திரன் (1014-1044) ஆகியோரின் சாசனங்கள் காணப்பெற்றமையும் இக்கருத்தினை வலியுறுத்துவதாகலாம். ஈழத்திலே பாடல் பெற்ற தலங்களில் ஒன்றாகிய திருக்கேதீஸ்வரத்திலே, சோழராட்சிக் காலத்தில், ஆலயப் புனருத்தாரணம் நடைபெற்றது. அங்கே தாழிகுமரன் என்னுஞ் சோழப்பிரதானி கோயிலைப் புதிதாக அமைத்து அதனை இராஜராஜேஸ்வரம் என்று பெயரிட்டான். ஏக காலத்திலே திருக்கேதீஸ்வரத்திலும் கோகர்ணத்திலும் திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன என்று கருதுவதற்கு இடமுண்டு. மாதோட்டத்தைப் பொறுத்தவரையிலே தெளிவான சாசனக் குறிப்புண்டு. திருக்கோணேஸ்வரத்தில் இருந்திருக்கக் கூடிய அத்தகைய சாசனங்கள் கோயிலை இடித்துக் கோட்டையைக் கட்டிய பொழுது மறைந்துவிட்டன. ஆயினும், எஞ்சியுள்ள துண்டமான கல்வெட்டுகளிலே மச்சகேஸ்வரம் என்னுங் கோயிலுடன் சோழர் தொடர்பு கொண்டிருந்தமைக்கான குறிப்புகள் உள்ளமை கவனித்தற்குரியது. மச்சகேஸ்வரம் என்னும் பெயரும் சோழராட்சிக் காலம் முதலாகவே பொது வழக்காகியது என்றுங் கருதலாம். மச்சகேஸ்வரத்தில் வழிபாடுகள் கிரமமாக நடைபெற்றமைக்கு நிலாவெளிக் கல்வெட்டு உறுதியான ஆதாரமாகும்.

**கந்தளாய்க் குளம்**

குளம், கோட்டம் ஆகியவற்றை உருவாக்கிய மன்னனொருவனைக் குளக்கோட்டன் என்று குறிப்பிடுவது வழக்கமாகி விட்டது என்பதை முன் கவனித்தோம். குளக்கோட்டன் குளமொன்றினை அமைத்த செய்தியினை *ஸ்ரீ தக்ஷிண கைலாசபுராணம்* மேல்வருமாறு வர்ணிக்கின்றது:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எழுந்தான் அதற்காம் இடம் நோக்கி எறிநீர் போய் மனை தாங்கும்*
*கொழுந்தாமன் அனேகங் காதவழி கோலிப் படிக்கரை திருத்தி*
*விழுந்தாரையின் நீர் மதகினுக்கு விடுத்தல் பிடித்தல் உறுப்பியற்றிச்*
*செழுந்தாரையின் நீர்க் குளம் கயிலைச் சிவனார்க்கெனக் கல்லெழுதி*
*வைத்தான்.* [25]

'அநேகம் காதவழி கோலிப் படிக்கரை திருத்தி விடுந்தாரையின் நீர் மதகினுக்கு விடுத்தல் பிடித்தல் உறுப்பியற்றிச் செழுந்தாரையின் நீர்க்குளம் கயிலைச் சிவனார்க்கு எனக் கல் எழுதி வைத்தான்'' என்னும் பாடற் பகுதியைச் சற்று அவதானமாக ஆராய்கின்ற பொழுது, அதிலே வர்ணிக்கப்படுவது புராணமோ, புனைகதையோவன்றி, ஆதாரபூர்வமான சென்றகால நிகழ்ச்சி என்பது தெளிவாகின்றது.

அநேக காத தூரம் வரையான குளக்கரை திருத்தப்பெற்றமை, குளத்திலிருந்து நீரினைப் பாய்ச்சுவதற்கும், நீரோட்டத்தைக் கட்டுப் படுத்துவதற்குந் தேவையான தூம்பு, சூத்திரம் முதலானவற்றை அமைத்தமை, குளத்தினைக் கோயிலுக்குத் தேவதானமாக வழங்கியமை, அத்தானத்தைச் சிலாலேகஞ் செய்தமை ஆகியன குளக்கோட்டன் புரிந்த செயல்களென்று சொல்லப்படுகின்றன.[26] கந்தளாய்க் குளத்தைக் குளக்கோட்டன் புனர்நிர்மாணஞ் செய்தான் என்று கொள்ளத்தக்க வகையில் மட்டுமே *ஸ்ரீ தக்ஷிண கைலாசபுராணம்* அவனுடைய சாதனையை வர்ணிக்கின்றது.

கட்டடங்களைப் போலக் குளங்களும் காலாகாலம் புனரமைக்கப்பட வேண்டியவை. மீண்டும் மீண்டும் ஏற்படும் வெள்ளப்பெருக்கினால் அணைக்கட்டுகள் உடைவதும், அதன் விளைவாக பல்வேறு உறுப்புகளும் சீரழிந்து போவதுமுண்டு. கந்தளாய்க் குளத்தைப் புனர்நிர்மாணஞ் செய்தவொரு மன்னனாகவே குளக்கோட்டனை ஸ்ரீ தக்ஷிண கைலாசபுராணத்து ஆசிரியர் கருதினார் போலத் தெரிகின்றது. ஆயினும், காலப்போக்கிலே, கந்தளாய்க்குளம் குளக்கோட் டனால் உருவாக்கப்பட்டது என்ற ஐதிகம் வலுப்பெற்று விட்டது. இச்சந்தர்ப்பத்திலே அக்குளம் பற்றிய சில வரலாற்றுக் குறிப்புகளை இங்கு குறிப்பிடுவது அவசியமாகின்றது. சோழ இலங்கேஸ்வரன் காலத்திலே அது சீரான நிலையில் இருந்தது. அதிலே வாசுதேவ வாய்க்கால், விக்கிரமசோழ வாய்க்கால் என்னுங் கால்வாய்கள் இருந்தன.[27]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோழராட்சியில் அவை புனர்நாமம் பெற்றிருந்தமையினால் அக்காலத்திலே குளம் புனரமைக்கப்பட்டிருந்தது என்று கொள்வதற்கு இடமுண்டு. ஆதலினாலே குளக்கோட்டனைக் கந்தளாய்க் குளத்தோடு தொடர்புபடுத்திக் கூறும் ஐதிகங்கள் சோழராட்சிக் காலத்தில் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் பற்றியவை போலத் தோன்றும். இரண்டாம் கஜபாகுவின் (1132-1153) வரலாறு பற்றிய சூளவம்சக் குறிப்புகளிலே கங்கதடாகம் பற்றிச் சொல்லப்படுகின்றது. கந்தளாய்க் குளத்தினைப் பாளி மொழியில் கங்க தடாகம் என்றனர். அதனைச் சிங்கள மொழிச் சாசனங்கள் கங்க தளா என்று குறிப்பிடுகின்றன. கங்க தளாவிலே மீன் பிடிப்பதை நிசங்கமல்லன் தடைசெய்தான் என்று அவனுடைய சாசனங்கள் கூறும். தடாகம் கோயிலுக்குரியது என்பதால் அது பரிசுத்தமானது என்ற காரணத்தினால் அதில் மீன்பிடிப்பதற்கு அரசன் தடை விதித்திருக்க வேண்டும்.

குளம் பற்றிய செய்திகளைக் குளக்கோட்டன் சிலாசாசனமாக எழுதி வைத்தான் என்ற புராணநூற் குறிப்பு ஆதாரபூர்வமானதென்று கருதுவதற்கான காரணமுண்டு. அது சிங்கள சாசன வழக்கிலான குளங்களைப் பற்றிய குறிப்புகளை ஒத்துள்ளது. முதலாம் பராக்கிரமபாகு (1153-1186), நிசங்கமல்லன் (1187-1196) ஆகிய அரசர்கள் குளங்களைப் புதிதாக அமைத்தமை பற்றியும், புனரமைத்தமை பற்றியுங் குறிப்பிடுஞ் சிலாசாசனங்கள் சில உள்ளன. பராக்கிரம சமுத்திரத்தின் அணைக்கட்டுப் பகுதிகளிற் பராக்கிரமபாகுவின் கல்வெட்டுகள் உள்ளன. சமஸ்கிருதத்திலுஞ் சிங்களத்திலும் அமைந்த வாசகங்கள் அவற்றிலுண்டு. கல்மட்டியான் வாவியின் அணைக்கட்டில் நிசங்கமல்லனின் தூண் சாசனம் இருந்தது. பாண்டி நாட்டிலே பெற்ற வெற்றியின் நினைவுச் சின்னமாக அங்குள்ள குளம் பாண்டிவிஜய குளம் என்று பெயரிடப் பெற்றமையினை இச்சாசனங் குறிப்பிடுகின்றது. பாண்ட வாவியிலுள்ள தூம்பின் நடுவிலே காணப்படும் சாசனமொன்று நிசங்கமல்லனால் அக்குளம் அமைக்கப்பட்டதென்று குறிப்பிடுகின்றது.[28] கந்தளாய்க் குளம் பற்றிய மரபுவழிக் கதைகள் குளக்கோட்டன் என்று கொள்ளப்படும் அரசனைப் பற்றிய சாசனக் குறிப்புகளை ஆதாரமாகக் கொண்டவை என்று கொள்வதற்கு இடமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோயிற் பணிகள்

குளக்கோட்டனைப் பற்றி மரபு வழியாக இதற்கு மேலாகச் சொல்லப்படுவன எல்லாம் ஸ்ரீ தக்ஷிண கைலாச புராணத்திலே காணப்படாதவை. ஆலயத் தொழும்புகள் தொடர்பாகக் குளக்கோட்டன் செய்த ஏற்பாடுகளைப் பற்றிக் கோணேசர் கல்வெட்டு வர்ணிக்கின்றது. *வன்னிமை, தானம், வரிப்பத்து* முதலானோரை அழைத்து வந்து, அவர்களைக் குடியிருத்தி, அவரவர் கடமைகளைத் திட்டம் பண்ணியமை பற்றி அது விபரிக்கின்றது. *தானம், வரிப்பத்து* என்போர் பற்றிய பாடல்கள் அந்நூலில் மேல்வருமாறு உள்ளன:

*பரிதிகுலக் குளக்கோட்டு ராமன் பங்குனி*
*உத்திரம் பதினைந்தாம் தேதி தன்னில்*
*வரிசையுடன் சென்று மருங்கூரில் வளவரின்*
*நல்லோரை மரக்கலத்தில் ஏற்றி*
*அரிய திரிகோணமலை நாதற்கென்றே*
*அன்னகரில் ஐயாறு குடியும் ஏற்றி*
*உரிமையிது உங்கள் பரவணியாம் என்றே*
*உரைசெய்தான் சதுர்வேத ஞான மூர்த்தி.*

*இத்தலத்தில் அரன் கயிலை ஆலயத்தில் இயன்ற*
*அறைதனில் முதலிருப்பு நாட்டி*
*நித்தவரும் வரவாகும் பொருள்களோடு நிதம் பூசைச்*
*செலவெழுத நியமஞ் செய்து*
*அத்தர்முன்னர் ஆலாத்தி நடனமிடல் பன்றிகுத்தல்*
*அதிகப்பட்ட தரனுக்கீதல்*
*இத்தனையும் தானத்தார் செய்வீரென்ன*
*ஏழுகுடிக்கு இராயப்பட்டம் ஈந்தான் வேந்தன்.*

*வேந்தனின்றும் அரன்தொழும்புக்கு ஆட்போதாதென*
*நினைத்து மீண்டேகாரை*
*வாய்ந்த வளநாடு சென்று வரிப்பிடித்தான்*
*மூவேழு குடிவாழ்வோரைச்*
*சேர்த்து இடபமாதமதில் ஈரைந்தாம் தேதி*
*திங்கள் சிறந்த சோதி*
*ஏய்ந்த கன்னி முகூர்த்தமதில் அரன் தொழும்பு*
*செயவிடுத்தான் இராசராசன்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சன்னிதியில் நீவிர் செய்யும் தொழும்பு உமக்கு*
*நாமுரைக்கத் தான் நீர் கேளும்*
*நன்னயஞ்சேர் பட்டாடை கொய்தலொடு*
*பத்திர புஷ்பமெடுத்தல் தூர்த்தல்*
*மின்னுநிறை விளக்கேற்றல் தளிசை தட்டு*
*முட்டிவைகள் விளக்கல் நித்தம்*
*உன்னதமாய் நெல்லதனைக் குத்தல்*
*ஆமயந்தெளித்தல் விறகு சேர்த்தல்.*[29]

*தானம், வரிப்பத்து* என்னும் வகைகளைச் சேர்ந்த குடிகளின் உற்பத்தியுங் கடமைகளும் இவற்றிலே சொல்லப்படுகின்றன. குளக்கோட்டன் அவர்களை வரவழைத்து, குடியிருத்தி, அவர்களின் கடமைகளை வரையறை செய்தான் என்று சொல்லப்படுகின்றது. தானத்தார் முப்பது குடிகளைச் சேர்ந்தவர்கள்; அவர்கள் சோழநாட்டு மருங்கூரால் வந்தவர்கள். அவர்கள் கோணேசர் கோயிலுக்குப் பந்தமானவர்கள். அவர்களின் குடியிருப்புகள் திருகோணமலை நகரில் அமைந்திருந்தன. அவர்களின் நிலங்கள் பரவணி உரிமையாக அரசனால் வழங்கப் பெற்றவை. அவர்களில் ஏழு குடிகளைக் சேர்ந்தோருக்கு இராயன் என்னும் பட்டம் உரிமையாகியது.

கோயிலுக்கு முதலிருப்பாக வழங்கப்பட்ட தானங்கள், நாள்தோறும் கிடைக்கின்ற வருமானங்கள், நித்திய, நைமித்திக கிரியைகளுக்கான செலவுகள் என்பவற்றைப் பற்றிய கணக்கு வழக்குகளை எழுதிவைப்பது அவர்களின் பிரதான கடமையாகும். அக்குடிகளைச் சேர்ந்த பெண்கள் ஆராதனை வேளைகளிலே சந்நிதானத்திலே, ஆலாத்தி எடுத்தல், நடனமாடுதல் ஆகிய உபசாரங்களைச் செய்தல் வேண்டும். பள்ளவெளியிலுள்ள நன்செய் நிலங்கள் வரிப்பத்தாருக்கு வழங்கப் பட்டன. அவர்களிலே ஐந்து குடிகளைச் சேர்ந்தோருக்குப் பண்டாரத்தார் என்னும் பட்டத்தை அரசன் கொடுத்தான். அவர்கள் சுவாமிக்குப் பட்டாடை செப்பனிட்டுக் கொடுத்தல் முதலான பணிகளைச் செய்தல் வேண்டும்.

இராசராசனாகிய குளக்கோட்டன் வரிப்பத்தாரில் 21 குடியினரைக் காரைக்காட்டினின்றும் அழைத்துவந்து, அவர்களைக் குடியிருத்தி, அவர்கள் கோயிலிற் செய்ய வேண்டிய கடமைகளைத் திட்டம் பண்ணினான். சுவாமிக்குப் பட்டுச் சார்த்தி அலங்கரித்தல், பூசைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய பத்திரங்களையும் மலர்களையுஞ் சேகரித்தல், விளக்கேற்றுதல், பாத்திரங்களை விளக்குதல், நெல்லுக் குற்றுதல், மெழுகுதல் என்பன வரிப்பத்தார் குடிகளுக்குரிய கடமைகளாகும். ஆலயத்திலே உபசாரமாகப் பெண்கள் ஆடும் நடனத்திற்கு ஒப்பாகப் பாடுதல், வாத்தியங்களை வாசித்தல், சுற்றுப்பலிக்குப் பாவாடையிடுதல், திருப்பொற்சுண்ணம் இடித்தல், கொடி ஏற்றுதல், இறக்குதல், கொடி, குடை, ஆலவட்டம் ஆகியவற்றைப் பிடித்தல், சந்தனம் அரைத்தல், அதனை அடியார்களுக்கு வழங்குதல் முதலான கடமைகள் வரிப்பத்தாருக்கு உரியனவென்று குளக்கோட்டனால் வரையறை செய்யப்பட்டன.

*தானம், வரிபத்து* என்ற பிரிவுகள் முற்காலத்திலே திருகோண மலையில் இருந்தமைக்கான உறுதியான சான்றுண்டு. கங்குவேலியிலுள்ள சாசனமொன்றிலே மலையில் வன்னியனாரும் ஏழூர் அடப்பர்களும் தம்பிரானார் கோணைநாதனுக்குக் கொடுத்த தானமொன்றைப் பற்றிக் கூறப்படுகின்றது. சாசனத்தின் முடிவிலே 'யிப்படிக்கு இரண்டு முதன்மையும் தானம் வரிப்பத்தும்'' என்னுந் தொடர் காணப்படுகின்றது. கோணேசர் கல்வெட்டிலே சொல்லப்படும் விடயங்கள் பல தேச வழமையினை ஆதாரமாகக் கொண்டவை என்பதை இதனால் உணர்ந்து கொள்ள முடிகின்றது.

*முதன்மை, தானம், வரிப்பற்று* என்பன வன்னியனார் செய்த ஏற்பாடு ஒன்று தொடர்பாகச் சொல்லப்படுகின்றன. கோணைநாதனுக்கு வழங்கிய தானம் பற்றிய சாசன வாசகத்திலே அவை காணப்படுகின்றன. *வன்னியனார்* அடப்பர்களின் சம்மதத்தோடு செய்த ஏற்பாட்டினை இம்மூன்று பிரிவுகளைச் சேர்ந்தவர்களுங் கூடிச் சிலாலேகமாகப் பிரகடனஞ் செய்தனர் போலத் தெரிகின்றது. இவ்விளக்கமானது ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதாயின் *முதன்மை, தானம், வரிப்பற்று* ஆகிய சொற்கள் பதவிப் பெயர்கள் என்பதும் அவற்றுக்கு உரிமையானவர்கள் வன்னியரின் ஆட்சி நிலவிய காலத்திலே, வன்னியனாரின் அதிகாரத்தின் கீழமைந்த நிர்வாகத்திலே பொறுப்புகளைக் கொண்டிருந்தனர் என்றுஞ் சிந்திக்கலாம்.

தென் கயிலாயமான திருக்கோணேஸ்வரத்திலே தேவார திருவாச கங்களை ஓதுவதற்கான ஏற்பாடு அமைந்திருந்தது. திருவாசகப் புலவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவனைப் பற்றிக் *கோணேசர் கல்வெட்டு* மேல்வருமாறு குறிப்பிடுகின்றது:

''செகராசரடி பரவு திருக்குளக்கோட்டு மகாராசன் காஞ்சிபுர சிவாலயத்திற்குச் சென்று சிவதரிசனஞ் செய்து, துதிசெய்து நிற்குந் தருணத்தில், தெய்வப்புலவன் சுவாமி திருமுன்னிலையினின்று சிவதோத்திரங்களோதுகின்ற இராகப் பண்ணையும் ஆசார வலங் காரத்தையுங் கண்டு, தெய்வப் புலவனைப் பார்த்து உன் வங்கிஷத்தில் ஒரு பிள்ளை தரவேண்டுமென்று கேட்கத் தெய்வப்புலவனும் அரச னுடைய பாதத்தில் வீழ்ந்து நமஸ்காரம் பண்ணி தேவரீர் அடியேனை ஒரு பிள்ளை தரச்சொல்லிக் கேட்டது என்ன காரியத்திற்கென்ன, இலங்காபுரியிலே திரிகயிலைநாதர் திருவாலயத்திற்கு முன்னின்று நாதகீதத்துடன் சில தோத்திரமோதுவதற்காகவென்று அரசன் சொல்ல, மிகவும் சந்தோஷப்பட்டுத் தன் குடியில் ஒரு குடித்தனமமைத்துக் கொடுக்க அவர்களுடன் அரசன் திரிகயிலைக்கு வந்து நித்தியமுஞ் சிவாலயத்துக்கு முன்னே நாதகீதம்பாட திட்டம்பண்ணி, பள்ளவெளியில் இரண்டவண விதைப்புத் தரையுங் கொடுத்துக் கொட்டியாபுரத்திலே சமுத்திரக் கரையருகாக ஒரு கிராமத்தை நல்லதே என்று கேட்கப் புலவனும் பார்த்து நல்லவூர் அடியேனுக்குச் சம்பூரண மென்ன அரச னும் மகிழ்ந்து அந்தவூருக்குச் சம்பூரென்று பேரிட்டு எந்தக் காலத்துக்கும் உன்குடியின் மனுஷருக்குப் பரவணியாகத் தந்தோமென்று செப்புக் கம்பை போட்ட பத்ததியுங் கொடுத்து கோயிற்றி ருவாசகப் புலவனென்று அரசனுரை நிறுத்தியது. அரசன் கூட்டிவந்த தெய்வப்புலவன் திருநாமம் சிவசித்திர பெருமாள் புலவன்.''[31]

திருவாசகப் புலவனைப் பற்றிய விபரங்களும் தானம், வரிப்பத்து என்னும் பிரிவுகளைச் சேர்ந்தவர்களைப் பற்றியனவற்றைப் போன்றன வாகும். தேவார திருவாசகங்களை ஓதுவதற்கென்று ஒரு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. அது அரசனாகிய குளக்கோட்டனாலே செய்யப்பட்டதென்றுஞ் சொல்லப்படுகின்றது. ஓதுவாருக்குத் திருவாச கப் புலவன், பெருமாள் புலவன் என்ற சிறப்புப் பெயர்கள் இருந்தன. அதற்குரியவர்களின் பூர்வீகம் காஞ்சிபுரத்தோடு தொடர்புடையது. குடியிருப்பதற்குச் சம்பூரிலே காணி வழங்கப்பெற்றது. சீவிதமாக நெல்வயல்கள் பள்ளவெளியிலே கொடுக்கப்பட்டன. நிலமானியமும் கோயிற்பணிகளும் பந்தமானவை. பெருமாள் புலவனைப் பற்றிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவரங்கள் பெரும்பான்மையும் ஆதாரபூர்வமானவை என்று கொள்ளத்தக்கவை. இதே போன்ற ஏற்பாடுகள் தென்னிந்தியக் கோயில்களிலே காணப்பட்டன. அவற்றுக்கான அறக்கட்டளைகள் பலவற்றை மன்னர்கள் ஏற்படுத்தினார்கள் என்பதைச் சாசனக் குறிப்புகளால் அறியமுடிகின்றது.[32]

ஆலயந் தொடர்பாகச் சேவைகளைச் செய்யும் பொறுப்பினை ஏற்றுக்கொண்டிருந்த வேறு குடிகளும் இருந்தன. சிற்பாசாரிகள் தொடர்பாகக் கோணேசர் கல்வெட்டு மேல்வருமாறு விவரிக்கின்றது:

'சோழவளநாட்டில் மாந்தையம்பதியார், அக்கசாலைத் தலைவர்மார் இவர்களைக் குளக்கோட்டு மகாராசா அழைப்பித்துத் திரிகயிலாயச் சிலம்பிலிருந்த ஆலயங்களும் மதில்களும் பாவநாசச் சுனையும் படிக்கட்டும் மற்றுஞ் சகல திருப்பணியும் திருக்குளத்து மதகும் விதிமுறையாகச் செய்த ஆசாரிமார் திருநாமம்: உலக குருவாசாரி, சித்திர குருவாசாரி, வேதகுருவாசாரி, அட்டசனா குருவாசாரி, வாமதேவகுருவாசாரி இவர்களைந்து பேரும் மனதில் நினைத்தபடி கையினாற் செய்யப்பட்ட விசித்திர குருவாசாரிமார். இவர்களுக்கு அஞ்சவண விரைப்புத் தறையுங் கொடுத்து அரசன் சொன்ன வசனம்: எக்காலமும் கோயிற்றொழும்புகள் நீங்கள் செய்ய வேண்டியபடி செய்திருக்க வேண்டுமென்று கோயிலுக்குள் இவர்களுக்கு ஒரு தலைமையுங் கற்பித்தபடியறிக.''

## குறிப்புகளும் விளக்கவுரைகளும்

1. *தக்ஷிண கைலாச புராணம்* ஆக்கியோன் யாழ்ப்பாணத்து நல்லூர் மகாவித்துவான் சிங்கைச் செகராசசேகரன், பொருளாக்கம் பண்டிதர் கா.செ.நடராசா, பதிப்பாசிரியர் பேராசிரியர் சி.பத்மநாதன், பகுதி 1, வெளியீடு: இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, 1995, ப.13, செய்யுள் 8.
2. *கோணேசர் கல்வெட்டு* கவிராசவரோதயன் இயற்றியது, பதிப்பாசிரியர் பண்டிதர் இ.வடிவேல், வெளியீடு : இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, 1993.
3. *கோணேசர் கல்வெட்டின்* மூலநூல் என்று சொல்லப்படுகின்றது. ஆனால், அது அழிந்தொழிந்து விட்டது.
4. சி.பத்மநாதன், *'கோணேசர் கல்வெட்டு:* சில ஆராய்ச்சிக் குறிப்புகள்', *கோணேசர் கல்வெட்டு* பதிப்பாசிரியர்: பண்டிதர் இ.வடிவேல், 1993, ப. 1-35.
5. *திரிகோணாசல புராணம்* வண்ணை மாநகரம் பாரத்துவாசி ஆ.சண்முகரத்தினையரால் பல பிரதிரூபங்களைக் கொண்டு பரிசோதித்து, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருஞானசம்பந்தர் அச்சுக் கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது, 1909. மறுபதிப்பு, இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, 1997, பதிப்புரை. மேலது, பாயிரம் செய்யுள் 12.

7. சி.பத்மநாதன், 'திருக்கோணேஸ்வரத்திற் சோடகங்கன் : திருகோணமலைக் கோட்டையிலுள்ள சமஸ்கிருத சாசனம்' *தக்ஷிண கைலாச புராணம்* பகுதி II வெளியீடு: இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம், 1995, ப.35-47.

8. ஜடாவர்மன் சுந்தரபாண்டியனின் ஆட்சிக் காலத்திலே இலங்கையின் வடபகுதியில் ஏற்பட்ட பாண்டியராதிக்கத்தின் அடிப்படையிற் சோடகங்கனைப் பற்றி ஆராய்வது பொருத்தமானதாகும். சுந்தர பாண்டியனின் காலத்திலே இரு தடவைகள் பாண்டியர் இலங்கைமேற் படையெடுத்தனர். முதலாவது படையெடுப்பின் பயனாகச் சாவகனான சந்திரபானுவைத் திறை செலுத்துமாறு வற்புறுத்தியிருந்தனர். பின்னொரு சமயத்திலே அவன் திறை கொடாது பகைமை பூண்டதும் பாண்டிய மன்னருள் ஒருவனான வீரபாண்டியன் படையெடுத்துச் சென்று சாவகனைக் கொன்றுவிட்டு, கோணவரையிலும் திரிகூட கிரியிலும் பாண்டியரின் இலச்சினையாகிய இணைக்கயல்களின் வடிவங்களை வெற்றிச் சின்னமாகப் பொறித்துவிட்டுத் திரும்பிச் சென்றான். 'அரைசியல் வழக்கம் நெறிப்பட நாட்டுங் குறிப்பினுள்' என்னும் மொழித்தொடர் அவனது படையெடுப்புத் தொடர்பாகக் குடுமியாமலைச் சாசனத்திலே சொல்லப்படுவதால் சாவகன் அமைத்திருந்த இராச்சியத்தில் ஒரு புதிய ஏற்பாட்டை வீரபாண்டியன் உருவாக்கினான் போலத் தெரிகின்றது. இதன் பயனாகப் பாண்டியரின் மேலாதிக்கம் இலங்கையின் வடபகுதியில் வலுப்பெறலாயிற்று. வீரபாண்டியன் அரசியல் விவகாரங்களைக் கவனிப்பதற்குச் சேனாபதிகள், பிரதானிகள் என்போரிற் சிலரை விட்டுச் சென்றான் என்றுஞ் சிந்திக்க முடிகின்றது. காலக் கிரமத்திலே ஈழமண்டலம் (வடபகுதி) பாண்டியப் பேரரசின் மண்டலமாகியது. அதனை வலயமாகக் கொண்டு மேலும் ஈழ நாட்டிலே தங்கள் ஆதிக்கப்படர்ச்சியை ஏற்படுத்தும் நோக்கத்துடன் மேற்கொண்டவொரு முயற்சியாகவே மாறவர்மன் குலசேகரன் காலத்திலே காலிங்கராயன், சோழகங்கன் என்போர் தலைமையிற் படையெடுப்பு நடைபெற்றதென்று கருதலாம். வீரபாண்டியனைப் போலச் சோழகங்கனும் கோகர்ணத்திலே கல்வெட்டுப் பொறித்தான் என்று கொள்ளலாம்.

9. *ஸ்ரீ தக்ஷிண கைலாசபுராணம்,* வெளியீடு: இந்துகலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, 1995, திருநகரச் சருக்கம் செய்யுள் எண்: 27, 28, 29.

10. *திரிகோணாசல புராணம்* வெளியீடு: இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, 1997, வரராம தேவர் வருபடலம் செய்யுள் எண்: 3.

11. பிற்காலச் சோழர் வரலாறு தி.வை.சதாசிவ பண்டாரத்தார்,அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1974, ப.613.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. மேலது, ப.616
13. மேலது, ப.623
14. மேலது, ப.614
15. மேலது, ப.645, 651
15. மேலது,80:29
16. மேலது, 90:31-33
17. "As there is some evidence to prove that Codaganga who had come to the island in A.D.1223 had some connections with Kōṇēśvaram, he may provisionally be identified as Kuḷakkōṭṭaṉ Cōḷakākaṉ, as claimed by the local Tamil traditions who rebuilt *Kōṇēśvaram and reorganised its services."* *The Kingdom of Jaffna* Part I, p.141.

    செ. குணசிங்கமும் இதனையே மேல்வருமாறு கூறுகிறார்: '.... யாழ்ப்பாண வைபவமாலை, வன்னியருடன் தொடர்புபடுத்தும் குளக்கோட்டனைப் பதின் மூன்றாம் நூற்றாண்டுக்குரியவனாகத் திருகோணமலைச் சாசனம் குறிப்பிடும் சோடகங்கனுடன் அடையாளங் கண்டுகொள்வதே பொருத்தமானதாகும்' *கோணேஸ்வரம்*, செ.குணசிங்கம், பேராதனை 1972, ப.110.
16. மேலது, ப.648, 649
17. மேலது, ப. 654, 656.
18. ஏழாம் சருக்கத்தின் 20 ஆம் செய்யுள் வரையான விடயங்கள் மூல நூலைத் தழுவியவை என்பது மேல்வரும் பாடலினாலே தெளிவாகின்றது:

    *காட்சிதரும் திரேத உகம் சென்றுதுவாபர உகமுங்கலந்த அந்நாள்*
    *சேட்கடல் சூழ் புவியனைத்தும் தொழுங்கயிலைப் பெருமான் பொன்திகழ் பூங்கஞ்சத்*
    *தான் கருதும் வானவர்கள் மானவர்போல் வந்து இறைஞ்சித்தவம்செய்தேகு*
    *தான் கருதும் வடமொழியின் புராணநடை இவ்வளவும் நடத்தினோமால்.*

    *தக்ஷிண கைலாச புராணம்* பகுதி II. இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, 1995, திருநகரச்சருக்கம், செய்யுள் 21, ப.98-101)
19. *மேதினியின் மச்சேந்தியத்துள் மாசூதமுனி விதித்த இந்த*
    *ஆதிபுராணக் கதையும், அன்றியும் பின்னடந்த கதை அனேகம் உண்டாம்*
    *நீதியின் அக்கதை கருதித் தென்கயிலைத் திருப்பதியின் நிலைமைஎல்லாம் ஓதுவன்*
    *செந்தமிழ் நூல் தொடைமுறையால் நடைமுறை சேர் உலகமீதே.*

    'இதுவரையும் சொல்லப்பட்டன எல்லாம் மச்சேந்திய புராணத்திலுள்ளபடியான ஆதி புராணக்கதை. இனிமேற் சொல்லப்படுவதெல்லாம் பின்னடந்த கதை.'' இருவகையான மரபுகள் தக்ஷிண கைலாச புராணத்திற் சேர்ந்துள்ளன என்பது இதனாலே தெளிவாகின்றது. அந்தவிரு மரபுகளும் முன் பின்னாக வரும் வெவ்வேறு பாகங்களுக்கு மூலங்களாகக் கொள்ளப்பட்டன. 'பின்னடந்த கதை அனேகம் உண்டாம், நீதியின் அக்கதை கருதித் தென்கயிலைத் திருப்பதியின் நிலைமை எல்லாம் ஓதுவன் செந்தமிழ் தொடைமுறையால் ' என வரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடற்பகுதி தென்கயிலாயத்தின் சரிதம்பற்றி உலகவழக்கான கதையொன்று நிலவிவந்துள்ளது என்பதைத் தெளிவாக உணர்த்தும். எனவே அந்த உலக வழக்கான தென்கயிலாயத்தின் கதையினைச் செய்யுள் நடையிலும் இலக்கிய வடிவிலும் திருநகரச் சருக்கத்திலே பார்க்கின்றோம்.

20. *வேந்தனும் மனம் குளிர்ந்து வியப்புவர, வேதியன் மச்*
*சேந்தியமாம் புராணமது தெரிந்து உரைப்பத் திறல் வேந்தன்*
*காந்தமும் கூர் ஊசியும் போல் கருத்துற்றான், அவன் செவிக்கிப்*
*போந்த அமுது இதுவல்லால் புறத்தமுதம் பொருந்தாதே.*

*ஆதவனைக் கண்ட இருளது போல அஞ்ஞானம்*
*சேதமுறு மனத்தரசன் தென்கயிலை பெருமான் மேல்*
*காதலினால் மந்திரியைக் கருத்துருகி அழைத்து அருளி*
*ஏதமிலாத் திரிகோணம் இறைஞ்சுதும் போய் இனிதென்றான்.*

21. மேலது, செய்யுள்கள் 35, 36, ப.105-106. மேலது, செய்யுள் 47, ப.112

22. மேலது, செய்யுள்கள் 48-51, ப.112-114.

23. மேலது, செய்யுள்கள் 54-60, ப.115-118.

24. மேலது, செய்யுள்கள் 62-66, ப.119-121

25. மேலது, செய்யுள் 89, ப.134.

26. சி.பத்மநாதன், ''கோணேசர் கல்வெட்டு - சில ஆராய்ச்சிக் குறிப்புகள்'', *கோணேசர் கல்வெட்டு* கவிராசவரோதயன் இயற்றியது. பதிப்பாசிரியா பண்டிதர் இ.வடிவேல், (ப.1-25). வெளியீடு: இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, 1993, ப.8.

27. S.Gunasingham, "Two Inscriptions of Cola Ilankesvara Deva", Trincomalee Inscriptions Series - No.1, Peradeniya, 1974.

28. S.Paranavitana, "Civilization of the Polonnaru Period", *University of Ceylon History of Ceylon*, Vol. I, pt.2, University of Ceylon Press Board, 1960, pp.512-513,556.

29. *கோணேசர் கல்வெட்டு* ..... பதிப்பாசிரியர் பண்டிதர் இ.வடிவேல், செய்யுள்கள் 5-8, ப.53-56.

30. சி.பத்மநாதன், இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள் II, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, 2013.

31. *கோணேசர் கல்வெட்டு* .... பதிப்பாசிரியர் பண்டிதர் இ.வடிவேல், பக். 129-130.

32. கோயில்களிலே திருப்பதியம் ஓதுவதற்கெனச் செய்யப்பட்ட ஏற்பாடுகளைப் பற்றிய சாசனக் குறிப்புகள் அநேகமானவை. இராஜகேசரிவர்மன் என்னும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டம் பெற்ற மன்னனொருவனின் ஆறாவது ஆண்டிலே திருச்சி மாவட்டத்துப் பழூர் என்னுமூரிலுள்ள கோயிலொன்றிலே காரைக்குடியான் ஒருவனைத் திருப்பதியம் ஓதுவதற்கென நியமித்தனர். முதலாம் பராந்தக சோழனின் மூன்றாம் ஆண்டிலே, திருவாடுதுறைக் கற்றளிப்பிச்சன் கோயிலிற் திருப்பதியம் ஓதுவானுக்குச் சிற்றானைச் சூரிலே நிலங் கொடுத்தான். அவனுடைய 41 ஆம் ஆண்டிலே திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள அல்லூரிலுள்ள ஆலயத்திலே நாள்தோறும் திருப்பதியம் ஓதுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

தனது தந்தையினாற் பாடப்பெற்ற *கோலனார் குழல்* எனத் தொடங்கும் திருப்பதியத்தை, வடவாற்காடு மாவட்டத்துத் திருமால்புரம் கோயிலிலே, உற்சவம் ஒன்றின் போது ஓதுவதற்கென பிடலூர் மூவேந்த வேளான் குளக்குடையன் அருநிலை ஸ்ரீ கிருஷ்ணன் முதலாம் இராஜராஜனது பத்தாம் ஆண்டிலே பொற்காசினைத் தானம் பண்ணினான். அம்மன்னனது 12 ஆம் ஆண்டிலே தஞ்சை மாவட்டத்துக் குகூர் என்னும் ஊரைச் சேர்ந்த ஊர்களிலார் திருப்பதியம் பாடுகின்ற பிள்ளை நம்பி ஆரூரனாற்கு நிலங் கொடுத்தனர். இராஜராஜனது 12 ஆம் ஆண்டிலே, தஞ்சை மாவட்டத்துக் கோனேரிராஜ புரத்திலுள்ள திருநல்லமுடையார் கோயிலிற் திருப்பதியம் பாடுவதற்கெனப் பூங்குடி என்னும் ஊரினைச் சேர்ந்த இருவருக்கு உடையபிராட்டியார் என்பவர் நிலங் கொடுத்தமை பற்றி ஒரு சாசனத்தின் மூலம் அறிய முடிகின்றது. முதலாம் இராஜேந்திரசோழனின் மூன்றாம் ஆண்டிலே, உத்தரமேரூர்க் கோயிலொன்றிலே திருப்பதியம் பாடும் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு அன்னதானம் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அவனுடைய 11ஆம் ஆண்டிலே, தஞ்சை மாவட்டத்துக் கீழையூர்க் கோயில் மூன்றுகாலைப் பூசையின் போதும் திருப்பதியம் பாடுவதற்கு இருவர் நியமிக்கப்பட்டனர். அவர்களில் ஒவ்வொருவருக்கும் நாள்தோறும் முக்குறுணி என்னும் வீதமாகப் படிநெல்லுக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

முதலாம் இராஜேந்திரனின் 15ஆம் ஆண்டில், தென்னார்க்காட்டுத் திருமுக்கூடல் ஆலயம் தொடர்பாக, மதுராந்தக சதுர்வேதிமங்கலத்து செம்பியன் மகாதேவிப் பெரிய மண்டபத்தில் புரவுவரித் திணைக்களம், வரிப்பொத்தகம் என்பவற்றைச் சேர்ந்த அதிகாரிகள் ஸ்ரீ காரியம் ஆராய்ந்த பொழுது கோயிலுக்கு மேலதிகமான வருமான நெல் கிடைத்தமை தெரியவந்தது. எனவே அதைக் கொண்டு திருப்பதிகம் ஓதுவதற்கு ஏற்பாடு செய்ய வைகானஸரும் அவ்வதிகாரிகளும் உடன்பட்டமையினைச் சிலாசாசனமாக எழுதினார்கள். அதிராஜேந்திரன் நோய்வாய்ப் பட்டிருந்த காலத்தில் மன்னன் சுகம் பெறவேண்டும் என்பதற்காக மாம்பழமுடைய மகாதேவர் கோயிலில் நாள்தோறும் இரு தடவைகள் திருப்பதியம் ஓதுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

இரண்டாம் குலோத்துங்க சோழனின் இரண்டாம் ஆண்டில், தென்னார்க்காட்டுத் திருவாமாத்தூர் அபிராமேஸ்வரம் கோயிலிற் திருப்பதியம் பாடுவதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராஜராஜ பிச்சனுக்கும் அவனது பரிவாரத்தார்க்கும் நிலம் வழங்கப்பட்டது. திருப்புகலூரிலுள்ள கல்வெட்டொன்று திருவெண்ணை நல்லூர்ச் சோழேந்திர சிங்கப் பிச்சன் என்பவனுக்குத் திருப்பதியம் ஓதும் உரிமை வழங்கப்பெற்றமை பற்றிக் கூறுகின்றது. அது பாரம்பரிய உரிமையாகக் கொடுக்கப்பட்டது. அவனும், அவனது உரிமைவழிச் சந்ததியாரும் அந்தக் கடமைக்கான உரிமையைத் தாம் விரும்பியவர்களுக்குக் கொடுக்கலாம் என்றும் ஒப்புக் கொள்ளப்பட்டிருந்தது.

திருவிடைவாயிற் (தஞ்சை) சாசனம் ஒன்றிலே திருப்பதியம் பற்றிய ஒரு முக்கியமான குறிப்புண்டு. திருப்பள்ளியறையிலே திருத்தொண்டத் தொகையான்குகை என்ற நிலையமொன்று இருந்தது. வாணாதரராயரின் புண்ணியத்திற்காக அது ஆனைமங்கலம் உடையான் அரையன் வடுகநாடனான சொன்னவரையனாலே தாபனஞ் செய்யப்பட்டது. திருப்பள்ளியறையைப் பராமரித்தவர்களுக்கு நிலதானம் வழங்கப்பட்டது. திருமுறைத் தேவாரச் செல்வன் குகையிலிருந்த திருவையாறுடையார் முதலியாரின் வம்சத்தைச் சேர்ந்த அடியார் ஒருவரால் திருப்பள்ளியறையைப் பராமரித்தல், திருப்பதியம் ஓதுவாரை ஆதரித்தல் என்பவற்றுக்காக நிலதானம் கொடுக்கப்பட்டது. திருமுறைத் தேவாரச்செல்வன் குகையானது திருக்கழுமலம் திருத்தோணிபுரம் உடைய நாயனார் கோயிலைச் சேர்ந்த தேவர் நரசிங்கதேவர் சந்தானத்தைச் சேர்ந்ததாகும்.

கோனேரின்மை கொண்டான் என்னும் பட்டங்கொண்ட அரசனொருவனின் ஏழாம் வருடத்திற் பல்லவரையனின் வேண்டுகோட்படி, ஒருவனுக்கு தில்லை யாழி நல்லூர்க் கோயிலின் மடாதிபத்தியமும் திருப்பதியக் காணியும் அரச னால் வழங்கப்பட்டன. தனது கடமைகளை நிறைவேற்றுவதற்கு அவன் தான் விரும்பியபடியே வேறு நபர்களையுங் நியமிக்கலாம் என்றும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

இதுவரை சொல்லப்பட்ட சாசனக் குறிப்புகள் சோழப்பேரரசர் காலத்தவை. சிவன் கோயில்களிலும் விண்ணகரங்களிலும் திருப்பதியங்களை ஓதுவது அக்காலத்தில் வழமையாகி விட்டதென்பது இவற்றால் உணரப்படுகின்றது. ஓதுவார்களை நியமிக்கும் போது அவர்களுக்குச் சீவிதமாக நிலங்களை வழங்குவது வழமை. அத்தகைய நிலங்களைச் திருப்பதியக்காணி என்றனர். சில சமயங்களில் அரசரின் கட்டளையினாலும் வேறு சமயங்களிற் பிறரின் முயற்சிகளினாலும் திருப்பதியம் ஓதுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. தென்னியந்தியச் சாசனக்குறிப்புகளின் அடிப்படையில் நோக்குமிடத்துத் திருவாசகப் புலவன் பற்றிக் கோணேசர் கல்வெட்டுக் கூறுபவை ஆதாரபூர்வமான மரபொன்றின் அடிப்படையிலானவை என்பது தெளிவாகின்றது. *The Cōḻas* Vol.l, K.A. Nilakanta Sastri. University of Madras, 1935, pp.371, 419, 440, 487, 490, 509, 517,534, 553, 557, 606; *The Cōḻas* Vol.II, pt.2. K.A.Nilakanta Sastri, University of Madras, 1938, pp.633, 690, 762.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4

# கஜபாகு மன்னனின் திருப்பணிகள்

விக்கிரமபாகுவின் மகனாகிய கஜபாகு பொலன்னறுவையினை இராச தானியாகக் கொண்டு 22 வருடங்கள் ஆட்சி புரிந்தான் (1132-1153). இலங்கையின் வட, வடகிழக்குப் பகுதிகளில் மட்டுமே அவனுடைய ஆட்சி நிலவியது. தக்கிண தேசம், உறுகுணை என்பவற்றின் மீது அவன் ஆதிக்கம் பெற்றிருக்கவில்லை. அப்பகுதிகளில் அவனுடைய உறவினர்கள் ஆட்சி புரிந்தனர்.

தந்தை வழியில் கஜவாகு முதலாம் விஜயபாகுவின் பேரனாவான். அவனுடைய தாயாகிய சுந்தரி கலிங்க வம்சத்தவள். கஜபாகுவின் இளமைப் பருவத்தில் இராசதானியிற் சைவசமயச் செல்வாக்கு மேலோங்கியிருந்தது. அவனுடைய தந்தையாகிய விக்கிரமபாகு சைவசமயமச் சார்புடையவனாக விளங்கினான். அவனுடைய காலத்துக் கஹம்பிலியக் கல்வெட்டிற் காணப்படும் மெய்க்கீர்த் தியில் விக்கிரமபாகுவிற்கு உரியனவாகச் சொல்லப்படும் விருதுப் பெயர்களும் அடைமொழிகளும் இந்து மரபிலுள்ளனவாகவே காணப்படுகின்றன.[1] விக்கிரமபாகு பௌத்த சமயத்திற்கு விரோதமாகப் புரிந்த செயல்களை *மகாவம்சம்* வர்ணிக்கின்றது.[2] விக்கிரமபாகு அரச னாகப் பட்டாபிஷேகம் பெற்றிருக்கவில்லை என்றும் *மகாவம்சம்* கூறும். அவன் சைவசமயத்தவனாகக் காணப்பட்டதனால் அவனுக்கு அரச னாக அபிஷேகம் செய்து கொள்ளும் உரிமை மறுக்கப்பட்டதென்று இந்நாட்களிற் சிலர் கருதுவர்.[3] அவனுடைய காலத்தில் எழுதப்பட்ட சாசனங்கள் எல்லாம் முன்னைய மன்னனாகிய ஜயபாகு தேவரின் (1110-1111) ஆட்சியாண்டுகளைக் குறித்தே எழுதப்பெற்றன என்பதும் கவனித்தற்குரியதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்கிரமபாகுவைப் போல கஜபாகுவும் சமயநெறியைப் பொறுத்தவரையிலே சைவனாகியிருந்தான் என்று கருதுவதற்குத் தகுந்த காரணங்கள் உள்ளன. கஜபாகுவின் மீது மகாவம்ச ஆசிரியர் எதுவிதமான அபிமானமுங் கொண்டிருக்கவில்லை. பல சந்தர்ப்பங்களிலே *மகாவம்சம்* அவனைச் சிறுமைப்படுத்திக் கூறுவதை அவதானிக்க முடிகின்றது. அவன் பொய்ச் சமயவாதிகளாயினோர் பலரை வெளிநாட்டிலிருந்தும் அழைத்து வந்து இலங்கையிலே குடியிருக்கச் செய்தான் என்றும் அந்நூல் கூறும்.[4] ஆயினும், கஜபாகு எச்சமய நெறியினைப் பின்பற்றினான்? எந்தச் சமயத்தைச் சேர்ந்தவர்களைப் பெருமளவிலே பிறதேசத்திலிருந்தும் அழைத்து வந்து குடியேற்றினான்? என்னும் விடயங்கள் பற்றி அந்நூல் எதனையும் தெளிவாகக் கூறவில்லை . கஜபாகுவும் அரசனாகப் பட்டாபிஷேகஞ் செய்யப்படவில்லை . எனவே, அவனும் விக்கிரமபாகுவைப் போலச் சைவசமயத்தைச் சேர்ந்திருந்த காரணத்தினால் அரசனுக்குரிய சடங்குகள் அவனுக்கும் மறுக்கப்பட்டிருந்தன என்று கருதலாம். கஜபாகுவின் பேரால் வழங்கப்பட்ட சாசனங்கள் எல்லாம் ஜயபாகுவின் ஆட்சியாண்டுகளையே குறிப்பிடுகின்றன. .

கஜபாகு தக்கிண தேசத்திலும் உறுகுணையிலும் அதிகாரஞ் செலுத்திய தனது உறவினர்களோடு கொண்டிருந்த தொடர்புகளைப் பற்றிய விபரங்கள் மகாவம்சத்திலே பலவிடங்களில் உள்ளன. கஜபாகு அமைதியான, ஆக்கிரமிப்பு நோக்கற்ற, மனவுறுதி கொண்ட, பலம் வாய்ந்த மன்னனாக விளங்கினான். தென்னிலங்கையில் ஆட்சி செலுத்தியவர்களுக்கு எதிராகக் கஜபாகு ஆக்கிரமிப்பு நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளவில்லை . ஆயினும், அவன் அவர்களின் தாக்குதல்களுக்கும் சூழ்ச்சிகளுக்கும் இலக்கானான். கஜபாகுவை அதிகாரத்திலிருந்து நீக்கிவிட்டுப் புலத்திநகரான இராசதானியைக் கைப்பற்றிக் கொள்வதற்கு அவர்களாற் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், அம்முயற்சிகள் அதிக பலனை அளிக்கவில்லை . கஜபாகு இறக்கும்வரை அவனை அதிகாரத்திலிருந்து அவர்களால் நீக்கிவிட முடியவில்லை .

கஜபாகு ஆட்சிப் பொறுப்பினை மேற்கொண்ட பொழுது விஜயபாகுவின் மருமக்களான கீர்த்தி ஸ்ரீ மேகன், ஸ்ரீ வல்லவன் என்னுமிருவரும் பொலன்னறுவையைக் கைப்பற்றுவதற்குத் திட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிட்டனர். அங்குள்ள வேளைக்காறப் படையினருக்கு வெகு சன்மானங்களை வழங்கி, அரசனுக்கெதிராகக் கிளர்ச்சி செய்யுமாறு தூண்டினார்கள்.[5] வேளைக்காறர் கலகம் விளைவித்த காலத்திற் சகோதரர் இருவரும் தென்னிலங்கையிலிருந்தும் வடக்கு நோக்கிப் படையெடுத்துச் சென்றனர். தனக்குப் பெரிதும் பாதகமான ஒரு நிலை உருவாகியபோதும் கஜபாகு சாதுரியமாகவும் உறுதியாகவுஞ் செயற்பட்டான். தனது அமைச்சர்களையும் உயரதிகாரிகளையும் கூட்டி, ஆலோசனை நடத்தியபின் பகைவர்களைத் தனித்தனியே எதிர்கொள்வதென்று தீர்மானித்தான். முதலில் வேளைக்காரரின் கலகத்தை அடக்கிவிட்டு, இராசதானியிலே தனது அதிகாரத்தை மீண்டும் நிலைநாட்டினான். அதற்குப் பின் பலம் மிக்கதான ஸ்ரீ வல்லவனின் படையினைத் தாக்கித் தோற்கடித்தான். அதன் விளைவாகக் கீர்த்தி ஸ்ரீ மேகனும் ஸ்ரீ வல்லவனுந் தங்கள் வசமான தேசப்பகுதிகளுக்குத் திரும்பிச் சென்றனர்.[6] இப்போரில் அடைந்த வெற்றிகளின் பயனாகப் பொலன்னறுவையிலும், இலங்கையின் வட, வடகிழக்குப் பகுதிகளிலும் கஜபாகு தனது அதிகாரத்தை வலுப்படுத்திக் கொண்டான்.

கீர்த்தி ஸ்ரீ மேகன் இறந்தபின் தக்கிண தேசத்திலே பராக்கிரமபாகு ஆட்சியதிகாரம் பெற்றான். அரச பதவியை அடைந்து கொள்வதில் அவன் அதிக வேட்கை கொண்டவன். தனது குறிக்கோளை அடைந்து கொள்வதற்குத் தேவையான உபாயங்கள் எல்லாவற்றையும் பராக்கிரமபாகு மேற்கொண்டான். கௌடில்யர் விளக்கிய உபாயங்களை அவன் பின்பற்றினான் என்று கொள்வதற்கான காரணங்களும் உள்ளன. அமைதி, சமாதானம், மனிதாபிமானம் என்னும் இலட்சியங்கள் தனது குறிக்கோளை அடைவதற்குத் தடையாகுமிடத்து அவற்றைத் துச்சமென உதாசீனஞ் செய்வதற்குச் சற்றுந் தயக்கமில்லாத ஒருவனாக அவன் காணப்பட்டான். நீண்டகாலப் போருக்குத் தேவையான ஆயத்தங்களை அவன் மேற்கொண்டிருந்தான்.

பொலன்னறுவை இராசதானியையும் அதன் வசமாயிருந்த பகுதிகளையுங் கைப்பற்றிக் கொள்ளும் நோக்கத்தோடு பராக்கிரமபாகு போரைத் தொடக்கினான். கஜபாகுவின் வசமாயிருந்த மலய தேசத்தை அவன் சூழ்ச்சிகளின் மூலம் தன்வசப்படுத்திக் கொண்டான். அங்கு தனது பிரதிநிதியாக றக்க(ன்) என்ற சேனாதிபதியை கஜபாகு நியமித்திருந்தான். பராக்கிரமபாகு அச்சேனாதிபதியுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரகசியமாகத் தொடர்புகொண்டு, அவனுக்கு வெகுசன்மானங்களை வழங்கித் தன்பக்கஞ் சேர்த்துக் கொண்டான். அதன் பயனாக மலயதேசத்தை கஜபாகு இழந்தான். அங்கு பராக்கிரமபாகுவின் செல்வாக்கு மேலோங்கியது. நீண்டகாலப் போரின் விளைவாகப் பராக்கிரமபாகுவின் படைகள் புலத்திநகரை அடைந்து, அதனை முற்றுகையிட்டன. அத்தருணத்தில் கஜபாகு உறுகுணையிலிருந்த மானாபரணனின் உதவியை நாடிப் பெற்றான். மிகுந்த பேராற்றல் பொருந்திய மானாபரணன் புலத்திநகரை அடைந்து, அங்கிருந்து பராக்கிரமபாகுவின் சேனைகளைத் தோற்கடித்துத் துரத்தினான்.

கஜபாகுவிற்கு உதவிபுரிவதற்கென்று போன மானாபரணன் புலத்தி நகரிலே தங்கியிருந்து கொண்டு ஆட்சியதிகாரங்களைத் தன்வசப்படுத்த ஆயத்தங்களை மேற்கொண்டான். அதனையுணர்ந்த கஜபாகு பராக்கிரமபாகுவை உதவிக்கு வரவழைத்தான். அதனாற் புலத்திநகர் மீதான பராக்கிரமபாகுவின் இரண்டாம் படையெடுப்பு நடைபெற்றது. அதன் பயனாக மானாபரணன் நிலை தளர்ந்து தென்னிலங்கைக்கு ஓடிவிட்டான். ஆனால், அதிகாரத்தை கஜபாகுவிடம் வழங்குவதற்குப் பராக்கிரமபாகு தயங்கினான். அந்தச் சூழ்நிலையிலே கஜபாகு சங்கத்தாரைப் பயன்படுத்தி அவர்களின் மூலமாகப் பராக்கிரமபாகுவுடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டான். அதன் பிரதியின் வாசகம் சங்கமூவ விகாரையிலே சிலாலேகமாக நிறுவப்பட்டுள்ளது.[8]

பராக்கிரமபாகுவைத் தனது வாரிசாக கஜபாகு ஒப்புக்கொண்டான். தனக்கெதிரான போர்களைச் சமாளிப்பதில் கஜபாகு பெருஞ் சிரமப்பட்டான் என்றும் பலவீனமுற்றுக் காணப்பட்டான் என்றும் *மகாவம்சம்* கூறும். அதன் ஆசிரியர் பராக்கிரமபாகுவை ஒரு காவியத் தலைவனாகச் சித்திரிக்க முற்பட்டதால் கஜபாகு மன்னனைச் சிறுமைப்படுத்தி வர்ணிக்க வேண்டிய நிலையிலே காணப்பட்டார். மகாவம்சத்தை விமர்சன ரீதியாக விளக்க முற்படும் ஆய்வாளரும் இம்மன்னர்களைப் பொறுத்தவரையில் ஒரு பாரபட்சமற்ற நிலைப்பாட்டைக் கொள்வதற்குத் தவறிவிடுகின்றனர். பலவீனஞ் சம்பந்தமான காரணமொன்றினால் அவர்கள் நடுநிலையைக் கடைப்பிடிக்க முடியாத நிலையில் உள்ளன ரென்று கருதமுடிகின்றது.

கஜபாகு உண்மையிலே சாதுரியம் மிக்கவொரு அரசனாகவே விளங்கினான். தனக்கெதிரான ஆக்கிரமிப்புப் போர்களை உறுதியுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்த்துப் போராடினான். போரிலே தோல்வி ஏற்படும் வேளைகளிற் சாணாக்கியத்தினாலே பகைவர்களின் வெற்றிகளைப் பயனற்றவையாக்கி விடக்கூடிய நடவடிக்கைகளை அவன் மேற்கொண்டான். தனது அதிகாரத்தையும் ஆட்சியுரிமையினையும் காப்பாற்றிக் கொள்வதற்குப் பராக்கிரமபாகு, மானாபரணன் ஆகியோரில் ஒருவனைச் சமயத்திற்கு ஏற்றவாறு சாதுரியமாகப் பயன்படுத்திக் கொண்டான். அந்தத் திறமையினால் அவன் தனது காலம் முடியும் வரை ஆட்சியில் இருந்துகொள்ள முடிந்தது. அவனுடைய அரசியற் சாணாக்கியம் சாணாக்கியரின் கோட்பாடுகளை அநுசரித்த பராக்கிரமபாகுவின் சாணாக்கியத்திலும் மேலானதாகும்.

கஜபாகுவின் காலத்துச் சாசனங்கள் பல காணப்படுகின்றன. அவற்றுட் பெரும்பாலானவை தமிழ்ச் சாசனங்களாகும். அவன் குடியானவர்களிடையே சிங்களவரினதும் தமிழரினதும் ஆதரவைப் பெற்றிருந்தான் என்று கொள்வதற்கான காரணம் உண்டு. இரு சமூகங்களைச் சேர்ந்த அதிகாரிகளும் அவனுடைய காலத்திலே நிர்வாகக் கடமைகளைச் செய்வதில் ஈடுபட்டிருந்தனர். சமய விவகாரங்களிற் குடியானவரிடையே நல்லுறவுகள் பேணப்பட்டமைக்கும் அவனுடைய சாசனங்கள் ஆதாரமாகின்றன. பௌத்த நிறுவனங்களுக்கும் இந்து சமய நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்ட தானங்களை அச்சாசனங்கள் குறிப்பிடுகின்றன.

கஜபாகு தேவரின் காலத்திலே அரசனின் பொருட்டு, இந்துசமய வழிபாட்டில் இடம் பெறுவதான லக்ஷபூஜை ஒன்று நடைபெற்றது என்பதை கப்புறுவடு ஓய சாசனத்திலுள்ள குறிப்பொன்றினால் அறிய முடிகின்றது. லக்ஷபூஜை என்னும் வழிபாட்டுக்கு வேண்டிய குமாரக் கடவுளினதும் பிறதெய்வங்களினதும் படிமங்களும் ஓவியங்களும் றங்கிதாவே ஹினாபி என்பவனாற் செய்யப்பட்டன. அவற்றைச் செய்த பின் அவனே லக்ஷபூஜை சம்பந்தமான கிரியைகளையும் நடத்தினான். அப்பணிகளைச் செய்தமைக்காக அவனுக்கு மேலாந்துர என்னுமிடத்திலே பரவணியாட்சியாக நிலமானியங்கள் சர்வபரிகாரங்களோடும் வழங்கப்பட்டன.[9]

கஜபாகு பிராமணர்களுக்கும் பிரம்மதேயங்களுக்கும் ஆதரவு நல்கினான் என்பதைத் தமிழ்ச் சாசனங்கள் இரண்டினால் அறிந்து கொள்ள முடிகின்றது. அவனுடைய இரண்டாம் ஆண்டிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெயங்கொண்ட சலாமேக சதுர்வேதி மங்கலத்துப் பிராமணருக்கு அரச னால் நிலதானம் வழங்கப்பட்டது. இப்பிரம்மதேயம் ஒரு சமயத்திலே அதன்வசமிருந்த சில நிலங்களை இழக்க நேர்ந்தது. அவை வல்லவர் என்பவனின் உடைமையாகின. பிரம்மதேயம் முன்பு இழந்த நிலங்களை வல்லவர்பக்கல் நின்றும் வாங்கி, அவற்றை மன்னன் பிராமணருக்குத் தானம் பண்ணினான்.[10]

கந்தளாய்ப் பிரம்மதேயத்து நிலங்கள் சிலவற்றின் எல்லைகள் கஜபாகுவின் கட்டளைப்படி அளந்து வரையறை செய்யப்பட்டன. இடையர்கல் என்னும் இடத்திலே, பிடி நடத்த இடத்தில், அரசனின் ஆணைப்படி எல்லைக்கல் நாட்டப்பெற்றது.[11] தனது ஆட்சிக் காலத்தின் முடிவிலே கஜபாகு கந்தளாயில் மாளிகையொன்றினை அமைத்து அதில் வாழ்ந்தான்.[12]

திருக்கோணேஸ்வரம் பற்றிய நூல்களிலே சைவாபிமானம் மிக்க மன்னனாக கஜபாகு போற்றப்படுகின்றான். ஸ்ரீ தக்ஷிண கைலாசபுராணத் தின் இறுதிப் பகுதியான திருநகரச் சருக்கத்திலே கயவாகு என்னும் மன்னனைப் பற்றிய பாடல்கள் உள்ளன.[13] கோணேசர் கல்வெட்டு என்னும் தொகுப்பு நூலில் அவனைப் பற்றிய அகவற்பாவிலமைந்த தனிப்பகுதி ஒன்றுண்டு. வசனநடையில் அமைந்த பகுதியிலும் பலவிடங்களிலே கயவாகுவைப் பற்றிய விபரங்கள் உள்ளன.[14] திரிகோணாசல புராணத்தின் 20 படலங்களில் மூன்று படலங்கள் கயவாகுராசனைப் பற்றியனவாகும்.[15] பொலன்னறுவையில் அரசுபுரிந்த கஜபாகு மன்னனையே கயவாகு என்று தமிழ் நூல்கள் குறிப்பிடுகின்றன என்பதில் எதுவித ஐயமுமில்லை . கஜபாகு என்னும் பெயரைத் தமிழில் கயவாகு என்று எழுதுவது வழக்கம். 'கடல் சூழிலங்கைக் கயவாகு வேந்தன்' என்னுந் தொடர் சிலப்பதிகாரத்தில் வருகின்றமையுங் குறிப்பிடற்குரியது. திருக்கோணேஸ்வரம் பற்றிய இலக்கிய மரபிலே, சைவசமயத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்ட அரசனாகவும், ஆலய தருமங்கள் புரிந்த பெருவேந்தனாகவும் கயவாகு போற்றப்படுகின்றான். சிவநெறிக் காவலன் என்ற வகையில் அவன் குளக்கோட்டனுக்கு நிகரானவன். தென்கயிலாயந் தொடர்பாகக் குளக்கோட்டன் செய்த தருமங்களை அவன் புநருத்தாரணம் பண்ணியவன். *தக்ஷிண கைலாய புராணம்* கயவாகு மன்னனை மேல்வருமாறு வர்ணிக்கின்றது:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கண்ணிரண்டும் ஒருபரமஞானக் கண்ணும் .*
*கயவாகு பெற்று உபயகரங்கள் கூப்பி,*
*எண்ணிரண்டு கலைமேலும் இரண்டாய் ஒன்றாய்*
*இருந்த பராபரப் பொருளை இறைஞ்சி ஏத்தி*
*அண்ணல் அருச்சனைக்கென்றே அயரும் காலத்து*
*அலைகடலைக் கடந்து இருவர் அந்தணாளர்*
*நண்ணினர் என்றனர், அவரைக் கொணர்மின் என்றான்*
*நாதன் அருச்சனைக்கு இவரே நல்லோர் என்றான்.*

*என்னும் அருச்சனைக்கு மிக்கோரென்னா*
*இப்பதியின் முதன்மை இருவோர்க்கும் ஈந்து,*
*வென்றிதரும் நமது குலக்குரவோராகி*
*விளங்குமெனக் குருவரிசை மிகவும் நல்கிக்,*
*கன்றுலவு வெருகுநதி தருப்பை ஆறும்,*
*கரம்பக நீர்க் கடலளவும் கணித்த எல்லை*
*துன்று திசை நான்கும் அரன்தனக்கே என்னச்*
*சொல்லும் அவன் கல் எழுதித் துலங்க வைத்தான்.*

*வைத்தது ஒருவர் புதைத்த நிதி முழுதும் கோணமலை*
*அரற்கே உரிமை இந்த வளநாட்டுள்ள*
*கத்துகடல் வளமும் மலைவளமும் மற்றைக்கரை வளமும்*
*கழிவளம் கான்வளமும் எல்லாம்,*
*பத்தினிலே எட்டும் கயிலைப் பரற்கும் மிக்க பங்கிரண்டும்*
*உங்களுக்கே பகுதியாமென்று*
*எத்திசையும் புகழ் அனுரை வேந்தன் செப்பேடு எழுதி*
*அவர் கைக் கொடுத்தான் இன்பமாக.*[16]

இறைவனின் அருளினாலே வேந்தனின் கண்கள் மீண்டும் ஒளிபெற்றன; அத்தோடு அவன் ஞானக் கண்ணையும் பெற்றான். நிர்க்குணமான சொரூப நிலையில் ஏகனாயும் சகுணமான தடத்தநிலையிலே சிவனும் சக்தியுமாகியும் தோன்றும் பராபரனை மன்னன் கைகூப்பி வணங்கி நின்றான். ஆலயத்திலே அர்ச்சனை புரிவாரிலரென்று மன்னன் விசனமுற்றிருந்த சமயத்திலே, அந்தணர் இருவர் கடல்வழியாக வந்து சேர்ந்துள்ளனர் என்ற செய்தி அரசனுக்குக் கிடைத்தது. அவர்களே அர்ச்சனை புரிவதற்குத் தகுதியானவர்கள் என்று அவர்களை அழைத்து வருமாறும் அரசன் சொன்னான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தணர் இருவருக்கும் வேதநாயக முதன்மை, சைவநாயக முதன்மை என்னும் பட்டங்களை வழங்கி, அவர்களைக் கோகர்ண சிவாலயத்துப் பூசகராக நியமித்தான். அவர்களை இராச வம்சத்தவரின் குலகுரவராகப் பிரகடனஞ் செய்தான். வெருகுநதி, தருப்பை ஆறு, கரம்பகம், அலைகடல் ஆகிய நான்கு எல்லைகளில் அகப்பட்ட நிலத்தைக் கோயிலுக்குத் தானமாக வழங்கி, அதனைச் சாசனமாக எழுதி வைத்தான்.[17]

சொல்லப்பட்ட எல்லைகளுக்குள் அடங்கிய கடல்வளம், கான்வளம் , மலைவளம், நிலத்திலுள்ள புதையல்கள் முதலானவற்றினின்றுங் கிடைக்கின்ற வருமானத்திற் பத்தினில் எட்டு கோணைநாதருக்கும் மிகுதி அந்தணருக்கும் உரியனவாகும் என்று கட்டளை பண்ணிச் செப்பேடு எழுதிக் கொடுத்தான்.[18]

இந்தக் கதை ஸ்ரீ தக்ஷிண கைலாச புராணத்தில் உள்ளது. இது மன்னனாம் செகராசசேகரன் சொல்லுங் கதை. கயவாகு ராசனைப் பற்றிக் கிடைக்கின்ற மரபுவழிக் கதைகளில் இதுவே புராதனமானது. இதில் இரண்டு அம்சங்கள் உள்ளன. அவற்றுளொன்று கயவாகுராசன் மீண்டும் கண்ணொளி பெற்றமை பற்றியது. மற்றையது ஆலயத்து நாள் வழிபாடுகளின் புனருத்தாரணம் பற்றியது. இக்கதை மரபு வழியானது ; ஆசிரியரின் புனைந்துரையன்று. புராணத்திலுள்ள கதை என்பதனால் அது முற்றிலும் புனைந்துரையானது என்று ஒதுக்கித் தள்ள முடியாத ஒன்றாகும்.

மரபுவழிக் கதைகளிலே கற்பனைக் கதைகளும் வரலாற்றம் சங்களுங் கலந்து விடுவதுண்டு. கயவாகு கண்ணொளியினை இழந்து மீண்டும் இறைவனருளால் அதனைப் பெற்றான் என்ற கதை பெரிய புராணத்திலே காணப்படும் சுந்தரமூர்த்தி நாயனார் சரிதத்திலுள்ள கதையினை 'ஒத்தவொன்றாகும். கஜவாகு ஏதோ காரணத்தினால் நோய்வாய்ப் பட்டிருந்தான் என்ற எண்ணம் மகாவம்சக் குறிப்புகளால் உணரப்படுகின்றது.

கடல்வழியாக வந்து சேர்ந்த அந்தணர்களை ஆலயத்து அர்ச்ச கராக நியமித்தமை, அவர்களை அரச குலத்தவரின் புரோகிதராக நியமித்தமை, ஆலயத்துக்குத் தேவதானமாக நிலம் வழங்கியமை, நாட்டின் பகுதியொன்றில் அரசனுக்குரிய வருமானங்களைக் கோயிலுக்கும் அதன் அர்ச்சகரான அந்தணருக்கும் மானியமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டமை ஆகிய அம்சங்கள் நடைமுறைச் சாத்தியமானவை. அவை ஆலய வழமைகளுக்குந் தேசவழமைகளுக்கும் முரண்படாதவை. எனவே, கயவாகு மகாராசனைப் பற்றிய ஸ்ரீ தக்ஷிண கைலாச புராணத்திலுள்ள விவரங்கள் கோணேசர் கோயில் தொடர்பாக நிலவிவந்த - ஆதாரபூர்வமான மரபொன்றை அடிப்படையாகக் கொண்டவை என்று கொள்ள முடிகின்றது. தேவதானம் பற்றிய சிலாசாசனம், ஆலயத்து அந்தணருக்கு அரசன் வழங்கிய செப்பேடு என்பன பற்றிய குறிப்புகளும் இக்கருத்தினை வலியுறுத்துகின்றன. கயவாகு மன்னனால் வழங்கப்பட்ட சாசனங்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றைப் பற்றிய குறிப்புகள் மரபுவழிக் கதைகளில் இடம்பெற்றன என்றுங் கருதலாம்.

குளக்கோட்டனது காலத்துக்குப் பின் நெடுங்காலஞ் சென்ற பின்பு கோணேசர் கோயிலுக்குரிய ஆலய சேவைகளைக் கஜபாகு புனருத்தாரணம் பண்ணினான் என்று கொள்வதற்கு ஸ்ரீ தக்ஷிண கைலாச புராணத்துப் பாடல்கள் ஆதாரமாகின்றன.

ஆலய தருமங்கள் ஏதோ காரணத்தினாலே தடைப்பட்டிருந்த சமயத்திலே அந்தணர்களை வரவழைத்து, அவர்களைப் பூசகராக அரசன் நியமித்தான்.

ஆலயத்துக்கு அரசனளித்த நன்கொடைகளைப் பற்றித் *திரிகோணாசல புராணம்* மேல்வருமாறு புகழ்ந்துரைக்கின்றது:

*விருப்பினோடு அரன் தனக்கு நன்மணி வெகுநிதி பூண்*
*இருப்பில் வைத்து மேல் திருப்பணி பற்பல இயற்றித்*
*திருப் பொலிந்திடு தம்பை மாநகர்க்கு ஒரு சிறையின்*
*அருப்பம் உள்ளன குறைத்து நல்ல அணிபெறத்திருத்தி*

*ஆயிரத்து முன்னூற்று ஐம்பான் அமணநெல் விரைத்தும்*
*சேய மாநிலம் செம்மை செய்து உயர் திருக்குளநீர்*
*பாயும் ஆறுகள் பழனங்கள் பற்பல வகுத்துத்*
*தூயதாகிய குடிபடை சூழ்வர அமைத்து.*

*ஆங்கு அவர்க்கு வேண்டிய பல வளங்களும் அளித்துத்*
*தேங்கு நீர்ச் செறு எங்கணும் பயிரிடச் செய்தே*
*பாங்கர் வாழை மா தெங்கு பூகம் பலவாதி*
*ஓங்கும் ஊதியம் உற தனி மகிழ்வினொடு உஞற்றி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*விதி அதாய் அரன் பூசனை விளங்குறப் புரியும்*
*முதன்மை கொண்டவர் ஏனையோர் யாவர்க்கும் முறையே*
*தொகுதி கொள் நீர்ச் செறு அவரவர்க்காம் படி கொடுத்திட்டு*
*அதிக மாநிதி பூண்களும் அளித்தனன் அரசன்.*

*ஈசன் பூசைக்கும் அதிக நெல் விளை நிலம் ஈந்து*
*வாச மென்மலர்ச் சோலை நந்தவனம் வகுத்துத்*
*தேசு உலாவு பொன்முதல் உலோகங்களாற் சிறந்த*
*பாசனங்கள் மற்று ஏனவும் பற்பல படைத்தே.*

*அரிசி நித்தியம் அமணம் என்றாக ஆங்கதனுக்கு*
*உரிய பல்பொருள் உடன் நிவேதனம் முறை உய்த்துப்*
*பிரிவினோடு தன் உபயமாய்ப் பண்புடன் என்றும்*
*தெரிவையோடு அரன் தனக்கு உயர் பூசை செய்வித்தான்.*[19]

''மணிகள் இழைத்த ஆபரணங்களையும் அதிகமான செல்வத்தையும் சிவனார்க்கு இருப்பு முதலாக வைத்தான். மேலும், அரசன் ஆலயத்திலே பல திருப்பணிகளைச் செய்தான். வளம் நிறைந்த தம்பலகாமத்திலே ஒரு பகுதியினைத் திருத்தி 1350 அமணம் நெல்வயலாக்கி அதனைத் தேவதானமாக அமைத்தான். கந்தளாய்க் குளத்திலிருந்து அதற்கு நீர்ப்பாசனஞ் செய்தற் பொருட்டு கால்வாய்கள், கண்ணாறுகள் என்பவற்றை அமைத்துக் கொடுத்தான். அந்த வயல் நிலத்தைச் சூழக் குடியிருப்புகளை உருவாக்கிக் குடிகளுக்குத் தேவையான வசதிகளையும் மன்னன் செய்து கொடுத்தான். நன்செய் நிலங்கள் எல்லாவற்றையுஞ் செய்கை பண்ணுவதற்கு வேண்டிய ஏற்பாடு களையும் அவன் செய்தான். வாழை, மா, கமுகு, தென்னை முதலான வற்றைச் செய்கை பண்ணும் தோப்புகளையுங் அங்கு உண்டு பண்ணிக் கொடுத்தான். முதன்மைக்கும் கோயிலில் தொழும்புகள் புரிவோருக்கும் ஏற்றவாறு வயல் நிலங்களைக் கொடுத்து, அவற்றோடு வேறு பொருள்களையும் வேந்தன் வழங்கினான்.

'ஆலயத்திலே நிதம் பூசைக்கு வேண்டிய செலவுகளுக்காக விளைநிலங்களை வழங்கியதோடு, சோலைகளையும் நந்தவனங்க ளையும் உண்டுபண்ணிக் கொடுத்தான். ஆலயத்திலே நாள்தோறும் நிவேதனத்துக்கு ஓரமணம் அரிசி செலவிடும் படியாக ஏற்பாடுகளை அரசன் செய்தான்.' *திரிகோணசல புராணத்திலே* சொல்லப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவரங்கள் *ஸ்ரீ தக்ஷிண கைலாசபுராணம், கோணேசர் கல்வெட்டு* ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டவை. மரபுவழியான கதையொன்றினை அந்நூலின் ஆசிரியர் கவிநயத்துடன் வர்ணிக்கின்றார் என்பது கவனித்தற்குரியது.

கயவாகுராசன் கோணேசர் கோயில் தொடர்பாகச் செய்த தானதருமங்களைக் *கோணேசர் கல்வெட்டிலே* காணப்படும் தனிப்பாடற் பகுதியும் வர்ணிக்கின்றது. அதில் மேல்வரும் பகுதி உண்டு:

*அன்னவரிருவரையும் முன்னே விட்டு*
*அரசனும் பிறகே அன்பொடு வந்து*
*உரகவா பரண னொளிதிகழ் பூசை*
*திரமொடு செய்யெனச் சீருட னுரைக்கக்*
*குருகுலக் கணக்கனும் கனசெலவுண்டே*

*இன்றேழ் கடினாகமட் டெம்பிரான் பூசை*
*நின்றே போனதா நிருப மேற் செலவிதென*
*ஒன்றே யாயிரத் தொரு நூறு பொன்கொடுத்து*
*அன்றே பூசனை ஆற்ற விடுத்தான்.*
*தேனமர் தொடையான் திருமிகு வன்னிமை*

*தானம் வரிப்பத்துத் தானென்பவரையும்*
*மானமா-வரசன் வருகென வழைத்துப்*
*படவர வசைக்கும் பரமர் கோணேசர்க்கு*
*அடன்மிகு பூசைக்காடகம் போதா*
*தரமுறு நாடுந் தான் போதா தெனத்*
*திடமொடு கொடுக்கச் சிந்தையுள் நினைத்து*
*வரவுறு வடக்கு வருகரம் பகமாந்*
*திரமுறு மேற்குச் சிறந்த முனீச்சரம்*
*தரைபுகழ் தெற்குச் சங்கமக் கண்டி*
*உரமிகு கிழக்கு உகந்த வங்காளம்*

*ஏற்றுகை கோணை யிறைவனுக் காமென*
*நாற்றிசைச் சூலமும் நாலுகால் நாட்டி*
*கூற்றினை உதைத்த கோமான் பூசனைக்கு*
*ஏற்றிடு வீரென்று யார்க்கு முரைத்து*

*இலைகாய் கனிபூ இரணியம் நெல்முதல்*
*விலைபெறு சரக்கின் மிகுந்த வாதாயம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பலபொரு ளெதுவும் பத்தினுக் கொன்று*
*நிலைபெறக் கோணை நிமலர்க் களிப்பீர்*

*வாய்மையா யிப்படி வழங்குவீ ராகில்*
*தீமை வராது இருநிதி சேரும்*
*தாமே யிதற்குத் தவறிழைப் பார்கள்*
*ஆமையாய்ப் பிறந்தே அலைகுவர் தாமே.*

*பத்துப் பங்காக்கிப் பாங்குட னெட்டும்*
*அத்தர் அறைமுத லாகிய இருப்பாம்*
*மற்றிரு பங்கு மறையோர்க் காகும்*
*சத்த வாரிதிகழ் தம்பைமா நகரில்*

*அற்புதமுடனே முப்பதவணம்*
*நெற்பயிர் விளையும் நிலமுமளித்து*
*அற்புதமாக அரன் திருப்பூசை*
*நட்புட னென்றும் நடத்துவீ ரென்றான்*

*நாட்டியக் கலை நற்றொழும் பினுக்கு*
*மூட்டிய தலைமை முப்பத்திரண் டினர்க்கும்*
*ஈட்டிய நிலம் புலம் யார்க்குமளித்து*
*வாட்டமில்லாமல் மகிழ்ந்து செயுநிதம்*

*என்றவர்க் குரைத்தே யெழிற் கயவாகு*
*மன்றல் சேர் தாதகி மாலை மார்பினனும்*
*கொன்றையஞ் சடைமுடிக் குரிசிலை வணங்க*
*அன்றவர்க் கருள்செய வரசனு மகிழ்ந்து*

*ஆடகமதனால் கேடகம் சமைத்துத்*
*தேடரும் பங்குனித் திருநாட் கண்டு*
*தோடலர் மார்பன் தொகுதிகள் நிறுத்தி*
*நாடதற் கேநயந்தெழுந்தனனே.*

*ஸ்ரீ தக்ஷிண கைலாசபுராணம், திரிகோணாசல புராணம்* ஆகியவற்றிலே சொல்லப்படும் விடயங்கள் இப்பாடற் பகுதியிலுஞ் சொல்லப் படுகின்றன. ஆயினும் விபரங்கள் சிலவற்றைப் பொறுத்தவரையில் முக்கியமான சில 'வேறுபாடுகள் உள்ளன. காலக்கிரம வரிசையிற் கயவாகுராசனைப் பற்றிய தனிப்பாடல், புராணங்கள் இரண்டிற்கும் இடைப்பட்ட காலத்திற்குரியதாகும். அது திரிகோணசல புராணத்திற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் முற்பட்டது போலத் தோன்றுகின்றது. கயவாகு ராசன் கோகர்ணத்திற்குப் போய் ஆலய தரிசனஞ் செய்து, அந்தணர்களைப் பூசகர்களாகப் புதிதாக நியமனஞ் செய்து, பல தானதருமங்கள் வழங்கி, ஆலய வழமைகளைப் புனருத்தாரணஞ் செய்தான் என்பது கிடைக்கின்ற அவனைப் பற்றிக் கூறும் நூல்கள் எல்லாவற்றிலுஞ் சொல்லப்படும் விடயமாகும். அது உண்மையான வரலாற்று நிகழ்ச்சிகளை ஆதாரமாகக் கொண்ட மரபுவழிக் கதைகளின் வழிவந்த ஐதிகமாகும். கோயிலுக்கு அரசன் வழங்கிய தேவதானத்தின் எல்லைகள் பற்றிய விவரங்கள் *ஸ்ரீ தக்ஷிண கைலாச புராணத்திலே* - சாசன மரபுகளுக்கமையவே சொல்லப்படுகின்றன. ஆனால், அவை தனிப்பாடலிற் பெரிதும் விகாரமாகி விடுகின்றன. அதில் அவற்றின் எல்லைகள் மேற்கில் முன்னேஸ்வரம் வரையிலும், கிழக்கிலே வங்காளம் வரையிலும் பரந்துவிடுகின்றன. இவ்விடயம் தொடர்பாகத் தனிப்பாடல் மரபு வழியாக முன் சொல்லப்பட்டு வந்த விவரங்களை முற்றிலும் மாற்றிவிடுகின்றது.

வேறு பிரதானமான விடயங்கள் தொடர்பாகத் தனிப்பாடல் சில ஆதாரபூர்வமான விடயங்களைக் குறிப்பிடுகின்றது போலத் தெரிகின்றது. வருமானங்கள் குறைந்துவிட்டதாலும் ஆலய பரிபால னத்தின் சீர்கேடுகளினாலும் நித்திய கருமங்கள் தடைப்பட்டன என்ற கருத்தினைப் பாடலிலுள்ள சில குறிப்புகள் உணர்த்துகின்றன. கயவாகுராசன் நித்திய கருமங்களை நடத்துவதற்கு 1,100 பொன் காசினைக் கோயிலில் முதலிருப்பாக வைத்தான் என்ற செய்தி சொல்லப்படுகின்றது. அரசனால் வழங்கப்பெற்ற தேவதானம் பற்றிய விபரங்களைப் பொறுத்தமட்டிலே முரண்பாடு காணப்படுகின்றது. தம்பலகாமத்திலே 1,350 அமணம் விதைப்புத் தரையான வயல் நிலத்தை அரசன் வழங்கினான் என்று *திரிகோணாசல புராணங்* கூறும். அது ஒரு மிகவும் மிகைபாடான கூற்றென்பது தனிப்பாடலின் குறிப்பினாலே தெளிவாகின்றது. 'சத்த வாரிதி சூழ் தம்பை மாநகரின் அற்புதமுடனே முப்பதவவணம் நெற்பயிர் விளையும் நிலமுமளித்து அற்புதமாக அரன் திருப்பூசை நட்புடனென்றும் நடத்துவீரென்றான்'' என அதில் வருந் தொடர்கள் கவனித்தற்குரியவை. முப்பது அவணம் வயல்நிலத்தைக் கயவாகு கோயிலுக்கு மானியமாக விட்டான் என்ற குறிப்பு மிகைபாடற்ற ஒன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்தில் உபசாரஞ் செய்தற் பொருட்டு நாட்டியக்கலை பயின்றோர் முப்பத்திரண்டு பேரை நியமித்து, அவர்களுக்கு வேண்டிய நிலமானியங்களையும் அரசன் வழங்கினான் என்றுஞ் சொல்லப்படுகின்றது.

**பங்குனித் திருநாள்**

ஆகம முறைப்படி ஆறுகாலப் பூசை, பங்குனித் திங்கள் உத்திர நாளிலே தேர்த் திருவிழா, நித்தியமான தசதானம் என்பவற்றைச் செய்வதற்கான ஏற்பாடுகளையும் கயவாகுராசன் செய்தான். இவற்றைக் குறித்து *ஸ்ரீ தக்ஷிண கைலாசபுராணம்* மேல்வருமாறு வர்ணிக்கின்றது :

ஆகம நூல் நெறிமுறையே உதயம் உச்சி
அத்தமயம் ஆமம் அபரம் அத்தயாமம்
ஓசைதரும் நாற்குலமும் இனிமை கூர
உவமையிலா அரன் தனக்கும் உவகைசேர

மாகவளப் புழைப் பணைக்கை முக்கணால்
வாய் மதகளிற்றை முன்பூசை வழுத்தி - அந்த
நாகநதி மதிமுடித்த கயிலை நாதர்
நயந்த சிவார்ச்சனை நியதி நடத்துவித்தான்.

நடன விதம்தரும் பாத நளினத்தாற்கு
நமனை உதைத்து எமையாள நயந்த நீலக்
கொடி இடது புறமாகப் படரும் மேனிக்
கோணமலை நாதருக்கும் கொண்டல் போலும்

கடக லுழிக் கரிமுகன் முன்போகக் காளக்
கடல் ஒலிப்ப பங்குனி உத்திரநாள் கன்னி
மடமகளிர் கவரியிட மறையோர் வாழ்த்த
வயங்கு திருநாள் உலகம் வாழச் செய்தான்.

சேர்ந்த நதித் துளிமுடி மேற்சேர்த்து மீண்டு
சிவன் அடியை வணங்கி உள்ளம் தியானித்து -அன்று
தீர்த்தம் மறுத்து எழுமுகிலும் கனகம் பெய்ப்பு
நிலைமையெனத் தசதானம் நிதமுஞ் செய்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பார்த்த திருவருட் பார்வை எம்பிரானைப்*
*பணித்து விடை கொண்டு அனுரைப் - பதியுள் புக்கான்*
*பூத்தரணி நிருபரெல்லாம் அதனைக் கேட்டுப்*
*பூசனை வெவ்வேறு உபயம் புரிந்து வாழ்ந்தார்.* [20]

## ஆலயத் தொழும்புகளும் குடியிருப்புகளும்

குளக்கோட்டன் முன்பு செய்தவாறு கயவாகுராசனும் இந்தியாவிலிருந்தும் பல குடிகளை அழைத்து வந்து, அவர்களைத் திருகோணமலையிலே குடியிருத்தி, ஆலயத் தொழும்புகளைச் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்தான் என்று சொல்லப்படுகின்றது. *கோணேசர் கல்வெட்டிலே* மேல்வரும் பகுதி உள்ளது:

**குடிமைவரவு**

'இரவிகுலமதனில் வரு கயவாகு மகாராசன் சோழவள நாட்டால் அழைப்பித்தது:- கொல்லன், குயவன், நாவிதன், ஏகாலி, வள்ளுவன் இவர்களிலைந்துகுடி இவர்களுக்குக் குடிநிலம், விளைபுலம் முதலான சருவகாரியமுங் கொடுத்துக் கோணேசர் கோயிற் குடிமையென்று திட்டம் பண்ணி அவரவர்க்கடுத்த வஸ்திர பூஷணங்களுங் கொடுத்து அரசனுரைத்த கட்டளை:- வன்னிபம், இருபாகை முதன்மை, தானம், வரிப்பத்து இவர்கள் சொன்ன கட்டளைப்படி நீங்கள் நடக்க வேண்டியது. இந்தக் குடிமைகள் சோழநாட்டிற் காராளர் குடிமையானதினால் நீங்கள் சகலரும் மானமாய் வைத்து நடத்த வேண்டியது. இது கனகசுந்தரப் பெருமாள் பத்ததியில் பதிப்பித்து முறையாக நடக்க வேண்டியது.''[21]

கோயிலுடன் பந்தமாகி, அதன் காரணமாகச் சீவிதமான நிலங்களைப் பெற்றிருந்த குடிகள் சிலவற்றினைப் பற்றிய ஐதிகமொன்று குடிமைவரவு என்ற கோணேசர் கல்வெட்டின் பகுதிக்கு ஆதாரமாயிருந்திருந்தல் கூடும். அதிலே விபரிக்கப்படும், குடிகள் சோழ நாட்டால் வந்தவை என்றுஞ் சொல்லப்படுகின்றது.

கோணேசர் கல்வெட்டிலே மாணிக்கம் வரவு என்னும் பகுதியில் 'அனுராசபுரியிற் கயவாகு மகாராசன் கோணேசர் கோயிலுக்கும் இருபாகை முதன்மைக்கு மெந்தக்காலத்துக்குஞ் செய் தொழும்பு திட்டம் பண்ணியவகை'' என்றவொரு பகுதியும் உண்டு. அது மேல்வருமாறு உள்ளது:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*'இது அரசனுரையறியவும்*
*இராயர் பெயரும் மாணிக்கங்கள் பெயரும்'*

1. புவிபுகழ் பொன்னவராயன் கொடுத்தது நாகரத்தின மாணிக்கம். தம்பிரான் ஏற்றுக் கொண்டது.

2. செகமது புகழுஞ் சிதம்பரராயன் கொடுத்தது நவரத்தின மாணிக்கம். இராசர் ஏற்றுக் கொண்டது.

3. கருணையங்கடலான் காலிங்கராயன் கொடுத்தது கனகரத்தின மாணிக்கம். வன்னிமையேற்றுக் கொண்டது.

4. மதப்புவியென்னும் மகாகொம்பராயன் கொடுத்தது மரகதரத்தின மாணிக்கம். காராளர் ஏற்றுக் கொண்டது.

5. சித்தசனிகர்க்குந் தென்னவராயன் கொடுத்தது வயிரரத்தின மாணிக்கம். மீகாமனேற்றுக் கொண்டது.

6. திருவுறைமார்பன் செம்பகராயன் கொடுத்தது பளிங்குரத்தின மாணிக்கம். கம்மாளரேற்றுக் கொண்டது.

'இந்த மாணிக்கங்களை யேற்றுக் கொண்ட பேர்கள் தங்கள் மாணிக்கங் களுக்கு ஆடையாபரணமுடைக்கிசைந்த பட்டுவகை, குடிநிலம், விளைபுலம், மாடுகன்று ஆளடிமை கொடுத்து அரன்தொழும்பு செய்ய விடுவது.

எந்தெந்தக் காலத்தும் அந்தந்த வம்சத்து மனிதர் இப்படிச் செலவு கொடுத்து நடத்த வேண்டியது. இப்படிச் செலவு கொடுத்து நடத்தாதவர்கள் வறுமையினாலும் நோயினாலும் இராச நெருக்கத் தினாலும் திரவியமிழந்து வம்சமற்று நரகத்துக்கு மேகுவார்களென்று அரசனாற் கூறப்பட்டது.[22]

இந்தப் பகுதியிலே கோயிலிற் கடமை புரிவதற்கென்று சிலபேரைத் திட்டம் பண்ணியமை பற்றிச் சொல்லப்படுகின்றது. அவர்களின் இயற் பெயர்களன்றி விருதுப் பெயர்களே சொல்லப்படுகின்றன. மாணிக்கம் என்பது அவர்கள் அனைவருக்குமுரிய பட்டப் பெயராகும். மாணிக்கம் என்பது தேவரடியாருக்குரிய பட்டம் என்பது பொலன்னறுவையிலுள்ள வானவன் மாதேவீஸ்வரத்துச் சாசனம் ஒன்றினால் அறியப்படுகின்றது. எனவே, மாணிக்கம் என்னும் பட்டத்தைக் கோணேசர் கோயிலிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமை புரிந்த தேவரடியார்களுக்கும் வழங்குவது வழமை என்பது உணரப்படுகின்றது.

தேவரடியாரை நியமிப்பது தானத்தாரின் பொறுப்பாகும். தானத்தார் குளக்கோட்டனிடமிருந்து இராயப் பட்டம் பெற்றவர்கள் என்பது ஐதிகம். ''இத்தனையும் தானத்தார் செய்வீரென்ன எழு குடிக்கு இராயப்பட்டம் ஈந்தான் வேந்தன்' என்ற குறிப்பு *கோணேசர் கல்வெட்டிற்* காணப்படுகின்றது.[23]

கோயிலிற் கடமை செய்வதற்கென்று தானத்தார் வழங்கிய மாணிக் கங்களை முதன்மை, வன்னிமை முதலானோர் ஒப்புக்கொண்டனர். அவர்களுக்கு வேண்டிய நிலபுலங்களையும் ஆளணிகளையும் உடுபுடவைகளையுங் கொடுத்து அவர்களை ஆதரிப்பது அவர்களின் பொறுப்பாகும். மாணிக்கங்கள் தொடர்பான ஏற்பாடு பற்றிக் *கோணேசர் கல்வெட்டிலே* காணப்படும் விவரங்கள் கோயிற் சாசனங்களில் உள்ளன வற்றைப் போல அமைந்துள்ளன. எனவே அந்நூலிற்கு மூலமான ஏட்டுப் பிரதிகள் சாசன வழக்குகளை அடிப்படையாகக் கொண்டவை என்று கருதுவதற்கு இடமுண்டு.

கஜபாகு மன்னனைப் பற்றி இதுவரை ஆராய்ந்தவற்றின் அடிப்படையிலே மேல்வரும் கருத்துகளை முன்வைக்கலாம். தனது தந்தையான விக்கிரமபாகுவைப் போல அவன் சைவசமயச் சார்புடைய மன்னனாக விளங்கினான் என்பதை மகாவம்சம் மூலமாக அறிகின்றோம். எனினும் அவன் சமரசப் போக்குடைய கொள்கை களைக் கடைப்பிடித்தான். அவன் பௌத்த நிறுவனங்களுக்கும் இந்து சமயச் சார்புடைய நிலையங்களுக்கும் மானியங்களை வழங்கினான் என்பதை அவனுடைய காலத்துச் சாசனங்கள் மூலம் அறிய முடிகின்றது. அவனுடைய அரண்மனையில் வைதிகசமயச் சார்புடைய சடங்குகள் நடத்தப்பட்டன.[24] பிராமணருக்கும், பிரம்மதேயங்களுக்கும் சைவக்கோயில்களுக்கும் அவன் ஆதரவளித்தான்.

அவனுடைய சமயப் பணிகள் பற்றி மகாவம்சத்திலுஞ் சாசனங்க ளிலுங் காணப்படாத பல விவரங்கள் தமிழ் நூல்களில் உள்ளன. அவற்றிலே அவன் சைவசமயத்தைச் சேர்ந்தவன், அச்சமயத்திலே மிகுந்த அபிமானங் கொண்டவன் என்ற கருத்து வலியுறுத்தப்படுகின்றது. திருக்கோணேஸ்வரம் பற்றிய இலக்கிய மரபிலே குளக்கோட்டனுக் குச் சமமான மன்னனாக அவன் போற்றப்படுகின்றான். குளக்கோட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டனின் இயற்பெயர் மரபிலே பேணப்படவில்லை. ஆயினும் கயவாகு என்பவனின் இயற்பெயர் தமிழ் நூல்கள் எல்லாவற்றிலுமே காணப்படுகின்றது. அவனை அனுரைவேந்தன் என்றும் அவை குறிப்பிடுகின்றன. அநுராதபுரம் கைவிடப் பெற்றுப் பல நூற்றாண்டு கள் கழிந்த பின்பும் தென்னிலங்கை வேந்தரை அனுரை மன்னரென்று சொல்வது தமிழ்ச்சாசன வழக்கென்பதும் இங்கு கவனித்தற்குரியதாகும்.

கயவாகு வேந்தனின் திருப்பணிகள் பற்றித் தமிழ் நூல்கள் வெறும் புனைகதைகளைக் கூறவில்லை. குளக்கோட்டனைப் போல அவன் கட்டடத் திருப்பணிகள் புரிந்ததாகச் சொல்லப்படவில்லை. குளக்கோட்டன் புரிந்த பணிகள் கோயிற் புனராக்கம் பற்றியவை. கயவாகு செய்த கருமங்கள் ஆலய சேவைகளின் புனருத்தாரணம் பற்றியவை.

அயல்நாட்டிலிருந்தும் அந்தணரை வரவழைத்து அவர்களுக்கு முதன்மைப் பட்டங் கொடுத்தமை, ஆலய சேவைகளையும் ஆலய தர்மங் களையும் புனருத்தாரணம் பண்ணியமை, கோயிலுக்கு முதலிருப்பாகப் பொன் வழங்கியமை, தேவதானங்களை உருவாக்கியமை போன்ற பொதுவான, வழமையான விடயங்களே அவனைப்பற்றி இந்நூல்களிற் கூறப்படுகின்றன. அவனுடைய சாசனங்களைப் பற்றியுஞ் சொல்லப் படுவதால் அவனைப் பற்றிச் சொல்லப்படும் விபரங்கள் சிலவற்றுக்குச் சாசனங்கள் ஆதாரமாய் அமைந்திருத்தல் கூடும்.

### அடிக்குறிப்புகளும், விளக்கவுரைகளும்

1. S.Paranavitana, ""Kahambiliyava (Kavuduluvava) Slab Inscription of Vikramabahu I", EZ. Vol 5, No. 39, pp.404-408.
2. C.W.Nicholas, ""Civil wars and The Emergence of Parakramabahu The great", University of Ceylon History of Ceylon, Volume I Part II Ed.S.Paranavitana, University Press, Colombo, 1960, p.440.
3. Sirima Kiribamune, "The Royal Consecration in Medieval Sri Lanka: The Problem of Vikramabahu I and Gajabahu II", *The Sri Lanka Journal of South Asian Studies Vol. I,* No.1, June 1976, University of Jaffna, pp.12-32.
4. 'ததா தேஸாந்தரா ராஜகுமாரே பாபதிட்டினோ கஜபாஹு மஹிபாலோ ஆனாபிய ஸகண்டகம் ராஜரட்டம் அகாஸி இதி! ஸூணித்வானோ'' சூளவம்சம் 70:53-54.
5. C.W.Nicholas, ""Civil wars....", UCHC, Vol I, pt.2, p.443.
6. மேலது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. மேலது, ப.448
8. Samgamu-Vihara Rock Inscription, EZ., IV, p.7.
9. C.E.Godakumbura, ""Kapuruvaduoya Pillar-Inscription of Gajabuhu II", EZ, Vol. V, pp.394&400.
10. இச்சாசனத்தின் முற்பகுதியின் வாசகம் மேல்வருமாறு உள்ளது: ''ஸ்வஸ்தி ஸ்ரீ ஜெயபாஹு தெவற்கு யாண்டு 24 ஆவது ஜயங்கொண்ட சலாமேகச் சதுர்வ்வேதி மங்கலத்து இழவுபட்ட வயலும் யத்தாலையும் வல்லபர் பக்கல் நின்றும் வாங்கி ப்ராஹ்மணற்கே தானம் பண்ணினார்.'' ""A Grant to the Brahmins from Kirindagama", *Ceylon Tamil Inscriptions,* Ed.A.Velupillai, Peradeniya, 1971, pp.27-28.
11. A.Velupillai, "Two Inscriptions from Kantalai', *Ceylon Tamil Inscriptions* Part 2 Ed.A.Velupillai, Peradeniya, 1972, pp.37-38.
12. 'கங்காதடாகம் ஆகந்த்வா மஹீபதி ராஜதானிம் கரித்வான நிவஸி ஸோ தஹிம் சுகம்

    ''கங்காதடாகத்திற்குப் (கந்தளாய்) போய், அங்கு இராசதானி அமைத்து, அதிற் சுகமாக மன்னன் வாழ்ந்தான்.' கந்தளாயினை இராசதானியாக அமைந்து, அங்கு கஜபாகு தங்கியிருந்தான் என்று மகாவம்சம் கூறுகின்றமை கவனித்தற்குரியது.
13. திருநகரச் சருக்கத்தில் 91 முதல் 110 வரையான பாடல்கள் கயவாகுராச னைப் பற்றியவை. *தக்ஷிண கைலாச புராணம்* பகுதி II வெளியீடு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 1995, ப. 135-145.
14. கோணேசர் கல்வெட்டு கவிராசவரோதயன் இயற்றியது பதிப்பாசிரியர் பண்டிதர் இ.வடிவேல், வெளியீடு: இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, 1993, ப.99-101, 102-103, 109.
15. கயவாகுப்படலம், பூசனைப்படலம், நைமித்திகப்படலம் ஆகிய மூன்றும் கயவாகுவைப் பற்றியனவாகும். திரிகோணாசல புராணம் யாழ்ப்பாணம் வண்ணைநகர் பரத்துவாசி உயர் திரு.ஆ.சண்முக இரத்தின ஐயரால் 1909 ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்ட நூலின் மறுபதிப்பு, வெளியீடு: இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, 1997, ப.302-351.
16. தக்ஷிண கைலாச புராணம் பகுதி II, திருநகரச்சருக்கம், செய்யுள்கள் 99-101, ப.139-140, கயவாகு பற்றிக் கோணேசர் கல்வெட்டிலுள்ள தனிப்பாடலில் அரசனால் வழங்கப்பெற்ற தேவதானம் பற்றிய விபரங்கள் விகாரமாகியுள்ளன. தேவதான எல்லைகள் அதிலே மேல் வருமாறு மிகைபாடாகக் கூறப்படுகின்றன:

    *''படவர வசைக்கும் பரமர் கோணேசர்க்கு*
    *அடன்மிகு பூசைக் காடகம் போதா*
    *தரமுறு நாடுந் தான் போதாதெனத்*
    *திடமொடு கொடுக்கச் சிந்தையுள் நினைந்து*
    *வரவுறு வடக்கு வருகரம்பகமாந்*
    *திரமுறு மேற்குச் சிறந்த முனீச்சரம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரைபுகழ் தெற்குச் சங்கமக் கண்டி
உரமிகு கிழக்கு உகந்த வங்காளம்
ஏற்றுகை கோணை யிறைவனுக்காமென
நாற்றிசைச் சூலமும் நாலுகால் நாட்டி..."

*கோணேசர் கல்வெட்டு*, வெளியீடு: இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் 1993, ப.100.

17. கயவாகுவைப் பற்றிய பாடலில் இது மேல் வருமாறு வர்ணிக்கப்படுகின்றது:

"இலைகாய் கனிபூ இரணியம் நெல்முதல்
விலைபெறு சரக்கின் மிகுந்த வாதாயம்
பலபொரு ளெதுவும் பத்தினுக் கொன்று
நிலைபெறக் கோணை நிமலர்க் களிப்பீர்
வாய்மையா யிப்படி வழங்குவீராகில்
தீமை வராது இருநிதி சேரும்
தாமே யிதற்குத் தவறிழைப்பார்கள்
ஆமையாய்ப் பிறந்தே அலைகுவர் தாமே
பத்துப் பங்காக்கிப் பாங்குட னெட்டும்
அத்தர் அறைமுதலாகிய இருப்பாம்
மற்றிரு பங்கு மறையோர்க்காகும்."

மேலது.

18. *திரிகோணாசல புராணம்*, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு 1997, ப.342-344. 19. ஸ்ரீ தக்ஷிண கைலாசபுராணம் பகுதி II, 1995 திருநகரச் சருக்கம் செய்யுள்கள் 102, 103, 110.

19. *கோணேசர் கல்வெட்டு* பகுதி II

20. *ஸ்ரீ தக்ஷிண கைலாசபுராணம்*, திருநகரச் சருக்கம், செய்யுள்கள் 102, 103, 110.

21. *கோணேசர் கல்வெட்டு*, 1993, ப.100.

22. மேலது ப.102-3.

23. மேலது ப.54.

24. கஜபாகுவின் முன்னிலையில் இருந்த பிராமண சிரேஷ்டரைப் பற்றி மேல்வருங் குறிப்பு மகாவம்சத்தில் உண்டு:

*தம்மஹீபசம்பட்டோ விப்பஸேட்டோ பி தம்கனே*
*ததேவாவோச வசனம் ஹிதம் மங்களசம்ஹதம்*

"அதே சமயத்திலே அரசனின் சமீபத்தில் நின்ற பிராமணோத்தமர் அதனை ஒப்புக் கொண்டு மங்களமான வசனத்தைச் சொன்னார்." சூளவம்சம் 67:29.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

# காலிங்கராயன் அமைத்த திருக்காமக்கோட்டம்

## மொரதன்கடவலக் கல்வெட்டில் அதிசயமான வரலாற்றுச் செய்திகள்

ஒரு வரலாற்று ஆவணம் என்ற வகையில், மிக அண்மையிலே திருகோணமலை மாவட்டத்தில் மொரதன்கடவல என்னும் ஊரில் அடையாளங்காணப்பட்ட தமிழ்க் கல்வெட்டு மிகுந்த சிறப்புடையது. பல விடயங்களைப் பற்றிய அதிசயமான விபரங்கள் அதில் அடங்கியுள்ளன. அது காலிங்கராயன் என்னும் பிரதானியின் கல்வெட்டு, அவன் சொன்ன வாசகத்தை அதிலே பதிவு செய்துள்ளனர். விபரங்களைக் கூறுமிடத்து அவன் தன்னைக் *குலோத்துங்கசோழ காலிங்கராயனேன் என்றும் எமக்குப் பராப்தமான காலிங்கராயப்பற்று* என்று தனது ஆழ்புலத்தையும் குறிப்பிடுகின்றமை கவனிக்கப்பட வேண்டியது. இக்கல்வெட்டு ஒரு சக்திபீடம் உருவாக்கப்பட்டமை பற்றியது. கல்வெட்டு வாசகத்தின் தொடக்கமான சமஸ்கிருத சுலோகத்திலுள்ள *சக்திபீடாம் கரோத்* என்ற தொடரினால் இது உணரப்படும். *சக்திபீடம்* என்பது அம்மன் கோயில். காலிங்கராயன் அமைப்பித்த சக்திபீடமான திருக்காமக்கோட்டம் பற்றிய விபரங்கள் இக்கல்வெட்டிலே பதிவாகியுள்ளன.

மொரதன்கடவலவிற் கிடைத்த கல்வெட்டு இதுவரை திருகோணமலை மாவட்டத்திற் கிடைத்த தமிழ்க் கல்வெட்டுகளில் முதன்மையானது. அதில் மேல்வரும் விடயங்கள் பற்றிய புதுமையான வரலாற்றுச் செய்திகள் அடங்கியுள்ளன:

1. பொலன்னறுவையில் நெடுங்காலமாக நடைபெற்ற அரசுரிமை போட்டிகளிற் சோழர் ஏற்படுத்திய செல்வாக்கு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. விஜயபாகு என்னும் பெயருடைய காலிங்க மாகன் சோழப்படைகளின் ஆதரவோடு பொலன்னறுவை இராசதானியில் அரச பதவி பெற்றமை,

3. திருகோணமலைப் பிரதேச வரலாறு,

4. திருக்கோணமலையில் அமைந்த திருக்காமக்கோட்டம்.

இந்நான்கு விடயங்களில் இறுதியான இரண்டுமே இங்கு விளக்கப்படுகின்றன. அவை இரண்டும் திருகோணமலைத் தமிழர் வரலாறு, திருக்கோணமலைத் தல வரலாறு என்பன பற்றியவை. முன்னைய இரண்டும் பொலன்னறுவை இராதானியின் வரலாறு பற்றியவை. அவற்றைப் பற்றிய எமது பரிசீலனை வேறோரிடத்தில் இடம்பெறும்.

சக்திபீடம் பற்றிய காலிங்கராயனது கல்வெட்டிலே புறத்தோற்றத்திற் சில குறைபாடுகள் காணப்படுகின்றன. அதன் இடப்புறத்தில் எழுத்துகள் சிலவிடங்களில் மிகத்தெளிவாகத் தெரியவில்லை. ஆயினும் அவற்றிலே சிதைவுகள் ஏற்படவில்லை. ஆனால் எழுத்துகள் மங்கலாகிவிட்டன. வாசகம் எழுதிய பாறைப்பகுதியின் நடுவில் இடம்புறமான பகுதி சற்றுப் பள்ளமாக உள்ளது. அதிலுள்ள எழுத்துகளையும் சற்றுச் சிறியனவாக வெட்டியுள்ளனர். மேலும் அதிலே மழைநீர் மிகுதியாக ஓடியமையால் கல்லில் ஏற்பட்ட அரிப்பினால் எழுத்துகள் தேய்வடைந்துள்ளன.

இந்தக் கல்வெட்டின் புகைப்படப் பிரதிகளைப் பேராசிரியர் புஷ்பரட்ணம் எமக்கும் பேராசிரியர் எ.சுப்பராயலுவுக்கும் வேறு சிலருக்கும் அனுப்பியுள்ளார். அந்தப் படங்களை ஆதாரமாகக் கொண்டு கல்வெட்டின் வாசகத்தை இயலுமானவரையிற் சிறப்பாகச் சுப்பராயலு உருவாக்கினார். புஷ்பரட்ணம் மூலமாக அந்த வாசகம் எமக்குக் கிடைத்தது. டாக்டர் ஜீவராஜ் எமக்கு அனுப்பி வைத்த புகைப்படங்களின் அடிப்படையில் அந்த வாசகத்தைப் பரிசீலனை செய்ய முடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்வெட்டிலுள்ள திருத்தலம்**

கல்வெட்டிலே திருக்காமக்கோட்டம் புதிதாக அமைக்கப்பட்ட திருத்தலம். *ஆதிக்ஷேத்திரமாய் ஸ்வயம்புவுமான* என்ற அடைமொழிகளைப் பெற்றுள்ளது. அடைமொழிகள் திருகோணமலையிலுள்ள ஒரு ஆதியான, பிரபலமான, புகழ்பெற்ற திருத்தலத்திற்கு உரியனவாதல் வேண்டும்.

இச்சாசனம் குறிப்பிடும் தலப்பெயரை நண்பர் சுப்பராயலு திருக்கோணமலை என்று சரியாக அடையாளங்கண்டுள்ளார் என்பது எம்வசமுள்ள புகைப்படப் பிரதிகளின் பரிசீலனை மூலம் தெளிவாகின்றது. ஆனால் இக்கல்வெட்டினைப் பற்றிப் பத்திரிகையொன்றில் வெளிவந்த ஒரு கட்டுரையில் திருக்கோணமலை என்பதற்குப் பதிலாகத் தலப்பெயரை திருக்கோயிலென்று அடையாளங்கண்டுள்ளனர். இலங்கையின் சைவக்கோயில்களின் வரலாற்றைப் பற்றிய ஆவணமென்ற வகையில் இக்கல்வெட்டின் பெறுமானம், அதிலே குறிப்பிடப்படும் தலப்பெயரினைச் சரியாக அடையாளப்படுத்துவதிலே தங்கியுள்ளது. எனவே, தலப்பெயரைச் சரியாக அடையாளப்படுத்துவது ஒரு இன்றியமையாத் தேவையாகின்றது. தலம் பற்றிக் கல்வெட்டிற் சொல்லப்படும் அடைமொழிகள், பெயரை எழுதுவதற்குப் பயன்படுத்தியுள்ள எழுத்துகளின் அடையாளம், அவற்றின் எண்ணிக்கை, தலப்பெயர்களைப் பற்றிய சாசன வழக்கு போன்றவற்றை இங்கு கவனிக்க வேண்டியுள்ளது. நிலாவெளிக் கல்வெட்டின் தலப்பெயர் பற்றிய குறிப்புகளையும் ஒப்பிட்டு நோக்குவது பொருத்தமானது.

பேராசிரியர் சுப்பராயலுவின் வாசகத்திலே தலப்பெயர் தொடர்பான குறிப்பு மேல்வருமாறு அமைந்துள்ளது: ''ஆதிக்ஷேத்திரமாய் ஸ்வயம்புவுமாந திருக்கோ[ணமலை]''. திருக்கோணமலை என்ற பெயரை நீக்கிவிட்டு திருக்கோயில் என்ற பெயராகக் கொள்ளுமிடத்துத் தலம் பற்றிய சாசனக் குறிப்பு பொருளற்றதாகிவிடும். *திருக்கோயில்* என்ற பெயருடைய ஈஸ்வரமெதுவும் திருகோணமலைப் பிரதேசத்தில் இருந்தமைக்கான சான்றில்லை. திருக்கோயில் என்ற சொல் பொதுமையில் சைவ, வைணவ, பௌத்தக் கோயில்களையும் குறிக்கும். ஆயினும் தேவதானங்கள், பள்ளிச்சந்தங்கள் என்பவற்றை வர்ணிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாசனங்கள் மானியங்களைப் பெற்ற கோயில்களின் தலப்பெயரைக் குறிப்பிடுவது வழமை. தானம் பெறும் நிறுவனத்தின் பெயரைக் குறிப்பது அத்தியாவசியமான தேவையாகும்.

தமிழ் மொழி வழக்கில் நிவந்தங்களைப் பெறும் நிறுவனங்களின் இயல்பான பெயரும் தலப்பெயரும் குறிப்பிடப்படும் என்பதற்கு மேல்வரும் சாசனக் குறிப்புகள் இரண்டும் தக்க உதாரணங்களாகும்:

1. ''சாசனம் சாஸ்வதம் (சம்பு?) ஸ்ரீ கோணபர்வதம் திருக்கோணமலை மத்ஸ்யகேஸ்வரமுடைய மகாதேவற்கு நிச்சலழிவுக்கு நிவந்தமாக...''

- நிலாவெளிக் கல்வெட்டு

2. ''...விஜயபாஹூ தேவர்க்கு யாண்டு 42ஆவது கந்தளாயான விஜயராஜ சதுர்வேதிமங்கலத்து தென்கைலாஸமான ஸ்ரீ விஜயராஜ ஈஸ்வரம் உடையார்க்கு... நங்கை சானி தன் பர்த்தாவான யக்ஞீயகிரமவித்தன் மரித்த பின்பு அவனை நோக்கிச் செய்த தர்மமாவது...''

- பளமோட்டைக் கல்வெட்டு

முதலாவது குறிப்பில் நிவந்தங்களைப் பெற்ற கோயிலின் பெயரான மத்ஸ்யகேஸ்வரம் என்பதும் அதன் அமைவிடம் ஸ்ரீகோணபர்வதம் திருக்கோணமலை என்றும் சொல்லப்படுகின்றது. இரண்டாவது சாசனக் குறிப்பில் நங்கைசானி நன்கொடை வழங்கிய ஆலயத்தின் பெயர் தென்கைலாஸமான விஜயராஜ ஈஸ்வரம் என்றும் அது சதுவேதிமங்கலத்தில் உள்ளதென்றும் எழுதப்பட்டுள்ளது.

சாசனமொன்றிலே வழமைப்படி கோயிலின் பெயர் சரியாகக் குறிப்பிடப்படாவிட்டால் அது போலியானது என்ற சிந்தனை ஏற்படுவதற்கும் இடமுண்டு. இங்கு தமிழ்ச் சாசனங்கள் தொடர்பாகப் புரிந்துணர்வுகளின்றி அவ்வாறான கருத்துக்களைச் சொல்வதற்கும் சிலர் தருணம் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

இவ்விடத்திற் கல்வெட்டிலே பதியப்பட்டுள்ள இடப்பெயரையும் அதில் அடங்கிய எழுத்துகளின் எண்ணிக்கையினையும் கவனிப்பது பொருத்தமானது. தலப்பெயரின் முதல் நான்கு எழுத்துகள் ஒருவரியின் இறுதியிலும் எஞ்சியவை அடுத்த வரியின் தொடக்கத்திலும் அமைந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளன. *திருக்கோ* என்ற முதல் நான்கு எழுத்துகளும் மிகத் தெளிவாகத் தெரிகின்றன. அடுத்த வரியிற் காணப்படும் பெயரின் எஞ்சிய எழுத்து கள் மங்கலாகிவிட்டன. அதனால் அவற்றை (ண மலை) என்று அடையாளங்கண்டு அடைப்புக்குறிகளுக்குள் சுப்பராயலு அமைந் துள்ளார்.

டாக்டர் ஜீவராஜ் எமக்கனுப்பியுள்ள புகைப்படங்களோடு பேராசிரியர் சுப்பராயலு உருவாக்கிய சாசனவாசகத்தை ஒப்பிட்டு அவதானிக்க முடிந்தது. உண்மையில் *யுடைய நாயனார்க்கு* என்ற தொடருக்கு முன் நான்கு எழுத்துகளின் அடையாளங்கள் உள்ளன. அவற்றில் முதலாவது எழுத்து எதுவித தயக்கமுமின்றி *ண* என்று அடையாளப்படுத்தக்கூடியது. அதனாலே சாசனம் குறிப்பிடும் தலம் எதுவென்பதும் தெளிவாகின்றது. ண என்பதைத் தொடர்ந்து *மா, ம* என்னும் எழுத்துகள் காணப்படுகின்றன. எனவே நான்காவது எழுத்தை லை என்று கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் உண்டு. இரண்டாவது வரியின் முதல் நான்கு எழுத்துகளையும் பற்றிய எமது அவதானிப் புகளின் அடிப்படையிலே இச்சாசனம் குறிப்பிடும் தலப்பெயர் திருக்கோணமாமலை என்பது உறுதியாகின்றது.

ஏழாம் நூற்றாண்டுக்குரிய திருக்கோணேஸ்வரத் திருப்பதிகத்திலே மாக்கோணத்து உடையாரை *கோணமாமலை அமர்ந்தாரே* எனத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் போற்றுகின்றார். ஏறக்குறைய 550 வருடங்களுக்குப் பின் எழுதப்பட்ட கல்வெட்டிலே தலப்பெயர் திருக்கோணமாமலை என்று மாற்றமின்றி வருவது குறிப்பிடற்குரியது.[3] இந்தத் தலப்பெயரில் எட்டு எழுத்துகள் உள்ளன. மொரதன்கட வலக் கல்வெட்டிலும் தலப்பெயர் எட்டு எடுத்துகளில் அமைந்துள்ளது.

*ஆதியாய் ஸ்வயம்புவுமான* என்ற அடைமொழி திருக்கோணமாமலைக்கன்றி வேறெந்தத் தலத்திற்கும் பொருந்தாது. அதனையொத்த வர்ணனையொன்று திருக்கோணமலை பற்றியதாக நிலாவெளிக் கல்வெட்டிலே காணப்படுகின்றது. அதன் முழுமையான வாசகத்தை ஏறக்குறைய 45 ஆண்டுகளுக்க முன்பு பேராசிரியர் கா.இந்திரபாலா வெளியிட்டுள்ளார். வாசகம் எழுதிய கல்வெட்டின் தலைப்பாகம் உடைப்பின் காரணமாக அழிந்துவிட்டது. அதோடு வாச த்தின் முதல் வரியும் அற்றுப் போய்விட்டது. இரண்டாம் வரியிலுள்ள தொடர்களை *"சாஸனம் சாஸ்வதம் சம்பு (?) ஸ்ரீகோணபர்வதம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*திருக்கோணமலை மத்ஸ்யகேஸ்வரமுடை மஹாதேவற்கு*" என்று இந்திரபாலா படித்துள்ளார்.[4] முற்காலங்களிலே திருகோணமாமலைக் கோயிலின் உடையாரைத் தான்தோன்றியாகக் கொள்ளும் மரபு உண்டென்பதைச் சாசனக் குறிப்பினால் மட்டுமே அறிய முடிகின்றது. திருக்கோணமலைக் கடற்கரைக்கு அண்மையிற் கடலடியிற் படிந்துள்ள அழிபாடுகளிலிருந்து எடுத்து வந்த லிங்க வடிவமொன்றை ஸ்வயம்பு லிங்கமென்று மைக் வில்ஸன் (Mike Wilson) அடையாளப்படுத்தியமை இங்கு கவனித்தற்குரிய ஒன்றாகும்.

மொரதன்கடவலவில் அமைந்திருக்கும் பாறைக் கல்வெட்டுக் குறிப்பிடும் தலம் ஸ்ரீ கோணபர்வதம் திருக்கோணமாமலை தான் என்பதைத் தெளிவுபடுத்திக் கொண்ட பின் அங்கு குலோத்துங்க காலிங்கராயன் புரிந்த திருப்பணிகளை இலகுவாகப் புரிந்துகொள்ள முடிகின்றது.

**காலிங்கராயன் அமைத்த திருக்காமக் கோட்டம்**

திருக்கோணமாமலை மீது மிகுந்த அபிமானங்கொண்ட சோழ மன்னர் அங்கு பல திருப்பணிகள் புரிந்தமை பற்றிய சாசனக்குறிப்புகள் உண்டு.[5] ஈழம் மும்முடி சோழ மண்டலமானதன் விளைவாக அவை நடைபெற்றன. அவற்றைப் பற்றிய விபரங்கள் காலப்போக்கிற் குளக்கோட்டன் கதையிலே கலந்துவிட்டன. புனருத்தாரணமாகிவிட்ட கோணேசர் ஆலயம் மத்ஸ்யகேஸ்வரம் என்ற புதிய பெயருடன் விளங்கியது என்பதை நிலாவெளிக் கல்வெட்டின் மூலம் உணர்ந்து கொள்ள முடிகின்றது. ஏறக்குறைய 200 வருடங்களுக்குப் பின் சோழர் கலைப்பாணியில் ஏற்பட்ட வளர்ச்சியொன்றின் பயனாக மத்ஸ்யகேஸ்வரத்தோடு இணைந்ததாகத் திருக்காமக்கோட்டம் அமைக்கப்பட்டது. திருக்காமக்கோட்டம் என்ற பெயர், இலங்கைச் சாசனங்களில், முதன்முதலாக, அண்மையில் அடையாளங்காணப்பட்ட கல்வெட்டிலே பதிவாகியுள்ளது. பிற்காலத்துக் கல்வெட்டுகளிலும் நூல்களிலும் அந்தப் பெயரைக் காணவில்லை. சிவன்கோயிலுடன் அமைக்கப்படும் அம்மன் கோயிலைத் திருக்காமக்கோட்டம் என்று சொல்வது இலங்கைத் தமிழரின் மொழிவழக்கிலே ஒரு பொது வழமையாகவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பு கவனித்தவாறு மொரதன்கடவலவிலுள்ள கல்வெட்டு சத்திபீடம் பற்றியது. அதனை அமைத்தவன் குலோத்துங்கசோழ காலிங்கராயன் என்னும் பிரதானி. அவன் அதிகாரமும் படைபலமும் மிகுந்த செல்வாக்கும் பெற்றிருந்தவன் என்பதைக் கல்வெட்டு வாசகத்தின் குறிப்புகளால் அறியமுடிகின்றது. அவன் இலங்கையினைக் கைப்பற்றி (ஈழமான மும்முடிசோழ மண்டலமெறிந்து), அங்கு கங்க வம்சத்துக் காலிங்க விஜயபாகு என்பவனை வீராபிஷேகம் பண்ணுவித்து, அவனுக்கு அரச பதவி வழங்கியவன். "கங்கராஜ காலிங்க விஜயபாகு தேவற்கு வீராபிஷேகம் பண்ணுவித்து" என்பது இதனைக் குறிக்கும் சாசனத் தொடர். இவை வேறெங்கும் காணப்படாத விபரங்கள்; அதிசயமானவை. பொலன்னறுவை இராசதானியின் இறுதிக்கால வரலாறு பற்றி வரலாற்றறிஞர்களிடையே பரபரப்பை ஏற்படுத்தக்கூடியவை.

விஜயபாகு என்பது காலிங்க மாகனின் மறுபெயர் என *நிகாய சங்கிரஹய* குறிப்பிடுகின்றனது.[7] காலிங்க மாகன் கங்காகுலத்தவன். அது மாகனைப் பற்றிய விபரங்களைக் கூறும் நூல்களிற் காணமுடியாத அம்சமாகும். காலிங்க குலத்தவனான நிசங்கமல்லனின் (1187-1196) முதன்மைத் தேவியான கல்யாணவதி கங்கவம்சத்தவள், பொலன்னறுவையிற் சில காலம் அரச பதவிபெற்றிருந்தவள். எனவே, மாகனின் படையெடுப்பு பொலன்னறுவை இராசதானியின் அரசுரிமைப் போராட்டங்களோடு தொடர்புடையது என்பது இப்பொழுது தெளிவாகின்றது. பொலன்னறுவையில் நெடுங்காலமாக நிகழ்ந்த அரசுரிமைப் போர்களிலே சோழர் தீர்க்கமான முறையிலே தலையிட்டதன் பயனாகவே காலிங்க மாகன் அரச பதவியைப் பெற முடிந்தது. மூன்றாம் குலோத்துங்க சோழனின் (1178-1218) ஆணைப்படி காலிங்கராயன் பொலன்னறுவையைக் கைப்பற்றிக் காலிங்கமாகனை அரசனாக்கி வீராபிஷேகம் பண்ணுவித்தானென்று அனுமானித்துக் கொள்ள முடிகின்றது.[8]

இராஜராஜன், முதலாம் இராஜேந்திரன், சோழ இலங்கேஸ்வரன் முதலிய சோழ அரசர்களைப் போலக் காலிங்கராயன், சாசனவாசகத்திலே சொல்லப்பட்டவாறு திருக்கோணமலையில் அமைந்த பெருமான் மீது மிகுந்த அபிமானம் கொண்டிருந்தான். கல்வெட்டின் வாசகம் அவனைத் தன்மைநிலையிற் குறிப்பிடுவதால் அது அவன் மொழிந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசகமாகவே அமைந்துள்ளது என்று கருதமுடிகின்றது. எனவே திருத்தலம், திருக்காமக்கோட்டம், அதனைப் பற்றிய நிவந்தங்கள் தொடர்பான விபரங்கள் எல்லாம் அவன் சொன்னவையாகும்.

சக்தி பீடம் அமைக்கப்பட்ட தலம் மிகவும் புராதனமானது, உன்னதமானது என்பதால் அவன் அதனை *ஆதியாய் சுவயம்புவுமான திருக்கோணமாமலை* எனச் சிறப்பித்துக் கூறுகின்றான். அவன் உற்சவ காலங்களிற் கோணைநாதரை மிகுந்த ஆராமையோடும் பணிவுடனும் நிலத்திலே விழுந்து *அஷ்டாங்க நமஸ்காரம் பண்ணும் வழக்கமுடையவன். திருக்கோணமாமலையுடைய நாயனாரை தெண்டன் பண்ணி* எனக் கல்வெட்டு வாசகத்தில் வரும் தொடரினால் இதனை அறியமுடிகின்றது.

காலிங்கராயன் ஆலய வழிபாடுகளைச் செய்யத் தொடங்கிய காலத்தில் அங்கு அம்மன் கோயில் இருக்கவில்லை. *இன்னாயநாற்கு சக்தி பிரதிஷ்டை இல்லாமையில்* அத்தகைய கோயிலை அமைப்பித்தான். திருக்காமக்கேடடத்தை அமைப்பித்து, அங்கு அம்மனின் படிமமொன்றை எழுந்தருளுவித்து, அதனை அக்கோட் டத்திற் பிரதிஷ்டை பண்ணுவித்தான். *திருக்காமக்கோட்ட நாச்சியாரை எழுந்தருளுவித்துத் திருப்பிரதிஷ்டை பண்ணுவித்து* என்பது சாசன வாசகத்திலுள்ள இதனைப் பற்றிய குறிப்பாகும்.[9]

கோயிற் பணிகளையும் வழிபாடுகளையும் புரிவதற்கு வேண்டிய நிவந்தமாகக் காலிங்கராயன் நிலங்களை வழங்கினான். *திருப்படிமாற்று, மண்டபக்கொற்று* என்பவற்றுக்கான நிவந்தமாக நிலங்கள் வழங்கப்பட்டன என்று சொல்லப்படுகின்றது.[10] இவ்விரு சொற்றொடர்களும் இலங்கையிலுள்ள வேறெந்தத் தமிழ்க் கல்வெட் டிலும் காணப்படவில்லை. ஆயினும் அவை தென்னிந்தியத் தமிழ்க் கல்வெட்டுகள் சிலவற்றிலே காணப்படுகின்றன. அவற்றைத் தற்காலிக மாக முறைமாறி வெவ்வேறு காலங்களிற் கோயிற்பணி புரிபவர்கள், வழிபாடு நிகழும் வேளைகளில் மண்டபத்தில் உபசாரங்களைச் செய்பவர்கள் ஆகியோரை அவ்விதமாகக் குறிப்பிட்டனர் எனக் கருதலாம்.

நிவந்தமாக வழங்கிய நிலங்கள் லக்ஷிகாமபுரத்து (நாலூ)ர்களில் உள்ளவை; வேசார் என்னும் வகைக்குரியவை; குடியிருப்புகளும் விளைநிலங்களும் அடங்கியவை. 1153இல் எழுதப்பட்ட மாங்கனாய்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வெட்டில் தெல்வேசார் கிரது, நரது வேசார் என்னும் தொடர் காணப்படுகின்றது.[11] ஒரு வகை நிலப்பிரிவைக் குறிக்கும் பிரதேச மொழி வழக்கான வேசார் என்னும் சொல் காலப்போக்கில் மறைந்து விட்டது. லக்ஷிகாமபுரம் காலிங்கராயப்பற்றின் பிரிவான மானாமத்து நாட்டின் பகுதி என்று இச்சாசனம் குறிப்பிடுகின்றது. நிலப்பிரிவுகளைக் குறிக்கும் இம்மூன்று பெயர்களும் காலப்போக்கில் மறைந்துவிட்டன. இவற்றுள்ள லக்ஷிகாமபுரம், காலிங்கராயப்பற்று என்பன இலங்கையிற் கிடைத்துள் தமிழ்ச் சாசனங்களில் இந்தக் கல்வெட்டில் மட்டுமே காணப்படுகின்றன.

மானாமத்து நாடு, வெல்கவேரம் பற்றிக் குறிப்பிடும், 11ஆம் நூற்றாண்டுக்குரிய கல்வெட்டொன்றிலே குறிப்பிடப்பெற்ற மானாவதிளா நாடு என்ற பெயரின் உருமாறிய வடிவமாகும்.[12] காலிங்கராயன் கல்வெட்டு உருவாக்கப்பட்ட காலத்தில் மானாமத்து நாடு காலிங்கராயப்பற்றின் பிரிவாகும். மானவதிளா நாடு என்பது அபயாஸ்ரய வளநாடு என்னும பிரிவில் அடங்கியிருந்தமை பற்றிக் காலத்தால் முற்பட்ட சாசனக் குறிப்புள்ளமையால் அபயாஸ்ரய வளநாடு காலிங்கராயப்பற்றில் உள்ளடக்கப்பட்டதென்று கருதலாம்.[13]

*எமக்குப் பிராப்தமாய்* வருகின்ற காலிங்கராயப்பற்று என்று காலிங்கராயன் சொல்வதால் அது அவனது ஆட்சிப்புலமாதல் வேண்டும். அவன் மூன்றாங்குலோத்துங்க சோழனிடமிருந்து பதவி பெற்றவன் என்பது குலோத்துங்கசோழ காலிங்கராயன் என்ற அவனது பட்டப்பெயரால் உணரப்படும். மூன்றாங்குலோத் துங்கனின் ஆட்சிக் காலத்தில் இலங்கை மீது இடையிடையே சோழரின் படையெடுப்புகள் நடைபெற்றன. அநுராதபுரம்வரை அவனின் ஆதிக்கம் ஏற்பட்டிருந்ததென்று திருப்புனம் கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது.

இலங்கையிற் காலிங்க மாகன் அரச பதவி பெறுவதற்கு முன்பு சோழர் கிழக்கிலங்கையிற் சில பகுதிகளைக் கைப்பற்றிவிட்டு அங்கு காலிங்கராயனை ஆட்சியதிகாரியாக நியமித்தனர் என்று கருதலாம். அவன் திருகோணமலைப் பிராந்தியத்துப் பிற்காலத்து வன்னிபங்களின் முன்னோடியாகக் கொள்ளத்தக்கவன். *பற்று* என்பது காலப்போக்கில் நிலப்பிரிவுகளைக் குறிக்கும் பெயராகிவிட்டது. *பற்று* என்ற சொல் இங்கு ஆராயப்படும் கல்வெட்டிலே தான் முதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாகக் காணப்படுகின்றது. அது வன்னிபங்களின் ஆள்புலங்களின் பெயராகவும் வழங்கியது. தம்மலகாமம் பற்று,கட்டுக்குளம்பற்று, தென்னமரவடிப் பற்று, மண்முனைப் பற்று என்பன அதற்கான உதாரணங்கள்.

இக்கட்டுரையில் இதுவரை கவனித்த விடயங்களை மேல்வருமாறு சுருக்கமாகத் தொகுத்துக் கூறலாம். மிக அண்மையில் மொரதன் கடவலவிற் கண்டுபிடிக்கப்பட்ட தமிழ்ப் பாறைக்கல்வெட்டு சக்தி பீடமான திருக்காமக்கோட்டம் பற்றியது. அது குலோத்துங்சோழ காலிங்கராயன் என்னும் பிரதானியின் கல்வெட்டு. அது அவனுடைய சொற்படி எழுதப்பட்டுள்ளது. அவனைத் தன்மை நிலையில் (காலிங்கராயனேன், எமக்குப் பிராப்தமாய் வருகிற காலிங்கராயப்பற்று) வைத்தே விபரங்கள் சொல்லப்படுகின்றன. வரிவடிவ அமைப்பு, பதிவாகியுள்ள விபரங்கள் என்பவற்றின் அடிப்படையில் அதனைப் பொலன்னறுவை இராசுதானியில் ஆட்சி புரிந்த காலிங்க மாகனின் ஆட்சியின் (1215-1255) முற்பகுதிக்கு உரியதாகக் கொள்ளலாம்.

ஒரு வரலாற்று ஆவணமென்ற முறையில் அதற்குப் பல சிறப்புகள் உண்டு. பல பிரதானமான விடயங்கள் தொடர்பான அதிசயமான விபரங்கள் அதிற் பதிவாகியுள்ளன. அவை வேறெங்கும் காணப்படாதவை. நெடுங்காலமாகப் பொலன்னறுவை இராதானியில் நடைபெற்ற ஆட்சியுரிமைப் போர்களிற் சோழரின் தலையீடு, விஜயபாகு என்னும் பெயருடைய காலிங்க மாகன் சோழப்படை களின் ஆதரவோடு பொலன்னறுவையில் அரச பதவி பெற்றமை, திருகோணமலைப் பிரதேச வரலாறு, திருக்கோணமாமலையில் அமைந்த திருக்காமக்கோட்டம் என்பன தொடர்பான, மறைந்துபோன சில பிரதானமான வரலாற்றுக் குறிப்புகள் இக்கல்வெட்டின் மூலம் வெளிவருகின்றன. அவற்றுள் மூன்றாம், நான்காம் விடயங்கள் பற்றிய குறிப்புகளை இங்கு ஓரளவு விபரமாக விளக்க முடிந்தது. கல்வெட்டிலே காணப்படும் திருத்தலத்தின் பெயரைச் சரியாக அடையாளம் காண்பது அவசியமாகும். அது திருக்கோணமாமலை என்பதில் எதுவிதமான சந்தேகமுமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடிக்குறிப்புகள்

1. K.Indrapala, "A Tamil Inscription from Nilaveli, Trincomalee District", *James Thevathasan Rutnam Felicitation Volume* ed. Indrapala K., Jaffna Archaeological Society, Jaffna, Pp.164-169; சி.பத்மநாதன், இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள், கொழும்பு, 2005, ப.406.
2. மேலது, ப.407.
3. நிலாவெளிக் கல்வெட்டின் பத்தாவது வரியிற் *சுடர் கோணமாமலை* என்ற தொடர் வருகின்றமை குறிப்பிடற்குரியது. *இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள்,* ப.406.
4. மேலது.
5. சி.பத்மநாதன், *இலங்கையில் இந்து சமயம்,* குமரன் புத்தக இல்லம், கொழும்பு. *இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள்,* கொழும்பு, 206, பக்.101-111.
6. K.A.Nilakanta Sastri, *The Cōḻas,* University of Madras, 1955, p.719.
7. காலிங்க விஜயபாகு என்னும் பெயர் மாகனுக்குரியதென்று *நிகாய சங்கிரஹய, சத்தர்ம ரத்னாகரய* என்னும் நூல்கள் குறிப்பிடும், *Amaradasa Liyanagamage, The Decline of Polonnaruwa and The Rise of Dambadeniya, Published by the Department of Cultural Affairs,* Colombo, 1968, p.83.
8. மானாபரணன் தலைமையிலுள்ள படையினர் இலங்கையின் அரசனாக மாகனை அபிஷேகம் பண்ணினார்கள் என்று *சூளவம்சம்* கூறும். அந்நூலும் மொரதன் கடவலவிலுள்ள கல்வெட்டும் ஒரே நிகழ்ச்சியினையே குறிப்பிடுகின்றன போலத் தெரிகின்றது. குலோத்தசோழ காலிங்கராயன் ஏவினபடியெ மானாபரணன் முதலானோர் மாகனை மன்னனாகப் பொலன்னறுவையில் அபிஷேகம் பண்ணினார்கள் என்று கருதலாம். *சூளவம்சம்,* 40:71-75; The Decline of Polonnaruva.., p.107
9. நாச்சியார் என்ற சொல் நாயனார் என்பதன் பெண்பால் வடிவமாகும். உடையாரை வழமைபோலப் பெயர் குறிப்பிடாது நாயனார் என்று குறிப்பிட்டதனால் அம்மனின் சிறப்புப் பெயரைக் குறிப்பிடாது நாச்சியார் என்று பதிவு செய் துள்ளனர்.
10. பேராசிரியர் சுப்பராயலுவின் தொகுப்பான *தமிழ்க் கல்வெட்டுச்* சொல்லகராதியில் இச்சொறொடர்கள் காணப்படுகின்றன. *தமிழ்க் கல்வெட்டுச் சொல்லகராதி,* சாந்தி சாதனா, சென்னை, இரண்டாம் தொகுதி, 2003, பக்.306, 375.
11. "மிந்தன் கொற்றனேன் கஜபாகு, தேவர் எனக்கு ஜீவிதமாக இட்ட இத்தெல் வேசாரும் கிரது நரது வேசாரும்..." *இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள்,* பக்.331, 443.
12. A. Vellupillai, *Ceylon Tamil Inscriptions,* Part I, 1971, Pp.12-19.
13. மேலது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* இக்கல்வெட்டிலுள்ள சில தொடர்களை விளக்குவதற்க பிரம்மஸ்ரீ மோகன் சர்மா, கலாநிதி க.இரகுபரன், பேராசிரியர் ஸ்ரீ பிரசாந்தன் டாக்டர் த.ஜீவராஜ் ஆகியோரிடமிருந்து ஆலோசனைகள் பெறப்பட்டன. அவர்களுக்கு எமது நன்றிகள் உரித்தானவை.
* புராதனமான சிவன்கோயில்களில், 12ஆம் நூற்றாண்டுவரை, அம்மனுக்குத் தனிக்கோயில் அமைக்கும வழக்கமில்லை. அவ்வாறான அம்மன் கோயில்களிற் காலத்தால் முற்பட்டவை இரண்டாம் இராஜராஜன் அமைப்பித்த அருங்கலை விநோதமான ராஜராஜேஸ்வரத்தில உள்ளன. அங்கு இரண்டு சக்திபீடங்கள் அமைந்துள்ளன. அவற்றிலொன்று தேவநாயகி அம்மன் கோயில். அங்குள்ள அம்மன் கோயில்களில் ஒன்றை மூன்றாங்குலோத்துங்க சோழன் அமைப்பித்தானென்று நீகண்ட சாஸ்திரி கருதுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6

# கோகர்ணத்திற் சோடகங்கன்

திருகோணமலைக் கோட்டையின் ஒரு பகுதியிலே 1945 ஆம் ஆண்டிலே கிடங்கொன்றை வெட்டிய பொழுது இராவணுவத்தினர் சிலாசாசனத் துண்டமொன்றைக் கண்டெடுத்தனர். மகாவிஷ்ணுவின் கற்சிற்பம் ஒன்றும் இலக்குமியின் படிமமும் அதனோடு நிலத்திலே புதைந்து கிடந்தன.[1] சிலாசாசனத்தின் இடப்பக்கத்தில் அலங்கார வேலைப்பாடுகள் உள்ளன. வலப்பக்கத்திற் சாசனம் வெட்டப்பட்டுள்ளது. எழுத்துகள் பொறித்த கல்லின் ஒரு பகுதி வெட்டப்பட்டதால் அது அழிந்தொழிந்து போய்விட்டது.[2]

சிலாசாசனத்தின் வலப்பக்கத்து ஓரத்தில் அரைவட்டமான துண்டமொன்று வெட்டப்பட்டுள்ளது. அதனால் நான்காம், ஐந்தாம் வரிகளிற் கடைசியாகவுள்ள எழுத்துக்கள் அழிந்து விட்டன. அதனால் அவ்வரிகளிலுள்ள இறுதியான சொற்கள் என்னவாயிருந்தன என்று உறுதியாகச் சொல்லமுடியாது. இக்காரணத்தாற் சாசனத்தின் வாசகத்தை முழுமையாகப் பெறமுடியவில்லை. எனவே அதனைப் பற்றிய விளக்கங்களும் சற்றுத் தெளிவற்றனவாகவே அமையும். தவறான விளக்கங்கள் தோன்றுவதற்கும் அது இடமளிக்கும்.

இந்தச் சாசனம் கிரந்த எழுத்துக்களிலும் சமஸ்கிருத மொழியிலும் அமைந்துள்ளது. இராசப்பிரதானி ஒருவன் திருக்கோகர்ணத்திற் செய்த காரியமொன்றை வர்ணிக்கும் சாசன வாக்கியங்களை ஆலயத்து வேதியர்கள் அமைத்துக் கொடுக்க, அவற்றை அங்கிருந்த சிற்பிகள் சிலாலேகஞ் செய்தனரென்று கருதலாம். சாசனத்தின் வாசகத்தைத் தெளிவுபடுத்திக் கொள்வதன் மூலமே அதிலுள்ள விவரங்களைச் செம்மையாகப் புரிந்து கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பரணவிதானவின் வாசகமும் விளக்கமும்**

இச்சாசனத்தின் மைப்படியை ஆராய்ந்த சேனரத் பரணவிதான அதன் வாசகத்தைச் சிலவிளக்கக் குறிப்புகளோடு இலங்கைத் தொல்பொருள் திணைக்களத்து வெளியீடான சாசனத் தொகுதியொன்றில் வெளி யிட்டார்.

நான்கு அடிகளைக் கொண்ட செய்யுளாக இச்சாசனம் அமைந் துள்ளதென்பதும் அது சிரக்தரா அணியில் அமைந்துள்ளதென்பதும் அதன் முதலிரு வரிகள் மட்டுமே சாசனப்பகுதியில் எஞ்சியுள்ளன என்பதும் அவரது கருத்தாகும். இச்சாசனத்தை அவர் மேல்வருமாறு வாசித்து மொழிபெயர்த்துள்ளார்:

1. ஸ்வஸ்தி ஶ்ரீ தேவ: ஶ்ரீ சோ
2. டகங்க க்ஷிதிதல தில
3. காம் ப்ராப்ய லங்காம் அஜ
4. ய்யாம் சாகேப்டே (த) (ச)
5. ம்பு புஷ்பே க்ரிய பவ(டே)ன
6. ரவௌ ஹஸ்தவே மே
7. ஷ லக்நே கோகர்ண்ணே ...

''மங்கலம் பொலிக ! சகாப்தம் சம்புபுஷ்ப வருஷத்தில், இரவி மேடத்தில் நிற்கும் காலத்தில், அத்த நக்ஷத்திரம் (சந்திரனோடு) மேட இலக்கினத்திற் கூடிய வேளையில் மேன்மை பொருந்திய சோடகங்க தேவ(ன்) பூலோக திலகமானதும் வெல்லுதற்கு அரிதானதுமான இலங்கைக்கு வந்து கோகர்ணத்திலே......''[3]

இச்சாசனத்தை விளக்குமிடத்துப் பரணவிதான மேல்வருமாறு எழுது கின்றார்:

''இச்சாசனம் துண்டமாயிருப்பதால் அது என்ன நோக்கத்துடன் எழுதப் பெற்றது என்பதைக் கூறமுடியவில்லை. அதன் எஞ்சியுள்ள பகுதி சோடகங்கதேவ என்னுந் நாமத்து இளவரசன் ஒருவன் இலங்கையில் வந்திறங்கிய நேரகாலத்தைக் குறிப்பிடுகின்றது. சகவருஷமான ஆண்டு சொற்குறிப்பால் உணர்த்தப்படுகின்றது. அதன் முதலெழுத்து அழிந்து விட்டது . ம்பு புஷ்பே என்னும் மூன்று அக்ஷரங்கள் மட்டுமே காணப்படுகின்றன. ஆண்டினைக் குறிக்குஞ் சொற்றொடரை சம்பு புஷ்பே என்று வாசிக்குமிடத்துச் சாசனங் குறிப்பிடும் சகவருஷத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1145 என்று எம்மாற் கொள்ளமுடிகின்றது. எமது ஆவணம் சகவருஷத்தைச் சொல்வதோடு சோடகங்கன் எத்தினத்திலே இலங்கைக்கு வந்தான் என்பதையுஞ் சொல்கின்றது. அன்று சூரியன் மேடராசியில் நின்றது. இலக்கினம் மேடமாயிருந்தது. நக்ஷத்திரம் அத்தமாகும். இத்தகவல்களின் படி சோடகங்கன் கி. பி. 1223 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 14 ஆம் திகதி காலை இலங்கைக்கு வந்தான்.

சாசனங் குறிப்பிடும் காலம் பற்றிய விபரங்கள் கலிங்கமாகன் இலங்கையில் வடக்கிலுள்ள அரைவாசிப் பாகத்திற் கொடுங்கோல் ஆட்சி செலுத்திய காலத்தில் அடங்கிவிடுகின்றன. அவன் சாசன மொன்றை நிறுவியுள்ளதால் ஒரு சொற்ப காலத்துக்காயினும் திருகோணமலைத் துறைமுகத்தைத் தன் கட்டுப்பாட்டில் வைத் திருந்தான் என்றும் அவன் தனது வெற்றியைக் கொண்டாடும் வண்ணமாகச் சாசனம் எழுதப்பட்ட கதவுநிலை வைக்கப்பட்டிருந்த கோயிலுக்குத் தானம் வழங்கினான் என்பதும், இப்பிராந்தியங்கள் 16 ஆம் நூற்றாண்டிலே போர்த்துக்கேயர் வசமாகியதும் அக்கோயில் அழிக்கப்பட்டிருத்தல் கூடும் என்பதும் உணரப்படுகின்றன.''

இச்சிலாலேகமான கதவுநிலைத் துண்டம் அதற்குரிய கோயிலின் தலத்திலே காணப்படுகின்றது என்று கொள்வது நியாயமானதாகும். சாசனங் குறிப்பிடும் கோகர்ணம் என்னும் இடப்பெயர் 13 ஆம் நூற்றாண்டில் நவீன காலத் திருகோணமலைக்கு உரியதென்று கொள்வதும் அத்துணைப் பொருத்தமானதாகும். கோயிலும் அங்கிருந்ததாகும்.''[4]

திருகோணமலைக் கோட்டையிற் கிடைத்த சாசனம் பற்றிப் பரணவிதான கூறுவனவற்றுள் மேல்வரும் கருத்துக்கள் இடம்பெறுகின்றன. (1) அது கோயிற் சாசனம், தான சாசனம்; (2) சோடகங்கன் சகாப்தம் சம்புபுஷ்ப வருஷமான கி. பி. 1223 இல் ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி காலையில் இலங்கையை அடைந்தான்; (3) சாசனத்தைச் சோடகங்கனே நிறுவினான்; (4) சோடகங்கனின் வெற்றியினைக் கொண்டாடும் வண்ணமாக அவன் கோயிலுக்கு வழங்கிய தானங்களைச் சாசனம் பதிவு செய்தது; (5) சிலாலேகமான கதவுநிலைப் பகுதி கோகர்ணத்துச் சிவாலயமான திருக்கோணேஸ்வரத்துக்கு உரியதாகும்.

பரணவிதானவின் கருத்துக்கள் சில பொருத்தமானவை; வேறு சில ஆதாரமற்றவை. பொதுவாக, பரணவிதானவின் வித்துவப் புலமையில் அபிமானமும் விசுவாசமுங் கொண்டவர்களான இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டு அறிஞர் பலரும் இச்சாசனம் பற்றி அவர் கூறிய முடிபுகளை ஆராய்வு நோக்கின்றி ஒப்புக்கொள்ளலாயினர். சோடகங்கனைப் பற்றி ஆராய முற்பட்டவர்களுக்கு அவர் கூறும் விளக்கமும் ஒரு பொறியாக அமைந்துவிட்டது. சமஸ்கிருத மொழிப் பயிற்சியும் சாசன வழக்காறுகளைப் பற்றிய தெளிவும் புரிந்துணர்வும் இல்லாதவர்களை அதிலிருந்து மீட்டுக் கொள்வது இமாலயப் பிரயத்தனமாகிவிடும்.

**சாசனத்தின் அமைப்பும் பொருளும்**

இந்தச் சாசனத்தின் வாசகம் நிறைவு பெறாத வாக்கியமாகும். அது செய்யுள் வடிவமானது. பாட்டியல் மரபுகளுக்கு ஏற்பச் சாசனச் செய்யுள்களில் அணியலங்காரங்கள் காணப்படுவதும் வழமை. சாசனத்தில் எஞ்சியுள்ள பாகத்திலுஞ் சில எழுத்துக்கள் அழிந்துவிட்டன. சோடகங்கன், புஷ்பக்கிரியை, காலம், நேரம் என்பன பற்றிய குறிப்பு, கோகர்ணம் ஆகியனவே தெளிவாகத் தெரிகின்றன.

சாசன வாசகத்தில் எழுவாய் மட்டுமே தெளிவாகத் தெரிகின்றது. செயப்படுபொருள் தெளிவில்லை. பயனிலைப் பகுதி கிடைக்க வில்லை. எனவே சோடகங்கன் புரிந்த ஏதோவொரு செயலைப் பற்றியதாகவே இச்சாசனம் அமைந்தது என்பது மட்டும் உறுதியானது. அவன் என்ன செய்தான்? எங்கு செய்தான்? எப்போது அதனைச் செய்தான்? என்னும் வினாக்கள் இயல்பாகவே எழுகின்றன. இவற்றுள் இரண்டாவது வினாவிற்கான விடை சாசனத்தின் இறுதி வரியிலுள்ள கடைசிச் சொல்லினால் உணரப்படுகின்றது. கோகர்ண்ணே என்ற அச்சொல் கோகர்ணம் என்பதன் இடவேற்றுமை விகாரமாகும். தென்கைலாசமான கோணவரை கோகர்ணம் என்னும் பெயராலும் வழங்கியது என்பது *தக்ஷிண கைலாசபுராணம்* போன்ற நூல்களினால் அறியப்படுகின்றது. கோணேசர் கோயிலுக்குச் சோடகங்கன் வழங்கிய தானங்களைச் சாசனம் பதிவு செய்திருந்ததென்று பரணவிதான கூறியுள்ளமையும் இங்கு குறிப்பிடற்குரியது. அவருக்குப் பின் பதவி பெற்ற தொல்லியலாளர் சிலரைப் போலன்றிப் பரணவிதான இவ்விடயம் தொடர்பாகத் தான் வகித்த பதவிகளுக்குரிய நிதானத்தைக் கடைப்பிடித்தார்.

சாசனத் தொடரை அடிப்படையாகக் கொண்டு நோக்குமிடத்துத்துச் சோடகங்கன் இலங்கையை அடைந்த பின்பு, கோகர்ணத்திலே ஏதோ செய்தான் என்பதே முதலாம் வினாவிற்குரிய விடையாகும். *லங்காம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ப்ராப்ய*, 'இலங்கையை அடைந்து' என்ற தொடரிலுள்ள *ப்ராப்ய* என்ற சொல் *ப்ராப்* என்னும் வினையடியாகத் தோன்றிய வினையெச்சமாகும். *ப்ராப்* என்ற சொல் ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்தை அடைவதை மட்டுமன்றி அதிகாரம், பதவி, போகம், செல்வம் முதலியவற்றை அடைவதையுங் குறிக்கும். *க்ஷிதிதல் திலகாம்ப்ராப்ய லங்காம் அஜய்யாம்* என்ற சாசனத் தொடர் சோடகங்கனைப் பற்றிய அடைமொழியாகும். அவன் வெற்றியாளன் ஒருவன் என்பது இதனால் உணரப்படும்.

அவனுடைய பராக்கிரமத்தைப் புலப்படுத்துவதற்கே இலங்கையினைப் பூலோக திலகம் என்றும் வெல்லுவதற்கு அரிதான பூலோகதிலகம் என்றும் உயர்வு நவிற்சி அணியிற் சாசனம் வர்ணிக் கின்றது.[5] *ப்ராப்ய* என்ற வினையெச்சத்துடன் முடியுந்தொடர் சோடகங்க(ன்) இலங்கையை அடைந்த பின்பு கோகர்ணத்திலே புரிந்த செயலைச் சாசனம் பதிவு செய்திருந்தது என்பதை உணர்த்து கின்றது. எனவே அதிற் சொல்லப்படும் காலம், நேரம் பற்றிய குறிப்புகள் சாசன வாக்கியத்தின் பயனிலையோடு தொடர்புடையன வாகும். அவை திருக்கோகர்ணத்திற் சோடகங்கன் புரிந்த செயலைப் பற்றியனவாதல் வேண்டும். அவை சோடகங்கன் இலங்கையினை அடைந்த காலத்தைப் பற்றியவை என்ற பரணவிதானவின் விளக்கம் ஆதாரமற்றதாகும். அச்சாசனம் ஜயஸ்தம்பமன்று; அது தானசாசனம். பரணவிதானவும் அதை அவ்வாறே புரிந்து கொண்டார் என்பதும் இங்கு கவனித்தற்குரியதாகும்.

## சாசனத்திற் சகாப்தமில்லை

சகாப்தம் பற்றிப் பரணவிதான சொல்லும் கருத்துக்களை ஆராய்வது அவசியமாகின்றது. சாசனத்தின் நான்காவது வரியின் இரண்டாம் சொல்லைச் *சாகேப்தே(த)* என வாசித்து, அது சக வருடத்தைக் குறிக்கும் என்று அவர் கொண்டுள்ளார். அவரது விளக்கம் பொருத்தமற்றதாயின் சோடகங்கன் கி.பி. 1223 க்குச் சமமான சகவருடத்தில் (1145) இலங் கைக்கு வந்தான் என்ற கருத்து ஆதாரமற்றதாகிவிடும்.

சக வருஷத்தைக் குறிக்குஞ் சொல் சாசன வாசகத்தில் எழுதப்பட்டி ருக்குமாயின் அது சகாப்தே (சக + அப்தே - சக வருடத்திலே) என்று அமைந்திருக்க வேண்டும். சாசனத்தை எழுதியவர்கள் ச என்னும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தைச் சா எனத் தவறாக எழுதியிருத்தல் கூடும். அவ்வாறாகிற் சாகாப்தே என்ற வடிவமே சாசனத்தில் இருத்தல் வேண்டும். ஆனால், இங்கு இரண்டாவது எழுத்து மாறுபட்டு கா என்பதற்குப் பதிலாகக் கே என்ற எழுத்தே காணப்படுகிறது.

இச்சாசனத்தில் எழுதப்பட்டுள்ள சொல்லின் இறுதியிற் காணப்படும் எழுத்திலே தகரவர்க்கத்து மெல்லொலிகளில் முதலாவது எழுத்தைக் குறிக்கும் அடையாளம் எதுவும் கல்லிற் காணப்படவில்லை . அதனாற் பரணவிதான சாகேப்தே) என்று அடையாளங் கண்ட சொல்லின் கடைசி எழுத்தினை அடைக்குறிப்பினுள் அமைத்துள்ளார். தாங்கள் குறிப்பிட விரும்பிய சொல்லொன்றின் எழுத்துகள் எல்லாவற்றையும் சாசனத்தை எழுதியவர்கள் பிழையாக எழுதிவிட்டனர் என்று கொள்வது எவ்வகையிலும் பொருந்தாது. சாகேப்(த) என்று பரணவிதான அடையாளங் கண்டுள்ள சொல் உண்மையில் வேறொன்றாதல் வேண்டும். சாசனத்தின் நான்காம் வரியிலுள்ள கடைசிச் சொல் பரணவிதானவினாற் பிழையாக வாசிக்கப் பட்டுள்ளது என்பதே அதனைப் பற்றிச் சொல்லக்கூடிய பொருத்தமான விளக்கமாகும். சாசனத்திற் சகாப்தம் குறிப்பிடப்பெற்றுள்ளது என்று கொள்வதற்கு எந்த விதமான ஆதாரமும் இல்லை. அது சாசனத்தின் வாசகத்திற் காணப்படாத ஒன்று. அது பரணவிதானவின் கற்பனையில் எழுந்தவொன்று. எனவே, சோடகங்கன் சகாப்தம் 1145 இல் இலங்கையினை அடைந்தான் என்ற பரணவிதானவின் கருத்தை ஆதாரமாகக் கொண்டு, அவன் மாகனது காலத்தவன் என்று கொள்வது ஆதாரமற்றது.

பரணவிதான *சாகேப்(த)* எனப் பிழையாக அடையாளங் கண்ட சொல்லைச் சரகேளே என வாசிக்க முடிகின்றது. அது *சரகேளி* என்பதன் வேற்றுமை விகாரமாகும். சரகேளி என்பது சர, கேளி என்பவற்றின் சேர்க்கையாலானது. அவ்விரு சொற்களும் முறையே அம்பு, வேட்டை என்ற கருத்துகளைக் கொண்டவை. செய்யுள் வடிவமாக அமைந்த சாசன வாசகத்திலே போர் என்பதைக் குறிப்பதற்குச் சரகேளி என்ற சொல்லை இலக்கிய நயம் கருதிப் பயன்படுத்தியுள்ளனர். விக்கிரமபாகுவின் (கி.பி. 1111 - 1132) கஹம்பிலியாவக் கல்வெட்டிலுள்ள குறிப்பொன்றும் இந்த விளக்கத்துக்கு ஆதாரமாகின்றது. அதில் அவனைச் *சரகேளி காலஹம்ஸ,* 'அம்பு வேட்டை என்னுந் தடாகத்தில் நீந்தும் அன்னம் போன்றவன்' என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்வு நவிற்சியிற் குறிப்பிட்டுள்ளனர். இத்தொடர் விக்கிரமபாகு போராற்றல் கெண்டவன் என்பதைக் குறிப்பது.[6]

சோடகங்கனைப் பற்றிய சாசனக் குறிப்பிலே காணப்படும் *சரகேளே* என்ற சொல், *க்ஷிதிதல திலகாம் ப்ராப்ய லங்காம் அஜய்யாம்,* 'பூலோக திலகமானதும் வெல்லுதற்கு அரிதானதுமாகிய இலங்கையை அடைந்து', என்ற தொடரின் பின்னால் அமைந்துள்ளமை கவனித்தற்குரியது. சோடகங் கனுடைய போராற்றலைப் புகழ்ந்து பாராட்டும் வண்ணமாகவே சாசனத்தில் இவ்விதமான வர்ணனைகளை உபயோகித்துள்ளனர். சோடகங்கன் ஒரு வெற்றியாளன்; அவன் வெல்லுதற்கு அரிதான இலங்கையை அடைந்தான். போரிலே அடைந்த வெற்றிகளின் விளைவாக அதனை அடைந்தானென்று கருதக்கூடிய வகையில் அவனைப் பற்றிய சாசனக் குறிப்புக்கள் அமைத்துள்ளன.

இதுவரை இங்கு முன்வைக்கப்பட்ட விவரங்களின் அடிப்படையிலே சாசனத்தின் முதல் நான்கு வரிகளின் வாசகத்தையும் அதன் தமிழாக்கத்தையும் மேல்வருமாறு அமைத்துக் கொள்ளலாம்:

1. ஸ்வஸ்தி ஸ்ரீ தேவஹ் ஸ்ரீ சோட
2. கங்கஹ் க்ஷிதிதல தில
3. காம் ப்ராப்ய லங்காம் அஜ
4. ய்யாம் ஸரகேளே

> ''மங்கலம் பொலிக . ஸ்ரீ சோடகங்க தேவன் பூலோக திலகமானதும் வெல்லுதற்கு அரிதானதுமாகிய இலங்கையை அம்பு வேட்டையில் (போரினால்) அடைந்து.''

இத்தகைய சோடகங்க தேவன் கோகர்ணத்திலே ஏதோ கருமமொன்றைச் செய்தான். அதனைப் பற்றியே சாசனம் சிலாலேகஞ் செய்யப்பட்டது. இவ்விடயந் தொடர்பாகப் பரணவிதான கூறுவனவற்றை மீண்டுங் குறிப்பிடுவது அவசியமாகின்றது.

> ''அவன் தனது வெற்றியைக் கொண்டாடும் வண்ணமாகச் சாசனம் எழுதப்பட்ட கதவுநிலை வைக்கப்பட்டிருந்த கோயிலுக்குத் தானம் வழங்கினான் என்பதும், இப்பிராந்தியங்கள் 16ஆம் நூற்றாண்டிற் போர்த்துக்கேயர் வசமாகியதும் அக்கோயில் அழிக்கப்பட்டிருத்தல் கூடும் என்பதும் உணரப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சிலாலேகமான கதவுநிலைத் துண்டம் அதற்குரிய கோயிலின் தலத்திலே காணப்படுகின்றது என்று கொள்வதும் நியாயமானதாகும். சாசனங் குறிப்பிடுங் கோகர்ணம் என்னும் இடப்பெயர் 13 ஆம் நூற்றாண்டில் நவீன காலத் திருகோணமலைக்கு உரியதென்று கொள்வதும் அத்தகைப் பொருத்தமானதாகும். கோயிலும் அங்கிருந்ததாகும்.''[7]

சோடகங்கதேவன் இலங்கையில் ஏதோ வெற்றிகளைப் பெற்று, அவற்றைக் கொண்டாடும் வண்ணமாக, கோகர்ணத்துக் கோயிலுக்குத் தானங்களை வழங்கி, அவற்றைப் பதிவு செய்தற் பொருட்டுச் சாசனத்தை எழுதி, அதனைச் சிலாலேகஞ் செய்வித்தான் என்பது பரணவிதானவின் கருத்தென்பது அவரது குறிப்புகளின் மூலம் தெளிவாகின்றது. இவ்விபரங்களைச் சரியாகப் புரிந்துகொண்ட பரணவிதான சாசனத்திலே கூறப்படும் காலநேரம் பற்றிய குறிப்பை உரிய முறையிற் புரிந்து கொள்ளவில்லை. சாசனம் கோயிற் சாசனம் என்பதால் அதிலே சொல்லப்படும் காலக்குறிப்பு கோயிற் கருமம் ஒன்றைப் பற்றியதாகவே அமைந்திருக்க வேண்டும். கோயிற் சாசனங்களிற் கூறப்படும் காலக் குறிப்புகள் பெரும்பான்மையும் கோயிற் கருமங்கள் பற்றியவை. சோடகங்கனுடைய சாசனமும் கோயிலில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றினைப் பற்றியது என்பதைச் சாசனத்தின் அமைப்பினால் உணர்ந்து கொள்ள முடிகின்றது.

### (ச)ம்பு புஷ்பக் கிரியை

புஷ்பக் கிரியை ஒன்றினைப் பற்றிச் சாசனங் குறிப்பிடுகின்றது. புஷ்பேக்ரிய என்ற சொல்லுக்கு அடைமொழியாகவுள்ள சொல்லில் ... ம்பு என்னும் எழுத்துகள் மட்டுமே உள்ளன. அச்சொல்லின் முதலெழுத்து சாசனத்தின் நான்காவது வரியின் இறுதி எழுத்தாகவிருந்து, கல் வெட்டப்பட்டதன் காரணமாக அது மறைந்துவிட்டது. மறைந்துபோன அந்த எழுத்து சகரமாகவோ அகரமாகவோ அமைந்திருத்தல் வேண்டும். அதனைச் சகரமாகக் கொள்ளுமிடத்து ஐந்தாம் வரியிலுள்ள எழுத்துகளைச் (ச)ம்பு புஷ்பே க்ரிய என்று வாசிக்கலாம்.[8] நான்காவது வரியிலிருந்து மறைந்து போன எழுத்தினை அகரமாகக் கொள்ளின் (அ)ம்பு புஷ்பே க்ரிய என்று அச்சொற்களை வாசிக்கலாம்.

இச்சமயத்திலே பரணவிதான இச்சொற்களை விளக்குமாற்றைக் கவனிப்பது அவசியமானதும் சுவாரஸ்யமானதுமாகும். அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசித்து வெளியிட்ட சாசன வாசகத்திற் *புஷ்பே க்ரிய* என்ற தொடர் காணப்படுகின்றது. ஆயினும் சாசனவாசகத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பிலும் அதனைப் பற்றிய விளக்கத்திலும் அவர் க்ரிய என்னுஞ் சொல்லைக் கருத்திற் கொள்ளாதும் அதனை ஒதுக்கிவிட்டும் சம்பு புஷ்ப என்பதை ஒரு வருஷத்தைக் குறிக்கும் சொல்லாகக் கொண்டார். *சம்பு புஷ்ப* என்பது 1145 என்னும் இலக்கத்தைக் குறிப்பாக உணர்த்தும் வர்ணனையாக அவர் கொள்வார். ஆயினும், இவ் வர்ணனை *க்ரிய* என்னும் தொடரோடு சேர்ந்து வருவதால் அது ஒரு குறிப்பிட்ட வருடத் தையன்றி ஆலயவழிபாட்டில் நடைபெறும் சடங்கொன்றினையே குறிக்கின்றதென்று கொள்வதே பொருத்தமானது.

நான்காவது வரியிலிருந்து மறைந்துபோன எழுத்தினைச் சகரமாகக் கொள்ளுமிடத்து, குறிப்பிட்ட மொழித்தொடர் *சம்புபுஷ்பேக்ரிய* என்று அமைந்திருக்கும். அது சிவனான சம்புவிற்கு மலர்கொண்டு செய்யும் பூசையினைக் குறிக்கும். புஷ்பாபிஷேகம் என்னும் கிரியை ஒன்று கோயில்களில் நடைபெறுவதுண்டு. சயதரனான முதலாம் குலோத்துங்க சோழன் கச்சி ஏகம்பத்திலே புஷ்பாபிஷேகம் செய்தமை பற்றிச் சாச னக் குறிப்புண்டு.[9] மறைந்து போன எழுத்தை அகரமாகக் கொள்ளின் அம்பு புஷ்பே க்ரிய என்று சாசனத் தொடரை வாசிக்கலாம். அது தாமரைமலர் கொண்டு செய்யும் வழிபாடாகும். எனினும் நிலாவெளிக் கல்வெட்டிலே கோணபர்வதம் திருகோணமலை என்ற சொற்களுக்கு முன்னதாகச் சிவபெருமானைக் குறிக்கும் சம்பு என்ற சொல் வருவதாற் சோடகங்க தேவனைக் குறிப்பிடும் சமஸ்கிருத மொழிக் கல்வெட்டு சிவனாகிய சம்புவிற்கு மலர் கொண்டு செய்யப்படுகின்ற பூசையினையே வர்ணிக்கின்றது என்று கொள்வது சாலப் பொருந்தும்.[10]

## சித்திரையில் அத்தத் திருநாள்

> "பூலோக திலகமானதும் வெல்லுதற்கு அரிதானதுமாகிய இலங்கை யைப் போரின் பயனாக அடைந்த சோடகங்க தேவன் கோகர்ணத்தில் ஏதோ செயல் புரிந்தான். அவன் தனது வெற்றியைக் கொண்டாடும் வண்ணமாகச் சாசனம் எழுதப்பட்ட கதவு நிலையிருந்த கோயிலுக்குத் தானம் வழங்கினான் என்பதும்.... உணரப்படுகின்றன"

என்பது பரணவிதானவின் கூற்றாகும்.[11]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் இக்குறிப்புப் பொருத்தமான ஒன்றாகவே காணப்படுகின்றது. இச்சாசனங் குறிப்பிடும் காலம், நேரம் பற்றிய செய்திகள் தலத்துடனோ அங்கு நடைபெறும் உற்சவம் ஒன்றுடனோ தொடர்புடையனவாதல் வேண்டும்.

இச்சாசனம் குறிப்பிடும் வைபவம் மேடத்திற் சூரியன் நிற்குங் காலத்திலும் அத்த நக்ஷத்திரத்திலும் நடைபெற்றது. ஒவ்வொரு வருடத்திலும் சித்திரை மாதத்திலே சூரியன் மேடத்தில் நிற்கும். எனவே அந்நிகழ்ச்சி சித்திரை மாதத்தில் அத்த நக்ஷத்திரத்தில் நடைபெற்ற ஒன்றாகும். (ச)ம்பு புஷ்பக்ரியை, மேடராசி, அத்த நக்ஷத்திரம் ஆகிய எல்லாம் இடவேற்றுமை உருபுடன் வருவதால் காலம், நேரம் என்பன பற்றிச் சாசனத்தில் வருங் குறிப்புகள் சம்பு புஷ்பக் கிரியையோடு தொடர்புடையனவாதல் வேண்டும்.

கோயிற் சாசனங்களிற் காணப்படும் காலம், நேரம் என்பன பற்றிய குறிப்புகள் பெரும்பான்மையும் தானம், உற்சவம் என்பன பற்றியனவாகும். மேல்வரும் சாசனக் குறிப்பு அதற்கான உதாரணங்களாகும்.

1. ஸ்ரீ வீரபாண்டிய தேவற்கு ஆண்டு 14 ஆவது மகர ஞாயற்று அபரபக்ஷத்துப் பஞ்சமியும் ஞாயிற்றுக்கிழமையும் பெற்ற அத்தத்து நாள் உடையார் திருக்கானப்பேருடைய நாயனார் கோயில் ஆதிசண்டேச்சர நாயனார் தேவகன்மிகளுக்கு..... இவ்வனைவோமும் பிடிபாடு பண்ணிக்கு குடுத்த பரிசாவது.......

(*காளையார் கோயிற்* சாசனம்.)

2. ஸ்ரீ சங்கபோதிபர்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ விசயபாகு தேவற்கு ஆண்டு பத்தாவதில் தை மாதம் 20 (ஆம்) தியதி சிவனான சங்கரன் கோயிலுக்குக் கொடுத்த வோவில்.

- திருக்கோயில் கல்வெட்டு

3. மதுரையும் ஈழமும் ....... கொண்டருளிய ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு 26 ஆவது மீன நாயற்று பூர்வபக்ஷத்து சத்தமியும் புதன்கிழமையும் பெற்ற மிருகசீர்ஷத்து நாள் ஜயங்கொண்டசோழ மண்டலத்துக் குன்றத்து கண்ணத்தை குப்பனேன் இம்மண்டலத்து குலோத்துங்க சோழ வளநாட்டு மணிமங்கலத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடையார் தன்மீஸ்வரமுடையார்க்கு வைத்த ஸந்தி விளக்கு இரண்டு.

4. கும்பவியாழத்தில் கொல்லம் 389 தாமாண்டைக் கெதிராமாண்டு மீன ஞாயிறு 18 சென்ற வியாழமாண்ட பூசமுந் தெசமியும் மேடமும் ஆன்று கீழ்ப்பேரூர் ஸ்ரீவீர இராமன் கேரளவர்மா திருவடி பிரதிட்டை பண்ணியருளியது.

இங்கு மேற்கோளாகக் காட்டிய நான்கு சாசனக் குறிப்புகளிலும் காலம், நேரம் என்பன பற்றிய குறிப்புண்டு. அவற்றுள் மூன்று தானம் வழங்கப்பெற்ற சமயத்தினைப் பற்றியவை. நான்காவது சாசனம் சேரர் குலத்து அரசியின் படிமம் ஆலயத்திற் பிரதிட்டை பண்ணப்பெற்ற வைபவம் பற்றியது. எல்லாச் சாசனங்களிலுமுள்ள காலம் பற்றிய குறிப்புகள் கோயில்களோடு தொடர்பான விடயங்களைப் பற்றியவை. இவற்றின் அடிப்படையில் நோக்குமிடத்துத் திருகோணமலைச் சாசனமானது சோடகங்க தேவன் கோகர்ணத்திற் புரிந்த செயலொன்றின் காலம் பற்றிக் குறிப்பிடுகின்றதெனக் கொள்ளலாம். சித்திரை அத்தத் திருநாள் அவனுடைய ஜன்ம நக்ஷத்திரமாதலுங் கூடும்.

### சோழகங்க தேவன்

திருகோணமலைக் கோட்டையிற் கிடைத்த சாசனத்திலே சகாப்தம் என்பது காணப்படவில்லை. அதிற் காணப்படும் காலம் பற்றிய குறிப்பினைச் சகாப்தம் 1145ஆம் வருடத்திற்கு உரியதென்று கொள்வதற்கான ஆதாரமும் இல்லை. எனவே, சோடகங்க தேவன் கி.பி.1223 இல் இலங்கைக்கு வந்தான் என்ற கருத்தினை ஏற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. இந்த நிலையிற் சாசனங் குறிப்பிடும் சோடகங்க தேவனை அடையாளங் காண்பது சிரமமானதன்று.

சோழகங்கன் என்னும் பெயரை வேற்று மொழிகளிலே, குறிப்பாக சமஸ்கிருதத்திலும் தெலுங்கிலும் சோடகங்க என்று எழுதுவது வழக்கம். தமிழ் மொழிக்குச் சிறப்பெழுத்தான ழகரம் அவற்றிலே டகரமாக மாறிவிடுவதால் இந்தத் திரிபு ஏற்படும். பாளி மொழியிலும் இவ்வாறான மாற்றம் ஏற்படும். சோழ (ட) கங்க(ன்) என்னும் பெயருடைய இராசகுமாரரும் இராசப்பிரதானிகளும் பலர் தமிழகத்திலும் கலிங்க தேசத்திலும் இலங்கையிலும் இருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோட (ள) கங்க என்னும் பெயருடைய மூவரைப் பற்றி *மகாவம்சம்* குறிப்பிடுகின்றது. அவர்களில் இருவர் கலிங்க தேசத் தொடர்புடைய இராசகுமாரர். மற்றொருவனான சோழகங்க தேவன் பாண்டியரின் பிரதானிகளில் ஒருவன்.

கஜபாகுவின் (1132 - 1153) ஆட்சிக் காலத்திலே சோடகங்க குமாரன் என்னும் இளவரசன் ஒருவன் பொலன்னறுவையில் இருந்தான்.[12] அவன் கோகர்ணத்துடன் தொடர்பு கொண்டிருந்தமைக்கான சான்றெதுவுங் கிடைக்கவில்லை. பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதியிற் சோடகங்கன் என்னும் ஒருவன் பொலன்னறுவை அரண்மனையில் இருந்தான். அவன் நிசங்கமல்லனின் மருமகனாவான். அவன் விக்கிரமபாகு என்பவனைக் கொன்று விட்டு அரசபதவியைக் கைப்பற்றினான்.[13] அவனது பெயர் பொறித்த நாணயங்கள் பெருமளவிற் கிடைத்துள்ளன. அண்மையில் அவனது காலத்துச் செப்பேடு ஒன்றினைக் கண்டெடுத்துள்ளனர். அவன் கோகர்ணத்துடன் தொடர்பு கொண்டிருந்தமைக்கான சான்றெதுவுங் கிடைக்கவில்லை.

சோழகங்க தேவன் என்னுமொருவனைப் பற்றியும் மகாவம்சத்திற் குறிப்புண்டு. அவன் 13 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், முதலாம் புவனேகபாகுவின் ஆட்சியில் (1272 -1283) பாண்டி நாட்டிலிருந்து இலங்கை மீது படையெடுத்துச் சென்றான். காலிங்கராயர், சோளகங்க தேவன் ஆகிய இருவரும் எதிர்கரையிலிருந்தும் படையெடுத்து வந்து இராச்சியத்தைத் தாக்கினார்கள் என்றும், அவர்களின் படையெடுப்பு நடைபெற்ற சமயத்தில் ஆப்ப, தீப, ஹிமியாணக, கதலீவாட முதலான வன்னியர் கிளர்ச்சி புரிந்தனர் என்றுஞ் சொல்லப்படுகின்றது. [14]

*மகாவம்சம்* குறிப்பிடும் சோட(ள) கங்கர் மூவரிற் பாண்டி நாட்டுப் பிரதானியான சோழகங்க தேவனைத் திருகோணமலைக் கோட்டையிற் கிடைத்த சாசனங் குறிப்பிடும் சோடகங்கன் என்று அடையாளங் காணமுடிகின்றது. அதற்கு ஆதாரமாக மூன்று காரணங்கள் உள்ளன. முதலாவது பெயரொற்றுமையாகும். சாசனம் சோடகங்கனைத் *தேவஹ் ஸ்ரீ சோடகங்கஹ்* என்று குறிப்பிடுகின்றது. தேவர் என்பது நிலைமாறிப் பெயர்களின் முன்னொட்டாகவும் வருவதுண்டு. முதலாம் பராக்கிரமபாகுவின் நயினாதீவுச் சாசனத்தில் அரசரின் பெயர் தேவ(ஹ்) பராக்கிரமபுஜ என்று எழுதப்பட்டுள்ளமை கவனித்தற்குரியது. அதே போலச் சோடகங்க தேவஹ் என்னும் பெயரை தேவஹ் ஸ்ரீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோடகங்கஹ் என்று திருகோணமலைக் கோட்டைச் சாசனத்தில் எழுதியுள்ளனர். *மகாவம்சம்* குறிப்பிடும் சோடகங்கர் மூவரில் பாண்டியப் பிரதானியாகிய சோளகங்கனது பெயருடன் மட்டுமே தேவ என்பது பின்னொட்டாக வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இரண்டாவதாகக் கொள்ளக்கூடிய முக்கியமான அம்சம் சோடகங்கன் ஒரு படையெடுப்புக்குத் தலைமை தாங்கியவன் என்பதாகும். சோடகங்கனைச் சாசனம் ஒரு வீரனாகவும் வெற்றியாளனாகவும் வர்ணிக்கின்றது. கஜபாகுவின் காலத்திற் பொலன்னறுவையில் வாழ்ந்த சோடகங்க குமாரனும் நிசங்கமல்லனது மருமகனான சோடகங்கனும் அத்தகைய சிறப்பினைப் பெற்றிருக்கவில்லை.

இலங்கையின் அரசியல் நிலைகள் சோடகங்கனைப் பாண்டியப் பிரதானியென்று அடையாளங் காண்பதற்கு ஏதுவான மூன்றாவது காரணமாகும். சோழகங்க தேவன் பாண்டி நாட்டிலிருந்து படையெடுத்துச் சென்ற காலத்தில் முதலாம் புவனேகபாகு இலங்கை முழுவதிலும் ஆட்சி அதிகாரம் பெற்றிருக்கவில்லை. அங்கு பல வருடங்களாகப் பாண்டியரின் மேலாதிக்கம் ஏற்பட்டிருந்தது.[16] சடையவர்மன் சுந்தரபாண்டியனுடைய ஆட்சியிலே (1251 - 1271) பாண்டியரின் மேலாதிக்கம் இலங்கையின் வடபகுதியிலும் வடகிழக்குப் பகுதியிலும் ஏற்பட்டது. அவன் இலங்கையைக் கைப்பற்றினானென்று அவனது திருப்புட்குழிச் சாசனம் கூறும்.[17] அவனுடைய ஆறாம் ஆண்டு முதல் எழுதப் பெற்ற மெய்க்கீர்த்தியில் ''துலங்கொளி மணியுஞ் சூழிவேழமும் இலங்கை காவலனை இறை கொண்டருளி என்னும் தொடர்கள் வருகின்றன. இவற்றுக்குப் பின்னால் 'வருதிறை ''மறுத்தாங்கவனைக் கருமுகில் வேழங் காலிற் சேர்த்து'' என்னுஞ் சொற்றொடர் சேர்த்துக் கொள்ளப்பட்டது. [18] சுந்தர பாண்டியனின் ஆட்சியிற் பாண்டியர் இலங்கையின் வேந்தன் ஒருவனிட மிருந்து திறை பெற்றார்கள் என்பதும் பின் அவ்வேந்தன் திறை செலுத்த மறுத்த பொழுது அவனைப் போரிலே வென்று ஒடுக்கினார்கள் என்பதும் இவற்றால் உணரப்படும்.

அவ்வேந்தன் சாவகத்திலிருந்தும் இலங்கைக்குச் சென்று, அதன் ஒரு பகுதியைக் கைப்பற்றி, அங்கு அரசு புரிந்தவன் என்பதும் சுந்தர பாண்டியனுடைய துணையரசனாகிய வீரபாண்டியனின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாசனங்கள் மூலம் தெளிவாகின்றன.[19] 'ஈழமும் சோணாடும் சாவகன் முடியும் முடித்தலையும் கொண்டருளிய ஸ்ரீ வீரபாண்டிய தேவர்' என்னும் வர்ணனை வீரபாண்டியனின் மெய்க்கீர்த்தியிற் காணப்படுகின்றது. அவன் ஈழம் மீது படையெடுத்துச் சென்று சாவகனைப் போரிலே கொன்றானென்றும் அவனுடைய அரச சின்னங்களையுஞ் செல்வங்களையுங் கவர்ந்து கொண்டு, தந்தை ஆண்ட தேசத்தில் ஆட்சி புரியும் உரிமையினைச் சாவகனுடைய மைந்தனுக்கு வழங்கினா னென்றும் குடுமியான்மலைச் சாசனம் வர்ணிக்கின்றது. வீரபாண்டியன் தானடைந்த வெற்றியின் சின்னமாகத் திரிகூடகிரியிலும் கோணமலையிலும் பாண்டியரின் சின்னமாகிய இணைக்கயல்களின் வடிவத்தைப் பொறித்தான். [20] திருகோணமலைக் கோட்டையின் வாசலில் அமைக்கப்பட்டுள்ள குளக்கோட்டன் கல்வெட்டின் மேலே காணப்படும் மீனுருவங்கள் வீரபாண்டியனாற் பொறிக்கப்பட்டவை. வீரபாண்டியனும் அவனுடைய படைகளும் ஒரு சமயத்திற் கோகர்ணத்திலே தங்கியிருந்தனர் என்றும் அவர்கள் திருகோணமலை வழியாகத் திரும்பிச் சென்றார்கள் என்றும் ஊகித்து உணர்ந்து கொள்ளலாம்.

வீரபாண்டியனிடமிருந்து அரசுரிமையைப் பெற்றுக்கொண்ட சாவக னுடைய மைந்தனுக்கு பின் என்ன நேர்ந்தது என்பது தெரியவில்லை. ஆயினும், இலங்கையின் வடக்கிலும் வடகிழக்கிலுமுள்ள பகுதிகளைப் பாண்டியர் தங்கள் இராச்சியத்தின் ஒரு மண்டலமாக அமைத்துக் கொண்டனர். *மகாவம்சம்* குறிப்பிடும் காலிங்கராயன், சோழகங்க தேவன் என்போரின் தலைமையில் நடைபெற்ற இலங்கை மீதான படையெடுப்புகள் இந்த மாற்றங்களோடு தொடர்புடையன வாதல் வேண்டும். இப்படையெடுப்பினைக் குறித்து முன்பு மேல்வருமாறு எழுதினோம் :

'போதிய சான்றாதாரங்கள் இல்லாத காரணத்தால் இப்பிரதானிகள் இருவரதும் படையெடுப்பின் முக்கியத்துவத்தினை மதிப்பீடு செய்ய முடியவில்லை. அவர்களின் தாக்குதல்களைப் புவனேகபாகு முறியடித்தான் என்று *சூளவம்சம்* கூறுவதால், அவனுக்கு எதிரான இந்தப் படையெடுப்பு அதன் குறிக்கோளைப் பொறுத்தவரையிலே தோல்வியில் முடிந்ததென்று கொள்ளலாம். ஆயினும் அது வேறொரு திசையிலே வெற்றி ஈட்டியது என்று கருதுவதற்கு இடமுண்டு. ஈழம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலான நாடுகள் பலவற்றைக் கைப்பற்றியதாகக் குலசேகரனின் சாசனங்கள் குறிப்பிடுவதால் இலங்கையின் வடபகுதியிலே சாவகர் ஆண்ட இராச்சியத்தைப் பாண்டியர் மீண்டும் கைப்பற்றிவிட்டனர் என்ற கருத்தை முன்வைக்கலாம்.[21]

இவற்றின் அடிப்படையிலே நோக்குமிடத்து *மகாவம்சம்* குறிப்பிடும் சோளகங்க தேவனையே திருகோணமலைக் கோட்டையிற் கிடைத்த சாசனம் தேவ: ஸ்ரீ சோடகங்க: என்று குறிப்பிடுகின்றது எனக் கொள்வது மிகவும் பொருத்தமானது. அதன் காரணமாக இச்சாசனம் ஒரு வரலாற்று மூலம் என்ற வகையில் ஒரு புதிய பரிமாணத்தைப் பெறுகின்றது. அது பாண்டியரின் மேலாதிக்கம் தொடர்பான ஒரு ஆவணமாகிவிடுகின்றது. சாசனத்தின் வரிவடிவங்களைப் பற்றிய பரணவிதானவின் கருத்தும் இதனை உறுதிப்படுத்துகின்றது.

முன்பு, சடையவர்மன் வீரபாண்டியன் ஈழத்து ஆட்சியை, வேந்தன் ஒருவனைப் போரிலே கொன்றுவிட்டு, அவனுடைய மகனுக்கு வழங்கிய பின் கோகர்ண தரிசனம் பண்ணிவிட்டு, திருகோணமலையிலும் திரிகூடத்திலும் தனது வெற்றியின் சின்னமாக மீனுருவங்களைப் பொறித்தான். பின்னர், மாறவர்மன் குலசேகரனது ஆட்சியில், இலங்கையின் மேற் படையெடுத்துச் சென்ற பாண்டியர் பிரதானியான சோழகங்கன் தனக்குக் கிடைத்த வெற்றியினைக் கொண்டாடும் வண்ணமாகக் கோகர்ணத்திற்குச் சென்று, அங்கே ஆலய தரிசனம் பண்ணி, புஷ்பாபிஷேகம் செய்து, தானம் வழங்கிச் சிலாலேகஞ் செய்வித்தான் போலத் தெரிகின்றது. பாண்டியரின் மேலாதிக்கம் ஏற்பட்டிருந்த பகுதிகளிலே திருகோணமலை அவர்களின் பிரதான தளமாக அமைந்திருக்கலாம்.

சோழகங்கனைப் பாண்டியப் பிரதானி ஒருவனென்று கொள்ளுமிடத்து *ஸ்ரீ தக்ஷிண கைலாசபுராணம், கோணேசர் கல்வெட்டு* ஆகியவற்றிலுள்ள கதைகளையுந் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிகின்றது. இவற்றுள் முதலாவது நூலின் பாயிரச் செய்யுளிற் குளக்கோட்டனின் பெயர் சோழகங்கன் என்று சொல்லப்படுகின்றது. குளக்கோட்டன் திருகோணமலை, கட்டுக்குளம் பற்று ஆகியவற்றில் வன்னிபங்களை நியமித்தமை பற்றிக் கோணேசர் கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது. அந்நூலிற் கூறப்படும் வன்னிபங்கள் பாண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுத் தொடர்புடையவர்கள். பூபால கோத்திர வன்னிபங்கள் மதுரை நகரால் வந்தோரின் வம்சாவழியினர் என்பதும் கட்டுக்குளம் வன்னிபங்களின் முன்னோர்கள் திருநெல்வேலிப் பிரதானிகள் என்பதுங் கவனித்தற்குரியனவாகும். குளக்கோட்டன் கதையில் நீண்டவொரு காலப்பகுதியைச் சேர்ந்த வரலாற்றம்சங்கள் கலந்துள்ளன. அதிலே சோழராட்சிக் காலத்துக்குரிய செய்திகளும் பாண்டியரின் மேலாட்சிக் காலத்து நிகழ்ச்சிகள் பற்றிய விபரங்களுங் கலந்து விட்டன. கோணேசர் கல்வெட்டில் வன்னிபங்களின் நியமனங்கள் பற்றிச் சொல்லப்படும் விபரங்கள் பாண்டியருடன் தொடர்புடையன என்று கொள்ளத்தக்கவை.

இச்சமயத்திலே பாண்டிநாட்டு வன்னியராசனான சோழகங்கனைப் பற்றிய விபரங்களைக் கவனித்தல் அவசியமாகின்றது. அவ்விபரங்கள் *உபாஸக ஜனாலங்கார* என்னும் பாளி நூலில் உள்ளன. அதனைக் குணாகரப் பெரும்பள்ளியில் வசித்த சிங்களாசாரியரான பதந்த ஆநந்த தேரர் எழுதினார். குணாகரப் பெரும்பள்ளி ஸ்ரீ வல்லவ மங்கலம் (சிரிவல்லவ நாமேன விஸ்ஸுதே பவரே புரே) என்னும் நகரில் அமைந்திருந்தது. அது பாண்டி நாட்டுச் சோழகங்கன் என்னும் வன்னிராசனால் (பாண்டு பூமண்டலே யோ பூவஞ்ஞோ சாமந்த பூமிபோ ஸச்ச ஸந்தோ நய தக்கோ சோளகங்க இதி விஸ்ஸுதோ) அமைக்கப் பெற்றது.[22] முன்பு தமிழர் (மாகன்) நடத்திய படையெடுப்புகளின் விளைவாக இலங்கைத் தீவினின்றும் வெளியேறிய பிரபலமான தேரர்கள் அதனைப் புகலிடமாகக் கொண்டு வாழ்ந்தனர்.

உபாஸக ஜனாலங்காரவிற் காணப்படும் குறிப்பு பலவகையில் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். பாண்டியரின் சாமந்தருள் ஒருவன் வன்னியர் என்னும் பட்டத்தைப் பெற்றிருந்தான் என்பதையும், அவனுடைய பெயர் சோழகங்கன் என்பதையும் அதன் மூலமாக அறிகின்றோம். எமது சாசனங் குறிப்பிடும் சோழகங்கன் குணாகரப் பெரும்பள்ளியை அமைத்த சோழகங்கனின் வம்சத்தோடு தொடர்புடையவனாதல் கூடும். திருகோணமலை பற்றிய தமிழ் நூல்களிலே குளக்கோட்டனாகிய சோழகங்கன் பிரதானிகளைப் பாண்டி நாட்டிலிருந்து அழைத்து வந்து வன்னிபம் என்னும் பதவியை அவர்களுக்கு வழங்கினான் என்று சொல்லப்படுகின்றது. இப்பொழுது கோணேஸ்வரம் பற்றிய பரிசீலனையில் ஒரு புதிய திருப்பம் புதிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனைகளின் வழியாக ஏற்படுகின்றது. அது வரலாற்றில் ஒரு முன்னேற்றமாகும்.

## அடிக்குறிப்புகளும் விளக்கவுரைகளும்

1. வேலைப்பாடுகளின் அடிப்படையில் அச்சிற்பங்கள் 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தனவாகக் கொள்ளப்படுகின்றன. அவை கோணேஸ்வரத்துத் திருமால் கோட்டத்திலிருந்தன என்று கருதலாம். கோகர்ணத்திலே திருமால் கோட்டம் ஒன்றையும் குளக்கோட்டன் அமைத்திருந்தானென்று கைலாசபுராணங் கூறுவது குறிப்பிடத்தகுந்தது.
2. S. Paranavitana, *Fragmentary Sanskrit Inscription from Trincomalee, Epigraphia Zeylancia,* Vol. V, No.14 Ed. S. Paranavitana, Department of Archaeology, Government Press, pp. 170-173 Colombo, 1955.
3. மேலது.
4. மேலது.
5. இத்தகைய வர்ணனைகள் அரசரின் மெய்க்கீர்த்திகளிலும் பிற சாசனங்களிலும் வருவதுண்டு. ''வேந்தர் கண்டறியா விற்றிண்புரிசைச் சேந்தமங்கலச் செழும்பதி முற்றிப் பல்லவன் நடுங்கப் பல போராடி'' எனச் சடையவர்மன் சுந்தர பாண்டியனுடைய மெய்க்கீர்த்தியில் வருந்தொடர் இதற்கோருதாரணமாகும். S. Krishnaswamy Ayyangar, *South India and Her Muhammadan Invaders.*
6. இச்சாசனத்தின் ஆரம்பப் பகுதி சமஸ்கிருதமொழியில் அமைந்துள்ளது. அரசனைப் பற்றிய புகழ் மொழிகளைக் கொண்டுள்ள அப்பகுதி மேல் வருமாறுள்ளது: ஸ்ரீஸ்வஸ்தி ஜ1ய) வீர (விக்ரமாதி) குண - கணாபரண ரத்நோயசோபித (ப்ரசஸ்த) வங்கா - தரணீபதி - வம்சாவதம்ஸ சமர - சரஹ் - கேளி காலஹம்ஸ கலிமல தால ப்ரபஞ்சன சகல ஜனானுரஞ்ஞன (சத்ரு) ஜன ஸ்ரீ தர்ப்ப பா(ரஹா) ர ப்ரதிந்ருபதி சிரஹ் கடின-குடார ரணமுக வைரவ கரவாளநகர பீமகண்டீரவ சரணாகத வச்ர பஞ்ஜர தரணீ துராதரண திக் - கிசோர பார்வ்வதீபதி தத்தாஸீர் - வீரமகா வ்ருஷ நீதிபாராயண ராஜநாராயண நவரத்ந பூபதி லங்கேஸ்வர ஸ்ரீ விக்கிரமவாகு தேவயன் .....

   Hail! whereas it has been ordered by His Majesty Vikramabāhu, the sovereign lord of Lanka, who is adorned, with a multitude of virtues, such as heroism and valour, as if they were ornaments and jewels; who is the crest of the lineage of the excellent kings of Lanka; who is a black swan sporting in the lake of warfare; who breaks down the palmyra tree of the Kali age's impurities; who causes the whole nation to rejoice; who relieves his enemies of the burden of their prosperity and pride; who is a hand axe for the head of the enemy kings; who is terrible at the battle-front like a lion with fearful claws like swords; who is a diamond cage to those who have come for refuge; who is a youthful (elephant) of the quarters for bearing the burden of the earth; who is a great bull of a hero to whom benediction has been granted by the husband of Pārvati; to whom moral character is the final

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

goal; who is a king like unto Nārāyaṇa (Viṣṇu) and who is the lord of the earth possessing the nine treasures.'S. Paranavitana, 'Kahambiliyäva (Kavudulu - väva) Slab - Inscription of Vikramabahu I' EZ. Vol. V, No.39 pp. 404 - 408.

7. S. Paranavitana, 'Fragmentary Sanskrit Inscription from Trincomalee'. EZ,Vol. V, pp. 171 - 172.

8. இவ்விடயந் தொடர்பான அம்சங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்குச் சமஸ்கிருத மொழி, இலக்கியம் ஆகியவற்றிலே மிகுந்த பாண்டித்தியம் உடையவரான பேராசிரியர் திருமதி மகேஸ்வரி அருள்செல்வம் அவர்களின் ஆலோசனை பெறப்பட்டது. அவர் வழங்கிய சில நுட்பமான கருத்துகள் இக் கட்டுரையில் அடங்கிய வாதங்களை அழுத்தப்படுத்துவதற்கு ஏதுவாயிருந்தன.

9. முதலாங் குலோத்துங்க சோழன், அவனுடைய 12ஆம் ஆண்டிலே, கச்சியேகம் பத்திலே புஷ்பாபிஷேகம் செய்வித்தான். அச்சமயத்திலே இராஜகுருவின் வேண்டுகோளின் பயனாக விருதராஜபயங்கர சதுர்வேதி மங்கலத்தை அமைத்து 108 சதுர்வேதி பட்டர்களுக்குக் கொடுக்குமாறு கட்டளையிட்டான். கர்நாடகத்து மைசூர் மாவட்டத்து அகர(ம்) என்னும் கிராமமும் வேறு ஊர்கள் இரண்டும் இப்பிரமதேயத்தில் அடங்கியிருந்தன.
K.A. Nilakanta Sastri, *The Colas,* Vol. II. pt.2, University of Madras, 1937,p. 538.

10. Karthigesu Indrapala, "A Tamil Slab Inscription From Nilaveli, Trincomalee District", James Thevathasan Rutnam Felicitation Volume Ed. Karthigesu Indrapala, Jaffna Archaeological Society, 1975 (released, July 1980, 158 pages) pp. 64 - 69.

11. S. Paranavitana, 'Fragmentary Sanskrit Inscription from Trincomalee', EZ Vol. V. pp. 171 - 2.

12. சூளவம்சம் 70 : 238.

13. சூளவம்சம் 80 : 29.

14. சூளவம்சம் 90: 32 - 33.

15. *Annual Report on Epigraphy* (ARE) Madras, No. 110 of 1903; *South Indian Inscriptions* Vol. VIII; No. 396.

16. S. Pathmanathan, *The Kingdom of Jaffna,* Part I, Arul, M. Rajendran, Colombo, 1978, pp. 345 - 360.

17. S. Krishnaswamy Ayyangar, *South India and her Muhammadan Invaders,* p. 50.

18. மேலது, p. 217.

19. S. Pathmanathan, The Kingdom of Jaffna, Part I, pp. 150 - 155.

20. *Inscriptions of the Pudukottai State,* (First Edition : 1929), Government Museum, Chennai, 2002, No. 366, p. 236.

21. S. Pathmanathan, *The Kingdom of Jaffna,* Part I, p. 157.

22. இந்தக் குறிப்பு, மிகுந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். பாண்டியரின் சாமந்தனான சோழகங்கன் வன்னியர் என்னும் பட்டத் திற்குரியவன் என்று சொல்லப்படுகின்றது. அவன் லோகுத்தமர் என்ற பௌத்த தேரரின் வேண்டுகோளினால் மூன்று விகாரங்களை அமைத்தானென்றுஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லப்படுகின்றது. அவை அவனது நகரமான ஸ்ரீ வல்லவமங்கலத்தில் அமைக்கப் பெற்றன. குணாகரப்பெரும்பள்ளி அவற்றிலொன்று. சீஹளாச் சாரியரான ஆனந்தர் அதற்கருகிலுள்ள மாளிகையொன்றிலே வாழ்ந்தார். அவருடைய சீடர் புத்தப்பிரியர். அவர் வாலாதிச்ச விகாரம், சூடாமணிவர்ம விகாரம் என்பவற்றில் வாழ்ந்தவர். இத்தகைய செய்திகள் வேறெந்த நூலிலுங் காணப்படுவதில்லை. பதின்மூன்றாம் நூற்றாண்டிலே தமிழகத்திலே பௌத்த நிறுவனங்கள் நிலைபெற்றமைக்கு இக்குறிப்புத் தக்க சான்றாதாரமாகும். அங்குள்ள பௌத்த சமயத் தொடர்புடைய தொல்பொருட் சின்னங்களை விளங்கிக் கொள்வதற்கும் இது பயன்படுகின்றது. புத்தப்பிரியர் சில காலம் தங்கியிருந்த சூளாமணிவர்ம விகாரம் நாகபட்டினத்து ராஜராஜப் பெரும்பள்ளியாதல் வேண்டும்.

*Upasaka Janālaṅkāra* Ed. H. Saddhatissa, Pali Text Society, London, 1965, pp. 356 - 8.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7

# மானியங்களும் கோயில் நிர்வாகமும்

திருக்கோணேஸ்வரம் கோயில் பெருமளவான நிலங்களையும் வைப்பு முதலாகப் பொன், உலோகப் பொருள்கள் ஆபரணங்கள் முதலானவற்றையும் நன்கொடைகளாகப் பெற்றிருந்தது. அவற்றை அரசரும், மிகுந்த பக்தி உடையோரும் யாத்திரையாகப் போய்க் கடவுளை வணங்கியவர்களும் காலாகாலமாக வழங்கினார்கள். முன்னேஸ்வரம், தேநுவரைப் பெருமாள் கோயில் என்பவற்றுக்குரிய அளவிலான வருமானங்களும் வளங்களும் அதற்குக் கிடைத்தன. பாக்கு நீரிணையின் இரு மருங்கிலுமுள்ள நிலங்களிலும் வாழும் மக்கள் கோணேசப் பெருமானைப் போற்றிப் பரவினார்கள். பல்லவர் காலத்திலே தமிழகத்தில் எற்பட்ட சைவ சமய மறுமலர்ச்சி இயக்கத் தலைவர்களில் முதன்மையானவரான திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் பாடிய திருக்கோணேஸ்வரம் பற்றிய தேவாரப் பதிகம் பன்னிரு திருமுறையான சைவப்பேரிலக்கியத்தில் அடங்கியுள்ளது.

சமயம், கலை, கட்டுமானமுறை, கோயில் நிர்வாக முறை ஆகிய துறைகளில் ஈட்டிய உன்னதமான சாதனைகளுக்கு முன்னுதாரணமாக விளங்கிய திருக்கோணேஸ்வரம் தேசத்தாரின் மிகுந்த அபிமானத்தைப் பெற்ற ஒரு நிறுவனமாகும்.

மட்டக்களப்பு தேசத்தவர்கள் தேசத்துக் கோயில்கள் எனப் போற்றும் ஏழு ஆலயங்களில் முதலாவதாகச் சொல்லப்படுவது திருக்கோணேஸ்வரம். இலங்கையின் பல பகுதிகளிலிருந்தும் யாத் திரையாகச் சென்று வழிபட்டவர்களின் மனங்களிற் கோயிலைப் பற்றிய அபிமான உணர்வுகள் ஏற்பட்டன. அவர்கள் தங்கள் ஊர்களுக்குத் திரும்பிச் சென்றதும் கோணேஸ்வரத்திலே தாம் கண்டனவற்றையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டனவற்றையும் சைவாபிமானிகளுக்கு உணர்ச்சிபூர்வமாக விளக்கினார்கள். குளக்கோட்டனைப் பற்றியும் அவனது திருப்பணிகள் பற்றியும் தாம் அறிந்தனவற்றைக் கதைகளாகச் சொன்னார்கள். வெவ்வேறான ஊர்களில் உருவான கோயில்கள் பற்றிய ஐதிகங்களிலே கோணேஸ்வரம் தொடர்பான கதைகள் கலப்புற்றன.

திருக்கோணேஸ்வரம் பற்றிய கல்வெட்டுகள் சிலவற்றில் அதற்குக் கிடைத்த மானியங்கள் தொடர்பான விபரங்கள் உள்ளன. ''கோணபர்வதம் திருகோணமலை மத்ஸ்யகேஸ்வரமுடைய நீலகண்ட மஹாதேவர்க்கு'' நிச்சல் அழிவிற்கு 250 வேலி நிலம் நிவந்தமாக வழங்கப்பட்டமையினை நிலாவெளிக் கல்வெட்டிற் பதிவு செய்துள்ளனர். அந்நிலம் உராகிரிகாமம், கிரிகண்ட கிரிகாமம் என்னும் ஊர்களிலே பரந்து காணப்பட்டது. அதில் நீர் நிலமும் புன்செய் நிலமும் அடங்கியிருந்தன.[1]

கயவாகுராசன் வழங்கிய நிலங்கள் பற்றிய குறிப்புகள் கோணேசர் கல்வெட்டிலே பதிவாகியுள்ளன. அவனது பிரதானிகள் மகாவலிகங்கையின் கழிமுகத்தின் கரையோரமாகக் காடுவெட்டி உருவாக்கிய 1350 அவணம் அளவுடைய வயல் நிலங்களை அரசன் கோயிலுக்குத் தேவதானமாக வழங்கினான். தம்பலகாம ஊரில் 30 அவணம் வயல் நிலத்தை நன்கொடையாக அரசன் கோயிலுக்குக் கொடுத்தான்.[2]

கந்தளாய், தம்பலகாமம் என்பவற்றின் 2400 அவணம் வயல்வெளிகள் கோயிலுக்குரிய தேவதானங்கள் என்று போர்த்துக் கேய வரலாற்றாசிரியரான ஃபெர்ணாஒ கேறோஸ் பாதிரியார் குறிப்பிடுகின்றமையும் கவனித்தற்குரியதாகும்.[3]

இவற்றுக்கு மேலதிகமாகக் கோயிலுக்கு வேறு விதமான வருமானங்களுங் கிடைத்தன. கோயில்கள், பௌத்த, சமணப் பள்ளிகள், பிற பொது நிறுவனங்கள் முதலானவற்றின் தேவைகளுக்கு அரசருக்குரிய இறை கடன்களை வழங்குவது வழமையாகும். அதற்கேற்பக் கயவாகுராசன் விளைநிலங்கள், விளைபொருள்கள், கடல்வளம், கான்வளம், மலைவளம், புதையல்கள் என்பவற்றிலே அடை, ஆயம், தீர்வை என்னும் வகைகள் வழியாகக் கிடைக்கின்ற வரிகளைக் கோயிலுக்கு வழங்கினான் என்று *தக்ஷிணகைலாஸபுராணம்* குறிப்பிடுகின்றது. அவ்வாறான வருமானங்களிற் பத்தினில் எட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோணைநாதருக்கும் மிகுதி அந்தணருக்கும் உரியனவாகுமென்று அரசன் செப்பேடு எழுதிக் கொடுத்தான்.

அரசரும் பிரதானிகளும் அடியார்களும் நன்கொடையாக வழங்கிய பொன், காசு என்பன கோயிலுக்குக் கிடைத்த வேறொரு வகைச் சொத்துகள். கோணசர் கல்வெட்டிற் பதிவாகியுள்ள அவற்றைப் பற்றிய விபரங்களை மேல்வருமாறு நிரற்படுத்தலாம்.[4]

| | கொடையாளர் | தொகை |
|---|---|---|
| 01 | வராமதேவன் | 689 கழஞ்சு பொன்<br>634 கழஞ்சு நிறை கொண்ட ஆபரணங்கள் |
| 02 | குளக்கோட்டன் | 8461 கழஞ்சு பொன்<br>9512 கழஞ்சு நிறை கொண்ட ஆபரணங்கள் |
| 03 | கயவாகு ராசன் | 1100 கழஞ்சு பொன்<br>240 கழஞ்சு நிறை கொண்ட ஆபரணங்கள் |
| 04 | புவனேக கயவாகு | 9284 கழஞ்சு பொன்<br>3924 கழஞ்சு நிறை கொண்ட ஆபரணங்கள் |
| 05 | நளச்சக்கரவர்த்தி | 89211 கழஞ்சு பொன்<br>2948 கழஞ்சு நிறை கொண்ட ஆபரணங்கள் |
| 06 | பரராசசேகரன்<br>செகராசசேகரன் | 729 கழஞ்சு பொன்<br>781 கழஞ்சு நிறை கொண்ட ஆபரணங்கள் |
| 07 | ஆரியச்சக்கரவர்த்தி | 219 கழஞ்சு பொன்<br>120 கழஞ்சு நிறை கொண்ட ஆபரணங்கள் |
| 08 | யாத்திரிகர்களின் பங்களிப்புகள் | 249 கழஞ்சு பொன் |

இங்கு குறிப்பிடப்பெற்ற விடயங்கள் முற்றிலும் ஆதாரமற்றவை என்ற கருதமுடியாது. பெரும்பாலும் அரசர்களே தானங்களைக் கொடுத்துள்ளனர். யாழ்ப்பாண அரசர்களான ஆரியச் சக்கரவர்த்தி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரராசசேகரன், செகராசசேகரன் ஆகியோர் கொடுத்த தானங்கள் ஒப்பீட்டளவிலே குறைவானவை, நம்பகத்தன்மை கொண்டவை. யாத்திரைக்குச் சென்றவர்கள் கொடுத்த நன்கொடைகளும் சொற்பமானவை. ஆனால் நளச்சக்கரவர்த்தி பற்றி ஒரு பிரச்சினை உண்டு. இலங்கையில் ஆட்சி புரிந்த அரசருள் எவருடனும் அவனை அடையாளப்படுத்த முடியாது. அவன் வழங்கிய நன்கொடையின் தொகை பற்றிய விபரமும் மிகைபாடானது. நூலிற்கு மூலமான ஏட்டுப்பிரதிகள் நெடுங்காலத்துக்கு முன் அழிந்துவிட்டபடியால் இவ்விடயம் தொடர்பாக இப்பொழுது எதனையும் உறுதியாகச் சொல்ல முடியாது. கோயிலுக்கு மிகுந்தளவில் நன்கொடை வழங்கிய வட இந்திய அரசனொருவனை நளச்சக்கரவத்தி என்று ஏடு எழுதியவர்கள் குறிப்பிட்டிருத்தல் கூடும்.[5] ஏடுகளில் ஏற்பட்ட சிதைவுகளினாலும் பிழைகள் ஏற்பட்டிருக்கலாம்.

கோயிற்கருமங்களை நாள்தோறும் நடத்துவதற்கும் அதன் உடைமைகளைப் பாதுகாப்பதற்கும் பரிபாலன முறையொன்று உருவாக்கப்பட்டது. குளக்கோட்டன், கயவாகு என்னும் அரசர் இருவ ராலும் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன என்பது நெடுங்காலமாக நிலவிவரும் மரபுவழிக் கதையாகும். திருக்கோணேஸ்வரம் பற்றிய பிரதானமான நூல்களில் அதனைக் காணமுடிகின்றது. கோயிலையும் அதன் சொத்துக்களையும் பரிபாலனம் செய்கின்ற பொறுப்பும் கடமையும் திருகோணமலை வன்னியனாருக்கு உரியது.[6]

நாள்வழிபாடுகள், மாதந்தோறும் நடைபெறும் சிறப்பு விழாக்கள், வருடாந்த உற்சவம் ஆகியனவற்றை முறைப்படி நடத்துவது தானம், வரிப்பத்து என்னும் குழுக்களின் பொறுப்பாகும். அவர்கள் வன்னி இராச்சியத்தின் நிர்வாக முறையோடும் பந்தமானவர்கள் என்பதும் 14ஆம் நூற்றாண்டிற்குரிய கங்குவேலிக் கல்வெட்டின் மூலம் தெளிவாகின்றது.[7] தென்னிந்திய சாசனங்கள் பலவற்றிலே ஸ்தானத்தார் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அவர்கள் கோயில் விவகாரங்களுக்குப் பொறுப்பானவர்கள். தானத்தார் என்னும் பதவி நிலைப் பெயர் ஸ்தானத்தார் என்பதன் தமிழ் வடிவமாகும். அது ஒரு குழுவினரைக் குறிக்கும் பெயர். தென்னிந்தியக் கோயில்களின் பரிபாலனத்திலே ஸ்தானத்தார் அதிகாரம் கொண்டிருந்தனர். கோயில் விவகாரங்களைப் பொறுத்தவரையில் அவர்களே எல்லா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர். ஆயினும் அவர்கள் அரசாங்கத்திற்குக் கட்டுப்பட்டிருந்தனர். அரசாங்க அதிகாரிகள் இடையிடையே கோயிற் கணக்குகளைப் பரிசோதனை செய்வதுண்டு. ஆயினும் திருக்கோணேஸ்வரத்திலே தானத்தார் அதிகாரங்களைக் கொண்டிருக்கவில்லை. அவர்கள் வன்னியனாரின் அதிகாரத்திற்குள் அடங்கியவர்கள். தானத்தார் திருக்கோணேஸ்வரத்திலே கோயிற் சேவைகளை ஒழுங்குபடுத்தும் குழுவினராகவும் பரவணி வழியாகக் கடமை புரியும் ஒரு சமூகப் பிரிவினராகவும் விளங்கினர்.

தானத்தார் குடிகள் திருகோணாமலை நகர்ப்பபுறத்தில் வாழ்ந்தனர். அவர்களின் முன்னோர்களைக் குளக்கோட்டன் மருங்கூரிலிருந்து அழைத்துவந்து குடியிருத்தினான் என்பது மரபுவழிக் கதை. அவர்களுடைய கடமைகளையும் குளக்கோட்டன் நிச்சயித்தான் என்று சொல்லப்படுகின்றது. தானத்தார் முப்பது குடிகளைச் சேர்ந்த வர்கள். அவர்கள் கோயிலுக்குப் பந்தமானவர்கள். அவர்களில் எழு குடியினருக்கு இராயன் என்னும் பட்டம் உரிமையானது. கோயிலுக்கு முதலிருப்பாக வழங்கப்பெற்ற தானங்கள், நாள்தோறும் கிடைக்கின்ற வருமானங்கள், நித்திய நைமித்திக கிரிகைகளுக்கான செலவுகள் என்பன பற்றிய கணக்கு வழக்குகளை எழுதி வைப்பது தானத்தாரின் கடமையாகும்.[9] தானத்தார் குடிகளைச் சேர்ந்த பெண்கள் ஆராதனை வேளைகளில் ஆலாத்தி எடுத்தல், நடனமாடுதல் போன்ற உபசா ரங்களைச் செய்தல் வேண்டும்.

வரிப்பத்தார் என்போர் 30 குடிகளைச் சேர்ந்தவர்கள். அவர்களின் முன்னோர்களைக் குளக்கோட்டன் காரைக்காட்டிலிருந்தும் அழைத்து வந்து குடியிருத்தி, அவர்கள் கோயிலில் செய்ய வேண்டிய கடமைகளைத் திட்டம் பண்ணினான். சுவாமிக்குப் பட்டுச் சார்த்தி அலங்கரித்தல், பூசைக்கு வேண்டிய இலைகளையும் மலர்களையும் கொண்டு வருதல், விளக்கேற்றுதல், பாத்திரங்களை விளக்குதல், நெல்லுக் குற்றுதல் மெழுகுதல் என்பன வரிப்பத்தார் குடிகளுக்குரிய கடமைகளாகும்.[10]

பெண்கள் உபசாரமாக ஆலயத்தில் ஆடும் நடனங்களுக்கு ஒப்பாகப் பாடுதல், வாத்தியங்களை ஒலித்தல், சுற்றுப்பலிக்குப் பாவாடையிடுதல், திருப்பொற் சுண்ணம் இடித்தல், கொடி ஏற்றுதல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறக்குதல், கொடி, குடை, ஆலவட்டம் என்பனவற்றைப் பிடித்தல், சந்தனம் அரைத்தல் முதலானவை வரிப்பத்தாருக்கு உரிய கடமைகள்.

திருகோணமலை வன்னியனார் கட்டுக்குளம் வன்னிபத்தின் ஆதரவோடு திருக்ணேஸ்வரம் தொடர்பான பரிபாலனத்தை நடத்துவது வழமை. கனகசுந்தரப் பெருமாள் என்ற பட்டம் பெற்ற கட்டுக்குளம் பற்று வன்னியனாரிடம் சில பொறுப்புக்கள் இருந்தன. நிலமானியங்கள், கோயிலுக்குரிய முதலிருப்பாக வைத்த சொத்துக்கள், மக்கள் செய்ய வேண்டிய கடமைகள் முதலியன பற்றிய பதிவேடுகள் எல்லாம் கனகசுந்தரப் பெருமாளிடம் இருந்தன.

ஆலய பரிபாலனம் தொடர்பாகவும் குறிப்பாகச் சொத்து டைமைகள், தொழும்புகள் என்பன தொடர்பாகவும் பிரச்சி னைகள் தோன்றுமிடத்து, தேசத்தார் மாநாடு கூடி வருமானங்கள், சொத்துக்கள், செலவினங்கள் என்பன பற்றி ஆராயப்படும். அத்தகைய கூட்டமொன்றிலே நிலாவெளியிலே வாழும் கட்டுக்குளம்பற்று வன்னியனாரும் பங்குபற்றுவது அவசியமானது.

வன்னியனாரை வழமைப்படி சம்பிரதாயபூர்வமாக அழைத்து வரவேண்டும். திருமலை வன்னிபத்தின் சார்பிலே தூதுவர்கள் நிலாவெளிக்குச் சென்று அவரை அழைத்து வர வேண்டும். அவரை நிலபாவாடை விரித்து, நாதஸ்வரம், தவில், தாரை போன்ற வாத் தியங்கள் முழங்கச் சகல மரியாதைகளுடனும் அழைத்துச் செல்வர். கோயிலின் முன்பாக வன்னிபமும் முதன்மையும் கூடிநின்று அவரை வரவேற்பார்கள். மரகதம் பதித்த ஆசனங்களில் இருந்த வண்ணமாக வன்னிபங்கள் இருவரும் மாநாட்டிற்குத் தலைமை தாங்குவர். கோயிலின் முதன்மைக் குருக்களும் அவர்களோடு கூடியிருப்பார். கோயில் மானியங்கள், வரவு செலவுகள் போன்றன பற்றிச் சபை யோர் கேட்கும் கேள்விகளுக்குக் கட்டுக்குளம்பற்று வன்னியனார் விளக்கமளிப்பார். கோயில் பற்றிய விபரங்களைக் குறித்த ஏடுகளின் தொகுதியான பெரியவளமைப் பத்ததியும் செப்புக்கம்பை போட்ட பட்டயங்களும் அவர் வசம் இருந்தன. [11]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடிக்குறிப்புகள்

1. Indrapala, K., "A Tamil Inscription from Nilaveli, Trincomalee District, *James Thevathasan Rutnam Felicitation Volume ed.* Indrapala, K., Jaffna Archaeological Society, Pp.164-169; Gunasingham, S., "A Tamil Slab Inscription at Nilaveli", *Sri Lanka Journal of the Humanities* (New Series, Vol.I (2) 1975, Pp.61-71.
2. *தக்ஷிண கைலாசபுராணம்,* திருநகரச்சருக்கம், செய்யுள்கள் 95-100; *திரிகோணாசல புராணம்* இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, 1997, ப.342-344.
3. Rev.Fr.Fernao de Queyoz, *The Temporal and Spiritual Conquest of Ceylon* trans, S.J.Perera, Book I, Colombo, 1930, p.238.
4. *கோணேசர் கல்வெட்டு* கவிராசவரோதயன் இயற்றியது, பதிப்பாசிரியர் பண்டிதர் இ.வடிவேல், இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, 1993, பக்.109-112.

   ''இவை முதலான கோயிற் காரியங்களுள்ள பத்ததிக் கணக்கும் குளக்கோட்டு மகாராசா வளமைப் பத்ததியும் பெரிய கணக்கும கல்வெட்டும் கோயிற்றொழும்பும் கதைவரலாறும் கோயிலுக்கு முன்னீடும் கட்டுக்குளம் பற்றும் நிலாவெளி நிந்தவூருமாக அந்தக் காலம் அடியேன் குடியிலுள்ளவர்களுக்குக் கிடைத்த படியால் அந்தக் காலம் முன்னோர்கள் எழுதி வைத்த பத்ததிப்படிக்குச் சொன்னதென்று கனகசுந்தரப் பெருமாள் சொன்ன வசனம், *கோணேசர் கல்வெட்டு,* பு.பொ.வைத்தியலிங்க தேசிகர் பதிப்பு, பரித்தித்துறை, 1916, ப.23.
5. S.Pathmanathan, *The Temples of Tirukkōṇēśvaram and Tampalakāmam,* Kumaran Book House, Colombo, 2018, p.42.
6. *கோணேசர் கல்வெட்டு,* 1993, பக்.109-112.
7. சி.பத்மநாதன், *இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள்* தொகுதி II, இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, 2013.
8. *கோணேசர் கல்வெட்டு,* பதிப்பாசிரியர் பண்டிதர் இ.வடிவேல், 1993, பக்.129, 130.
9. மேலது.
10. மேலது, செய்யுள்கள் 5-8, பக்.53-56, சி.பத்மநாதன், *இலங்கையில் இந்து கலாசாரம்* பகுதி I, இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, 2000, பக்.105, 106.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8

## திருகோணமலையின் பகோடா

கோணேஸ்வரம் கோயில் ஒரு தனித்துவமான கட்டட அமைப்பைக் கொண்டது. பெருமளவு நிலங்களும் அதற்கு இருந்தன. இந்தியாவிலிருந்தும் பெருமளவு யாத்திரிகர்கள் வந்து அதனைத் தரிசித்துச் செனறனர். ஃபெர்னாவோ கேரோஸ் என்ற போர்த்துக்கேய வரலாற்றாசிரியர் அதனைப் பற்றி மேல்வருமாறு கூறுவார்:

> ''திரிகோணமலை என்பது மூன்று சிகரங்களைக் கொண்ட மலை என்பதை நினைவுபடுத்துகிறது. பெரிய துறைமுகத்துள் எழுந்துள்ள பாறையில் இலங்கையின் முன்னைய அரசர்கள் மூன்று கோயில்களை நிர்மாணித்திருந்தனர். இரண்டு கடலை நோக்கிய வண்ணமாக மலையில் எழுப்பப்பட்டிருந்தன. உயர்ந்த பகுதியின் நடுவில் அமைந்திருந்தது பிரதான கோயில். இந்தியாவிலிருந்து பல விக்கிரக ஆராதனைக்காரர்கள் கூட்டங்கூட்டமாக கடல் வழியாக வந்து வழிபட்டுச் சென்றனர். திருகோணமலையில் இருந்து மூன்று லீக் தூரத்தில் உள்ள தம்பலகாமம், கந்தளாய் ஆகிய இடங்களில் இரு போகம் விளையும் 10000அவணம் விதைப்பு வயல்கள் கோயிலுக்குச் சொந்தமாக உள்ளன. போர்த்துக்கேயர் கோயிலைத் (பகோடாவை) தரைமட்டமாக்கிய பின்னர் 25 அல்லது 30 விவசாயிகள் மட்டுமே கொட்டியாரத்தில் இருந்து அங்கு வந்து வாழ்கின்றனர்.''[1]

இவற்றிலிருந்து போர்த்துக்கேயரால் இடிக்கப்படுவதற்கு முன்னர் கோயில் பெரும் செல்வாக்கு மிக்கதாக விளங்கியமை தெளிவாகின்றது. இது மாலுமிகளாலும் பக்தர்களாலும் புனிதமானதாகக் கருதப்பட்டு வந்துள்ளது. இந்து சமயப் பாரம்பரியத்தின் மைய இடமாகவும் ராமேஸ்வரம், திருப்பதி, ஜகந்நாத்(ஒடிசா) போன்ற ஆலயங்களுக்கு ஒப்பானதாகவும் கருதப்பட்டதால் அது பெரும் பக்தர் கூட்டத்தைக் கவர்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில் இடிக்கப்பட்ட பின்னர் நெடுங்காலமாக இங்கு வழிபாடுகள் கைவிடப்பட்டிருந்தன. மேலும், கேறோஸ் அங்கு நீண்டு கொண்டிருக்கும் முனையில் மூன்று கோயில்கள் இருந்த காரணத்தாலே திரிகோணமலை என்ற பெயர் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று கூறுகிறார்.

இலங்கையின் நவீன வரலாற்றின் முன்னோடிகளில் ஒருவரான போல் ஈ பீரிஸின் அவதானிப்புகளும் இந்தக் கருத்தை உறுதிசெய்கின்றன. அவர் மேல்வருமாறு கூறுகிறார்.

> 1624இல் கோட்டையில் டி சா தனது நடவடிக்கைகளை ஆரம்பித்தான். கோணேசர் மலையில் தனித்திருந்த இந்த முனையைத் தனது நடவடிக் கைகளுக்காகத் தேர்ந்தெடுத்தான். இந்த முனை நகரத்தோடு ஒரு ஒடுக்கமான பூசந்தியால் இணைக்கப்பட்டிருந்தது. அங்கே மூன்று கோயில்கள் இருந்தன. ஒன்று அடியிலும் அடுத்தது இடைநடுவிலும் மூன்றாவது 400 அடி உயரமான பாறையின் உச்சியிலும் அமைந்திருந்தன. மூன்றாவதாக அமைந்ததுவே எல்லாவற்றிலும் முதன்மையானதாகவும் இலங்கையில் உள்ள ஐந்து ஈஸ்வரங்களில் ஒன்றாகவும் கருதப்பட்டது. இது கோட்டை அமைக்கவும் பீரங்கி நிறுவவும் தடையாக இருந்ததால் இடித்து தரைமட்டமாக்கப்பட்டது. இதனால் அரசன் அலுத்நுவரவிலே செய்து வந்த அபின், துணி வியாபாரமும் முடிவுற்றது.[2]

இந்த விபரங்களிலிருந்து போல் ஈ பீரிஸ் திருகோணமலையில் இருந்த கோயில்கள் போர்த்துக்கேயரால் இடித்து அழிக்கப்பெற்றன என்றும், அவற்றில் ஒன்று புகழ்பெற்ற கோணேஸ்வரம் என்றும் அடையாளம் கண்டுள்ளார் என்பது தெளிவாகிறது.

இவ்விடத்தில் சாள்ஸ் பிரிதமின் அவதானிப்புகளை நினைவுகூர்வது பொருத்தமானது. அவர் மேல்வருமாறு கூறுவார்:

> கிழக்கு மாகாணத்தின் தலைநகரான திருகோணமலை யாழ்ப்பாணப் பட்டணத்தில் இருந்து தென்கிழக்கில் 130 மைல் தொலைவில் உள்ளது. அதன் பக்கத் தோற்றங்கள் நிகரற்ற அழகு கொண்டவை. மலைகளும் அவற்றிலே பெறுமதியான மரங்கள் நிறைந்து பரந்திருக்கும் காடு களும் அதற்குக் கவர்ச்சியான தோற்றத்தை அளிக்கின்றன. தமிழர்கள் இதை மூன்று புனிதமான மலைகள் கொண்டது என்ற அர்த்தத்தில் திரிகோணமலை என்று அழைக்கிறார்கள். புனிதமான கோணமலையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோணநாதருக்கு எழுப்பப்பட்டுள்ள கோயில், முழு இந்தியாவிலும் புகழ்பெற்றிருந்தது. ஆரம்ப வரலாற்றில் முக்கிய இடத்தைத் திரிகோணமலை பெற்றிருந்தது. புகழ்பெற்ற கவிஞரான கவிராஜ வரோதயன் விபரிக்கிற பாரம்பரியமான கதைகளின் படி இக்கோயில் குளக்கோட்டு மகாராஜனால் நிர்மாணிக்கப்பட்டது. குளக்கோட்டு மகாராஜன் மனுநீதி கண்ட சோழனின் மகனாவான். தகப்பனின் இராச்சியத்தின் கிழக்குப் பிரிவுக்குத் தலைமை தாங்கிய அவன் திரிகோணமலையின் தலச்சிறப்பினை உணர்ந்து மலை உச்சியில் கோணேசருக்குக் கோயிலும் கீழே நகரத்தையும் அமைத்தான். அதிலே தனது தந்தையின் இராச்சியத்தில் இருந்தவர்களைக் குடியேற்றி அவர்களில் ஒருவனான தனியுண்ணாப் பூபாலன் என்பவனைத் திரிகோணமலைப் பிராந்தியத்துக்கு ஆளுநராக நியமித்தான். அவனின் வழிவந்தவர்கள் வன்னியராகிப் பல காலமாக இப்பிரதேசத்தை பரிபாலித்தனர்.[3]

போர்த்துக்கேயரின் அதிகாரத்துக்குள் திருகோணமலையின் நிர்வாகம் வந்தபோது அவர்கள் சிவனுக்குக் கட்டப்பட்டிருந்த விசாலமான கோயிலை அழித்து அதன் கற்களைக் கொண்டு ஒரு கோட்டையை கட்டிக் கொண்டனர். தமிழ்மொழியில் இக்கோயிலின் மகிமையையும் செழிப்பையும் எடுத்தியம்பும் ஆவணங்கள் உள்ளன. குளக்கோட்டன் இக்கோயிற் கட்டட வேலையை நிறைவேற்றியபின் உடலை விடுத்து உயிரை மாத்திரம் கொண்டு கருவறைக்குள் புகுந்து இறைவனுடன் இரண்டறக் கலந்தான் என்று அவை கூறுகின்றன.

போர்த்துக்கேய ஆவணங்களில் விபரிக்கப்பட்டிருக்கும் திரிகோணமலை *பகோடா* என்பது கோணேஸ்வரம் கோயில் என்று சாள்ஸ் பிரிதம் கருது கிறார். இதனுடன் இணைந்து உள்ளூர் ஆவணங்களிற் பேசப்படுபவன் குளக்கோட்டன் என்னும் மன்னனாவான். இது தொடர்பாக ஒல்லாந்த ஆளுநர் பான் செண்டன் தனது நாட்குறிப்பில் எழுதியிருக்கும் குறிப்புகள் மிகவும் முக்கியத்துவம் உடையனவாய் உள்ளன. அவர் மேல்வருமாறு எழுதுகிறார்:

மாலையில் மிகவும் பிரபலமான தம்பலகாமம் கோயிலுக்குச் சென்றேன். அக்கோயில் நீளத்தில் கிழக்குமேற்காக அமைந்துள்ளது. பிராமணக் குருக்களும் அவரின் உதவியாளர்களும் என்னை வரவேற்றனர். அவர்கள் நல்லெண்ணத்தின் அடையாளமாக ஒரு எலுமிச்சம்பழமும் சில வெற்றிலைகளையும் எனக்கு வழங்கினர். அவர்கள் எனக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டிய படிமங்களில் ஒன்று போர்த்துக்கேயருக்குப் பயந்து ஆயிரம் கால் மண்டபமுடைய கோயிலிலிருந்து கொண்டு வரப்பட்டதாகும். அது ஆயிரம் வருடங்களுக்கு மேல் பழைமையானது. நான் அதிகார தோரணை இல்லாமல் ஒரு அன்பளிப்பைப் பிரதான குருவுக்கு கொடுக்க முனைந்தபோது அவர் அதனை ஏற்கத் தயங்கினார். நான் வற்புறுத்தியதன் விளைவாகப் பெற்றுக் கொண்டார். என்னைப் பக்தர்கள் இருக்கும் இடத்திற்கு அப்பால் கருவறைக்கு அருகிற் செல்ல அனுமதிக்கவில்லை. ஆயினும் கருவறையிலே பிரகாசமாக விளக்கு எரிந்ததாலும் தொலை நோக்கி உதவியினாலும் பீடமொன்றில் இருந்த இரு விக்கிரகங்களைத் தெளிவாகக் காண முடிந்தது. அவை பட்டுத் துணியால் மூடப்பட்டிருந்த படியால் அவற்றின் முகங்களை மாத்திரமே தெளிவாகக் காண முடிந்தது. அவற்றில் ஒன்று கோணேசருடையது, மற்றது அவரின் துணைவி ஈஸ்வரி அம்மாளுடையது. இச்சிலைகள் இரண்டும் அக்கரையில் இருந்து குளக்கோட்டு மன்னனாற் கொண்டு வரப்பட்டனவாகும். அவன் கந்தளாய்க் குளத்தை கட்டியதோடு ஆயிரம் தூண்கள் தாங்கிய கோயிலையும் நிர்மாணித்தான்.[4]

பூசைகள் முடிந்தவுடன் பிரதம குருக்கள் என்னிடம் வந்து தம்பலகாமம் கண்டி அரசர்களுக்கு கீழே இருந்த காலத்தில் விளைவில் பத்தில் ஒன்று வரியாக அறவிடப்பட்டது என்றும் கூறினார். கம்பெனி முழுமையாக வரியை எடுத்து அதில் அரைப்பாகம் கோயிலுக்கு (Pagoda) வழங்கப்பட்டதென்றும் சொன்னார். மரணங்கள் கூடுதலாகச் சம்பவிக்கின்றன. விளைச்சல் குறைந்து விட்டது என்று சொன்னார். கொம்மாந்தர் இறப்பதற்கு முன்னர் குறைந்தது 600 பறை நெல் கோயிலின் வருடாந்த செலவுகளுக்காகத் தரப்படும் என்ற உறுதி மொழியை வழங்கி இருந்தார். நிதி குறைவாற் கோயிலின் நாளாந்த கருமங்கள் தடைபடக்கூடாது என்று கருதப்பட்டது. ஷோறன் தனது வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு முன்னர் மரணமடைந்துவிட்டார். அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. அந்த வாக்குறுதியை நிறைவேற்றித் தரும்படி என்னிடம் வேண்டினர். நான் அவர்களின் கோரிக்கையை அரசாங்கத்தாருக்கு அனுப்பி வைப்பேன், அவர்கள்தான் இறுதி முடிவை எடுப்பார்கள் என்று அவர்களிடம் கூறினேன்.[5]

230 வருடங்களுக்கு முன்னர் எழுதப்பட்ட ஃபான் சென்டனின் நாட்குறிப்புகள் ஆயிரம் தூண்கள் தாங்கிய தங்கள் சைவக் கோயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட நினைவுகள் திருகோணமலை மக்களிடம் இருப்பதைத் தெளிவுபடுத்துகிறது.

திரிகோணாசல புராணத்தில் விபரிக்கப்பட்டிருக்கும் பாரம்பரியங்களும் ஃபெர்னாவோ கேறோஸ் தரும் விபரங்களும் ஃபான்சென்டனின் குறிப்புகளும் இதனை உறுதிப்படுத்துகின்றன. இந்நூல்கள் அந்நியப் படையெடுப்பாளர்கள் திருகோணமலையைக் கைப்பற்றியபோது பிராமணர்களும் வேறு சிலரும் தீவிர பக்தர்களும் பிரதானமான சிலைகளை எடுத்துக் கொண்டு கழனிமலைக்கு ஓடினர் என்று கூறுகின்றன. பின்னர் அவர்கள் தம்பலகாமத்திற்குச் சென்று அங்கே புதிதாக கட்டப்பட்ட கோயிலில் அச்சிலைகளை வைத்து பிரதிஷ்டை செய்தனர். அங்கே ஃபான் சென்டன் கண்ட சிலைகளில் ஒன்று கோணேசருடையது என்பது கவனித்தற்குரியது.

கோயில் அழிக்கப்படுவதற்கு முன்பிருந்த தோற்றத்தை வைத்து உருவாகிய வரைபடம் ஒன்று லிஸ்பன் தேசிய நூலகத்தில் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது. இவ்வரைபடம் கோயில் மலையின் உச்சியில் இருப்பதைக் காட்டுகிறது.[6] கொன்ஸ்தந்தினோ டி ஸா வின் மகனான றொட்றிக்கே டி ஸா இந்தக் கோயில்களை மேல்வருமாறு வர்ணித்தான்:

> பாறை உயர்ந்து செல்லும் இடத்தில் ஒரு கோயிலும் அதற்கு அடுத்ததாக இன்னொரு கோயிலும் இருந்தன. பாறை உச்சியில் யாத்திரிகர்கள் பெருமளவில் வந்து மூடநம்பிக்கையுடன் வழிபடும் பெருங்கோயில் இருந்தது. கட்டிடக் கலை அழகுக்கும் நுட்பத்திற்கும் அப்பால் இது பெற்றிருந்த மகிமையும் பெரிதாகும்.[7]

இங்கே கோயிலுக்குப் பதிலாக வழங்கப்பட்டுள்ள *பகோடா* என்ற சொல்லின் தாற்பரியங்களை விளங்கிக் கொள்வது அவசியமானது. விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் கோயில்களையும் தெய்வங்களின் உருவம் பொறிக்கப்பட்டிருக்கும் நாணயங்களையும் *பகோடா* என்ற இந்திய-போர்த்துக்கேய வார்த்தையாற் குறிப்பிட்டனர். வெப்பரின் அகராதி இந்தச் சொல்லின் அர்த்தத்தை மேல்வருமாறு வரையறுக்கின்றது:

> தெளிவற்றதும் குறிப்பிடத்தக்கதுமான இந்த சொல் மூன்று அர்த்தங் களைக் கொண்டுள்ளது. முதலாவது கோயிற் சிலையைக் குறிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீனாவிலே நான்கிங்கில் உள்ள பீங்கான் கோபுரத்தில் ஒரு வழிபாட்டுச் சிலை இருந்தது. இப்போது அது அழிந்து விட்டது. இது மாதிரியான வற்றைக் குறிக்கப் பிரதானமாக இப்பதம் பயன்படுத்தப்பட்டது. 17ஆம் நூற்றாண்டிலே பிழையாக முக்கியமான முகமதிய வழிபாட்டிடத்தை மெக்காவின் பகோடா என்று குறித்தனர். இரண்டாவதாகச் சிலையை குறிப்பதற்கு இந்தச் சொல் பயன்பட்டது. மூன்றாவதாகத் தங்கம் வெள்ளி நாணயங்களைக் குறிக்க தென்னிந்தியாவில் இச் சொல்லைப் பயன்படுத்தினர். ஒரு தங்கப் *பகோடா* உள்ளூரவர்களால் வராகன் அல்லது ஹன் என்றும் சொல்லப்பட்டது.[8]

இந்தச் சொல்லுக்கு *யூனிவேர்சல் டிக்ஷனறி ஒஃப் இங்கிலிஷ் லாங்குவெஜ்* தரும் விளக்கம் தெளிவானது. அதன்படி ஐரோப்பியர்கள் இந்தச் சொல்லை இந்தியா, சீனா, ஜப்பான் போன்ற நாடுகளில் உள்ள வழிபாட்டிடங்கள், கோபுரங்கள் என்பவற்றைக் குறிப்பதற்கு வழங்கினர். இந்த வகையில் இச்சொல் இந்து, பௌத்த, சமண கோயில்களைக் குறிக்கப் பயன்பட்டதெனத் தெரிகிறது.[9] மேல்வரும் குறிப்பை உதாரணமாகக் கொள்ளலாம்:

சோல்செற்று தீவில் வஞஸம் (Basseim) என்ற இடத்தில் இரண்டு பகோடாக்கள் அல்லது விக்கிரக வணக்கத் தலங்கள் இருந்தன.

கார்சியா f.216t

''நீங்கள் எழுதியுள்ளபடி கிறித்தவத்தைப் பரப்புவதற்கு முறையே இந்துக்களுக்கும் இஸ்லாமியருக்கும் சொந்தமான எல்லாப் பகோடாக்களையும் மசூதிகளையும் அழிப்பது அவசியமானது என்பதை விளங்கிக் கொள்கிறேன்.''

இது போர்த்துக்கல் மன்னனிடமிருந்து வைஸ்ரோய்க்கு வந்த கடிதத்தில் இருந்தது.

''அவன் மரங்களிடையே பகோடாவைக் கட்டி கடவுள் விக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்தான். இந்த நாட்டிற் பகோடாக்கள் அல்லது கோயில்கள் பல இருந்தன. அவற்றில் ஒன்று விசாகப் பட்டணத்தில உள்ள குன்றின் மேல் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அங்கே உயிருள்ள குரங்குகளை வழிபடுகின்றனர்.''

A. ஹமில்டன் 1380 ed.1644

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றைத் தவிர பகோடா என்பது இந்துக் கோயிலைக் குறிப்பிடும் சொல் என்பது *Temporal and Spiritual Conquest of the Island of Ceylon* என்ற நூலின் மூலம் தெளிவாகிறது. மட்டக்களப்பிலே பழுகாமத்தில் உள்ள கோயில் ஒன்றைப் பற்றிக் குறிப்பிடும்போது, மேல்வருமாறு கேறோஸ் பாதிரியார் எழுதுகிறார்:

> சமயத்தைப் பொறுத்த வரையில் அவர்கள் சிங்களவர்களிடமிருந்து வேறுபடுகிறார்கள். யாழ்ப்பாணப்பட்டணத்தில் உள்ளவர்களோடு ஒன்றுபடுகிறார்கள். அவர்களின் பிரதான தெய்வம் இராமன் அன்றிப் பெருமாளே ஆகும். பழுகாமத்தில் அத்தெய்வத்தின் அரை நிர்வாணக் கோலமான சிலையை வைத்து வழிபடுகிறார்கள்.[11]

முன்னேஸ்வரம் கோயில் அழிக்கப்பட்டமை பற்றிக் கேறோஸ் கூறுவன:

> அவர்கள் மூன்றாவது தரம் நீர்கொழும்பைத் தரைமட்டமாக்கினர். கைமால், அலுத்கம போன்ற இடங்களை அழித்து முன்னேஸ்வரம் *பகோடாவை* தரைமட்டமாக்கினர். அதனைக் காவல் புரிவதற்குப் பொறுப்பாக இருந்த அத்தப்பத்து முதலியாரால் அதனைத் தடுக்க முடியவில்லை.[12]
>
> மட்டக்களப்புத் துறைமுகத்தில் இருந்து தெற்குப் பக்கமாகப் பன்னிரண்டு லீக் தூரத்திலே பிரபலமான இந்துப் *பகோடா* உள்ளது. அது இலங்கையில் உள்ள முக்கிய வழிபாட்டுத் தலமாகும். அதன் சரியான பெயர் திருக்கோயில். மூன்று கோயிலுக்குரிய பலிபீடங்களும் சிலைகளும் அங்கு காணப்படுகின்றன. இதை ஜெனரல் டி ஜெரோனிமோ டி அஸெவிடோ அழித்துக் கோயிற் பணியாளர்களையும் கொன்றான்.[13]

இதுவரை கூறிய குறிப்புகளிலிருந்து திருகோணமலையில் இருந்த கோணேசர் கோயில் போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்டதென்பதும் அவர்களின் ஆவணங்களில் *பகோடா* என்று குறிக்கப்பட்டிருப்பது இந்துக் கோயிலே என்பதும் நிரூபணமாகின்றன.

இந்த இடத்திலே போர்த்துக்கேயராற் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டிலே சொல்லப்பட்டிருக்கும் தீர்க்க தரிசனம் ஒன்றை நினைவு கூர்வது பொருத்தமானது. (இக்கல்வெட்டின் வாசகங்களும் அது பற்றிய விபரங்களும் லிஸ்பன் அஜூடா நூலகத்திற் காணப்படுகின்றன) அதன் தமிழாக்கம் மேல்வருமாறு அமையும்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பகோடாக்களைக் கொன்ஸ்தாந்தினோ டி சா மெனசெஸ் அழித்தான். அதன் கற்களைக் கொண்டு, சிங்கள அரசனின் துறை முகத்தை மூடும் ஒரு கோட்டையினை உருவாக்கினான். இந்த இடத்தில் ஒரு பீரங்கியை நிறுத்தி வைக்க முடியாது. பகோடாவைத் தரைமட்டமாக்கிய அன்று எழுதப்பட்ட கற்பலகை ஒன்றை கண்டு பிடித்தோம். புராதனமான சிங்கள தேசத்து எழுத்துகளிலே தேர்ச்சி பெற்றவர்களால் மொழிபெயர்க்கப்பட்ட அதன் பிரதி வருமாறு அமைகிறது:

> இலங்கையின் சக்கரவர்த்தி மாணிக்க ராஜா பாகு இந்தப் பகோடாவை... ஆண்டில் கடவுள் விதிய-மல் மண்டாவுக்காக நிர்மாணித்தான்... பறங்கியர் என்னும் தேசத்தார் வந்து அதனை அழிப்பார்கள். அதற்கு பின்னர் அதனை கட்டுவதற்கு தீவில் அரசர்கள் இருக்க மாட்டார்கள்.

கோட்டை வாசலிற் காணப்பட்ட இந்தக் கல்வெட்டு சந்தேக மில்லாமல் போர்த்துக்கேயரைப் பறங்கியர் என்று குறிப்பிடுகின்றது. இந்த உண்மையை முன்னறிந்து அஞ்ஞான அரசனுக்குக் கூறியவர் யார் என்பதையோ சொல்லிய காலத்தையோ அறிய முடியவில்லை. கொன்ஸ்தாந்தினோ டி சா இந்தப் *பகோடாவை* தரைமட்டமாக்கிய போதிலும் வழிபாடும் தொடர்ந்தும் நடைபெற்றது. ஜெனரல் டொம் நூனோ அல்வாரிஸ் பெரேரா பூசகர்கள் இருவரைப் பிடித்துச் சிரச்சேதம் செய்யும் வரை வழிபாடுகள் நடைபெற்றன.[14]

ஆயினும் இக்கல்வெட்டு தொல்லெழுத்தியலின் படி பதினேழாம் நூற்றாண்டுக்கு உரியதாகும். அரசனின் படைக்குத் தலைமை தாங்கிய வன்னிபங்கள் போர்த்துக்கேயர் கட்டிய கோட்டையினை இடித்த பொழுது இக்கல்வெட்டைப் பொறித்திருக்கலாம். அது பௌராணிகப் பாணியிற் சென்ற கால நிகழ்ச்சியினை வருங்காலத்தில் நடைபெறப் போவதாகக் குறிப்பிடுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்குறிப்புகள்

1. Rev. Fr. Fernao de Queyroz, the *Temporal and Spiritual Conquest of Ceylon,* Trans. S.G.Perera, Book I, Colombo, 1930, p.238.
2. Paul E.Pieris, Ceylon : The Ceylon Historical Journal Monograph Series, Volume Seven, Tisara Prakasaya Ltd, Dehiwala, 1983.
3. Charles Pridham, *A Historical, Political and Statistical Account of Ceylon and Its Dependencies* Volumes II, London 1850, Pp.544-545.
4. Journal kept during a tour in the districts of Koetjaer, Tamblegam and Kattukkolompattu, by the Junior Merchant Jaques Fabrice Van Senden, Governor of Trincomalee, in the year 1786. (Translated from the Dutch Records for the *Ceylon Government Gazette),* Supplement to the Ceylon Government Gazette, Wednesday, October 15, 1834.
5. மேலது
6. W.Balendra, "Trincomalee Bronzes", Tamil Culture Volume II, No.2 1963, p.190.
7. மேலது
8. Websters' *Collegiate Dictionary:* A Dictionary of the English Language, Bell and Ltd, London, 1912, p.652.
9. *The Universal Dictionary of the English Language* ed. Henry Cecil Wyld,G., Bell and Ltd, London, 1912, p.586.
10. Hobson Jobson, *A Glossary of Aglo-Indian Collogutal words and Phrases of Kindred Terms by Col.Henry* Yule and AC Burnell, New Edition by William Crooke, london, 1903, Pp.655,656.
11. *The Temporal and Spiritual Conquest of Ceylon,* p.427.
12. மேலது, ப.65.
13. மேலது.
14. W.Balendra, " Trincomalee Bronzes" *Tamil Culture Volume II",* p.421.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9

# சுவாமி மலையில் வழிபாடு

பிரித்தானியர் 1796 இல் இலங்கையின் கரையோர மாகாணங்களில் ஆட்சியதிகாரம் பெற்றதன் விளைவாக அங்கு வாழ்ந்த சமூகங்களுக் குச் சமய வழிபாட்டுச் சுதந்திரங்கள் கிடைத்தன. போர்த்துக்கேயரும் அவர்களின் பின் ஒல்லாந்தரும் சுதேச சமயங்களுக்கு எதிராக உருவாக்கிய கட்டுப்பாடுகள் செயலற்றுப் போனதைக் குடியானவர்கள் உணர்ந்தனர். அவ்வாறான சூழ்நிலையிலே திருக்கோணேஸ்வரம் அமைந்திருந்த தலத்தின் மீது தாம் கொண்டிருந்த ஆழமான அபிமான உணர்வுகளை வெளிப்படுத்தும் விதமாகத் திருமலையில் வழிபாடு களை ஆற்றத் தொடங்கினார்கள்.

அக்காலத்திலே, கோயில் முன்பு அமைந்திருந்த தலத்தைச் *சுவாமிமலை* என்றும் *கோணேசர் மலை* என்றும் குறிப்பிட்டனர். அங்கு நடைபெற்ற வழிபாடுகள் பற்றிப் பத்தொன்பதாம் நூற்றாண்டில், தாம் நேரிலே பார்த்தனவற்றையும் பிறர் மூலம் அறிந்தவற்றையும் அடிப்படையாகக் கொண்ட குறிப்புகளை, இலங்கை பற்றித் தாம் எழுதிய நூல்களில் ஐரோப்பியர்கள் பதிவு செய்துள்ளனர். சார்ள்ஸ் பிரிதம் (Charles Pridham) என்பவர் விரிவானதும் கவர்ச்சிமிக்கதுமான மேல்வரும் குறிப்பினை எழுதியுள்ளார்:

> ''திருகோணமலைக் கோட்டை அமைந்திருக்கும் மலையின் சிகரம் ஆதிகாலம் முதலாகவே ஈஸ்வரனாகிய சிவபெருமான் பள்ளிகொள்ளும் திருப்பதி என்பது இங்குள்ள சுதேசிகளின் நம்பிக்கையாகும். இத்தலத்தை அவர்கள் மிகுந்த பயபக்தியோடு வழிபடுகின்றனர். ஆதியான யுகமொன்றில் மகாமேருவின் மூன்று சிகரங்கள் உலகின் வெவ்வேறு பாகங்களில் வீசப்பட்டன என்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் நம்பிக்கை. திருகோணமலையிலுள்ள கோணேச பர்வதம் அவற்றில் ஒன்றாகும். எனவே அது கைலாச மலைக்கு நிகரானது என்பது அவர்களின் கருத்தாகும். மிகப் புராதனமான காலம் முதலாகச் சிவனையன்றி வேறொரு தெய்வத்தையும் அங்கு வழிபடுவதில்லை.''

''ஈஸ்வரன் என்பது 'சர்வவியாபகமான பரமான்மா' என்று வில்ஸன் (Wilson) தொகுத்த சமஸ்கிருத அகராதியிலே விளக்கப்பட்டுள்ளது. கோணேசர் மலையில் நடைபெறும் சடங்குகள் புராதனமானவை, விநோதமானவை. பிரதம குருவான பூசாரி ஒருவர் தலையில் உருத் திராக்க மாலையினை அணிந்த வண்ணமாகவும் இடையில் மஞ்சள் நிறமான துணியைக் கட்டிக் கொண்டும் பூசை செய்வார். சூரியன் மறைவதற்குச் சற்று முன்பாக, இருண்டு தெரியும் கடல் நோக்கி, நீண்டிருக்கும் பாறையின் உச்சியில் நின்று அவர் பூசை பண்ணுவார். இடையிடையே அரிசி போன்ற தானியங்களையும் வெற்றிலைகளையும் கடலிற் போடுவார். அதன் பாறையை நோக்கிச் சிரம் தாழ்த்தி வணங்குவார். சூரியன் மறைந்தவுடன் தலையிலே தீச்சட்டியினைத் தாங்கிய நிலையிலே தேங்காயினைக் கடலில் வீசுவார். நெருப்பு எரிந்து கொண்டிருக்கும், அதனால் நறுமணம் பரவிக் கொண்டிருக்கும். பூசகர் கடலை நோக்கிய வண்ணம் வழிபாடு செய்யும் வேளையில் வேறு சிலர் தீப்பந்தங்களைப் பிடித்திருப்பர்.''

''இந்த வழிபாட்டினை அடியார்கள் பலர் மரங்களில் ஏறியிருந்து அவதானிப்பார்கள். பக்தர்கள் பூசைகள் முடிந்தபின் செப்புக் காசுகள், அரிசி, வெற்றிலை போன்றவற்றைப் பூசாரிக்குத் தக்ஷிணையாகக் கொடுப்பார்கள். ஓர் ஆபத்தான நிலையில் நின்றுகொண்டு வழிபாடு நடத்தும் பூசாரிக்கு இவ்வாறு கிடைக்கும் சன்மானம் மிகவுஞ் சொற்பமானது.''[1]

சுவாமிமலையில் இவ்வாறான வழிபாடு தடையின்றித் தொடர்ச்சி யாகப் பிரித்தானியர் ஆட்சிக் காலம் முழுவதிலும் நடைபெற்றது. அங்கு சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதியில் கோயில் புனருத்தாரணம் பெற்ற பின்னரும் அது தொடர்ந்து நடைபெற்றது. முதலிற் சுவாமிமலையிற் பூசைகள் நடைபெற்ற பின்பே கோயிற் பூசைகள் ஆரம்பமாகின்றன.

இலங்கையிலே, குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் இந்துக்களிடையே கோணேசர்மலை தொடர்பான நடைமுறைகள் மிகுந்த பயபக்தியுடன் நோக்கப்படுகின்றன. திருக்கோணேஸ்வரத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுமானங்கள் அழிக்கப்பெற்று, அங்கு கோயில் இல்லாத காலத்திலும் சில நூலாசிரியர்கள் கோணேசர்மலையினைச் சிறப்பித்துப் பாடல்களை இயற்றியுள்ளனர்.

தம்பலகாமம் வீரக்கோன் முதலியார் வெருகலம்பதி சித்திர வேலாயுதர் மீது பாடியது *சித்திர வேலாயுதர் காதல்.*[2] அது 17 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிக்குரிய நூல். அதிலே திருகோணமலைப் பிராந்தியத்திலுள்ள வேறு சில பிரதானமான கோயில்களைப் பற்றியும் பாடியுள்ளார். திருக்கோணேஸ்வரம், நீலாப்பளை பத்தினியம்மன் கோயில், சம்பூர் பத்திரகாளி அம்மன் கோயில் என்பன பற்றிய குறிப்புகள் அதில் உள்ளன.[3] ஆயினும் திருக்கோணேஸ்வரம், கோணேசர் மலை என்பன பற்றிய பாடல்கள் அதிற் பலவாகும். திருகோணமலைப் பிராந்தியத்தில் வாழ்ந்த சைவர்கள் கோணேசர் மலை மீது கொண்டிருந்த உணர்ச்சிபூர்வமான அபிமான உணர்வுகளை இந்நூலில் அமைந்துள்ள பல பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. சித்திரவேலாயுதர் காதலின் தொடக்கத்திலும் நடுவிலும் முடிவிலும் தென்கைலாசம் பற்றிய விபரங்கள் சொல்லப்படுகின்றன. அம்மலையின் சிறப்பு மேல்வரும் பாடல்களில் விளக்கப்படுகின்றது:

*வெள்ளிமலை தன்னில் விளங்கு சிகரத்திலொன்றை*
*விள்ளரிய கான்முறித்து மிக்க விலங்கைத் தீவில்*
*கொண்டு வந்து வைத்தமலை கோணேசர் வாழுமலை*
*அண்டர் நிதம் போற்றுமலை யாரணங்க ளேத்து மலை*

*தென்கயிலை யென்னத் திருநாமம் பெற்ற மலை*
*அன்பர் நிதம் வைகியருந் தவங்கள் செய்யுமலை*
*முக்கோணமான மலை முனிவர்கள் வாழுமலை*
*எக்காலமுமிமையோ ரெய்தியுறை கின்றமலை.*[4]

வெருகலம்பதியின் சிறப்புகளைப் பாடுவதற்கு முற்பட்ட வீரக்கோன் முதலியார் தென்கயிலை பற்றிப் பாடும் பொழுது அதனையுற்று உணர்ச்சி வசமாகிப் பரவசமாகி விடுகின்றார். திருகோணமலை மேருமலையின் சிகரங்களில் ஒன்று, அது வாயுபகவனால் இலங்கையில் அமைக்கப் பெற்றது. அது தென்கயிலை, திருகோணம் என்னும் பெயர்களால் விளங்குவது, அங்கு தேவரும் முனிவரும் வந்து கோணைநாதரைத் தரிசனம் பண்ணிப் பேறு பெற்றனர், அந்தத் திருமலையின் சிறப்புகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதங்களும் புராணங்களும் வேறு பனுவல்களும் போற்றுகின்றன. இத்தனையும் வீரக்கோன் முதலியாரின் பாடல்களிற் பொதிந்துள்ள சிந்தனைகள்.

சுவாமிமலையில் வழிபாடுகள் நடைபெற்ற காலத்தில் எழுதப்பெற்ற நூல்களிலொன்று *கோணமலை அந்தாதி*.[5] நூறு செய்யுள்களைக் கொண்ட அந்நூலை ஆறுமுக முதலியார் என்பவர் எழுதினார் என்று கருதப்படுகின்றது. அவர் திருகோணமலையிலே சைவ சமயத்தையும், சைவ சமயக் கல்வியையும் பேணி வளர்ப்பதில் ஈடுபாடு கொண்டு பல நூற்றாண்டுகளாக நிலவிய *சைவ சந்தானம்* என்னும் நிறுவனத்தோடு தொடர்புடையவர் என்று சொல்லப்படுகின்றது. புனித பூமியான கோணபர்வதம், கோணமாமலை, கயிலை, தென்கயிலை, கோணாசலம், தென் கயிலாயம், திரிகூடம் என்னும் பெயர்களால் இந்நூலிற் குறிப்பிடப்படுகின்றது. அயோத்தி, அவந்தி, காசி, காயா, காஞ்சி, மதுரா, துவாரகா ஆகிய சப்ததலங்களைக் காட்டிலும் கோணேசர் மலை மகிமை வாய்ந்த புனித க்ஷேத்திரம் என்று கோணேசர் அந்தாதியில் நூலாசிரியர் போற்றுகின்றார்.

## அடிக்குறிப்புகள்

1. Charles Pridham, *An Historical, Political and Statistical Account of Ceylon and its Dependencies* Volume I, London 1884, Pp.544, 545; S.Pathmanathan "The Temple of Tirukkōṇēśvaram", *Ancient Temples of Siva in Sri Lanka,* Chinmaya Mission, Colombo, 1999.
2. *வெருகல் சித்திரவேலாயுதர் காதல்,* தம்பலகாமம் வீரக்கோன் முதலியார் இயற்றியது, பதிப்பாசிரியர் புலவர் வே.அகிலேசபிள்ளை, சென்னை ரிப்பன் அச்சுயந்திரசாலை, 1906.
3. சி.பத்மநாதன், ''சித்திரவேலாயுதர் காதல் சில வரலாற்றுக் குறிப்புகள்'' *ஈழத்து இலக்கியமும் வரலாறும்* (2004) குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை, (இரண்டாம் பதிப்பு), 2018.
4. மேலது, ப.197, *வெருகல் சித்திர வேலாயுதர் காதல்,* 1906, செய்யுள்கள் 178-181.
5. *கோணமலை அந்தாதி,* பதிப்பாசிரியர், சைவப் புலவர் பண்டிதர் இ.வடிவேல், வெளியீடு, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, 1997.
6. S.Pathmanathan, *The Temples of Tirukkōṇēśvaram and Tampalākamam,* Kumaran Book House, Colombo – Chennai, 2018, p.62.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10

# சுவாமிமலையில் ஆலய புனருத்தாரணம்

பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதியிற் போர்த்துக்கேயரால் இடித்து அழிக்கப்பட்ட திருக்கோணேஸ்வரம் கோயிலைப் புனரமைப்பதற்கான முயற்சிகள் 1950ஆம் ஆண்டு ஆரம்பமாகின. அது தொடர்பாக அந்த வருடம் ஜூலை மாதம் மூன்றாம் திகதி சுவாமிமலையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. கோயில் புதிதாக உருவாக்கப்படின் அதில் எந்தக் கடவுளின் படிமத்தைத் தாபனஞ் செய்ய முடியுமென்ற வினாவினைப் பாராளுமன்ற உறுப்பினரான சிவபாலன் முன்வைத்தார். அதற்கு உடனடியாக எவராலும் பதில் அளிக்க முடியவில்லை. எனவே அதனைப் பற்றிக் கலந்து ஆலோசனை செய்து முடிவெடுப்பதற்கு ஒரு குழுவினை நியமித்தனர். 1950 ஓகஸ்ட் ஆறாம் திகதிக்கு முன்னர் அவர்கள் தங்கள் கருத்தினை முன்வைக்குமாறு கேட்கப்பட்டனர். கோணேசர் கோயிலுக்குரிய கட்டுமானம் பற்றிய ஒரு திட்டத்தை உருவாக்குவதும் அதற்கு வேண்டிய லிங்கத்தைக் காசியிலிருந்து கொண்டு வருவதும் அவர்களின் பொறுப்பாக விடப்பட்டன.

கோயிற் கட்டுமான வேலைகள் 1963 இல் நிறைவடைந்தன, கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அதன் பின் 18 வருடங்கள் கழிந்ததும் 1981 இல் இரண்டாவது தடவையாகக் கும்பாபிஷேகம் நடைபெற்றது. சிற்பசாஸ்திர முறைப்படி ஒரு மண்டபமும் அமைக்கப் பெற்றது. காசியிலிருந்து கொண்டு வந்த லிங்கம் கருவறையிலே தாபனஞ் செய்யப்பட்டது. மாதுமை அம்மனின் படிமம் தனி அறையொன்றிலே வைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவகாமி சமேத நடராசர் படிமத்தை ஸ்நபன மண்டபத்திற் பிரதிஷ்டை செய்தனர். வள்ளி, தெய்வயானை சமேதரான சுப்பிரமணியர், சந்திரசேகரர், சோமாஸ்கந்தர் ஆகியோரின் படிமங்கள் வசந்த மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ளன. பிள்ளையார், சுப்பிரமணியர், சூரியன், சந்திரன், சண்டீஸ்வரர், நாகதம்பிரான், வைரவர் என்போருக்குத் தனித்தனியான கோட்டங்கள் உள்ளன.[2] நவக்கிரகங்களின் படிமங்களை வேறொரு இடத்தில் வைத்துள்ளனர். கோயிலுக்குரிய கட்டுமானங்களின் அளவிற்கேற்ற அளவுப் பிரமாணங்களோடு இராசகோபுரம் அமைந்துள்ளது.

திருக்கோணேஸ்வரத்தில் நாள்தோறும் ஆறுகாலப் பூசை நடைபெறுகின்றது. வருடாந்தத் திருவிழா பங்குனி உத்திரம் முதலாகப் 18 நாட்கள் நடைபெறும். அது தீர்த்த உற்சவத்துடன் நிறைவு பெறும்.

சிவராத்திரி உற்சவம் இங்கு வெகு விமரிசையாக நடைபெறுகின்றது. அதற்கு முன்பு 15 நாட்களாக விசேடமான வழிபாடுகளும் சடங்குகளும் நடைபெறும். சிவராத்திரியன்று கோணேசர், மாதுமை அம்மன் ஆகியோரின் படிமங்களை ஊர்வலமாகக் கொண்டு செல்வர். அது இரண்டு நாட்களாக இரவில் நடைபெறும். அவ்வாறு கொண்டு செல்லும் திருமேனிகளை முதலாம் நாளன்று காசி விசுவநாதன் கோயிலிலும் இரண்டாம் நாளிரவிலே பத்திரகாளி அம்மன் கோயிலிலும் வைப்பார்கள். அங்கு கோணேசப் பெருமானுக்கும் மாதுமை அம்மனுக்கும் சிறப்பான பூசைகள் நடைபெறும். மூன்றாம் நாள் ஊர்வலம், சுவாமிமலைக்குப் போகும். ஊர்வலம் நடைபெறும் இரு நாட்களிலும் திருகோணமலை நகரம் முழுவதும் அலங்காரக் கோலம் பெற்றிருக்கும். வழமைப்படி நகரத்திலுள்ள எல்லா வீடுகளின் முன்பும் தோரணங்கள் அமைந்திருக்கும். சுவாமியையும் அம்மனையும் முறைப்படி வணங்கி உபசாரம் செய்வர்.[3] சிவராத்திரி விழாவின் ஓர் அம்சமாகத் திருகோணமலையில் நடைபெறும் ஊர்வலம் சிலப்பதிகாரத்தில் வர்ணிக்கப்படும் இந்திர விழா பற்றிய நினைவுகளை ஏற்படுத்துகின்றது.

வருடாந்த விழாவில் அம்மனுக்குரிய சடங்குகள் தனியாகப் பத்து நாட்கள் நடைபெறும். அவை ஆடிப் பூரத்தில் நிறைவடையும். இலங்கையிலுள்ள ஏனைய சைவக் கோயில்களைப் போல திருவெம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவைக் காலத்தில் இங்கும் உற்சவங்கள் சிறப்பாக நடைபெறும். கோயிற் பரிபாலனம் தொடர்பில் வன்னிபம், தானத்தார், வரிப்பத்தார் போன்ற அமைப்புகள் இப்பொழுது இல்லை. பிற பல கோயில்களிற் போல ஒரு நிர்வாக சபையே எல்லாவற்றுக்கும் பொறுப்பாக உள்ளது.

## அடிக்குறிப்பு

1. இ.வடிவேல், திருகோணமலை மாவட்டம், திருத்தலங்கள், வெளியீடு. இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, 1997, ப.6.
3. S.Pathmanathan, *Hindu Temples of Sri Lanka*, Kumaran Book House, Colombo, 2006.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11

# திருகோணமலையிற் கிடைத்த வெண்கலப் படிமங்கள்

மத்திய காலத்தில் உருவாக்கப்பட்ட, வெண்கல வார்ப்பான கடவுட் படிமங்கள் சில 70 வருடங்களுக்கு முன் திருகோணமலையிலே தற்செயலாகக் கண்டு எடுக்கப்பட்டன. திருகோணமலை வடகரை வீதியிற் கிணறு ஒன்றை உருவாக்குவதற்கு, நகர சபைத் தொழிலாளர்கள் நிலத்தை வெட்டிய பொழுது 1950 ஜூலை 27 ஆம் திகதி எதிர்பாராத விதமாக உலோகப் படிமங்களைக் கண்டனர். அவை முன்னொரு காலத்திலே பாதுகாப்புக் கருதி நிலத்தின்கீழே வைக்கப்பட்டிருந்தவை. போர்த்துக்கேயர் திருகோணமலையினைக் கைப்பற்றி, அங்குள்ள சைவாலயங்களை இடித்து, அவற்றின் செல்வங்களைச் சூறையாடிய காலத்தில் இவை சைவசமய பக்தர்களினாற் புதைக்கப்பட்டிருத்தல் வேண்டும். நிலம் வெட்டிய பொழுது கிடைத்த படிமங்கள் நகர சபையில் அதன் பொறுப்பாக வைக்கப்பட்டன.

அதற்கு முன்னர் அதே வீதியிலே ஒரு தென்னைமரத்தை வேரோடு வெட்டியெடுத்த பொழுது இரண்டு வெண்கலப்படிமங்களைக் கண்டனர். அவை கணேசர், பார்வதி என்போரின் படிமங்கள். அவை நிலத்தின் கீழே தென்னைமர வேர்களாற் சுற்றப்பட்ட நிலையிலே காணப்பட்டன. அவற்றை கோயிற் புனருத்தாரண சபையின் தலைவரிடம் கொடுத்தனர். 1950 ஜூலை 27 ஆம் திகதி கிடைத்த படிமங்கள் சந்திரசேகரர், சோமாஸ்கந்தர், பார்வதி ஆகியோரின் உருவங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாமாகவுள்ள ஐந்து படிமங்கள் பற்றிய விபரங்கள் மேல்வருவனவாகும்.

| | கடவுட் பெயர் | அளவுப் பிரமாணங்கள் | நிறை |
|---|---|---|---|
| 01. | ஆசனக் கோலமான சிவன் | 1, 8½" x 10" | 70 இறா |
| 02. | பார்வதி, ஆசனக் கோலம் | 1, 4 x 8" | 30 இறா |
| 03. | சிவபெருமான் ஸ்தானகக் கோலம் | 1, 8" x 7" | 15 இறா |
| 04. | பார்வதி, ஸ்தானகக் கோலம் | 1, 8" x 5" | 30 இறா |
| 05. | கணேசர், ஸ்தானகக் கோலம் | 1, 8" x 10½" | 65 இறா |

சிவன், சிவகாமி ஆகியோரின் ஆசனக் கோலமான படிமங்கள், பொலன்னறுவையிற் கிடைத்தவற்றைப் போலன்றித் தனித்தனியான பீடங்களில் அமைந்துள்ளன. சிவனது நான்கு கரங்களில், வழமைபோல் மேல் வலக்கரம் மழுவினையும் மேலிடக்கரம் மானையும் பிடித்த நிலையில் உள்ளன. கீழ் வலக்கரம் அபயகரமாகவும் மற்றையது கடக முத்திரையிலுங் காணப்படுகின்றன. சிவனின் தலைப்பாகம் திரயம்பகக் கோலமானது. வலது காதிலே தாடங்கமும் இடது காதிலே பெண்களுக்குரிய தோடும் தெரிகின்றன.

சிவனின் கழுத்தில் உத்திராக்கமாலை அமைந்துள்ளது. பிரபஞ்சத்தின் 96 அம்சங்களின் அடையாளமான உபவீதம் வலது தோள்மேலிருந்து இடது தோட்கட்டின் கீழாகப் படிந்திருக்கின்றது, சடாபாரம் சுருளாக முடித்த சடாமகுடமாக அமைந்துள்ளது. உதரபந்தம் பொலன்னறுவைப் படிமங்களில் உள்ளவற்றைக் காட்டிலும் விசாலமானதாகத் தெரிகின்றது. ஆனால் தோள் வலையங்கள் பொலன்னறுவைப் படிமங்களில் உள்ளவற்றைக் காட்டிலுங் குறைந்தவை. மார்பகத்து அணியான பதக்கம் மிகப் பிரகாசமானது. சோழர், பாண்டியர் காலங்களின் உலோகப் படிமங்களின் சாயல்கள் இவற்றிலே காணப்படவில்லை. வடிவமைப்பு, வார்ப்புக் கலை அம்சங்கள் போன்றவற்றை நோக்குமிடத்து இது 13ஆம், 14ஆம் நூற்றாண்டுகளுக்குரிய உள்ளூர் வேலைப்பாடு என்று கொள்ளத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கசாலையினரின் குடியிருப்புகள் பற்றிக் கோணேசர் கல்வெட்டிலே சொல்லப்படுகின்றமையும் இங்கு கவனித்திற்குரியது.

சந்திரசேகரர் படிமம் அதன் வடிவமைப்பின் அடிப்படையிற் பத்தாம் நூற்றாண்டுக்கு உரியதென்று கருதலாம். கலைவனப்பான பண்புகளை இதிலே காணமுடியவில்லை. இதன் கன்ன எலும்புகள் விசாலமானவை, கண்கள் மூடிய கோலமானவை. கை, கால்கள் உயிரோட்டமானவை போல அமையவில்லை. உடற்கூற்று உறுப்புகளும் பொருத்தமான அளவுப் பிரமாணங்களுடன் அமைக்கப்படவில்லை. உபவீதமும் உதரபந்தமும் வழக்கம் போல உருவாக்கப்படவில்லை. கணைக்காலிலும் கைப்பாகத்திலும் (பாகு வலயம்) உள்ள ஆபரணங்களும் செம்மையாக அமையவில்லை.

இரண்டு சிவகாமியின் படிமங்களில் ஒன்று ஆசனக் கோலமானது, மற்றது ஸ்தானகக் கோலமான படிமம். ஆசனக் கோலமான உருவம் பீடமொன்றில் வடிவமைக்கப்பட்டுள்ளது. படிமம் முழுவதும் செம்மையான விதமாக வார்க்கப்பட்டுள்ளது. ஆயினும் கழுத்து, தோள், மார்பு ஆகியவற்றில் ஆபரணங்கள் சிறப்பான கோலத்திலே அமைக்கப்படவில்லை. நின்ற கோலமான பார்வதியின் உலோகத் திருமேனி வீதிவலமாகக் கொண்டு செல்லக்கூடிய விதத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. உருவம் திரிபங்கமானது. கழுத்து, இடை, கால்கள் என்பவற்றில் வளைவுகள் தெரிகின்றன. அடிப்பாகம் நாற்சதுரமான பத்திரபீடம், அதன் மேலான வட்டமான பீடம் என்னும் அம்சங்களைக் கொண்டுள்ளது. படிமத்தின் வடிவமைப்புச் சிறப்பானது. உடற்பாகங்கள் இயல்பான அளவுப் பிரமாணங்களுக்கு அமைவானவை. உச்சியிலே கரண்ட மகுடம். சற்று உயரமானது; காதணிகள் வழமைக்கு மாறாகப் பரந்த கோலத்திலே தெரிகின்றன. கரங்களில் வலக்கரம் மலர்மொட்டினை ஏந்திய நிலையில் உள்ளது. இடக்கரம் தொங்கி வீசிய கோலமானது.

உதரம் மெலிந்து, வளைந்த தோற்றங் கொண்டது. உதரத்தின் கீழான பாகம் சற்று அகன்று விசாலமாகி உள்ளது. இடையிலிருந்து கணைக்கால் வரைச் சுற்றப்பட்டிருக்கும் சேலையின் மடிப்புகள் சோழர், பாண்டியர் காலச் சிற்பங்களில் உள்ளவற்றைக் காட்டிலும் வேறுபட்டவை. இடைக் கட்டிலிருந்து இரு பக்கங்களிலும் கீணோக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்டு தொங்கும் ஆடை அலங்காரமும் பிற்பட்ட காலத்திற்குரிய அம்சமாகும். இப்படிமம் பதினான்காம் நூற்றாண்டுக்கு உரியதென்று கருதலாம். இலங்கையிலே இதுவரை கண்டெடுக்கப்பட்ட சிவகாமியின் படிமங்களில் இதுவே வனப்பிலும் வடிவமைப்பிலும் முதன்மையானது.

திருகோணமலைக் கடற்கரை வீதியில் நிலத்தின் கீழே கண்டெடுக்கப்பெற்ற சிவகாமி, கணபதி ஆகியோரின் படிமங்கள் வடிவமைப்பில் ஒரே விதமானவை. அவை இரண்டும் ஓரிடத்திலே காணப்பட்டவை. அவை இரண்டினையும் சமகாலத்தவை என்று கருதலாம். ஒரே பட்டறையில் வார்க்கப்பட்டவை என்றும் கொள்ளலாம். கணபதியின் படிமமும் உற்சவகாலங்களில் வீதிவலமாக எடுத்துச் செல்வதற்கு உருவாக்கப்பட்டதாகும். மற்றைய படிமத்தைப் போல இதுவும் அடியிலே நாற்சதுரமான பத்திரபீடத்தின் மேலான வட்டவடிவமான பத்மபீடத்தில் அமைந்த கோலத்தில் வார்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. வழமைபோல உதரம் அகன்று விசாலமானது. மகுடம் கரண்டமானது, காதுகள் சுளகு போன்றவை. கால்கள் கட்டையானவை. மேல் வலக்கரம் அங்குசம் ஏந்தியுள்ளது; கீழ் வலக்கரம் ஒடித்த தந்தத்தைப் பிடித்துள்ளது. வியாசர் தொகுத்துக் கூறிய மகாபாரதக் கதையைக் கேட்டுக் கொண்டிருந்த கணேசர், அதை வியாசர் சொல்லி முடிக்க முன்பே தனது ஒடிந்த தந்தத்தை எழுதுகோலாகக் கொண்டு எழுதி முடித்துவிட்டார் என்பது ஐதிகம். இது விநாயகர் முக்காலமும் உணர்ந்த ஞானகாரகன் என்பதைக் குறிக்கும். இடது மேற்கரத்தில் அமைந்திருப்பது சங்கு போன்ற வடிவம். கீழ் இடக்கரத்திலுள்ள மோதகத்தைக் கணேசர் இடப் புறமாக வளைத்து நீட்டிய கரத்தால் எடுக்கும் காட்சி தெரிகின்றது.

திருகோணமலையிற் கிடைத்த வெண்கலப் படிமங்களைச் சற்று நுட்பமாக நோக்குமிடத்துச் சில அம்சங்கள் தெளிவாகின்றன. அவை ஒரு பிராந்தியக் கலை மரபின் வெளிப்பாடுகளாகும். திருகோணமலையில் மத்திய காலப்பகுதியில் உலோக வார்ப்புக்கலை உன்னதமான வளர்ச்சியினை அடைந்திருந்தது. படிமங்கள் சாஸ்திரப் பிரகாரமானவை, ஆயினும், அவை உள்ளூர் உற்பத்திகள் என்பது வடிவமைப்பினால் உறுதியாகின்றது. 1950இலே இரு வேறு தினங்களிலும் இரு வேறிடங்களிலும் கிடைத்த படிமங்கள் வெவ்வேறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்திற்குரியவை. ஸ்தானகக் கோலமான அம்மனும் கணபதியும் ஒரேவிதமான வடிவமைப்பைக் கொண்டவை. அவை ஒரே காலத்திலும் ஒரே உலோக வார்ப்புப் பட்டறையிலும் உருவானவை போலத் தெரிகின்றது. சோமாஸ்கந்த வடிவம் அவற்றினின்றும் காலத்தால் வேறுபட்டது.

### அடிக்குறிப்புகள்

1. W.Balendra, "Tricomalee Bronzes", *Tamil Culture* Vol II, No.2, p.176.
2. மேலது.
3. S.Pathmanathan, *Temples of Tirukkōṇēśvaram and Tampalakāmam,* Kumaran Book House, Colombo, 2018, Pp.67-69.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னிணைப்பு 1

# வன்னிபங்களும் கோயில் நிர்வாகமும்

இலங்கையின் வடகிழக்குப் பிராந்தியத்திலே, நான்கு குறுநிலப் பிரிவுகள் இருந்தன. திருகோணமலை, கட்டுக்குளம் பற்று, கொட்டியாரம் பற்று, தம்பலகாமம் பற்று என்பவையே அந்நான்கு பிரிவுகளுமாகும். அவற்றை வன்னிபம் என்ற பட்டம் பெற்றிருந்த தலைவர்கள் ஆட்சிபுரிந்தனர். ஆட்சியுரிமை பரம்பரை வழியிலானது. நான்கு வம்சங்களைச் சேர்ந்த வன்னியர் பலரின் பெயர்களைக் *கோணேசர் கல்வெட்டு* வரிசைப்படுத்தியுள்ளது. நான்கு வன்னிபங்களும் கோணேசர் கோயில் தொடர்பான ஆலய தர்மங்களோடு பந்தப்பட்டிருந்தனர்.

வன்னிபங்களின் தோற்றம் கோணேசர் கோயிற் பரிபாலனத்தின் அம்சமானதென்பது கோணேசர் கல்வெட்டின் கோட்பாடாகும். குளக்கோட்டன் மூலமாகவே வன்னிமைகள் தோன்றின என்று அந்நூல் கூறும். திருகோணமலை, கட்டுக்குளம் ஆகிய இரண்டு பிரிவுகளுக்குரிய வன்னிபங்களைக் குளக்கோட்டனே நியமித்தானென்று சொல்லப் படுகின்றது. திருகோணமலை வன்னிபம் பற்றிக் கோணேசர் கல்வெட்டு மேல்வருமாறு வர்ணிக்கின்றது:

*தானம் வரிப்பத்தென்னும் அரன் தொழும்பார்க்கு*
*இகலார் தர்க்கம் வந்தால்*
*மானபங்கமடையாமல் நடுத்தீர்ப்பதார் எனவே*
*மதுரையூர் சென்று*
*ஆனமதிக்குலராமன் தனியுண்ணாப் பூபாலன்*
*தனைக் கொணர்ந்து*
*தேனமர்பூந் தொடைமார்பன் திருக்கோண*
*நகரரசு செய்ய வைத்தான்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வைத்தபுகழ் வன்னிமையே நீதிசொல்வேன் மகத்தான*
*பாசுபத மறையோர் தங்கள்*
*சித்தமது நேராக நீதி சொல்வாய் சிவபூசை*
*முதலொழுக்கந் தவறினாலும்*
*குற்றமென்றே எண்ணி மிகக் கோபங் கொண்டால்*
*கோணமலை நாதரிடம் சொல்வார் சொன்னால்*
*சுற்றுமே பிரமகத்தி வங்கிஷ முற்றும்*
*தொகையாக மற்றவற்குச் சொல்வோம் குற்றம்.*

*சுத்தமிகு வன்னிமையே குற்றஞ்செய்தால் துலங்கு*
*விலங்கடி உயிருக்குயிரே வாங்கு*
*நிர்த்தமிடு மடவியர்கள் குற்றஞ் செய்தால்*
*நிறைபுனலில் நிறுத்திவைத்துத் தேங்காய் வாங்கு*
*மற்றை மதிநுதல் மடவார் குற்றஞ் செய்தால்*
*மண்கடகம் ஏற்றியடி வழக்கு நோக்கி*
*இத்தகைய இராசாங்கம் செய்நீ என்றே இரத்னமணி*
*ஆசனத்தில் இருத்திவைத்தான்.*

*வையமிகு வன்னிமையே இன்னும் கேளாய்*
*மனுநீதி தவறாதே கோபம் பாவம்*
*ஐயமற உன்தாரம் தாரமாகும் அயலவர்கள்*
*தாரமெலாம் தாயாராகும்*
*மெய்யை எடு பொய்யை விடு வன்மம் வேண்டாம்*
*வறுமையுள்ளோர்க்கு உதவிசெய்வாய் இகல் பண்ணாதே*
*மையனைய கண்டர் திருக்கோணைநாதர்*
*மகாபூசை திருப்பணியும் வழங்கச் செய்யே.*[1]

(1) வன்னிமையின் உற்பத்தி (2) வன்னிபம் பேண வேண்டிய தர்மங்கள். (3) நீதிபரிபாலனத் துறையில் வன்னிபத்துக்குரிய அதிகாரம், (4) கோணைநாதர் கோயில் தொடர்பாக வன்னிபத்துக்குரிய கடமைகள் ஆகிய நான்கு விடயங்கள் பற்றி மேற்கோளாக இங்கு காட்டப்படும் நான்கு பாடல்களும் குறிப்பிடுகின்றன. கோயிலார் மீது அதிகாரஞ் செலுத்துவதற்கும், அவர்களிடையே ஏற்படக்கூடிய தகராறுகளைத் தீர்ப்பதற்கும் வன்னிபம் என்னும் பதவி உருவாக்கப்பட்டதென்ற கருத்து முதலாவது செய்யுளிலே வலியுறுத்தப்படுகின்றது. வன்னிமையின் உற்பத்திபற்றிக் கோணேசர் கல்வெட்டுக் கூறும் விளக்கத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈரமிசங்கள் உள்ளன: ஒன்று அது தோன்றிய சூழ்நிலை பற்றியது; மற்றையது, வன்னிபத்தின் பிரதான அதிகாரங்களைப் பற்றியது. விசாரணை மன்றமாகிய நடு என்பதற்குத் தலைமைதாங்கி நீதிபரிபாலனம் பண்ணுவதும் திருகோணமலை நகரிலே அரசாங்கஞ் செய்வதும் வன்னிபத்தின் அதிகாரங்கள் என்று சொல்லப்படுகின்றது. இது தனது காலத்து வழமைகளின் அடிப்படையிலும் தேசவழமையின் அடிப்படையிலும் நூலாசிரியர் குறிப்பிடும் கருத்துகளாகும். அவை ஆதாரபூர்வமானவை என்பதில் ஐயமில்லை. ஆனால் வன்னிமையின் உற்பத்தி பற்றிய குறிப்பிலே சில பிரச்சினைகள் உள்ளன. வன்னிபமாக நியமனம் பெற்ற தனியுண்ணாப் பூபாலன் மதுரைநகரால் வந்தவன் என்று சொல்லப்படுவதால் கோணேசர் கல்வெட்டு சோழனாகிய குளக்கோட்டன் காலத்துக்குரியதாகப் பிற்காலத்திலே, பாண்டியரின் செல்வாக்கு நிலவிய காலத்தில் நடைபெற்றவொரு நிகழ்ச்சி பற்றிக் குறிப்பிடுகின்றதா? என்ற வினாவிற்கு இடமுண்டு. இவ்விடயத் தொடர்பாகப் பின்னர் கவனிப்போம்.

வன்னிபம் கோணேசர் கோயிலின் அர்ச்சகராகிய பாசுபதரான பிராமணர்கள் மீது மதிப்புடனும் பயபக்தியுடனும் நடந்துகொள்ள வேண்டும் என்று குளக்கோட்டன் அறிவுரை சொன்னான். அவர்கள் மீது நீதி தவறினால் பிரமகத்தி தோஷமானது முழுவமிசத்தையும் வந்தடையும் என்றும் எச்சரித்தான். நீதிபரிபாலனத்தைப் பொறுத்த வரையில் மனுநீதி பின்பற்றப்படல் வேண்டும்; நீதி பரிபாலனம் பண்ணுமிடத்துக் கோபதாபங்களைப் பொருட்படுத்துதல் தவிர்க்கப்படல் வேண்டும். குணசீலரான தகைமையைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

வன்னிபம் பிறர்மனை நாடாதிருத்தல் வேண்டும். மாற்றானின் மனையாளைத் தாய்போற் போற்றுதல் வேண்டும். பொய் பேசுவதையும் பொய்யான முறைப்பாடுகளையும் ஒதுக்க வேண்டும்; உண்மையானவற்றை ஆராய்ந்து அறிந்துகொள்ளுதல் வேண்டும். பழிவாங்கும் எண்ணங்கள் அறவே ஒழிக்கப்படல் வேண்டும். வறியவர்களைக் கருணையோடு நோக்குதல் வேண்டும். மரண தண்டனை வழங்குவதற்கும் வன்னிபத்திற்கு அதிகாரமுண்டென்று சொல்லப்படுகின்றது. குற்றத்திற்கு ஏற்பத் தண்டனை அமைதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். கொலை புரிந்தவர்களுக்கு மட்டுமே மரண தண்டனை வழங்க வேண்டும்.

கோயிலுக்குப் பந்தமான நடனம் புரியும் பெண்கள் தவறு செய்தால் அவர்களை நிறைந்த நீரிலே நிறுத்திவைத்துத் தண்டித்தல் வேண்டும். மற்றைய பெண்கள் குற்றஞ் செய்தால் அவர்களின் தலையிலே மண்கடகம் ஏற்றிவைத்து அடித்தல் வேண்டும். கோயிற் சேவகர் குற்றம் புரிந்தால் குற்றத்துக்கு ஒப்பான சவுக்கடி கொடுக்க வேண்டும் என்பது அவர்களுக்குரிய தண்டனையாகும். கோணைநாதர் கோயிலில் நித்திய, நைமித்திய கருமங்களையும் திருப்பணிகளையும் செவ்வனே நடப்பித்தல் வன்னிபத்திற்குரிய பிரதானமான பொறுப்பாகும். கோயில் தொடர்பான வழமைகளை அடிப்படையாகக் கொண்டு வன்னிபத்தின் உற்பத்தி, கடமைகள், அதிகாரங்கள் ஆகியன கோணேசர் கல்வெட்டில் விபரிக்கப்பட்டுள்ளன.

### கட்டுக்குளம்பற்று வன்னிபம்

கனகசுந்தரப் பெருமாள் என்னும் பட்டமும், ஆலயத்தில் முன்னீடும் கோயிற் கணக்குகளைப் பற்றிய பொறுப்பும் கட்டுக்குளம்பற்று வன்னிபத்தின் உரிமைகளாய் இருந்தன என்பது கோணேசர் கல்வெட்டிலுள்ள மேல்வரும் பகுதியினால் அறியப்படுகின்றது.
''இவை முதலான கோயிற் காரியங்களுள்ள பத்ததிக் கணக்கும் குளக்கோட்டு மகாராசா வளமைப் பத்ததியும், பெரிய கணக்கும் கல்வெட்டும், கோயிற்றொழும்பும் கதைவரலாறும் கோயிலுக்கு முன்னீடும் கட்டுக்குளப்பற்றும் நிலாவெளி நிந்தவூருமாக அந்தக்காலம் அடியேன் குடியிலுள்ளவர்க்குக் கிடைத்தபடியால்... அந்தக்காலம் முன்னோர்கள் எழுதி வைத்த பத்ததிப்படிக்குச் சொன்னதென்று கனகசுந்தரப்பெருமாள் சொன்ன வசனம்''[2]

கட்டுக்குளப்பற்று வன்னியனார் காராளர் குலத்தவர். கட்டுக்குளம்பற்று வன்னியனாரின் முன்னோரைப் பற்றிய வர்ணனை மெய்க்கீர்த்தி வடிவில் மேல்வருமாறு அமைந்துள்ளது:

*''வடக்குநாடன் திருநெல்வேலிக்கதிபதி*
*செங்குவளைத்தாரான் செந்நென்முடியினன்*
*அரசரோடு எதிர்த்து வாதுவென்றவன்*
*ஏருடன் மேழி இலங்கும் பதாகையான்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அன்னக்கொடியும் ஆவின் பெருக்கமும்*
*செந்நெற் குவியலும் திரவியக்குப்பையும்*
*நவமணிக் குவியலும் நாடொறுமிருக்க*
*மூவருக்கெளியான் மூவரைக் காப்பவன்*
*அன்னவன் மேன்மை அளவிடற் கரிதாம்''*

தனியுண்ணாப் பூபாலன் மதுரை நகரால் வந்த வன்னிபத்தின் வம்சா வழியினன்: கட்டுக் குளம்பற்று வன்னிபங்கள் 'வடக்கு நாடன் திருநெல்வேலிக்கதிபதி' என்பவனின் வழியில் வந்தவர்கள். இது மரபுவழியான ஐதிகங்களை அடிப்படையாகக் கொண்டு கவிராச வரோதயன் கூறுவது. பொதுவாக இவ்வாறான, வம்சாவழி பற்றிய ஐதிகங்களிலே தவறுகள் இடம் பெறுவதில்லை. வன்னிபங்கள் இருவரினதும் முன்னோர்கள் பாண்டி நாட்டவர்கள். எனவே இம்மரபுகளைச் சேர்ந்த வன்னிபங்களின் நியமனம் 13 ஆம் நூற்றாண்டிலே வட இலங்கையில் ஏற்பட்டிருந்த பாண்டியரின் மேலாதிக்கத்துடன் தொடர்புடையதாய் இருத்தல் கூடும் என்ற சிந்தனை எழுகின்றது.[4] இந்த அடிப்படையிலே சிந்திக்குமிடத்துத் திருகோணமலை வன்னிபங்களின் உற்பத்தி பற்றிய கோணேசர் கல்வெட்டுக் கூறும் விடயங்களை மீளாய்வு செய்ய வேண்டிய தேவை எழுகின்றது. சோழராட்சிக் காலத்திற்குரியனவும் வன்னிமையின் உற்பத்தி பற்றியனவுமான சில அம்சங்களும் வன்னிமைகளின் வரலாற்றில் வேறொரு கால கட்டத்திற்குரியனவுமான அம்சங்களும் கோணேசர் கல்வெட்டிற்கு ஆதாரமான மரபுகளிலே சங்கமமாகி விட்டன போலத் தெரிகின்றது. எனவே, தனியுண்ணாப் பூபாலன், திருநெல்வேலியால் வந்த காராளன் மரபிலுள்ள கட்டுக்குளம்பற்று வன்னிபம் ஆகியோரை ஆதியான வன்னிபங்கள் என்று கொள்வது பொருத்தமான ஒரு முடிவாகத் தெரியவில்லை. வன்னிபம் என்னும் பதவியினைப் பெற்ற புதிய வம்சங்களின் மூலவர்களாக மட்டுமே அவர்களைக் கொள்ளலாம்.[5]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடிக்குறிப்பு

1. *கோணேசர் கல்வெட்டு:* பதிப்பாசிரியர், பண்டிதர் இ.வடிவேல், 1993, ப.128., மேலது, செய்யுள்க ள் 11-14, ப.37-39.

2. *கோணேசர் கல்வெட்டு* பு.பொ.வைத்தியலிங்க தேசிகர் பதிப்பு,பருத்தித்துறை, 1916, ப.23.

3. மேலது, ப.36.

4. S.Pathmanathan, *The Kingdom of Jaffna*, pt.I, Colombo, 1978,pp.122-144; S.Pathmanathan, "Feudal Polity in Medieval Ceylon: An Examination of the Chieftaincies of the Vanni", *Ceylon Journal of Historical and Social Studies*, Vol. II (New Series) No.2, July&Dec. 1972, pp.118-130

   S.Pathmanathan, "The Vanniyar in Medieval South India", *Sri Lanka Journal of South Asian Studies*, No.2, (New Series 1987-88) University of Jaffna, 1987-88,pp.131-149.

   S.Pathmanathan, "Multiple Centres of Authority In Medieval Sri Lanka - The Principalities of the Vanni, *Reflections on A Heritage Historical Scholarship on Premodern SriLanka. History and Archaeology of Sri Lanka Volume I Part I Ed.* R.A.L.H.Gunawardhana, S.Pathmanathan, M.Rohanadheera, Central Cultural Fund, Ministry of Cultural and Religious Affairs, 1998, pp.209-201.

5. S.Pathmanathan, *The Kingdom of Jaffna* pt.I, pp.126-7.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்னிணைப்பு 2

# கோட்டை வாசல் தமிழ்க் கல்வெட்டு

இருபதாம் நூற்றாண்டு முடியும் வரை திருகோணமலைக் கோட்டையின் நுழைவாசற் புறத்துச் சுவரொன்றிலே ஒரு கல்வெட்டு அமைந்திருந்தது. அதன் மேற்புறத்தில் இணைக்கயல் வடிவம் செதுக்கப்பட்டிருந்தது. இங்குள்ள கல்வெட்டைப் போன்று இலங்கையிலுள்ள வேறெந்தக் கல்வெட்டும் பொதுமக்களின் கவனத்தைப் பெறவில்லை. எல்லோரும் காணக்கூடிய வகையிலும் அவர்களைக் கவரக்கூடிய வகையிலும் கல்வெட்டு அமைந்திருந்தது. இதனைக் குளக்கோட்டன் கல்வெட்டென்று குறிப்பிடுவது வழமையாகிவிட்டது. ஆனால் இப்பொழுது கல்வெட்டைக் காணமுடியவில்லை. தாரினைப் பூசி யாரோ மறைத்துவிட்டார்கள்.

இது, முன்பு தொல்பொருள் திணைக்களத்து ஆணையாளர் சிலரின் கவனத்தைப் பெற்றிருந்தது. அவர்களும் இச்சாசனத்தின் முக்கியத்து வத்தைக் கருத்திற் கொண்டு அதனைப்பற்றித் தங்கள் விளக்கங்களை வெளிப்படுத்தினார்கள். ஆயினும், இப்பொழுதுள்ள குறிப்பிட்ட திணைக்களத்து அதிகாரிகள் இக்கல்வெட்டைப் பாதுகாக்கத் தவறி விட்டமை வியப்பிற்குரியதாகும். குளக்கோட்டன் கல்வெட்டு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தொல்பொருட் சின்னமாகும். அதிலே குளக்கோட்டன் செய்த திருப்பணி குறிப்பிடப்பட்டுள்ளது. அவனுடைய திருப்பணி திருக்கோணேஸ்வரத் திருப்பணி என்பது ஈழத்துச் சைவர்கள் யாவரும் அறிந்த விடயமாகும். அது நெடுங்காலம், தலைமுறை தலைமுறையாக வந்த ஐதிகம். அது வரலாற்றம்சமானது என்பதும் பழைமையான பல நூல்களிலுள்ள குறிப்புகளினால் நிரூபணமாகின்றது. குளக்கோட்டனின் திருப்பணியைப் பறங்கியர் அழித்தமை பற்றியும் இக்கல்வெட்டிலே சொல்லப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாசனமெழுதிய தூண் ஒரு பெருந்தூணின் துண்டமாகும். அதன் இரு பக்கங்களும் வெட்டப்பட்டுள்ளமையால் சிலவிடங்களில் முழு எழுத்துகளும் வேறுசில இடங்களில் உயிர்மெய் எழுத்துக்களின் பகுதிகளும் மறைந்துவிட்டன. எஞ்சியுள்ள எழுத்துகள் சிலவற்றிலே சிதைவுகளும் ஏற்பட்டுள்ளன.

எச்.டபிள்யூ.கொட்றிங்றன் (II.W.Codrington) இக்கல்வெட்டின் எஞ்சியுள்ள பகுதியை மேல்வருமாறு வாசித்துள்ளார்.

1. (மு)ன்னே குள
2. கோட்டன் மூட்டு
3. (தி)ருப்பணியை
4. (பி)ன்னே பறங்கி
5. (பிடி)க்கவே மன்னா
6. பொண்ணா
7. (னா)ன யியற்(று)
8. (தே)த வைத்
9. (ன்)னா.....
10. ....... கள்.

இதிலுள்ள முதலாறு வரிகளின் வாசகம் பொருத்தமாயுள்ளது. அவற்றின் பொருளும் ஒருவாறு தெளிவாயுள்ளது. ஏழாம் எட்டாம் வரிகள் அவ்வளவு தெளிவில்லை.

முதலியார் இராசநாயகம் இக்கல்வெட்டைப் படித்துச் சற்று வேறுபட்ட ஒரு வாசகத்தை மேல்வருமாறு அமைத்துள்ளார்.

1. (மு)ன்னே குள(க்)
2. (கே)காட்டன் மூட்டு(ந்)
3. (தி)ருப்பணியை(ப்)
4. (பி)ன்னே பறங்கி (பி)
5. ரிக்கவே மன்ன(வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. (பி)ன் பொண்ணா (த)
7. (த)னை யியற்ற (வழி)
8. (த்)தே வைத்(து)
9. (எண்ணா (ரேபின்
10. ரைசர்)கள்.[2]

இந்த வாசகம் குறிப்பிடத்தக்க அளவிற் சாசனத்தின் பொருளை விளங்கிக் கொள்வதற்கு உதவியாகின்றது. இனி, இங்கு இச்சாசனம் பற்றி ஆய்வாளர் சொல்லிய கருத்துக்களைக் கவனிப்பது அவசியமாகும்.

> ''இக்கல்வெட்டின் வரிவடிவங்களின் அடிப்படையில் இதனைப் பதினாறாம் நூற்றாண்டுக்குரிய ஆவணமாகக் கொள்ளலாம். அதன் மேலமைந்ததும் பாண்டியரின் சின்னமானதுமாகிய இணைக்கயல் வடிவம் கல்வெட்டைக் காட்டிலும் காலத்தால் முற்பட்டது. பதினாறாம் நூற்றாண்டிலே பாண்டியப் பேரரசு மறைந்துவிட்டது. பதின்மூன்றாம் நூற்றாண்டிற் பாண்டியர் இலங்கையுடனும் திருகோணமலையிலும் நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்தியிருந்த காலத்தில் அது செதுக்கப்பட்டிருக்க வேண்டும்''

என்பது கிருஷ்ண சாஸ்திரியின் கருத்தாகும். இணைக்கயல் வடிவமும் கல்வெட்டும் வெவ்வேறு காலங்களுக்குரியவை. இணைக்கயல் வடிவம் 13 ஆம் நூற்றாண்டுக்குரியது என்பது ஒரு தெளிவான சிந்தனை. வேறு அறிஞர்களும் இதே கருத்தை முன்வைத்துள்ளனர்.

ஸேனரத் பரணவிதான மேல்வருமாறு எழுதுகிறார்:

> ''திருகோணமலைக் கோட்டை வாசலில் வைத்துக் கட்டப்பட்டிருக்கும் ஒரு துண்டமான கல்லில் இரண்டு மீன்களின் வடிவத்தின் கீழே பொறிக்கப்பட்டுள்ள சாசனம் சில சமயங்களில் யாழ்ப்பாண வைபவ மாலையிற் கூறப்படும் தீர்க்கதரிசன வசனத்தோடு ஒப்பிடப்படுகின்றது. இந்தக் கல்வெட்டிற் பறங்கி என்ற சொல் காணப்படுவது உண்மை ஆயினும் கல்வெட்டு 16 ஆம் நூற்றாண்டுக்குரிய வரிவடிங்களில். எழுதப்பட்டுள்ளது. அது போர்த்துக்கேயர் வந்த பின்பே எழுதப் பட்டது.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைக்கயல் வடிவத்திற்கும் கல்வெட்டுக்கும் எதுவிதமான தொடர்பும் இல்லையென்று, முன்பு தொல்பொருள் திணைக்களத்து ஆணையாளராகவிருந்த சி.ஈ. கொடகும்புறவும் கருதினார். முன்பு கயல்வடிவம் பொறித்திருந்த கல்லிற் பதினாறாம் நூற்றாண்டிலே கல்வெட்டைப் பொறித்தார்கள் என்பதே அவரின் கருத்தாகும்.

**சேதுராமனின் நவமான சிந்தனை**

இக்கல்வெட்டுப் பற்றிய ஆய்வு முயற்சிகளில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தும் சேதுராமன், சாசனம் பற்றி மேல்வருமாறு விளக்குகின்றார்:

கோட்டைக்குப் போகும் பிரதானமான வாயிலின் வலப்பக்கத்தில், இரண்டு மீன் வடிவங்களின் கீழே ஒரு கல்வெட்டு உள்ளது. அதற்கு நேரே எதிர்ப்புறத்தில் இரண்டு மீன் வடிவங்கள் காணப்படுகின்றன. ஆனால், அவை, வேலைப்பாட்டில், முன்னே குறிப்பிட்ட வடிவங் களைக் காட்டிலுந் தரங்குறைந்தவை. வலப்பக்கத்திலே காணப்படும் கல்வெட்டு பெரிய கோயிலிலிருந்து எடுத்துவரப்பட்டது என்பது அங்கு வாழும் மக்களிடையே நிலவிவருகின்ற ஐதிகமாகும். அதில் மேல்வரும் தீர்க்க தரிசனமான வாசகம் அடங்கியுள்ளதென்றும் கொள்ளப்படுகின்றது.

*'முன்னே குளக்கோட்டன் மூட்டு திருப்பணியை*
*பின்னே பறங்கி பிடிக்கவே மன்னாகேள்*
*பூனைக்கண் செங்கண் புகைக்கண் போனபின்*
*மானேவடுகாய் விடும்.'*

இந்த செய்யுளுக்கும் குளக்கோட்டன் கல்வெட்டுக்கும் இடையில் ஒற்றுமை வேற்றுமைகள் காணப்படுகின்றன. இரண்டிலும் அமைந்துள்ள முதற்பாகத்து வரிகள் ஒரேவிதமானவை. செய்யுளிலுள்ள மூன்றாம் நான்காம் வரிகளிற் சொல்லப்படுவன கல்வெட்டில் இல்லை. செய்யுள் கர்ணபரம்பரையாக வந்தது, அதன் காலத்தை நிர்ணயம் செய்வதற்கு வழியில்லை. கல்வெட்டிலே பூனைக்கண், செங்கண், புகைக்கண், வடுகு என்பன பற்றி எதுவிதமான குறிப்பும் இல்லை. செய்யுள் வருங்கால நிகழ்ச்சிகளைப் பற்றிக்கூறுமாப்போல அமைந்துள்ளதால் அதனை ஒரு தீர்க்கதரிசன வாசகம் என்று பலரும் கருதுவாராயினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது தீர்க்க தரிசனம் அன்று. பௌராணிக மரபிலே வருங்கால நிகழ்ச்சியாகச் சென்ற காலத்து நிகழ்ச்சிகளைப் பாடியுள்ளனர். மகாபுராணங்களில் வம்சாவளிப் பகுதிகளிலே முற்கால அரச வம்சங்களில் உள்ளவர்களின் பெயர்களை வருங்காலத்தில் ஆளப் போகின்ற மன்னர்களாகக் கிரம வரிசையில் அவ்வாறுதான் சொல் வார்கள். மௌரியப் பேரரசர்கள், சாதவாகன மன்னர்கள் ஆகியோர் கி.பி. மூன்றாம் நூற்றாண்டுகளுக்கு முன் ஆட்சி புரிந்தவர்கள். ஆயினும் கி.பி. மூன்றாம் நூற்றாண்டுக்குப் பின், பெரும்பாலும் குப்தப் பேரரசரின் காலத்தில் (கி.பி.320-550) எழுந்தனவான *வாயுபுராணம், விஷ்ணுபுராணம்* போன்ற நூல்களில் அந்த வம்சங்களின் அரசர்கள் வருங்காலத்தில் அரசு புரிவார்கள் என்ற தொனியில் எழுதப்பட் டுள்ளது. இதன் அடிப்படையில் நோக்குமிடத்து குளக்கோட்டன், பறங்கியர் என்போரைக் குறிப்பிடும் பாடல் ஒரு தீர்க்கதரிசன வாச கம் என்ற கருத்து தகர்ந்துவிடுகின்றது. அது சென்ற கால நிகழ்ச்சி களைப் பற்றிய ஒரு பாடலாகும்.

திருகோணமலையிற் காலக்கிரம வரிசையிற் பறங்கியர், ஒல்லாந்தர், பிரெஞ்சுக்காரர் ஆகியோரின் பிரசன்னம் ஏற்பட்டிருந்தது. அவர்களையே பூனைக்கண், செங்கண், புகைக்கண் என்ற கிரமவரிசையிற் பாடல் குறிப்பிடுகின்றது. வடுகர் என்பது தெலுங்கரைக் குறிக்கும். தெலுங்கு தேசம் தமிழகத்திற்கு வடக்கில் உள்ளதால் அங்குள்ளவர்களை வடுகரென்று தமிழகத்து மக்கள் குறிப்பிட்டனர். தெலுங்கு தேசத்துக்குப் போகும் பெருவழி வடுகுவழி என்று பழந்தமிழ் நூல்களிற் குறிக்கப்படுகின்றமை கவனித்திற்குரியது. தெலுங்கரான நாயக்க வம்சத்தாரின் ஆட்சி 18 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்டு 1815 வரையும் நிலைபெற்றது (கி.பி 1739- 1815). எனவே குறிப்பிட்ட செய்யுளை நாயக்கரின் ஆட்சிக்கு முற்பட்டதென்று எந்தவகையிலும் கொள்ளவியலாது.

பொதுவழக்காக, செவிவழியாக வந்த பாடலைக் குளக்கோட்டன் கல்வெட்டுடன் தொடர்புபடுத்துவதால் சேதுராமன் ஒரு பொறியிற் சிக்கிவிடுகின்றார். அத்துடன் அவர் இந்தக் கல்வெட்டை இலங்கை மீதான விஜயநகரப் படையெடுப்பு ஒன்றினைப் பற்றிய கதையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையில் விளக்க முயற்சிக்கின்றார். அக்கதை *சிங்கள த்வீப கதா* என்னும் நூலில் அடங்கியுள்ளது.

திருகோணமலைக் கோட்டையிலுள்ள மீன் சின்னமும் கல்வெட்டும் ஒரே காலத்தவை என்பது அவருடைய கருத்தாகும். இதற்கு ஆதாரமாக அவர் மதுரை நாயக்கர் வழங்கிய நாணயங்களை ஆதாரமாகக் கொள்கிறார். நாயக்கர்களின் நாணயங்களில் மீனுருவங்கள் காணப்படுகின்றன என்கின்றார். பாண்டியர் சின்னமான மீனுருவங்களை அவர்களும் பயன்படுத்தியுள்ளார்கள். எனவே, குளக்கோட்டன் கல்வெட்டிலுள்ள மீனுருவங்களை நாயக்க மன்னனின் படைகள் இலங்கையில் வெற்றியீட்டிய பொழுது அவை பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பது அவரின் கருத்து. அதற்கு ஆதாரமாகச் சிங்கள த்வீப கதாவின் கதையினையும் அவர் ஆதாரமாகக் காட்டுகின்றார். அந்தக் கதை கிருஷ்ணப்ப நாயக்கர் இலங்கைமீது படையெடுத்து, அங்குள்ள அரசனொருவனை வெற்றிகொண்டமையினை வர்ணிக் கின்றது. அதன் கதையை இங்கு முழுமையாகச் சொல்லப் போகின் இக்கட்டுரை மிகவும் விரிவுபெறும் என்பதால் அதன் சாராம்சங்களை மட்டும் இங்கு சுருக்கமாக நிரல்படுத்தலாம்.

- ★ தம்பிச்சிநாயக்கரின் நண்பனாகிய கண்டியரசன் கிருஷ்ணப்ப நாயக்கரை அவதூறாகப் பேசிவிட்டான். (இது தம்பிச்சி நாயக்கர் கொல்லப்பட்ட பின் நடைபெற்றது).
- ★ இதனாற் கோபாவேசம் அடைந்த நாயக்கர் தனது 52 பொளி கரையும் அவர்களின் படைகளையும் அழைத்து இலங்கை மீது படையெடுத்துச் சென்றான்.
- ★ அந்தப் படை மன்னாரை அடைந்தது. கண்டியரசன் திறை செலுத்துவதற்கும் மேலாதிக்கத்தை ஒப்புக் கொள்வதற்கும் மறுத்துவிட்டான்.
- ★ நாயக்கர் படையின் தலைவனான சின்னகேசவ நாயக்கர் மன்னனைப் போரிலே தோற்கடித்துவிட்டான். இரண்டு அமைச்சர் களையும் ஐந்து பிரதானிகளையும் சிறைப்பிடித்தான். அவர்களை உரியவாறு கௌரவமாக நடத்தினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சிறைப் பிடிக்கபட்டோர் சமாதானஞ் செய்யுமாறு தங்கள் அரசனை வேண்டினார்கள். அவன் அதற்கு இணங்கவில்லை.

★ அதனாற் பெரும் போர் மூண்டது. கண்டி அரசனுக்குப் பேரழிவுகள் ஏற்பட்டன. ஆயினும் அவனை உயிரோடு பிடிக்கமுடியவில்லை. அவனின் சடலத்தையே அவர்களாற் கைப்பற்ற முடிந்தது. அரச னின் குடும்பத்தவரை அநுராதபுரத்துக்கு அனுப்பினார்கள்.

★ கிருஷ்ணப்ப நாயக்கர் தனது மைத்துனரான கோபால நாயக்கரை இலங்கையிலே தனது அரசப் பிரதிநிதியாக நியமித்தான்.

இவற்றின் அடிப்படையிலே சேதுராமன் தனது கருத்துக்களை மேல் வருமாறு முன்வைக்கிறார்:

> இக்கால வரலாற்று அம்சங்களோடு தொடர்புபடுத்திப் பார்க்கு மிடத்தும் அவை இக்கால நிகழ்ச்சிகளைப் படம்பிடித்துக் காட்டு கின்றன என்பதும் தவறாகாது

இலங்கைக்கு எதிராகக் கிருஷ்ணதேவராயரும் அச்சுதராயரும் வெவ்வேறு படையெடுப்புகளை நடத்தியிருக்கலாம். இந்தப் படையெடுப்புகள் விஸ்வநாத நாயக்கரின் தலைமையில் நடைபெற்றன. அவனே இப்போர்களின் பெருவீரனாவான். அவனே கடுமையான பிரயத்தனங்களினால் போர்த்துக்கேயரையும் பின்பு ஒல்லாந்தரையும் வெளியேற்றி விட்டு இலங்கையில் தெலுங்கரின் ஆட்சியை ஏற்படுத் தினான். தஞ்சாவூர் நாயக்கரான, ரகுநாத நாயக்கர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிவிட்டு போர்த்துக்கேயரையும் வெற்றிகொண்டதாக *ரகுநாதாப்யுதயம்* என்னும் நூல் குறிப்படுகின்றது.

இக்கருத்துக்கள் ஈழத்துத் தமிழ் நூலான கோணேசர் கல்வெட்டின் மூலம் உறுதியாகின்றது. அது தெலுங்கர்கள் போர்த்துக்கேயரையும் ஒல்லாந்தரையும் வெளியேற்றிவிட்டு தங்கள் ஆட்சியை ஏற்படுத்திக் கோணேசர் கோயிலில் மீண்டும் வழிபாடுகள் நடைபெற ஏற்பாடுகள் செய்வார்களென்று குறிப்பிடுகின்றது. ஃப்றெடெறிக் கோட்டையிலுள்ள கல்வெட்டும் கோணேசர் கல்வெட்டுப் பாடல்களும் தீர்க்கதர்சன வாசகங்களன்று. அவை உண்மையாக நடந்த சம்பவங்களைத் தீர்க்க தரிசனங்ளென்று கொள்ளத்தக்க வகையிலே குறிப்பிடுகின்றன. .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலைச் சாசனமும் கோணேசர் கல்வெட்டுப் பாடல்களும் தீர்க்கதரிசனங்களல்ல என்ற சேதுராமனின் கருத்து அறிவியல் அடிப்படையில் ஒப்புக்கொள்ளக் கூடியது. திருகோணமலையிலே காணப்படும் பாடலும் கோணேசர் கல்வெட்டும் குறிப்பிடும் வடுகர் என்போர் மதுரைநாயக்கர் என்று கொள்வதற்கு எதுவிதமான ஆதாரமும் இல்லை. மதுரை நாயக்கர் 16ஆம் நூற்றாண்டில் இலங்கையிலுள்ள கண்டியரசன் ஒருவனுக்கு எதிராகப் படையெடுத்துச் சென்றமை பற்றி இலங்கையிலுள்ள இலக்கியங்களில் எதுவிதமான குறிப்பும் இல்லை

கோட்டை வாசலிலுள்ள குளக்கோட்டன் கல்வெட்டில் வடுகர் என்ற சொல் காணப்படவில்லை. வடுகரைப் பற்றிக் குறிப்பிடாத சாசனத்தை அவர்களைப் பற்றியதென்று கொள்வது எவ்வாறு பொருந்தும்? முன்னே குறித்த செய்யுளின் மூன்றாம் நான்காம் வரிகளிலுள்ள பூனைக்கண் செங்கண் புகைக்கண் போன பின் மானே வடுகாய் விடும் என்ற விபரங்களில் வடுகர் என்பது இலங்கையின் மத்திய பகுதியிலே 18ஆம் நூற்றாண்டில் அதிகாரம் பெற்ற தெலுங்கரான நாயக்கரையே குறிக்கும். ஆனால் இவ்வாறு கொள்வதிலும் ஒரு பிரச்சினை உண்டு. கண்டியில், நாயக்க வம்சத்தவர் ஆட்சி புரிந்த காலத்தில் திருகோணமலைக் கோட்டை ஒல்லாந்தர் வசமிருந்தது. ஆனால் செவிவழியாக வந்த பாடலை ஒரு ஆதாரபூர்வமான சான்றாகக் கொள்ள முடியாது.

திருகோணமலைக் கச்சேரியிலே தொழில் புரிந்தவர்கள் குளக்கோட்டன் கல்வெட்டின் முதலிரு வரிகளிலுமுள்ள சொற்களை அடையாளங்காண முடிந்திருக்கும். இறுதியிலுள்ள பாகம் தெளிவற்றிருந்ததால் அவர்களால் அவற்றைப் படித்திருக்க முடியாது. எனவே, குளக்கோட்டன் கல்வெட்டிலுள்ள முன்னே குளக்கோட்டன் மூட்டு திருப்பணியைப் பின்னே பறங்கி பிரிக்கவே என்பவற்றை முதலிரு வரிகளாகக் கொண்டு யாரோ இறுதியான வரிகளைத் தானாகவே இயற்றி ஒரு பாடலாக்கி விட்டார். இதுவே பாடலைப் பற்றிய பொருத்தமான விளக்கமாகும்.

குளக்கோட்டன் கல்வெட்டு வெண்பா வடிவிலான ஒரு செய்யுளாகும். அதன் வரிவடிவங்கள் 16ஆம் நூற்றாண்டுக்குரியவை என்றே அதனை ஆராய்ந்தவர்கள் எல்லோருங் கருதினர். அவர்களுடைய இக்கருத்தை ஒரு சுருதிப் பிரமாணமாகக் கொள்ள வேண்டியதில்லை. இக்கல்வெட்டைப் 17ஆம் நூற்றாண்டுக்குரியதாகக் கொள்ளுமிடத்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனைப் பற்றிய புரிந்துணர்வு ஒரு புதிய பரிமாணத்தைப் பெறும். கல்வெட்டின் இறுதிப் பகுதியை *மன்னவ ஒண்ணாததனை இயற்றார் வருவேந்தர்கள்* என்று கொள்ளுமிடத்து ஒருவாறு கல்வெட்டு அமைக்கப்பட்ட சூழலைப் பற்றி - அறிவியல் பூர்வமாக நோக்கலாம்.

அக்கல்வெட்டு கோணேசர் கோயிலில் இருந்தவொரு கல்வெட் டென்று கொள்வது அறிவியலுக்கு முரண்பட்ட சிந்தனையாகும். கோயிலைப்பறங்கியர் தகர்ப்பார்கள் என்ற தொனியில் அமைந்த வாசகத்தைக் கோணேசர் கோயிலிற் சாசனவடிவில் அமைத்திருக்கவியலாது. அவ்வாறு நடந்திருப்பின் ஆலயபரிபாலனஞ் செய்தவர்கள் எல்லோரும் குணபேதமானவர்கள் என்று தான் கொள்ள வேண்டும்.

பறங்கியர் வந்த பின்பும் அவர்களால் 1624 இல் கோயில் இடித் தழிக்கப்பட்ட பின்புதான் குளக்கோட்டன் கல்வெட்டு அமைக்கப் பட்டிருத்தல் வேண்டும். இதன் அடிப்படையில் நோக்குமிடத்து இக் கல்வெட்டு 17ஆம் - நூற்றாண்டிலேதான் எழுதப்பட்டிருக்க வேண்டும். கி.பி 1624 இல் போர்த்துகேயர் திருக்கோணேஸ்வரத்தை முற்றாக இடித்தழித்துவிட்டு அதன் அழிபாடுகளைப் பயன்படுத்திக் கோட்டை கட்டினார்கள். இக்கோட்டை 1638 ஆம் ஆண்டு ஒல்லாந்தராற் கைப் பற்றப்பட்டது. அக்காலத்தில் கண்டி அரசனாகிய இரண்டாம் இராஜ சிங்கனுக்கும் ஒல்லாந்தருக்குமிடையில் உடன்படிக்கை ஏற்பட்டிருந்தது. அரசனின் சார்பிலே கிழக்கிலங்கை வன்னிபங்கள் தரைவழியாகப் படைகளை நகர்த்தி கோட்டையை முற்றுகை செய்தனர். கடல்வழியாக ஒல்லாந்தர் நடத்திய குண்டுமாரிக்கு இலக்காகி விட்ட போர்த்துக்கேயர் சரணடைந்தனர்.

கைப்பற்றுங் கோட்டைகளை அரசனிடம் கொடுக்க வேண்டு மென்பது உடன்படிக்கையின் ஒரு நிபந்தனை. ஆயினும் கோட்டையினை அரசனிடம் கையளிக்க விரும்பாத போதும் ஒல்லாந்தர் 1639 ஆம் ஆண்டு அதனை அரசனுக்குக் கொடுத்தார்கள். கண்டியரசனின் சார்பிலே சென்ற படைகளாற் கோட்டை. இடிக்கப்பட்டது. அந்தச் சமயத்திலே தான் வன்னியர்களின் படைத்தலைவர்கள் குளக்கோட் டன் கல்வெட்டைப் பொறித்தார்களென்று கருதலாம். கோட்டை தொடர்பான முற்பட்ட காலத்து வரலாற்று அம்சங்களைக் கூறிவிட்டு, மேல்வருங் காலங்களிலே அரசர் தகாதனவற்றை (ஒண்ணாததனை) இயற்றார் வருவேந்தர்களென்று எழுதினார்கள் போலத் தெரிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த விளக்கத்தின் அடிப்படையில் நோக்குமிடத்து இக்கல்வெட்டு வரலாற்றுச் சிறப்புடையதாக அமைகின்றது. அது ஒரு வெற்றித் தூண் போலானது.

## கல்வெட்டின் கயல்வடிவங்கள்

இணைக்கயல்கள் பாண்டியரின் இலச்சினை. அவர்களுடைய நாணயங்களிலும் குறிப்பாகச் செப்பேடுகளிலும் அவை பொறிக்கப்பட்டிருக்கும். குளக்கோட்டன் கல்வெட்டிலுள்ள மீன்சின்னங்கள் பாண்டியராற் பொறிக்கப்பட்டவை என்றும் கல்வெட்டிற்கும் அவற்றுக்கும் எதுவித தொடர்பும் இல்லையென்றும் ஆய்வாளரிற் பலருங் கருதினர். இதனைப் பற்றிய சேதுராமனின் கருத்து புறநடையாகி விடுகின்றது. ஆனால் அவருடைய வாதங்கள் வலுவற்றனவாகும். அவர் மேல்வருமாறு எழுதுகின்றார்.

> இக்கல்வெட்டினையும் கோணேசர் கல்வெட்டுப் பாடல்களையும் தமிழ்நாட்டு நிலைகளிலிருந்து நோக்குவோம். இரு மீன் வடிவங்கள், பதினாறாம் நூற்றாண்டுக்குரிய வரிவடிவங்கள், தெலுங்கர் ஆட்சி பற்றிய குறிப்புகள் ஆகியன மீன் சின்னங்களைக் கொண்டிருந்த தெலுங்கு அரசரொருவரோ நாயக்கர் ஒருவரோ ஐரோப்பியப் படையெடுப்பாளரைத் துரத்தியபின் இக்கல்வெட்டைப் பொறித்திருக்க வேண்டும்.
>
> அந்த அரசன் யார்? திருநெல்வேலி மாவட்டத்துக் குற்றாலத்திற் கிடைத்த நாணயம் ஒன்றின் மூலம் இதற்குப் பதில் கிடைக்கின்றது. அதன் முன்புறத்திலே மீன் சின்னமும் அதற்கு மேலே பாண்டியன் என்ற சொல்லுங் காணப்படுகின்றன. பின்புறத்தில் விஸ்வநாதன் என்ற பெயர் எழுதப்பட்டுள்ளது.
>
> இதிற் காணப்படுஞ் சொற்கள் 16ஆம் நூற்றாண்டு வரிவடிவங்களில் அமைந்துள்ளன. இந்த நாணயம் கி.பி 1510 -1564 ஆகிய காலப்பகுதியில் மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த விஸ்வநாத நாயக்கரால் வெளியிடப்பட்டது. இந்தப் பின்னணியிலே ஃப்றெடறிக் கோட்டையில் உள்ள தமிழ்க் கல்வெட்டையும் கோணேசர் கல்வெட்டுப் பாடலையும் நோக்குமிடத்து விஸ்வநாத நாயக்கரான தெலுங்கு அரசனே போர்த்துக்கேயரையும் பின்பு ஒல்லாந்தரையும் தோற்கடித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரை கவனித்த சேதுராமனின் வாதங்கள் குழப்பமானவை. வரலாற்றுக்கு முரண்பட்டவை.

குற்றாலத்திலே கிடைத்த நாணயமொன்றின் அடிப்படையில், மதுரை நாயக்கர்கள் மீன் சின்னத்தைத் தங்கள் பொதுவான அரச சின்னமாகக் கொண்டவர்கள் என்ற சிந்தனையை மறைமுகமாக முன்வைக்கின்றார். ஆனால் மதுரை நாயக்கர் வெளியிட்ட நாணயங்களிலே பலவகையான சின்னங்கள் காணப்படுகின்றன. விஸ்வநாத நாயக்கர் தன்னைப் பாண்டிநாட்டு அரசனென்று கருதியதால் பாண்டியன் என்ற வம்சப் பெயரையும் பாண்டியரின் குலசின்னமாகிய மீனுருவங்களையும் பொறித்த காசுகளை வெளியிட்டமை வியப்பிற்குரியதன்று. ஒரு நாணயத்திற் காணப்படும் சின்னங்களின் அடிப்படையில் அது ஒரு பொது வழமையென்று கருதவியலாது.

*சிங்களத்வீப கதா* சொல்லும் கிருஷ்ணப்ப நாயக்கரோடு தொடங்கும் சேதுராமன் தனது கட்டுரையினை விஸ்வநாத நாயக்கரோடு முடிக்கின்றமை விந்தையானது. விஸ்வநாத நாயக்கரின் காலம் யாழ்ப்பாணத்திற் சங்கிலி மன்னன் ஆட்சி புரிந்த காலம் (1519-1561). அவனுடைய நெருங்கிய உறவினரான வன்னியனார் திருகோணமலையில் ஆட்சி புரிந்தார். அக்காலத்திலே போர்த்து க்கேயரோடு போர்கள் ஏற்பட்ட பொழுதிலும் -- திருகோணமலையினை அவர்கள் கைப்பற்றவில்லை. ஆயினும் 1624 ஆம் வருடம் அவர்கள் கோயிலைக் கைப்பற்றினார்கள். அவர்கள் அமைத்த கோட்டையை ஒல்லாந்தர் 1638இலே கைப்பற்றினார்கள். தனது கருத்துக்களை முன்வைக்குமிடத்து கணித மேதையான சேதுராமன் காலவரன்முறை பற்றிச் சிந்தித்திருத்தல் வேண்டும். இதுவரை கவனித்தவற்றிலிருந்து குளக்கோட்டன் கல்வெட்டினைப் பற்றி அவர் கூறிய விடயங்கள் பொருத்தமற்றவை என்பது தெளிவாகின்றது. ஆயினும் இச்சாச னத்தின் வாசகம் தீர்க்கதரிசனமன்று என்னும் அவருடைய கருத்து மிகவும் பொருத்தமானது.

இச்சந்தர்ப்பத்திலே கல்வெட்டின்மேற் காணப்படும் இணைக்கயல் வடிவம் பற்றிக் கவனஞ் செலுத்துவது அவசியமாகின்றது. இணைக்கயல் வடிவமே பாண்டியரின் அதிகார பூர்வமான அரசியற் சின்னமாகும். அவர்கள் வழங்கிய செப்புப் பட்டயங்கள் எல்லாவற்றிலும் அது பதிக்கப்பட்டிருக்கும். சென்னையிலுள்ள, தமிழ்நாட்டுத் தொல்லியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணைக்களத்தின் அருங்காட்சியகத்தில் அவ்வாறான பல செப்பேடு களைக் காணலாம், பதின்மூன்றாம் நூற்றாண்டிலே சோழநாடு, தொண்டை நாடு ஆகியவற்றின் மீது படையெடுத்துச் சென்ற பாண்டியர்கள் அங்குள்ள கோபுரங்கள் சிலவற்றிலே தங்கள் குலச் சின்னமான இணைக்கயல் வடிவத்தினைப் பொறித்துள்ளனர்.

''பதின்மூன்றாம் நூற்றாண்டிற் பாண்டியப் பேரரசர் பலமுறை இலங்கை மீது படையெடுத்தனர். அவற்றின் விளைவாக இலங்கையின் வட, வடகிழக்குப் பகுதிகளிலே சாவகர் ஏற்படுத்தியிருந்த இராச்சியத் தின் மீது அவர்களின் மேலாதிக்கம் ஏற்பட்டிருந்தது.''[12] அங்கு தனது அதிகாரத்தை நிலைநாட்டிக் கொண்ட சாவகனான சந்திரபானு, திறை செலுத்துவதை நிறுத்திப் பகைமைச் செயல்களில் ஈடுபட் டதால் ஜடாவர்மன் வீரபாண்டியன் இலங்கைமீது படையெடுத்துச் சென்று, போரிலே சந்திரபானுவைக் கொலை செய்தான். அதன் பின், அவன் ஆட்சிபுரிந்த இராச்சியத்தில் நிர்வாகத் தொடர்புகளை ஏற்படுத்தினான். அவன் வெற்றிச் சின்னங்களாகக் கோணவரையிலும் திரிகூடகிரியிலும் இணைக்கயல் பொறித்தான். இதனை அவனது இலங்கைப் படையெடுப்புத் தொடர்பான விபரங்களை வர்ணிக்கும் குடுமியான்மலைக் கல்வெட்டிலுள்ள மேல்வரும் பகுதியினால் அறிய முடிகின்றது.

> ''*காணா மன்னவர் கண்டு கண்டேங்க*
> *கோணாமலையினுந் திரிகூடகிரியினும்*
> *உருகெழு கொடிமிசை இருகயலெழுதி*''

தமிழ்நாட்டுத் திருத்தலங்களிற் போல திருக்கோணேஸ்வரத்திலும் பாண்டியர்கள் இணைக்கயல் வடிவத்தைப் பொறித்தனர் என்று கருதலாம். அந்த வடிவம் பொறிக்கப்பட்ட கல்லே கோட்டை வாசலிற் காணப்படுவது. இதுவரை கவனித்தவற்றை இங்கு சுருக்கமாகக் குறிப்பிடுவது அவசியமாகின்றது.

★ கோட்டை வாசலில் அமைந்திருந்த சாசனத்துக்கும் இணைக்கயல் வடிவத்திற்கும் தொடர்பில்லை. அவை வெவ்வேறு காலங்களுக்குரியவை.

★ கயல் வடிவங்கள், 13 ஆம் நூற்றாண்டிற் பொறிக்கப்பட்டவை. கல்வெட்டு 17ஆம் நூற்றாண்டிற்குரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ இலங்கையில் இதுவரை கிடைத்துள்ள சாசனங்களிற் குளக்கோட்டனைப் பற்றி இது மட்டுமே குறிப்பிடுகின்றது. திருக்கோணேஸ்வரத்தின் புனருத்தாரணம் குளக்கோட்டனது திருப்பணியாகும் என்ற சிந்தனை கல்வெட்டு எழுதப்பட்ட காலத்தில் மக்கள் மனங்களில் வலுவூன்றிவிட்டது.

★ இக்கல்வெட்டு 1639இல் கண்டி அரசனின் கட்டளைப்படி பறங்கியரின் கோட்டை இடிக்கப்பட்ட பொழுது பொறிக்கப்பட்டது என்று கொள்வது அறிவியல் சார்ந்த முடிபாகலாம்.

## அடிக்குறிப்புக்கள்

1. N. Sethuraman, "A Tamil Inscription from the Fort Frederick Trincomalee, Sri Lanka", *Abhijnananala, A Felicitation Volume presented to Vinayagamoorthy Sivasaimy,* University of Jaffna, 1995, P.55.
2. Mudaliyar C. Rasanayagam, *Ancient Jaffna,* Asian Educational Services, NewDelhi Madras, 1993 (Reprint), P.377.
3. S. Paranavitana, "The Arya Kingdom in North Ceylon", *Journal of the Royal Asiatic Socicety* (Ceylon Branch), Vol.VII, New Series. 1961 P.177.
4. N. Sethuraman, *Abhijnanamala,* p.55.
5. N. Sethuraman, *Abhijnanamala,* p.55, p.57. Tamil Coins, Tamil Nadu, State Department of Archacology, Pp.167&168.
6. N. Sethuraman, *Abhijnanamala,* Pp.58-59.
7. மேலது, பக.58-59
8. *சிங்களத்வீப கதா, ரகுநாதாப்யுதயம்* என்பன வெவ்வேறு காலத்துக்குரியவை. வெவ்வேறு அரசர்களைப் பற்றியவை. முதலாவது நூல் மதுரை நாயக்கரைப் பற்றியது. மற்றைய நூல் தஞ்சாவூர் சமஸ்தானத்து ரகுநாத நாயக்கரைப் பற்றியது. தஞ்சாவூர் நாயக்கர்கள் யாழ்ப்பாணத்தின் மீது ஒருவகையான மேலாதிக்கம் பெற்றிருந்தனர். யாழ்ப்பாண இராச்சியத்தின் இறுதிக் காலகட்டத்திற் போர்த்துக்கேயரிடமிருந்து யாழ்ப்பாணப் பட்டினத்தவரைக் காப்பாற்றத் தஞ்சாவூர் நாயக்கர் படைகளை அனுப்பியிருந்தமை குறிப்பிடற்குரியது.
9. வருங்காலத்தில் வரும் அரசர்கள் ஒண்ணாததனைச் செய்யாரென்ற குறிப்பினை வருங்காலத்தில் எவரும் தகாதனவற்றை, அதாவது கோட்டை கட்டுவதனைத் தவிர்த்துக் கொள்வர் என்பதைச் சாசனத்தின் இறுதி வரிகள் குறிக்கின்றன என்று கொள்ளலாம்.
10. N. Sethuraman, *Abhijnanamala,* Pp 58-59. 11. S. Pathmanathan, *The Kingdom of Jaffna,* Colomobo, 1978, Pp.152-158.
12. *Inscriptions of the Pudukottai State,* Pudukkottai, 2002, No.366.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னிணைப்பு 3

# திருக்கோணேஸ்வரத்தைக் குறிக்கும் பக்திப் பாடல்கள்

**ஸ்ரீ. பிரசாந்தன்**
பேராசிரியர், தமிழ்த்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

தேவாரத் திருப்பதிகம் பாடப்பெற்ற தலங்களுள் ஒன்றாகத் திருக்கோணேஸ்வரம் விளங்குகின்றது. திருமுறையில் 276 ஆலயங்கள் பதிகம் பாடப் பெற்றனவாக விளங்குகின்றபொழுதும், அவற்றுள் இரண்டு தலங்களே ஈழத்தில் அமைந்துள்ளன. திருக்கோணேஸ்வரமும் திருக்கேதீஸ் வரமுமே இப்பெருமைக்குரிய தலங்களாகும்.

இவற்றுள் திருக்கோணேஸ்வரம் இலங்கையின் கிழக்கு மாகாணத்திலே பிரடெரிக்கோட்டை என்று அழைக்கப்படும் இயற்கை எழில் மிக்க குன்றில், குறிஞ்சியும் முல்லையும் நெய்தலும் ஒன்று சேர்கின்ற ஓர் இடத்தில் அமைந்துள்ளது. மூன்றுபுறமும் ஆர்ப்பரிக்கும் கடலின் நடுவே கொட்டியார விரிகுடாவை நோக்கியவாறு உயர்ந்து நிற்கும் குன்று இது. இலங்கையின் மிகநீண்ட நதியாகிய மகாவலிகங்கை அவ்விடத்திற்கு அருகே கடலுடன் கலப்பதால் இப்பகுதி வளம் நிறைந்தது.

மலையின் அடிவாரத்தில் சமுத்திர ஓரத்தில் இருந்ததென நம்பப்படும் ஆதிகோணேஸ்வரம் கி. மு. 306 இல் நிகழ்ந்த கடல் கோளினாற் சமுத்திரத்தினுள் மூழ்கிவிட்டதாகவும் பின் சுவாமிமலை என அன்றழைக்கப்பட்ட குன்றின் உச்சியில் ஆலயம் அமைக்கப்பட்டதாகவும், தமிழகத்தில் பல்லவராட்சி நிலவிய காலத்தில் இவ்வாலயம் புகழ் பெற்று விளங்கியதாகவும் கருதப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு, புகழ்பெற்று விளங்கிய இவ்வாலயங் குறித்து, சம்பந்தர் 'திருக்கோணேச்சரப் பதிகம்' எனும் பெயரில் பதிகமொன்றைப் பாடியுள்ளார். மற்றைய தேவார முதலிகளான நாவுக்கரசரும், சுந்தரரும் வைப்புத் தலங்களுள் ஒன்றாக, கோணேச்சரத்தைப் போற்றியுள்ளனர். பின், சோழர் காலத்தில் எழுந்த பெரியபுராணம், சம்பந்தர் வரலாற்றைச் சொல்லுகையில் இத்தலங் குறித்த பதிவைத் தருகிறது. அடுத்த விஜய நகர நாயக்கர் காலத்திலெழுந்த திருப்புகழ் பாக்களில் சில கோணேச்சரத்தைப் பரவுகின்றன.

### 1. திருஞானசம்பந்தர் தேவாரம் - திருக்கோணேஸ்வரப் பதிகம்

திருக்கோணேஸ்வரம் பற்றிய மிகப்பழைமையான தமிழ் இலக்கியச் சான்றுகளுள் ஒன்றாக சம்பந்தர் தேவாரம் விளங்குகின்றது. சம்பந்தர் கி.பி. 6 அல்லது 7 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் காலம் நின்றசீர் நெடுமாறன் காலமாகும். எனவே, அக்காலத்திலேயே கடல் கடந்து அறியப்படும் புகழ் பெற்ற தலமாக இவ்வாலயம் திகழ்ந் துள்ளது என்பதை இப்பதிகம் மெய்ப்பிக்கின்றது.

திருக்கோணேஸ்வரத்தை சம்பந்தர் பாடியுள்ளபோதும், அவர் இலங்கைக்கு வந்ததாக அவர் வரலாற்றில் குறிப்பு இல்லை. தொல்லியல் வரலாற்று உணர்வுடன் சம்பந்தரது வாழ்க்கையை, பெரியபுராணத்தில் பதிவு செய்த சேக்கிழார், இராமேச்சரத்தின் கரையிலிருந்தே அவர் திருக்கோணேஸ்வரப் பதிகத்தைப் பாடியதாகக் குறிப்பிடுகின்றார்.

கோணமாமலையாரைக் கண்டு வணங்கி வந்திருக்கக்கூடிய வணிகர் மற்றும் அடியவர் வாயிலாகக் கேள்வியுற்ற தகவல்களைக் கொண்டு சம்பந்தர் இப் பதிகத்தைப் பாடினாராகலாம். எவ்வாறாயினும், அவர் பாடல்களில் தரப்பட்டுள்ள கோயில் அமைவிடம் மற்றும் சூழல் குறித்த பதிவுகள் உண்மையானவையாக - மிகவும் யதார்த்த பூர்வமானவையாகக் காணப்படுகின்றன.

> *''கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை அமர்ந்தாரே''*
> *(பதிகம் 123, பாடல் 5)*
> *'' குரைகடல் சூழ்ந்த கோணமாமலை அமர்ந்தாரே'' (ப. 123, பா. 2)*

எனும் வரியினால், கோயிலும் அதன் சுனையும் ஆக எல்லாவற்றையும் கடல் சூழ்ந்தது என அதன் அமைப்புக் கூறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"..தாழ்ந்துறு திரைபல மோதிக்*
*குன்றுமொண் கானல் வாசம் வந்துலவுங் கோணமாமலை அமர்ந்தாரே"*
*(ப. 123, பா.10)*

என ஆலயத்தின் அமைவிடத்தை காட்டுகிறார் சம்பந்தர். இதன்வழி, அலையெழுந்து மோதும் கடல் சூழ்ந்த மலைக் குன்றில் ஆலயம் அமைந்துள்ளமை அவரால் சுட்டப்படுகின்றது.

ஆறு வந்து கடலிற் கலக்கும் இடத்தை இவ்வாலயம் அண்மித்துள்ளமையும் அதனால் வளம் நிறைந்திருக்கின்றமையும் சம்பந்தராற் சுட்டப்படுகிறது.

*"சந்துங் காரகிற் பிளவும் அளப்பருங் கனமணிவரன்றி*
*குரைகடலோதம் நித்திலம் கொழிக்கும் கோணமாமலை" (ப. 123, பா.1)*
*" குரைகடல் சூழ்ந்து கொள்ளமுன் நித்திலம் சுமந்து.." (ப. 123, பா. 2)*

முதலிய வரிகள் மூலமாக, சந்து, அகில், முத்து முதலியன ஆறுகளால் அலைத்துக் கொணரப்பட்டன என்ற செய்தி சம்பந்தரால் தரப்பெறுகின்றது.

மேலும், இவ்வாலயம் சோலை நடுவே அமைந்திருக்கின்ற தன்மையானது,

*"விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை வேங்கை வண்செருந்தி சண்பகத்தின்*
*குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில் சூழ் கோணமாமலை"*
*(ப. 123, பா.6)*
*"துன்றுமொண் பௌவ மவ்வலுஞ் சூழ்ந்து.." (ப. 123, பா.10)*

என, சம்பந்தராற் குறிப்பிடப்படுகின்றது. இத்தலம் திருகோணமலை நகரிலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்தினுள்ளேயே இன்று அமைந்துள்ளது. அன்று குடிகள் இன்னும் ஆலயத்துக்கு நெருக்கமாக இருந்திருக்கலாம். இதனை,

*"குடிதனை நெருங்கிப் பெருக்கமாய் தோன்றும் கோணமாமலை"*
*(ப. 123, பா. 2)*

என்று காட்டி நிற்கிறார் சம்பந்தர். இவ்வாறு குடிகள் நெருக்கமாக விளங்கும் நகராக விளங்கியமைக்குக் காரணம் இதுவோர் துறைமுகப் பட்டினமாக இருந்தமையாகும். கொண்டும் கொடுத்தும் பண்டமாற்றுச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்த வணிகர் பெருக்கத்தால் முத்து முதலிய வளமார் பொருள்கள் நிறைந்த நகராகத் திருகோணமலை விளங்கியிருந்துள்ளது. இதனை,

*''தெழித்து முன்னரற்றுஞ் செழுங்கடற் றரளஞ் செம்பொனும் இப்பியுஞ் சுமந்து*
*கொழித்து வன்றிரைகள் கரையிடைச் சேர்க்குங் கோணமாமலை..''*
*(ப. 123, பா.4)*

என்று சித்திரிக்கிறார் சம்பந்தர்.

அவர் சிவபெருமானின் பொது இயல்புகளைச் சுட்டி, இவ்வாலயத்து இறைவனைப் பாடிப்பரவுகிறார். ''வலத் திருவடியில் வீரக்கழலும், இடத் திருவடியில் சிலம்பும் அணிந்தவர்: இயல்பாகவே பாச ங்களின் நீங்கியவர்: பாம்பணிந்தவர்: திருநீறு அணிந்த திருமேனியர்: மலைமகளை ஒரு பாகமாகக் கொண்டவர்: இடபக்கொடி உடையவர்'' என, சிவபெருமானாரின் பொது இயல்புகளையே இப்பதிகத்திலமைத்து இறைவரைச் சுட்டும் வரிகள் அனைத்தும் எடுத்துரைக்கின்றன. மேலும், இறைவியின் நடைச்சிறப்பானது 'பிடியன நடையாள்' என உவமை வாயிலாகப் பாராட்டப்படுகின்றது. (ப. 123, பா.2)

திருக்கோணேஸ்வரப் பதிகம் எனும் பெயரில் அமைந்து காணப்படும் இப்பதிகத்தின் ஏழாவது பாடல் இன்று கிடைக்கவில்லை. இது தவிர்ந்த, திருக்கடைக்காப்பு உள்ளிட்ட ஏனைய பத்துப் பாடல்களாலும் மேலே காட்டப்பெற்றதுபோல கடல் சூழ்ந்த குன்றில் அமைந்துள்ளமை, பொழில் சூழ்ந்த தன்மை, நகரத்தை அண்மித்து அமைந்திருக்கின்றமை, வாணிபப் பொருட்கள் புழங்கும் இடத் திலுள்ளமை போன்ற பல்வேறு தகவல்கள் உணர்த்தப்பட்டுள்ளன.

இப்பதிகத்தின் எட்டாவது பாடலில் இராவணனைப் பற்றிய குறிப்புண்டு. தமது எந்தப் பதிகத்தினதும் எட்டாவது பாடலில் இராவணனைக் குறிப்பிடுவது சம்பந்தரது வழமை. எனினும் இங்கு அவர் சுட்டும் செய்தி, திருகோணமலையையும் கோணேஸ்வரத் தினையும் இராவணனுடன் தொடர்புறுத்தும் புராணக் கதைகளை நினைவுறுத்துவதாக உள்ளது. இப்பாடலில்,

*''எடுத்தவன் தருக்கை இழித்தவர் விரலால்*
*ஏத்திட வாத்தமாம் பேறு*
*தொடுத்தவர்'' (ப. 123, பா.8)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என அவர் சுட்டுவது, கைலை மலையை ஆணவத்தினால் தூக்கிட முயன்ற இராவணன் செயலையேயாகும். அவ்வாறு இராவணன் தூக்க முயன்றது தென்கைலையாகிய திரிகோணமலையையே என்றும், அக்கதையோடு தொடர்புபட்டதே இராவணன்வெட்டு என்றும் கருது வார் உளர். தமது பொதுவான பதிக மரபின் தொடர்ச்சியை சம்பந்தர் பின்பற்றிய போதும், இத் தலத்துக்குப் பொருத்தமுறும் வகையில் இராவணன் கதையை இப்பதிகத்தில் அவர் இங்கு கையாளுகின்றார் என்றுரைப்பதே நேரியதாகும்.

## 2. திருநாவுக்கரசர் தேவாரத்தில் திருக்கோணேஸ்வரம்

சைவமரபிலே பாடல் பெற்ற சிவத்தலங்களுக்கு அடுத்த நிலையில் வைத்துப் போற்றப்படுபவை தேவார வைப்புத் தலங்களாகும். வைப்புத் தலம் என்பது தனிப்பதிகம் பெறாது வேற்றூர்ப் பதிகத்தின் இடையிலும், பொதுப் பதிகத்தின் இடையிலும் பெயர் அமைந்து வருகின்ற தலங்களைக் குறிப்பிடும்.

திருமுறையில் சம்பந்தர் தேவாரங்களில் மட்டும் திருக்கோணேஸ் வரத்துக்குத் தனியான பதிகம் காணப்படுகிறது. நாவுக்கரசர், சுந்தரர் ஆகியோரின் தேவாரங்களில் இவ்வாலயம் வைப்புத் தலங்களுள் ஒன்றாகக் குறிப்பிடப் பெற்றுள்ளது.

நாவுக்கரசர் மத்தவிலாசனென்று பட்டங் கொண்ட காஞ்சி அரசன் மகேந்திர வர்மன் காலத்தில் வாழ்ந்தவர். இம்மன்னன் காலமும் கி.பி. 7 ஆம் நூற்றாண்டாகும்.

நாவுக்கரசர் தேவாரங்களுள், கோணேஸ்வரத்தை வைப்புத் தலங்களுள் ஒன்றாகக் குறிப்பிடும் இரு பதிகங்கள் முக்கியமானவை. அவற்றுள் ஒன்று நெய்த்தானம் திருத்தாண்டகம்; மற்றது ஷேத்திரக் கோவைத் திருத்தாண்டகம்.

### 2.1 நெய்த்தானம் திருத்தாண்டகம்

திருநெய்த்தானம் எனும் தலத்தின்மீது பாடப்பெற்ற தாண்டக அமைப்புடைய பதிகம் இது. அவ்வாலயத்திற் குடிகொண்டிருக்கும் இறைவரை விளித்து அழைத்து, ''கயிலாயம் முதலிய பிற இடங்களிலும் நீயே வீற்றிருக்கின்றாய்'' என்பதாக இப்பதிகத்தில் பாடுகிறார் நாவுக்கரசர்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*''தக்கார் அடியார்க்கு நீயே என்றும் தலையார் கயிலாயன் நீயே என்றும்*
*அக்காரம் பூண்டாயும் நீயே என்றும் ஆக்கூரில் தான்தோன்றி நீயே என்றும்*
*புக்காய ஏழுலகும் நீயே என்றும் புள்ளிருக்கு வேளூராய் நீயே என்றும்*
*தெக்காரும் மாகோணத்தானே என்றும் நின்ற நெய்த்தானா என் நெஞ்சுளாயே!''*
*(திருமுறை: 6.41)*

''தகுதி வாய்ந்த அடியார்களுக்குத் துணையாக என்றும் விளங்குபவனும், மேன்மை வாய்ந்த கயிலாய மலையில் உறைபவனாகவும், எலும்பு மாலை பூண்டவனாகவும், ஆக்கூர் தான்தோன்றி மாடத்தில் உறையும் ஈசனாகவும், உயிர்கள் புகுந்து வாழும் ஏழு உலகங்களாகவும், புள்ளிருக்கு வேளூர்த் தலத்தில் உறைபவனாகவும், தெற்குப் பகுதியிலே பொருந்திய மாகோணம் தலத்தில் உறைபவனும் ஆகிய பெருமானாகிய நீ, நெய்த்தானம் எனும் தலத்தில் நிற்கின்றாய். நீ எனது நெஞ்சினில் நிறைந்து நிற்கின்றாய்'' என்பது இத் தேவாரத்தின் பொருளாகும்.

இங்கு 'தெக்காரும் மாகோணம்' எனப்பட்டதன் மூலம் கோணேஸ்வரம் சுட்டப்பெற்றுள்ளது. தெக்காரும் என்பது தெக்கு + ஆரும் எனப் பிரிந்து பொருள் தரும். இங்கே, தெற்கு என்ற சொல் தெக்கு என்று திரிந்து நிற்கின்றது. தமிழகத்துக்குத் தெற்கே உள்ள மாகோணமலை என்பதே இதன் அர்த்தமாகும்.

இவ்வார்த்தைப் பிரயோகம், தட்சண கைலாயம் என கோணேஸ்வரம் அழைக்கப்படுகின்றமையை நினைப்பிக்கின்றமை கருதத் தக்கது. வடக்கே கையிலாய மலைச் சிகரத்தில் கைலைநாதன் எழுந்தருளி இருப்பதைப்போல தெற்கே திருகோணமலையில் கோணேஸ்வரப் பெருமான் அமர்ந்திருந்து அருள் பாலிக்கிறார். இதனால் இக்கோவில் தட்சண கைலாயம் எனவும் பெயர் பெறுகிறது.

இங்கு தென் இந்தியாவிலும் வட இந்தியாவிலும் சிறப்புப் பெற்றிருந்த பிரபலமான கோயில்களின் வரிசையில் கோணேஸ்வரமும் பாடப்பட்டுள்ளமையானது, இக்கோயில் அக்காலத்தில் ஈழத்தில் மட்டுமன்றி இந்தியாவிலும் புகழ் பெற்றிருந்தமையைத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

## 2.2 ஷேத்திரக் கோவைத் திருத்தாண்டகம்

ஷேத்திரம் என்பது கோயில். கோயில்களின் பெயர்களைக் கோவையாக முன்வைக்கும் பதிகம் இது. இப்பதிகத்தின் முதலாவது பாடலிலேயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோணேஸ்வரத்தை நாவுக்கரசர் குறிப்பிடுகிறார். அதுவும், சிதம்பரம், காளத்தி முதலிய புகழ்பெற்ற தலங்களுடன் இணைத்துச் சொல்கிறார்.

*"தில்லைச் சிற்றம்பலமும், செம்பொன்பள்ளி,*
*தேவன்குடி, சிராப்பள்ளி, தெங்கூர்,*
*கொல்லிக் குளிர் அறைப்பள்ளி,*
*கோவல்-வீரட்டம், கோகரணம், கோடிகாவும்,*
*முல்லைப் புறவம் முருகன் பூண்டி,*
*முழையூர், பழையாறை, சத்தி முற்றம்,*
*கல்லில்-திகழ் சீர் ஆர் காளத்தியும்,*
*கயிலாய நாதனையே காணல் ஆமே."*

*(திருமுறை: 6.71)*

தேவார முதலிகள் பல இடங்களிலும் கோணமலை என்ற பெயரைப் பயன்படுத்தியிருக்க, இப் பாடலில் நாவுக்கரசர் கோகரணம் எனக் குறித்திருக்கின்றார். கோணேஸ்வரத்தைக் கோகரணம் என்று சொல்லும் வழக்குண்டு. அவ்வடிப்படையில் இங்கு வைப்புத் தலமாகக் கூறப்பட்டிருப்பது திருக்கோணேஸ்வரம் என்பது தெளிவாகும்.

### 3. சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரத்தில் திருக்கோணேஸ்வரம்

நாவுக்கரசரைப் போலவே, சுந்தரரும் கோணேஸ்வரத்தை வைப்புத் தலங்களுள் ஒன்றாகவே குறிப்பிடுகின்றார். அவர் பாடிய ஏழாந் திருமுறையிலும் இரு பதிகங்கள் கோணேஸ்வரத்தை வைப்புத் தலமாகப் போற்றுகின்றன என்பர். அவை, ஊர்த்தொகைப் பதிகம் , திருநாட்டுத்தொகை என்பன.

#### 3.1 ஊர்த்தொகைப் பதிகம்

"காட்டூர்க் கடலே! கடம்பூர் மலையே!" எனத் தொடங்கும், ஊர்த் தொகைப் பதிகத்தில் சுந்தரமூர்த்தி நாயனார் முக்கியமான ஊர்தொறும் விளங்கித் திகழும் சிவாலயங்களைத் தொகுத்துக் கூறுகின்றார். அப்பதிகத்தின் மூன்றாவது பாடல் மேல்வருமாறு அமைந்துள்ளது:

*"நிறைக் காட்டானே! நெஞ்சத்தானே! நின்றியூரானே!*
*மிறை(க்) காட்டானே! புனல் சேர் சடையாய்! அனல் சேர் கையானே!*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மறைக்காட்டானே! திரு மாந்துறையாய்! மாகோணத்தானே!*
*இறை(க்) காட்டாயே, எங்கட்கு உன்னை! எம்மான் தம்மானே!''*
*(திருமுறை: 7.47.3)*

இங்கு புகழ் பெற்ற ஆலயங்களின் வரிசையில், கோணேஸ்வரம் இணைக்கப்பெற்று, அவ்வாலய இறைவர் ''...மா கோணத்தானே..'' என்று குறிப்பிடப்பட்டுள்ளார். பெருமை அல்லது பெரிய என்ற கருத்துடைய 'மா' என்ற அடை இங்கு இணைக்கப்பட்டுள்ளமை கருதத்தக்கது. நாவுக்கரசரும் 'தெக்காரும் மாகோணத்தானே' எனச் சுட்டியமை இங்கு நோக்கத்தக்கது. இது, அக்காலகட்டத்தில் கோணேஸ்வரம் பெற்றிருந்த மிக்க புகழை நிறுவும் பிறிதொரு சான்றாகும்.

### 3.2 திருநாட்டுத் தொகை

திருவாரூரிலே தங்கியிருந்த நாட்களிற் பல தலங்களையும் நினைந்து சுந்தரர் பாடியருளிய பதிகம் இதுவாகும். இப்பதிகமும் இறைவன் எழுந்தருளியுள்ள தலங்களைத் தொகுத்தே செய்யப்பெற்றது. அதாவது, சோழநாடு முதலியனவாக விளங்கிய அன்றைய நாடுகளில் தலைமையைப் பெற்று விளங்கிய முக்கியமான தலங்கள் சுந்தரரால் இதிலே தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. நாட்டுடன் இணைத்து தலங்கள் குறிக்கப்பெற்றமையால் இது, 'திருநாட்டுத் தொகை' என்னும் பெயர் பெற்றது.

*''ஈழ நாட்டுமா தோட்டந் தென் னாட்டின் இராமேச்சுரம்*
*சோழ நாட்டுத் துருத்தி நெய்த் தானந் திருமலை*
*ஆழி யூரன நாட்டுக் கெல் லாம்அணி யாகிய*
*கீழை யில்லா னார்க் கிடங் கிள்ளி குடியதே''*
*(திருமுறை: 7.47.3)*

இங்கு, திருமலை என்று குறிக்கப்பெற்ற தலம் எது என்பது குறித்து வேறுபட்ட கருத்துகள் உண்டு. சோழ நாட்டைத் தொடர்ந்து கூறப்பட்டிருப்பதால் இங்கு சுட்டப்படுவது திருச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள உய்யக்கொண்டான் மலை உஜ்ஜீவநாதர் திருக்கோயிலே என்பார் சிலர். நந்திவர்ம பல்லவனால் அமைக்கப்பட்ட இவ்வாலயம் உய்யக்கொண்டான் திருமலை எனச் சுட்டப்படுவதும் உண்டு. இதனால்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமலை என்று கூறப்பட்டது, உஜ்ஜீவநாதர் திருக்கோயிலே என்று கருதப்பட்டாலும், கோணேஸ்வரத்தையும் சுந்தரர் கருதினார் எனக் கொள்வது தவறாகாது. செய்யுளில் யாப்புத் தேவைகளுக்காக சொற்கள் இடம்மாற்றிச் சொல்லப்படுவதும், அவை கொண்டுகூட்டிப் பொருள் கொள்ளப்படுவதும் உண்டு. திருகோணமலையின் சிறப்பை சுந்தரர் அறிந்துள்ளமையை மேலே காட்டப்பெற்ற ஊர்த்தொகைப் பதிகமே நிறுவ வல்லது. எனவேதான் இங்கு சுட்டப்பட்டுள்ள திருமலையை, கோணேஸ்வரம் என்றே அறிஞர் சிலர் கொண்டுள்ளனர்.

## 4. பெரியபுராணத்தில் திருக்கோணேஸ்வரம்

திருத்தொண்டர் புராணம் எனும் பெரியபுராணத்தை இயற்றியவர் சேக்கிழார். முதன்மந்திரியாக இருந்து நூல் பாடும் விருப்பில் அப்பதவி துறந்த இவர் வரலாற்றுணர்ச்சியோடு களப்பயணங்கள் மேற்கொண்டு, தம் படைப்பை நல்கியவர்.

அதில், திருஞானசம்பந்தர் வரலாற்றைக் கூறும்பொழுது, அவர் திருக்கோணேஸ்வரப் பதிகத்தைப் பாடிய சந்தர்ப்பத்தைச் சுட்டுகையில் இவ்வாலயம் பற்றிய பதிவை மேற்கொள்கிறார்.

அப்பனூர், திருப்புத்தூர், பூவணம், கானப்பேர், சுழியல், குற்றாலம், நெல்வேலி ஆகிய தலங்களை வணங்கிப் பாடி, இராமேச்சுரம் வந்த சம்பந்தர் சேதுக் கரையில் தங்கினார். அங்கிருந்தபடி ஈழத்துக் கோயில்களைப் பாடினார் என்கிறது பெரியபுராணம். அப்பாடல் மேல்வருமாறு உள்ளது:

> *''அந்நகரில் அமர்ந்து அங்கண் இனிது மேவி*
> *ஆழிபுடை சூழ்ந்து ஒலிக்கும் ஈழம் தன்னில்*
> *மன்னு திருக்கோண மலை மகிழ்ந்த செம் கண்*
> *மழ விடையார் தமைப் போற்றி வணங்கிப்பாடி*
> *சென்னி மதி புனை மாட மா தோட்டத்தில்*
> *திருக் கேதீச் சரத்து அண்ணல் செய்ய பாதம்*
> *உன்னி மிகப் பணிந்து ஏத்தி அன்பரோடும்*
> *உலவாத கிழி பெற்றார் உவகை உற்றார்'' (பெ. 2788)*

இங்கு திருக்கோணேஸ்வரம் ஆலயம், 'மன்னு திருக்கோணமலை' எனச் சேக்கிழாராற் புகழப்பட்டுள்ளது. இதன் பொருள் 'நிலைபெற்ற திருக்கோணமலை' என்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்து ஆலயங்களுக்கும் யாத்திரை சென்று பதிகம் பாடும் பெருவழக்கினராய சம்பந்தர், 'ஏன் ஈழத்துக் கோயில்களுக்கு செல்லாமல் அங்கிருந்தபடியே பாடினார்?' என்பது எழத்தக்க வினாவாகும். இதற்கான விடையை, பெரிய புராண விரிவுரைகாரர் சுப்பிரமணிய முதலியார் மேல்வருமாறு தெரிவித்துள்ளமை இங்கு குறிப்பிடற்பாலது:

''ஈண்டு இராமேச்சுரத்திலிருந்தபடியே ஈழநாட்டுப் பதிகளிரண்டினையும் பாடியருளியது இடையே கடல் குறுக்கிட்டுச் சூழ்ந்திருத்தலால் கடலைக் கடந்து செல்லலாகாது என்ற மறைவிதி காரணமாக என்பது கருதப்படும். 'ஆழிபுடை சூழ்ந்தொலிக்கும் ஈழம் என ஆசிரியர் அறிவித்ததும் இக்குறிப்பு பெறுதற்கு.'

அதாவது, அந்தணர்கள் கடல் கடந்து செல்லலாகாது என்ற வேத விதியினாலேயே அவர், கோணேஸ்வரத்தையும் கேதீஸ்வரத்தையும் நேரே சென்று வழிபடவில்லை என்பது அவர் கருத்து.

## 5. திருப்புகழிற் திருக்கோணேஸ்வரம்

திருப்புகழ் பாடிய முருக பக்தரான அருணகிரிநாதர் கி.பி. 15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். அவர் சைவ நாயன்மார்கள் போலத் தலயாத் திரை செய்தவர். முருக பக்தி இலக்கியமாகிய *திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரநுபூதி* முதலிய நூல்களைத் தந்தவர். பெரும்பாலும், முருகன் மூலமூர்த்தியாக அமர்ந்த தலங்களுக்குச் சென்று திருப்புகழ் பாடிய அவர், சிலவிடங்களிற் சிவனாலயங்களது பரிவாரத் தெய்வங்களாக அமைந்த முருக மூர்த்தங்களையும் பாடியுள்ளார். அவ்வகையில் ஈழத்துத் திருக்கோணேஸ்வரத்திலுறையும் துவார மூர்த்தியாகிய முருகனையும் அவர் பாடிப் பரவுகின்றார். கோயிலின் மேற்குப் பிரகாரத்தில் பரிவாரப் பிரகாரங்களிலே பிள்ளையார், சிவலிங்கம், முருகன் திருவுருவங்கள் உள்ளன. இங்குள்ள முருகனையே அருண கிரியார் பாடியுள்ளாரெனக் கருதுவர்.

''விலைக்கு மேனியில் அணிக் கோவை'' என்று தொடங்கும் திருப்புகழிற் கோணேஸ்வரத்தைப் பற்றி மேல்வருமாறு பாடியுள்ளார் அருணகிரிநாதர்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"நிலைக்கு நான்மறை மகத்தான பூசுரர்*
*திருக்கொ ணாமலை தலத்தாரு கோபுர*
*நிலைக்குள் வாயிலில் கிளிப்பாடு பூதியில் வருவோனே"*

*(ஈழ. திரு., பா.32)*

இவ்வரிகளின் பொருள் "நான்கு வேதங்களையும் நிலைக்கச் செய்கின்ற மேலான அந்தணர்கள், திருகோணமலைத் தலத்தில் உயர்ந்து விளங்கும் கோபுர வாசலின் நின்று பாடும் அனுபூதிப் பாடலின் பொருளாக விளங்கி வருகின்றவனே!" என்பதாகும். இதன்படி, மேலான அந்தணர்கள் வழிபடும் தலம் என்பதும், சிறந்த கோபுரம் அமைந்த தலம் என்பதும் அருணகிரிநாதராலே சுட்டப்பட்டுள்ளன.

"தொடுத்த வாளென விழித்து" என்று தொடங்கும் திருப்புகழிலும் அருணகிரியார் கோணேஸ்வரத் திருத்தலத்தைப் பாடியிருக்கக் காணலாம்.

*"அறத்தில் வாழுமை சிறக்க வேயறு*
*முகத்தினோடணி குறத்தி யானையொ*
*டருக்கொ ணாமலை தருக்குலாவிய பெருமாளே"*

*(ஈழ. திரு., பா.33)*

இங்கு "தருக்குலாவிய அருக்கொணாமலை" எனச் சுட்டப்படுவதன் மூலம், மரங்கள் நிறைந்த சோலையில் ஆலயம் அமைந்த தன்மை அருணகிரியாரால் சுட்டப்பட்டுள்ளது.

மேலும், "பாரவித முத்த" எனத் தொடங்கும் திருப்புகழில் வரும், "கோணசயிலத்துக்ர கதிர்காமவீர" (ஈழ. திரு., பா.7) எனும் தொடரும், திருகோணேஸ்வரத்துறையும் பரிவார மூர்த்தியாகிய முருகனையே சுட்டுகிறது என்றுரைப்பாரும் உளர். (இரகுபரன், 2018: XVIII)

**முடிவுரை**

சைவ சமயத்திலே தோன்றிய தோத்திர நூல்களுள் நாயன்மார்களாற் பாடப்பெற்ற தேவார திருவாசகங்கள் முதன்மை பெறுகின்றன. திருமுறைத் தொகுப்பில் அடங்கன் முறை எனச் சிறப்பித்துப் போற்றப்படும் தேவாரங்கள், சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவராலும் அருளப்பெற்றவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் மூவரும் திருக்கோணேஸ்வரத்தைச் சுட்டியுள்ளனர். இவர்களுள் சம்பந்தர் தனிப் பதிகமே பாடியுள்ளார். ஏனைய இருவரும் வைப்புத் தலமாகக் கோணேஸ்வரத்தைப் போற்றியுள்ளனர்.

சம்பந்தரது பதிகம், பல்லவர் காலத்திலே ஈழத்துத் திருகோண மலையில் ஈஸ்வரம் அமைந்திருந்த இடம், அமைவு, இயற்கைச் சூழல் முதலியவற்றை யதார்த்தபூர்வமாகப் படம்பிடித்துக் காட்டு கின்றது. இதன்வழி, துறைமுகப் பட்டினத்துக்கு அருகே, குடிமக்கள் அமைவிடங்கள் நெருங்கியிருந்த இடத்துக்கண்மையில் திருத்தலம் அமைந்திருந்துள்ளமையை அறிய முடிகின்றது.

ஈழத்துக்கு நேரே வருகை தராத பொழுதும், இவ்வாலயம் பற்றிய விபரங்களை வணிகர் வாயிலாகவும், ஆலயத்தை நேரே அறிந்திருந்த அடியவர் வாயிலாகவும் சம்பந்தர் அறிந்திருக்கலாம்.

இதன்வழி, கி.பி. 6ஆம், 7ஆம் நூற்றாண்டளவில் கடல் கடந்து இந்தியாவிலும் புகழ்பெற்ற தலமாகக் கோணேஸ்வரம் விளங்கியமையினை அறியலாம்.

சிதம்பரம், காளத்தி போன்ற புகழ்பெற்ற தலங்கள் வரிசையில் கோணேஸ்வரம் சுட்டப்பட்டுள்ளமை, இந்துப் பண்பாட்டில் இவ்வாலயம் பெற்றிருந்த முதன்மையை உணர்த்துகின்றது.

சைவஅடியார் பக்திப் பாடல்களில் மட்டுமல்லாமல், முருகனடி யாராகிய அருணகிரிநாதரது திருப்புகழிலும் கோணேஸ்வரம் பாடப்பெற்றுள்ளமை அதன் புகழ் விகசிப்பைக் காட்டுகின்றது.

மொத்தத்தில், கடல் கடந்து வாழ்ந்த இறையடியார்களது பக்திப் பனுவல்கள், திருக்கோணேஸ்வரத்தின் வரலாற்றுத் தொன்மையையும், புகழையும் எடுத்துக்காட்டி நிற்கும் இலக்கியச் சான்றாதாரங்களாகத் திகழ்கின்றன.

**உசாத்துணை**

*அருட்கலசம்,* 2009, கொழும்பு: மயூரபதி பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்.

இரகுபரன், க. (ப.ஆ.), 2018, *அருணகிரிநாதர் அருளிய ஈழத்து திருத்தல திருப்புகழ்கள்,* கொழும்பு: இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

செங்கல்வராயபிள்ளை, வ.சு., 1944, *தேவார ஒளிநெறிக் கட்டுரை* (சம்பந்தர்), சென்னை: லிபர்ட்டி.

வெள்ளைவாரணன், க., 1972, *பன்னிரு திருமுறை வரலாறு* - முதற் பகுதி, சிதம்பரம்: அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னிணைப்பு 4

# தக்ஷிணகைலாச மஹாத்மியத்தில் திருக்கோணேஸ்வரம்

**ச.பத்மநாபன்**
B.A.(Hons), P.G.Dip.in Edu., M.Phil.
சிரேஷ்ட விரிவுரையாளர், சம்ஸ்கிருதத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

திருக்கோணேஸ்வரம் பற்றித் தமிழில் எழுதிய இரண்டு தல புராணங்கள் உள்ளன. அவற்றிலே காலத்தால் மிகவும் முற்பட்டது அரசனாகிய செகராசசேகரன் எழுதிய *ஸ்ரீதக்ஷிண கைலாசபுராணம்*. மற்றது *திரிகோணாசல புராணம்;* 18ஆம், 19ஆம் நூற்றாண்டுகளில் அது எழுதப்பட்டிருக்கலாம் என்பது அறிஞர்களின் கருத்தாகும். அதன் ஆசிரியரின் பெயர் தெரியவில்லை.

ஸ்ரீதக்ஷிண கைலாசபுராணத்தில் அதன் மூல நூலாகிய *மச்சேந்திய புராணம்* பற்றிச் சொல்லப்படுகின்றது. திரிகோணாசல புராணத்தின் பாயிரத்தில் அதன் மூலங்களில் ஒன்றான *மச்சபுராணம்* பற்றிச் சொல்லப்படுகின்றது. இரண்டு தலபுராணங்களிலும் ஒரே விதமான புராணக்கதையே விளக்கப்படுகின்றது.

*தக்ஷிணகைலாச மஹாத்மியம்* என்னும் பெயருடைய நூலொன்றை 1928 இல் வதிரியில் வாழ்ந்தவரான பண்டிதர் நாகலிங்கம்பிள்ளை வெளியிட்டார். அது சமஸ்கிருத மொழியிலுள்ள நூல். அதன் ஏட்டுப் பிரதி கிரந்த எழுத்துகளில் எழுதப்பட்டது. பின்பு, அதனை அடிப்படையாகக் கொண்டு *தக்ஷிண கைலாசபுராணம்* என்ற தமிழ் நூலொன்றை நாகலிங்கம் பிள்ளை வெளியிட்டார். அது பருத்தித் துறையில் 1919 இல் பு.பொ.வைத்திலிங்க தேசியர் வெளியிட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ தக்ஷிண கைலாச புராணத்தினின்றும் வேறுபட்டது. பொருள் மரபில் அதிகமான வேறுபாடுகள் உள்ளன. தல புராணங்கள் இரண்டிலும் *தக்ஷிண கைலாசம்* என்பது கோணபர்வதமான திருகோணமலையினையே குறிக்கும். ஆனால் தக்ஷிண கைலாச மஹாத்மியம் இலங்கை முழுவதையும் தக்ஷிணகைலாசம் எனக் குறிப்பிடுகின்றது. அந்தவகையில் அது தலபுராணங்களின் மரபிலிருந்து முற்றிலும் வேறுபடுகின்றது. அதிற் பூர்வ காண்டம், உத்தரகாண்டம் என்னும் பகுதிகள் உள்ளன. நூல் மிகவும் விரிவானது: அதில் 27 அத்தியாயங்களும் 2500 சுலோகங்களும் அடங்கியுள்ளன. ஒவ்வொரு காண்டத்திலும் 11 பிரிவுகள் உள்ளன. புனித தலங்கள், கோயில்கள் என்பன பற்றிய பௌராணிகப் பாங்கிலான மிகைபாடான வர்ணனைகள் இந்நூலிற் காணப்படுகின்றன.

இலங்கை முழுவதையும் *தக்ஷிணகைலாசம்* என நூலாசிரியர் கொண்டமையால் பிரபலமான ஈழநாட்டுக் கோயில்களைப் பற்றி வர்ணிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், முன்னேஸ்வரம், கதிர்காமம், நகுலேஸ்வரம், வாரிவனேஸ்வரம், சிவனொளிபாதம் முதலானவற்றைப் பற்றிய விபரங்கள் இலக்கியப் பாங்கில் வர்ணிக்கப்பட்டுள்ளன.

இந்நூலின் பதின்மூன்றாம் அத்தியாயத்தில் வரலாற்றுச் செய்திகள் சிலவும் சொல்லப்படுகின்றன. அநுராதபுரத்தில் நடைபெறும் வெள்ளரசு மர வழிபாடு, பண்டுகாபயன் இராசதானி அமைத்தமை பற்றிய விபரங்களும் காணப்படுகின்றன. யமுனா ஏரி, யாழ்ப்பாண அரசர் குலம் என்பன பற்றிய விபரங்கள் காணப்படுகின்றமை ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும். இந்நூல் 18ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட தென்று கருதமுடிகின்றது.

### திருக்கோணேஸ்வரம்

தக்ஷிணகைலாசமஹாத்மியத்தின் ஐந்தாவது அத்தியாயத்தில் கோணேசலிங்கம் எவ்விதம் ஸ்தாபனம் செய்யப்பட்டது எனும் செய்தி விபரிக்கப்படுகின்றது. அதன் விபரம் மேல் வருமாறு அமைகின்றது.

திரேதாயுகத்தில் விஸ்ரவசு முனிவரின் மனைவியான கைகசி பதிவிரதாதர்மமுடையவர்; இராவணனின் தாய். அவள் எப்பொழுதும் அரிசி மாவினால் சிவலிங்கம் செய்து சிவபூசை செய்யும் வழக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடையவள். இராவணன் தமது தாயின் அன்பு மீதியாலும் பக்தி மேலீட்டாலும் கைலாசத்திலிருந்து சிவலிங்கம் கொண்டு வர விருப்பம் கொண்டு திருக்கைலாசம் சென்று சிவனிடம் இருமுறைகள் சிவலிங்கம் பெற்றும் கொண்டுவர முடியவில்லை. ( 5. 1-45)

இக்கதை மிகவிரிவுபடக் கூறப்பட்டுள்ளது. தக்ஷிணகைலாசம் எனப்படும் இலங்கையின் வடபாகத்தில் சிவன் எப்போதும் வாசம் செய்கிறார். அங்கு நீ சிவனிடம் வேண்டினால் சிவலிங்கம் கைவரப் பெறுவாய் என ஒரு மறையவர் வேடம் பூண்ட ஒருவர் கூற அவ்விதமே அங்கு சென்று சிவனை வேண்டினான்.

சிவன் சிவலிங்கம் அருளப் பெறாமையால் சினங்கொண்டு வாளினால் வெட்டினான். (5.44)

அந்த தக்ஷிணகைலாசத்தைப் பெயர்க்க முற்படும் போது பயங்கொண்ட பார்வதி சிவனை அணைத்திருக்கும் வேளையில் தமது காற்பெருவிரலினால் அழுத்தினார். அதில் மிதியுண்ட இராவணன் உப்புச் சமுத்திரத்தில் மயக்கமடைந்து வீழ்ந்தான்.

அப்பொழுது சாமகானப்பிரியனாகிய சிவனைச் சாமகானம் கொண்டு தொழுவதற்கு தமது பத்துத் தலைகளுள் ஒன்றைக்கொய்து கையில் ஒன்றை ஒடித்து நரம்பு கொண்டு அதனை யாழாக்கிச் சாமகானம் செய்தான். இதில் மகிழ்ந்த சிவபெருமான் கோணேசர் எனும் இலிங்கத்தை வழங்கினார். தாம் பெற்ற சிவலிங்கத்தை விஷ்ணுவின் கையினால் திருகோணமலையின் தென்மேற்குத் திக்கில் ஸ்தாபனம் செய்தார். இதுவே திருக்கோணேஸ்வரம். (5. 45 -85)

இராவணன் தனது தாயின் அபரக்கிரியையின் பொருட்டு திருக்கோணேசரது ஆலயத்திற்கு மேற்கிலே தமது தண்டத்தினால் நிலத்தில் அடித்த வேளை தோன்றியவையே ஏழுவகையான சூடுகளையுடைய வெந்நீரூற்றுக்களாகும். (5. 86-92)

இவ்வாறாக பல்வேறுவிதமான பெருமைகள் பேசப்படுகின்றன. எவனொருவன் கோணேசருக்கு அபிஷேகம் செய்து பூஜிக்கிறானோ அவன் சிவசாயுச்சியம் அடைவான். (5.75)

இக்கோணேச தலத்தில் வசித்து யாசிப்பதால் தமக்குக் கிடைக்கும் பொருளில் மூன்றிலொரு பங்கினைக் கோணேசருக்கு கொடுத்தால் அவன் முத்தியடைவான். (5.76)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கோணேசத்தலம் இருக்கும் பகுதியில் இயற்கையாக விளையும் கிழங்கு, பழம், தானியம், கீரை முதலானவைகளில் நாலில் ஒரு பங்கினை கோணேசருக்குக் கட்டாயமாகக் கொடுக்க வேண்டும். (5.77-78 )

கோபுரம், சிகரம், மண்டபம் நந்தவனம் முதலானவற்றைக் கோணேசருக்கு கட்டுகின்றவன் சிவலோகம் அடைவான். (5.82)

மகுடம், அங்கதம், கேயூரம், குடை, சாமரம் இவைகளைக் கோணேசருக்குக் கொடுப்பவன் கோணேசரூபம் பெறுவான். ( 5. 83)

இக்கோணேசர் சன்னிதியில் தபம், ஜபம், தியானம், தானம், பூசை பிதுர் சிராத்தம் ஆகியவற்றைச்செய்பவன் அளவற்ற பயன் பெறுவான். (5. 84)

இக்கோணேசத் தலத்திற்கு ஒப்பான வேறு தலம் முன்னும் இல்லை. பின்னும் இல்லை. (5.85)

கன்னியா கங்கையின் கரையில் தமது தாயின் இறுதிக்கிரியை நிறைவு பெற்றபின் பிரம்மா, விஷ்ணு, ருத்ரன் ஆகிய மூவரும் தோன்றி மூன்று லிங்கங்களை அளித்தனர். பிரம்மா கொடுத்த பூதேசலிங்கத்தைத் திருகோணேஸ்வரத்தின் முன்பாக வடகிழக்கு திக்கிலும் விஷ்ணுகொடுத்த ருத்திரேசலிங்கத்தை கிழக்கிலும் சிவன் கொடுத்த பிராணேசலிங்கத்தை தென்கிழக்கிலும் இராவணன் பிரதிஷ்டை செய்தான். (5.99-102)

விஷ்ணுவின் வழிகாட்டலின்படி இராவணன் தமது தாய்க்கு கோணேசப் பெருமானே முத்தியளிக்க வேண்டும் என பிரார்த்திக்க சிவன் அனுக்கிரகம் செய்தார். (5. 103)

இராவணனை இராமன் சம்ஹாரம் செய்தபின் சுசங்கீதன் எனும் கந்தர்வன் இராவணன் மீட்ட வீணையை அபகரித்துச் சென்றான். (5.110 )

இத்தகைய சிறப்புடைய திருக்கோணேசரை அகஸ்தியர் கங்காமஹத்வாதிகதனம் எனப்படும் ஏழாவது அத்தியாயத்தில் துதிக்கின்றார். அது மேல்வருமாறு உள்ளது:

வேதாந்த வித்தையில் தனித்துச் சிறந்து விளங்குபவரே ! கிருஷ்ணர் முதலான தேவர்களாலும் அறியப்படாத சிறந்த பெரும் பொருளே! திரிகூட கைலாச மலை வாசரே! தேவரே! கோணேசரே! அடியேனை எப்பொழுதும் காத்தருள வேண்டும் (7.151)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரவத்தினையணிந்த திருக்கரத்தினரே! மன்மதனது சரீரத்தை எரித்தவரே! சந்திரனைத் தரித்தவரே! திரிகூட கைலாச மலை வாசரே! தேவரே! கோணேசரே! அடியேனை எப்பொழுதும் காத்தருள வேண்டும் (7.152)

கொன்றைப்பூ, தும்பைப்பூ, வெள்ளெருக்கம்பூ என்பவற்றை அணிந்தவரே! கங்காதரரே! வேதசாரப்பொருளே! திரிகூட கைலாச மலை வாசரே! தேவரே! கோணேசரே! அடியேனை எப்பொழுதும் காத்தருள வேண்டும் (7.153)

மலையரசன் மகள் பார்வதியை மணந்து அவளுக்கு பாதியுடலைக் கொடுத்தவரே! அடியவர்களது இருதயக்கமலத்தில் நித்தியமாக இருப்பவரே! திரிகூட கைலாச மலை வாசரே! தேவரே! கோணேசரே! அடியேனை எப்பொழுதும் காத்தருள வேண்டும்(7.154)

முப்புரங்களையெறிந்தவரே! பினாகம் என்றும் வில்லைத் தரித்தவரே! ஆலாலமென்னும் காளகூட விஷத்தினைக் கண்டத்தில் அணிந்தவரே! திரிகூட கைலாச மலை வாசரே! தேவரே! கோணேசரே! அடியேனை எப்பொழுதும் காத்தருள வேண்டும் (7.155)

நான்முகனின் தலைவரே! மஹாத்மாவே! மான்மழு தாங்கிய கைகளையுடையவரே! திரிகூட கைலாச மலை வாசரே! தேவரே! கோணேசரே! அடியேனை எப்பொழுதும் காத்தருள வேண்டும் (7.156)

சந்திரயாகம் செய்த தக்கனது தலையை அரிந்தவரே ! எனதுஆத்ம அறிவே! சிவமணங்கமழும் பூவே! திரிகூட கைலாச மலை வாசரே! தேவரே! கோணேசரே! அடியேனை எப்பொழுதும் காத்தருள வேண்டும் (7.157)

ஞானமென்னும் ஒளிச்சுடரே! தேசிகரே! விசித்திர விளை யாடல்களின் பொருட்டு அற்புதமான வேடங்களைத் தாங்கி நிற்பவரே! திரிகூட கைலாச மலை வாசரே! தேவரே! கோணேசரே! அடியேனை எப்பொழுதும் காத்தருள வேண்டும் (7.158)

உலகின் ஒரே மூர்த்தியே! எனதுயிராயிருப்பவரே! பொன்வில்லைத் தரித்தவரே! அளவிடப்படாதவரே! திரிகூட கைலாச மலை வாசரே! தேவரே! கோணேசரே! அடியேனை எப்பொழுதும் காத்தருள வேண்டும் (7.159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபூதியணிந்து விளங்கும் விபுவே! நுண்ணியதையறிந்தவரே! உலகியல் வாழ்வை நீக்குபவரே! ஆதியும் அந்தமும் இல்லாதவரே! திரிகூட கைலாச மலை வாசரே! தேவரே! கோணேசரே! அடியேனை எப்பொழுதும் காத்தருள வேண்டும் (7.160)

கோணேசர் இணையடிகளை வணங்குகின்றேன். அம்பிகையின் திருவடித் தாமரைகளையும் வணங்குகின்றேன். தேவர்களின் தலைவரே! என் குற்றங்களைப் பொறுத்தருளுக! தேவியே! பொறுத்தருளுக. என்னிடம் பிரசன்னமாக விளங்குக. (7.161, 162)

என்றவாறாக துதி இடம் பெறுகின்றது.இதேபோன்று இராமன் பிரம்மஹத்திதோஷம் நீங்குதற்பொருட்டு திரிகோணசிகரத்தில் ஜ்யேஷ்ட சுக்கில பஞ்சமியில் இரத்தின லிங்கம் பிரதிஷ்டை செய்தார். (7. 17.34) எனும் செய்தியும் இடம்பெறுகின்றது.

இவ்விதமாக திருக்கோணேஸ்வரம் பற்றிய விடயங்களை சம்ஸ்கிருத மொழியிலமைந்த *ஸ்ரீமத் தக்ஷிண கைலாச மாஹாத்மியம்* பரந்த தன்மையில் பௌராணிக மரபுடன் கூறி நிற்கின்றமை குறிப்பிடத்தக்கது.

*ஸ்ரீமத்தக்ஷிணகைலாச மஹாத்மியம்* எனும் பனுவல் ஸ்காந்த மஹா புராணத்தின் உத்தரகாண்டத்தில் இடம்பெறும் நூலாகச் சுட்டப்படுகின்றது. இந்நூல் தக்ஷிணகைலாசம் எனும் இலங்கையினை லங்கா, சிங்களத்தீவு எனும் பெயர்களாற் சுட்டுகின்றது.

இராவணன் தொடர்பான ஐதிகங்கள் பல காணப்படுகின்றன. தக்ஷிணகைலாச மஹாத்மியத்தின் சாரமான மொழிபெயர்ப்புத் தமிழில் வதிரி நாகலிங்கம் பண்டிதரால் *தக்ஷிணகைலாச புராணம்* என வெளி யிடப்பட்டுள்ளது. இந்நூல் சிங்கைச் செகராசசேகரனது தக்ஷிணகைலாச புராணம் எனும் நூலிலிருந்தும், வேறானதாக அமைகின்றது.

தக்ஷிணகைலாச மஹாத்மியத்தின் புராணோத்பத்திப் படலத்திற் கூறப்பட்டதற்கமைவாக இந்நூல் முழுமையாகக் கிடைக்கப்பெற வில்லை என்று கருதமுடிகின்றது.

பல்வேறு காலத்துச் செய்திகள் ஒன்றிணைக்கப்பட்டு தொகுக்கப் பட்டாலும் ஆசிரியரை வியாசர் எனச்சுட்டி சம்பாஷணை வடிவத்தில் புராணமரபைச் சொல்லுவதாக அமைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்ஸ்கிருதத்தில் அனுஷ்டுப் சுலோக வடிவில் அமையும் இந்நூலின் அமைப்பில் எளிமையான மொழி நடை காணப்படுவதும், உயர்ந்த இலக்கியத்தரம் பேணப்படவில்லையென்பதும், சாதாரண மக்களும் படித்துப் பயன் பெறும் நோக்கில் இயற்றப்பட்டதாகவும் அவதானிக்க முடிகின்றது.

இலங்கையின் இந்துசமய வரலாற்று மூலம் எனச்சுட்டும் இந்நூலிற் காலந்தோறும் இந்துக்களாற் போற்றிப் பாதுகாக்கப்பட்ட பல தரவு களும் வரலாற்றுச் செய்திகளும் ஐதிகங்களும் முக்கியமாக இடம் பெறாதுபோயுள்ளமை அவதானிக்க முடிகின்றது.

இவ்வாறாக இலங்கையின் புராதனச்சிறப்பில் சிங்களத்தீவு என அழைக்கப்படும் சிறப்பிலும் சேதுகரையில் அமைந்திருப்பதும் சுட்டப்படுகின்றது. தக்ஷிணகைலாசம் எனப்படுவது முற்று முழுதாக இலங்கையை இந்திய இந்துசமய உணர்வுடன் பேசப்படும் அதே வேளை இலங்கையும் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாக பல்வேறுபட்ட ஐதிகங்களைக் கொண்டு விளங்குகின்றமை நன்கு வலியுறுத்தப்படுகின்றது. அதேபோன்று இந்தியாவுடன் இலங்கையை இந்துசமயமரபில் இணைத்துக்கூறும் சிறப்புக்களும் சிவபூமி எனக் கூறத்தக்க மேன்மைகளும் ஆங்காங்கே வலியுறுத்தப்படுகின்றன. திருக்கோணேஸ்வரம் எனும் தலம் இத்தகைய சிறப்புடைய தக்ஷிண கைலாசம் எனப்படும் இலங்கையிலே திரிகூடம் எனப்படும் பகுதியில் அமைந்து விளங்குகின்றமை அத்தலத்து இறைவன் தீர்த்தம் பாபவநாசம் என்பதுடன் பல்வேறு சிறப்பு விடயங்களும் விரிவுபட சுட்டிக் காட்டப்படுகின்றமை மனங்கொள்ளத்தக்கது. கோணேசரது சக்தியின் பெயர் குறிப்பிடப்படவில்லை. இவ்வாலயத்திற்கான பொருளும் மற்றும் ஏனைய விடயங்களான திருக்கோணேஸ்வர ஆலயம் சார்ந்த வர்ணனைகள் விரிவுபடக் கூறப்படவில்லையென்பது கவனத்திற் கொள்ளத்தக்கது. இதிலிருந்து *தக்ஷிணகைலாச மஹாத்மியம்* தக்ஷிணகைலாசம் எனப்படும் இலங்கையின் ஒரு பகுதியாகவே திருகோணமலை விளங்குகின்றது என்பதை வலியுறுத்திக்கூறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை நூல்கள்


### சம்ஸ்கிருத மூலநூல்கள்

1. *ஸ்ரீமத் தக்ஷிணகைலாச மாஹாத்மியம் (1928)* நாகலிங்கபண்டிதர் (பதி) (கிரந்தலிபி), விநாயகசுந்தர விலாச யந்திரசாலை, வதிரி, யாழ்ப்பாணம். (கலி.5030, விபவ சித்திரை)

2. *ஸ்ரீமத் தக்ஷிண கைலாச மாஹாத்மியம் ( 2018)* ச.பத்மநாபன் (பதி) (கிரந்தலிபி), ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானம், முன்னேஸ்வரம், சிலாபம் ( மீள்பதிப்பு)

3. *ஸ்ரீஸ்காந்த புராணம் (1963) அநந்தராம தீக்ஷிதர்* (பதி. தமிழ்மொழிபெயர்ப்பும்) சென்னை பகுதி 1, பகுதி 11

### தமிழ் மூலநூல்கள்

4. *தக்ஷிண கைலாசபுராணம்* (1928) சி.நாகலிங்கபிள்ளை, தமிழ்மொழிபெயர்ப்பு (பதி), விநாயகசுந்தரவிலாச யந்திரசாலை, வதிரி, யாழ்ப்பாணம்.

5. *தக்ஷிணகைலாச புராணம்* (2018) ச.பத்மநாபன் (பதி) ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானம், முன்னேஸ்வரம், சிலாபம்.

6. *தக்ஷிணகைலாச புராணம்* (1887) சிங்கைச் செகராசசேகரன், சிவசிதம்பர ஐயர் (பதி), கலாரத்னாகர அச்சுக்கூடம், சென்னை.

7. *தக்ஷிணகைலாச புராணம்* (1916) பு.பொ.வைத்திலிங்கதேசிகர் (பதி), பருத்தித்துறை

8. *திரிகோணாசல புராணம்* (1997) ஆ.சண்முகரத்தினையர் (பதி) கா.செ.நடராசா (பதி), இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்,கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னிணைப்பு 5

# பேராசிரியர் சுப்பராயலு படித்து வடிவமைத்த சாசன வாசகம்

3 [ஸ்ரீ குலோ] த்துங்சோழக் காலிங்கராயநேன் ஈழ [ம

4 ண்டலமான மும்முடி] சோழ மண்டமெறிந்து கங்கராஜ காலிங்க வி-

5 ஜயவாகு தேவற்கு வீராபிஷேகம் பண்ணுவித்து அநந்தரம் அஷ்ட-

6 [நேமிஷ பூசை கால] ங்களில் ஆதி க்ஷேத்ரமாய் ஸ்வயம்புவுமாந திருக்கோ

7 [ணமலை]யுடைய நாயநாரை தெண்டன் பண்ணி இன்னாய -

8 நாற்கு ச[க்தி] ப்ரதிஷ்டையில்லாமையில் திருக்காமக்கோட்ட நா-

9 ச்சியாரை எழுந்தருளுவித்துத் திருப்பிரதிஷ்டை பண்ணுவித்து நமக்கு[ப்

10 ல்ராப்தமாய்] வருகிற காலிங்கராயப் பற்றி மாநாமத் [து] நாட்டில்

11 லக்சிகா [ம]புரம் இதுக்குள் நாலூர் வேச்சார்களுள்ளிட்ட நில -

12 மும்... றிதாயாளமு...ட்டும் இதில் மேநோக்கிய

13 மரமும் கீ[ழ்] நோக்கிய கிணறும் பேருடரை நீக்கி குடிமக்களுள் பட

14 இந்நா [ச்சியார்க்கு திருப்]டி - மாற்றுக்கும் மண்டபக் கொற்று-

15 க்கும் சாந்திராதித்த வரையும் செல்லக் கடவதாக ஹஸ்தோத₃கம் ப-

16 ண்ணிக் குடுத்தேன் இ....லுள்ளாரழிவு-படாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17 ....ண்ணப்...ட்ட...ப் பெறுக்கிவுண்டார்கள் [ஆய்]

18 நடத்தவும் இதுக்கு... ண்டாகில் காக்கையும் நாயும்

19 மாக... டையார் பி...கெங்கைக் கரையிலாயிரங்

20 குரால் பசுவை கொன்றா [ர்பாவங்] கொண்டார்கள் ஆயிரம் ப்$_{3}$ரா

21 ஹ்மணரைக் கொன்றார் பாவ[ங் கொண்] டார்கள் மேலொரு

22. மாற்றம் விலங்குரைப்பார் காலிங்கராயரின [சொல்படி].. சத்தியஞ் செய்வார் செய்வித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதாரமான நூல்களும் கட்டுரைகளும்

(பிரதானமானவை அடங்கிய பட்டியல்)

## 1. தமிழ்

அகிலேசபிள்ளை, வே. *திருக்கோணாசல வைபவம்* பதிப்பாசிரியர் அ.அளகைக்கோன், திருகோணமலை, 1950.

இந்திரபாலா, கா.''ஈழநாட்டுத் தமிழ்ச் சாசனங்கள் - கிழக்கிலங்கைச் சாசனங்கள்'', *சிந்தனை* மலர் 2 இதழ் 2, 3 பதிப்பாசிரியர் கா.இந்திரபாலா, பேராதனை, 1968.

இந்திரபாலா, கா. ''கந்தளாயிற் கண்டுபிடிக்கப்பட்டுள்ள சோழ இலங்கேஸ்வரன் காலத்துக் கல்வெட்டு'', *பாவலர் துரையப்பா பிள்ளை நூற்றாண்டு விழா மலர்,* தெல்லிப்பழை: (மகாஜனக் கல்லூரி) துரையப்பாபிள்ளை நூற்றாண்டு விழாச்சபை வெளியீடு, 1972, பகுதி 2, பக். 1-9.

குணசிங்கம், செ. *கோணேஸ்வரம்,* பேராதனை, 1973.

சதாசிவ பண்டாரத்தார், சி.வை. *பிற்காலச் சோழர் வரலாறு,* அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1974.

சிற்றம்பலம், சி.க. *ஈழத்து இந்து சமய வரலாறு பாகம் 1* கி.பி.500 வரை, திருநெல்வேலி: யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1997.

சோமாஸ்கந்தக் குருக்கள், மு. *ஸ்ரீ முன்னேஸ்வர மான்மியம்,* முன்னேஸ்வரம் : முன்னேஸ்வரம் தேவஸ்தானம், 1949.

சோமஸ்கந்தர், வை. ஸ்ரீ ஸ்கந்தராசா, அ. திருக்கோணேஸ்வரம் திருகோணமலை: ஸ்ரீ லங்கா அச்சகம், யாழ்ப்பாணம், 1963,' 102 பக்கங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கேஸ்வரி, க. *குளக்கோட்டன் தரிசனம்,* காத்தான்குடி: அன்பு வெளியீடு, 1992.

*தக்ஷிண கைலாச புராணம்* (பதிப்பாசிரியர் பு.பொ. வைத்தியலிங்க தேசிகர், பருத்தித்துறை 1916.

*தஷிண கைலாச புராணம்* ஆக்கியோன் யாழ்ப்பாணத்து நல்லூர் மகாவித்துவான் சிங்கைச் செகராசசேகரன், பொருளாக்கம் கா. செ.நடராசா, பதிப்பாசிரியர் சி.பத்மநாதன், கொழும்பு: இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், பகுதி I, 1995; பகுதி II, 1996.

*திரிகோணாசல புராணம்* (பதிப்பாசிரியர்) வண்ணை மாநகரம் பரத்து வாசி ஆ.சண்முகத்தினையர். யாழ்ப்பாணம்; திருஞானசம்பந்தர் அச்சுக்கூடம், 1909; மறுபதிப்பு இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, 1997.

*திருக்கோணேசர் ஆலய கும்பாபிஷேக மலர்* திருகோணமலை: திருக்கோணேஸ்வர ஆலய பரிபாலனசபை; திருக்கோணேஸ்வர ஆலய புனருத்தாரண சபை, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைககளம், 1993.

பத்மநாதன், சி. ''ஈழத்துச் சைவாலயங்கள் 1000-1300'', *இந்து தர்மம்* பேராதனை: இந்து மாணவர் மன்றம், பேராதனை வளாகம், 1977, ப. 41.46.

பத்மநாதன், சி. ''இலங்கையிற் சைவசமய வளர்ச்சி'', *இந்து தர்மம்,* பேராதனை , 1976, ப.45-50.

பத்மநாதன், சி. ''தக்ஷிண கைலாசம்'', *இந்து தர்மம்,* பேராதனை , 1982, ப. 13-16.

பத்மநாதன், சி.''கோணேசர் கல்வெட்டு: சில ஆராய்ச்சிக் குறிப்புகள்'', *கோணேசர் கல்வெட்டு*. கொழும்பு: இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 1993.

பத்மநாதன், சி. (பதிப்பாசிரியர்) இலங்கையின் *இந்துக் கோயில்கள்* பகுதி 1, கொழும்பு: இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 1994.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்மநாதன், சி. ''வெளியீட்டுரை'', தக்ஷிணகைலாசபுராணம், பகுதி 1, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 1995, ப. I-XLIV

பத்மநாதன், சி. ''திருகோணமலையிற் சோழ இலங்கேஸ்வரன்'', தக்ஷிண கைலாசபுராணம் பகுதி II, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 1995, ப. 1-31.

பத்மநாதன், சி.''திருக்கோணேஸ்வரத்திற் சோடகங்கன்: திருகோண மலைக் கோட்டையிலுள்ள சமஸ்கிருத சாசனம்'', தக்ஷிண கைலாச புராணம் பகுதி II, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 1995, ப. 32-47.

வடிவேல், இ. *திருகோணமலை மாவட்டத் திருத்தலங்கள்.* கொழும்பு: பிரதேச அபிவிருத்தி அமைச்சு- இந்துசமயத் திணக்களம், 1982.

வடிவேல், இ. ''திருக்கோணேஸ்வரம், *திருகோண மலை மாவட்டத் திருத்தலங்கள்,* 1982, ப. 1-18.

வடிவேல், இ. ''தம்பலகாமம் ஆதிகோணேசர் கோயில்'', *திருகோணமலை மாவட்டத் திருத்தலங்கள்,* 1982, ப. 19-25.

வடிவேல், இ. *திருகோணமலை கோணேசர் கோயில் வரலாறு,* திருகோணமலை: இந்து தர்ம வெளியீட்டுத் தாபனம், 1984.

வடிவேல், இ.(பதிப்பாசிரியர்) *கோணேசர் கல்வெட்டு கவிராஜவ ரோதயன் இயற்றியது,* கொழும்பு: இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், 1993, பக்கங்கள் 136.

வேலுப்பிள்ளை , ஆ. ''கோணேசர் கல்வெட்டுப் பற்றிய நுண்ணாய்வு'', *சிவத்தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகள்,* தெல்லிப்பழை: தங்கம்மா அப்பாக் குட்டி வைரவிழாச்சபை, 1985. ப. 126-139.

வேலுப்பிள்ளை, ஆ.''இந்து வெளியிலிருந்து திருகோண மலை வரை தென் கீழ்த்திசை வழிவந்த பாசுபதம்'', *தமிழோசை,* திருநெல்வேலி: தமிழ் மன்ற வெளியீடு, 1987.

சி. பத்மநாதன், ''கந்தளாய்ப் பிரம்மதேயம்'', *நினைவுமலர்,* இரண்டாவது உலக இந்து மாநாடு, கொழும்பு, 2004.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி. பத்மநாதன், *இலங்கையில் இந்து சமயம்,* குமரன் புத்தக இல்லம், கொழும்பு-சென்னை, 2005.

சி.பத்மநாதன், *இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள்,* இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, 2006.

சி. பத்மநாதன், *இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள்* II, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, 2013.

சி.பத்மநாதன், *இலங்கைத் தமிழர் தேச வழமைகளும் சமூக வழமைகளும்,* குமரன் புத்தக இல்லம், 2002.

சி.பத்மநாதன், *ஈழத்து இலக்கியமும் வரலாறும்,* குமரன் புத்தக இல்லம், கொழும்பு, 2003.

**2. ஆங்கிலம்**

Baker, W.E. and Durand, H.M. "Facsimiles of Ancient Inscriptions lithographed by Jas. Prinsep; Inscriptions of Trincomalee", *The Journal of the Asiatic Society of Bengal,* Calcutta, Volume pp. 554-5.

Balendra, W. "Trincomalee Bronzes", *Tamil Culture* Ed. Xavier S. Thaninayagam, Volume 2, No.1, 1953, pp. 176-198.

Brohier, R.L. *Seeing Ceylon* (Third Edition), Colombo: Lake House Investments Limited, 1981.

Cartman, Rev.James, *Hinduism in Ceylon,* Colombo: 1957.

Codrington, H.W. "The Inscription at Fort Frederick Trincomalee, JCBRAS Volume 30, No. 80, Colombo. 1927. pp. 448-451.

*Culavamsa* Ed. Wilhelm Geiger, London: Pali Text Society Part 1, 1925; Part II, 1927.

*Culavamsa* Trans. By Wilhelm Geiger and from the German into English by Mrs.C. Mabel Rickmers, 2Pts. Colombo, Ceylon, Government Information Department, 1953.

Gunasingham, S. Two Inscriptions of Cola Ilankesvara Deva from Trincomalee, *Trincomalee Inscriptions Series* No: 1, Ed. and published by S.Gunasingam, Peradeniya, 1974.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Gunasingham, S.Three Cola Inscriptions From Trincomalee, *Trincomalee Inscriptions Series* No. 2, Ed. and published by S. Gunasingaham, Peradeniya, 1979.

Gunasingam, S. A Tamil Slab-Inscription from Mayilawewa (Mayilankulam), *Trincomalee Inscriptions series* No.3, Ed. and published by S. Gunasingham, Peradeniya, 1980.

Gunasingham, S. "A Tamil Slab Inscription at Nilaveli", *The Sri Lanka Journal of the Humanities* (New Series) Volume I No. 1, 1975, pp. 61-71.

Indrapala, K. "An Inscription of the time of Rajaraja Cola I from Padaviya, ET pt.1, pp. 32-36.

Indrapala. K. "An Inscription of the tenth year of Cola Lankesvara Deva from Kantalai" *Senarat Puranavitana Commemoration Volume*, Peradeniya, 1978.

Indrapala, K. "A Tamil Slab Inscription from Nilaveli, Trincomalee Disrtict", *James Thevathasan Rutnam Felicitation* Volume Ed. K. Indrapala, Jaffna Archaeological Society, 1975 (released in july 1980), pp 64-69.

*Mahavamsa.*, Ed. Wilhelm Geiger. London; Pali Text Society, 1908. Eng. tr.by Wilhelm Geiger, London: Pali Text Society, 1908, Reprinted with Addendum by G.C. Mendis, Colombo, 1950.

Navaratnam, C.S. *A Short History of Hinduism in Ceylon*, Jaffna, 1964.

*The Nikaya Sangarawa Being a History of Buddhism in India and Ceylon* translated into English by C.M. Fernando. Revised and edited by Mudaliyar W.F.Gunawardana (31 Pages) Colombo: H.C.Cottle, Government Printer, 1908.

Nilakanta Sastri, K.A. *The Cōḻas* (Second Edition), Madras University, Madras, 1955.

Nilakanta Sastri, K. A "The Ceylon Expedition of Jaṭavarman Virapāṇḍiya", *Proceedings and Transactions of the Eighth All India Oriental Conference*, Bangalore, 1937, pp. 508-526.

Paranavitana, S. "Tiriyay Rock Inscription", EZ Volume 4, London; Humphrey Milford, Oxford University Press, 1943, pp. 151-160.

Paranavitana, S. "A Tamil Slab-Inscription from Palamottai", EZ Volume 4, pp. 191-196.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Paranavitana, S. "Fragmentary Sanskrit Inscription from Trincomalee", EZ Volume 5, Colombo: Archaeological Department, 1955, pp. 170-173

Paranavitana, S."Kahambiliyava (Kavaduluväva) Slab-Inscription of Vikramababu II, EZ Volume 5. pp. 404-408.

Paranavitana, S.*Inscriptions of Ceylon Volume I,* Colombo: Archaeological Department, 1970.

Pathmanathan, S."Multiple Centres of Authority in Medieval Sri Lanka. The-Principalities of the Vanni", History and Archaeology of Sri Lanka Volume I- Reflections on A Heritage, Historical Scholarship in Premodern Sri Lanka Part 1 Ed. R.A.L.H. Gunawardena, S.Pathmanathan, M.Rohanadheera, 1998 (Published in 2000): Central Cultural Fund, Colombo.

Pathmanathan, S."Feudal Polity in Medieval Ceylon: An Examination of the Chieftaincies of the Vanni", *The Ceylon Journal of Historical and Social Studies Vol. II* (New Series) No.2 Ed.K.M. de Silva, July-December 1972, pp. 118-130.

Pathmanathan, S. "Hinduism in Sri Lanka, Circa A.D. 1000-1200; Indian Influences on the Development of Saivism", *The Journal of Modern Sri Lankan Studies, K.W.Goonewardene Felicitation Volume Special Issue,* Volume II 1987 (Published in 1989) Ed C. R.de Silva, Sirima Kiribamune, University of Peradeniya, Peradeniya, pp. 52-66.

Pathmanathan, S. "Konesvaram", *Temples of Siva In Sri Lanka* Chief Editor S.Pathmanathan, Colombo:Chinmaya Mission, 1999. Pp. 1-39.

Pathmanathan, S. *Hindu Temples of Sri Lanka,* Kumaran Book House, Colombo, 2006.

Pathmanathan, S., The Temples of Tirukkōṇēśvaram and Tampalakāmam, Kumaran Book House, 2018.

Sethuraman, N. "A Tamil Inscription from the Fort Frederick, Trincomalee, Sri Lanka", *Abhijnānamālā-* A Felicitation Volume presented to Vinayaga moorthy Sivasamy, University of Jaffna, 1995, pp. 53-60.

Sirima Kiribamune, "The Royal Consecration in Medieval Sri Lanka - The Problem of Vikramabahu and Gajabahu ll", *The Sri Lanka Journal of South Asian Studies,* Vol. 1 No.1, University of Jaffna, 1976, pp. 12-32.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Thomas, P. *The History of Trincomalee,* Colombo: Times of Ceylon, 1940.

*Upāsakajanālaṅkāra* Ed. H. Saddhatissa, London; Pali Text Society, 1965.

Velupillai, *A. Ceylon Tamil Inscriptions* Ed.and published by A.Velupillai, Peradeniya, 1971.

Clarke, Arthur, C., *Ceylon Today, Beneath the Seas of Ceylon,* Government Press, 1957.

R.Vigneswaran, *Rock Cave Temple of Thirukoneswaram* and Sequelae, Colombo, 2002.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுவாமிமலைமேல் திருக்கோணேஸ்வரம் (தற்போது)




தற்போதைய முகப்புத் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோபுர வாசல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருக்கோணமலையிற் கிடைத்த வெண்கலப் படிமங்கள்



திரிசூலம்



அன்னம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கணபதி - பாண்டியர் காலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சிவனது சுகாசனக்கோலம் - 14ஆம் நூற்றாண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உமாதேவியார், ஆசனக்கோலம் - பாண்டியர் காலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உமாதேவியார், நின்ற கோலம் - 13ஆம் நூற்றாண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடலடியிலுள்ள சிவனது படிமம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அகழ்வின்போது கிடைத்த நந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நந்தி
முன் பக்கத் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இராவணன் வெட்டு




ஃப்ரெடெறிக் கோட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோயிலிலுள்ள ராஜ ராஜன் கல்வெட்டு




மானாங்கேணி சோழ இலங்கேஸ்வரன் கல்வெட்டு



நிலாவெளிக் கல்வெட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமஸ்கிருத மொழிக் கல்வெட்டு - திருக்கோணமலைக் கோட்டை



கந்தளாய்க் கல்வெட்டு - 12ஆம் நூற்றாண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






காலிங்கராயன் கல்வெட்டுச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோட்டை வாசற் கல்வெட்டு - 17ஆம் நூற்றாண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கொன்ஸ்டேன்டின் டி. சா. டி. நோரஞ்ஞாவினால் வரையப்பட்ட
சுவாமி மலை மீதிருந்த கோயிலின் பாகமொன்றின் படம்

(*The Temporal and Spiritual Conquest of Ceylon* by Fernao de Queyroz)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



லஷ்மீ நாராயணர் - பல்லவர் கலைப்பாணி




கோயிலின் புராதன காலத்தூண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆதி கோண நாயகர் கோயில் - தம்பலகாமம்




ஆதி கோண நாயகர் கோயில் மூலஸ்தானத்திலுள்ள சிவலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நடராஜர் - விஜயநகர கலைப்பாணி



ஆதிகோணநாயகர் படிமம் - 14ஆம் நூற்றாண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஹம்ஸ கமனாம்பிகை சமேத ஆதி கோண நாயகர் - 13ஆம் நூற்றாண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆதி கோண நாயகர் கோயில் விமானம்



திருக்கோயில் நிர்மாணிக்கப்படுவதற்கு முன்னர் சுவாமி மலையிற் கூடிய பக்தர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்லடைவு

அநபாயன் 34
அபயாஸ்ரய வளநாடு 12, 83
அழகன் 13
அடப்பர் 47
அடை 107, 160
ஆயம் 107
ஆதிசேடன் 4, 6
ஆதி கோணநாயகர் 199, 201, 202
இலங்கேஸ்வர தேவர் 22
இரவிகுலமாணிக்க-ஈஸ்வரம் 13
இராயர் 70
இராஜேந்திர சோழ வளநாடு 16
இராஜேந்திர சோழன் 14, 22, 26
இராஜேந்திரசிங்க வளநாடு 16
இராஜவிச்சாதிர வளநாடு 12
இராஜராஜப் பெரும்பள்ளி 105
இராஜராஜ வளநாடு 12
இராஜராஜ சதுர்வேதி மங்கலம் 24
உத்தமசோழ வளநாடு 16
எருவில் 9
ஏரகாவில்ல 9
கட்டுக்குளம் பற்று 12, 101, 111, 134
கண்ணாறு 23, 24
கணக்கன் கொட்டியாரம்
கணேசர் 129, 130, 132
கந்தளாய் 12, 14, 25, 36, 73, 107, 113
கனகசுந்தரப் பெருமாள் 69, 111, 112, 137
கயவாகு 4, 5, 60, 61, 62, 63, 66, 67, 69, 72, 73, 108, 109
கயிலை 45, 48, 68, 125
கழனிமலை 117
கஜபாகு 55, 56, 57, 58, 59, 60, 63, 71, 73, 85
காலிங்கராயப்பற்று 75, 83, 84
காலிங்கராயன் 41, 50, 70, 75, 80, 81, 82, 83, 84, 85, 100
குப்தப்பேரரசு 9
குளக்கோட்டன் 4, 28, 32, 35, 36, 38, 40, 41, 42, 43, 44, 45, 46, 60, 69, 72, 80, 100, 101, 102, 103, 108, 109, 110, 115, 134, 136, 140, 143, 144, 145, 147, 148, 149, 150, 176
கோகண்ண 7, 9
கோகர்ண்ண 7, 9
கோகர்ணம் 2, 7, 8, 89, 90, 94
கோகர்ணநாதர் 8
கோகர்ணசுவாமி 7
கோகர்ணேஸ்வரர் 7, 8
கோகர்ணநாயகி 7, 8
கோணபர்வதம் 2, 15, 18, 78, 80, 95, 107, 125

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோணமலை 45, 61, 68, 113, 114, 115, 125, 135, 159

கோணவரை 90

கோணேசர் கல்வெட்டு 2, 5, 29, 45, 48, 49, 52, 60, 65, 73, 74, 101, 112, 134, 136, 139, 176, 177

கோணேசர் கோயில் 4, 5, 6, 7, 63, 65, 119, 134, 177

கோணை நாதர் 31

சக்திபீடம் 75, 76

சகாப்தம் 88, 89, 91, 92, 97

சங்கவர்மர் 14

சந்திரசேகரர் 127, 129, 131

சம்பு 78, 79, 88, 95, 96

சம்பு புஷ்ப 95

சம்பூர் 124

சரகேளி 92

சிவகாமி 127, 130, 132

சிவசித்திரப் பெருமாள்

சிவராத்திரி 127

செகராசசேகரன் 2, 3, 4, 11, 28, 49, 62, 109, 172, 176

செம்பியன் 53

சோடகங்க தேவ(ன்) 88

சோழகங்க குமாரன் 31

சோழகங்கன் 28, 32, 50, 97, 101, 102, 104

சோமாஸ்கந்தர் 127, 129

தசக்கிரீவன் 4

தசதானம் 68

தம்பலகாமம் 107, 113, 115, 116, 124, 125, 134, 177, 199

தனியுண்ணாப்பூபாலன் 115, 134, 136, 138

தர்மபாலன் 7

தலபுராணம் 2, 38, 165, 166

தக்ஷிண கைலாசம் 6, 166, 171, 176

தக்ஷிண கைலாசபுராணம் 2, 11, 28, 29, 33, 42, 43, 50, 65, 66, 68, 74, 90, 101, 112, 165, 172, 177

திருக்காமக்கோட்டம் 75, 76, 77, 80, 82, 84

திரிகூடம் 2, 6, 125, 171

திரிகோணம் 6, 39, 52

திருகோணமலை 2, 10, 12, 14, 15, 21, 22, 26, 46, 75, 95, 100, 101, 102, 107, 109, 111, 114, 117, 124, 127, 128, 129, 134, 136, 138, 155, 156, 171, 175, 176, 177

திருநெல்வேலி 149, 175, 177

திருவாசகப் புலவன் 47, 48, 54

தேவதானம் 18, 19, 63, 67, 73

தேவரடியார் 70, 71

பசுபதி 7

பங்குனித் திருநாள் 68

பதவியா 12, 13, 25

பாசுபதர் 136

பார்வதி 129, 130, 167

பிரம்மதேயம் 24, 26, 60, 178

புஷ்பக் கிரியை 94

பெருங்குறி 23

பெருங்குறிப் பெருமக்கள் 23


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமாள் புலவன் 48
போர்த்துக்கேயர் 22, 89, 93, 113, 120, 129, 142, 148
மகாத்மியம் 4
மகாயானம் 8
மகாவம்சம் 8, 9, 19, 55, 56, 58, 71, 73, 98, 99, 100, 101
மகாசேனன் 9
மச்சகேஸ்வரம் 2, 6, 18, 25, 42
மத்ஸ்யகேஸ்வரம் 15, 78, 80
மனுநீதிகண்ட சோழன் 33, 38
மனுநெறி 37, 38
மனுவேந்தன் 38, 40, 41
மாணிக்கங்கள் 30, 70, 71
மாம்பிசும்பு கொட்டியாரம்
மானாங்கேணி 36, 194
மானாமத்து நாடு 83
முடி கொண்ட சோழ வளநாடு 16
முதன்மை 40, 41, 47, 61, 62, 64, 69, 71, 163
வன்னிபம் 69, 102, 128, 134, 135, 136, 137, 138
வன்னிமை 45, 65, 71
வரராமதேவன் 32, 33, 35, 36, 38, 40
வரிப்பத்து 45, 46, 48, 69, 109
வருதன் திருமால் 13
வாசுதேவ வாய்க்கால் 23, 24, 25, 43
வாயுபுராணம் 9, 144
விக்கிரமசோழ வாய்க்கால் 23, 24, 25, 43
விக்கிரமபாகு 55, 93, 98
வெல்காமம் 12
வேசார் 82, 83
வேளான் கணபதி 17
லக்ஷிகாமபுரம் 83

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணேஸ்வரம்

**சி.பத்மநாதன்**

ஈழத்துச் சைவ மரபைப் பொறுத்தவரையில் திருகோணமலை மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது. இலங்கையின் வேறு எந்தப் பகுதியிலும் இல்லாத வகையில் அங்கு தொன்மைவாய்ந்த சிவாலயங்கள் பல அமைந்துள்ளன. அவற்றுள் திருக்கோணேஸ்வரம் தனிச்சிறப்பு வாய்ந்தது. அருளாளர்களான திருஞானசம்பந்தரால் திருப்பதிகம் பாடியும் அருணகிரிநாதரால் திருப்புகழ் பாடியும் சிறப்பிக்கப்பெற்றது. திருநாவுக்கரசர், சேக்கிழார் முதலான அருளாளர்களும் அத்தலத்தை ஆங்காங்கே பாடிப் பரவியுள்ளனர். திருக்கோணேஸ்வரம் வடமொழி, தென்மொழிகளில் அமைந்த புராணங்களிலும், புகழ்ந்தோதப்பட்டது. இலங்கையில் எழுந்த மரபுவழித் தமிழிலக்கியங்கள் பல அத்தலத்தைப் பேசுபொருளாகக் கொண்டமைந்தன. இலங்கையில் காலத்துக்குக் காலம் அதிகாரம் செலுத்திய அரசர்களும் அவர்தம் பிரதானிகளும் அத்தலத்துக்கு நிவந்தங்கள் வழங்கியமை பற்றிக் கல்வெட்டுக்கள் பிரஸ்தாபிக்கின்றன. வேறு பல தொல்லியற் சான்றுகளாலும் அதன் தொன்மை துலக்கம் பெறுகிறது. பிற்காலத்தில், ஐரோப்பிய ஆட்சியாளர்களின் சகிப்புத்தன்மையற்ற மதக்கொள்கையால், தன் பழம்பெருமையை இழந்து அடையாளம் தெரியாத வகையில் அழிவடைந்தபோதிலும் ஐரோப்பிய அதிகாரிகள், பிரயாணிகள் பலரின் எழுத்தாவணங்களில் அதன் பெருமை விளங்குகின்றது. கிலமடைந்த ஆலயம் அருளாளர்களின் பாடல்களில் தூலமாய் நின்று துலங்கி ஈழத்துச் சைவக் குடிகளின் பக்தியாலும் சுதேசிய உணர்ச்சியாலும் புனர்நிர்மாணம் பெற்று மிளிர்கிறது. இத்தகு வரலாற்று அம்சங்கள் பலவற்றையும் தக்க சான்றுகளோடு துலக்கி நிற்கிறது இந்நூல்.



சி. பத்மநாதன் (1940) : இலங்கையின் தலைசிறந்த வரலாற்றறிஞர்களில் ஒருவரான இவர் இலங்கை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இளமாணிப் பட்டத்தையும் இலண்டன் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றவராவார். நூற்றுக்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளையும் பல் ஆய்வு நூல்களையும் வெளியிட்டுள்ளதுடன் இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பிரதித் தலைவராகவும் விளங்கியவர். யாழ். பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் வரலாற்றுத்துறைப் பேராசிரியராகப் பணியாற்றிய இவர் இந்து பண்பாட்டுத் திணைக்களத்தினால் வெளியிடப்படும் இந்து கலைக்களஞ்சியத்தின் பிரதம பதிப்பாசிரியராகவும், யாழ். பல்கலைக்கழகத்தின் வேந்தராகவும் விளங்குகின்றார்.

குமரன் புத்தக இல்லம்
ISBN 978-955-659-758-5
9 789556 597585
வரலாறு / இந்து சமயம்
#946
Rs.950

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org